தமிழ்நாடு அரசு

எட்டாம் வகுப்பு

தமிழ்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – *2019*

திருத்திய பதிப்பு – *2020, 2021, 2022*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!


உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!



தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை இன்றைய இளம்தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்

ஒவ்வோர் இயலையும் ஆர்வத்துடன்
அணுக கவிதைப்பேழை,
உரைநடைஉலகம், விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக . . . . .

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ள
தெரிந்து தெளிவோம். . . .

காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பதாக
இணையவழி உரலிகள் . . .

ஆளுமை மிக்க
ஆசிரியர்களுக்கும்
ஆற்றல் நிறை
மாணவர்களுக்கும்...

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் . . . .

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .

மாணவர்தம்
அடைவை அளவிட
மதிப்பீடு . . . .

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழிவிளையாட்டு . . . .

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

பொருளடக்கம்

*(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

98YLG

மின் நூல்

I8BK7


மதிப்பீடு

எட்டாம் வகுப்பு

தமிழ்

இயல்
ஒன்று

தமிழ் இன்பம்



கற்றல் நோக்கங்கள்


- செய்யுளைப் படித்து அதன் நயங்களைப் போற்றும் திறன் பெறுதல்
- தமிழ்மொழியின் மரபுகளை அறிந்து பயன்படுத்துதல்
- தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி நிலைகளை அறிதல்
- ஓரெழுத்து ஒரு மொழியை அடிப்படையாகக் கொண்டு சொல்லாட்சித் திறனை வளர்த்தல்
- சொற்களின் பிறப்பு முறைகளை அறிந்து உரிய முறையில் ஒலித்தல்

கவிதைப்பேழை

இயல் ஒன்று

தமிழ்மொழி வாழ்த்து

ZPUXW



மொழி, கருத்தை அறிவிக்கும் கருவி மட்டும் அன்று; அது மக்களின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது; உணர்வுடன் கலந்தது. தமிழர்கள் தம் தாய்மொழியாகிய தமிழை உயிராகக் கருதிப் போற்றி வந்துள்ளனர். புலவர் பலர் தமிழைப் பல வகையாக வாழ்த்திப் பாடியுள்ளனர். அத்தகைய பாடல் ஒன்றை அறிவோம்.

*வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே! *

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

– பாரதியார்

சொல்லும் பொருளும்

நிரந்தரம் – காலம் முழுமையும்
வைப்பு – நிலப்பகுதி
சூழ்கலி – சூழ்ந்துள்ள அறியாமை இருள்
வண்மொழி – வளமிக்கமொழி
இசை – புகழ்
தொல்லை – பழமை, துன்பம்

பாடலின் பொருள்

தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க! ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி வாழ்க! ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க! எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க! எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்! அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுதும் சிறப்படைக! பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க! தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க! வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!



நூல் வெளி



கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் சி. சுப்பிரமணிய பாரதியார். இந்தியா, விஜயா முதலான இதழ்களை நடத்தி விடுதலைப் போருக்கு வித்திட்டவர். கவிதைகள் மட்டுமன்றி, சந்திரிகையின் கதை, தராசு உள்ளிட்ட உரைநடை நூல்களையும் வசனகவிதைகளையும் சீட்டுக்கவிகளையும் எழுதியவர். சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார்.

இப்பாடல் பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் தமிழ்மொழி வாழ்த்து என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.



கற்பவை கற்றபின்

1. 'தமிழ்மொழி வாழ்த்து' – பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. படித்துச் சுவைக்க.

செந்தமிழ் அந்தாதி

செந்தமிழே! செங்கரும்பே! செந்தமிழர் சீர்காக்கும்
நந்தா விளக்கனைய நாயகியே! – முந்தை
மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!
எழில்மகவே! எந்தம் உயிர்.

உயிரும்நீ; மெய்யும்நீ; ஓங்கும் அறமாம்
பயிரும்நீ; இன்பம்நீ; அன்புத் தருவும்நீ;
வீரம்நீ; காதல்நீ; ஈசன் அடிக்குநல்
ஆரம்நீ; யாவும்நீ யே!

– து. அரங்கன்

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் _____.

   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

   அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும்

   இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும்

3. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

   அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது

   இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது

4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்

   இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்

5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த

   இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த

தமிழ்மொழி வாழ்த்து - இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.

_____ _____ _____ _____ _____ _____ _____ _____

_____ _____ _____ _____ _____ _____ _____ _____

குறுவினா

1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

சிறுவினா

தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

சிந்தனை வினா

பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

இயல் ஒன்று

கவிதைப்பேழை

தமிழ்மொழி மரபு



வாழ்விலும் மொழியிலும் சில ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. வாழ்வுக்குரிய ஒழுங்குமுறை ஒழுக்கம் எனப்படும். மொழிக்குரிய ஒழுங்குமுறை மரபு எனப்படும். தமிழ்மொழிக்கெனச் சில மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்பட்டு வருகின்றன. செய்யுளுக்கும் மரபுக்கும் உள்ள தொடர்பைப்பற்றித் தொல்காப்பியம் கூறும் செய்திகளை அறிவோம் வாருங்கள்!

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்

– தொல். 1579


மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன

– தொல். 1580

மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்

– தொல். 1581

– தொல்காப்பியர்



சொல்லும் பொருளும்

விசும்பு	–	வானம்	மரபு	–	வழக்கம்
மயக்கம்	-	கலவை	திரிதல்	–	மாறுபடுதல்
இருதிணை	–	உயர்திணை, அஃறிணை	செய்யுள்	–	பாட்டு
வழாஅமை	–	தவறாமை	தழாஅல்	–	தழுவுதல் (பயன்படுத்துதல்)
ஐம்பால்	–	ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்			

பாடலின் பொருள்

இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும். இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் இந்த ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவானவையே ஆகும். உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு.

திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும். இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும்.

தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

அளபெடை

புலவர்கள் சில எழுத்துகளை அவற்றுக்கு உரிய மாத்திரை அளவைவிட நீண்டு ஒலிக்குமாறு பயன்படுத்துவது உண்டு. இப்பாடலில் இடம்பெற்றுள்ள வழாஅமை, தழாஅல் ஆகிய சொற்களில் உள்ள ழா என்னும் எழுத்தை மூன்று மாத்திரை அளவு நீட்டி ஒலிக்க வேண்டும். அதற்கு அடையாளமாகவே 'ழா'வை அடுத்து 'அ' இடம் பெற்றுள்ளது. இவ்வாறு உயிர் எழுத்து நீண்டு ஒலிப்பதை உயிரளபெடை என்பர். இதனைப் பற்றி உயர் வகுப்புகளில் விரிவாக அறிந்துகொள்ளலாம்.

நூல் வெளி



தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர். தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. பொருளதிகாரத்தின் மரபியலில் உள்ள மூன்று நூற்பாக்கள் (91, 92, 93) இங்குத் தரப்பட்டுள்ளன.



தெரிந்து தெளிவோம்

இளமைப் பெயர்கள்			ஒலி மரபு		
புலி	–	பறழ்	புலி	–	உறுமும்
சிங்கம்	–	குருளை	சிங்கம்	–	முழங்கும்
யானை	–	கன்று	யானை	–	பிளிறும்
பசு	–	கன்று	பசு	–	கதறும்
ஆடு	–	குட்டி	ஆடு	–	கத்தும்

கற்பவை கற்றபின்

1. பறவைகளின் ஒலி மரபுகளை எழுதி வருக.
   (எ.கா.) காகம் கரையும்.
2. ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.
3. ஐம்பூதங்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பறவைகள் _________ பறந்து செல்கின்றன.
   அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்
2. இயற்கையைப் போற்றுதல் தமிழர் __________.
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
3. 'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
   அ) இரண்டு + திணை ஆ) இரு + திணை
   இ) இருவர் + திணை ஈ) இருந்து + திணை
4. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
   அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால்
   இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால்

குறுவினா

1. உலகம் எவற்றால் ஆனது?
2. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

சிந்தனை வினா

நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

உரைநடை உலகம்

இயல் ஒன்று

தமிழ் வரிவடிவ வளர்ச்சி

5JA03

நுழையும்முன்

மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க மொழியைக் கண்டுபிடித்தான். மொழியை நிலைபெறச் செய்ய எழுத்துகளை உருவாக்கினான். எழுத்துகளின் வரிவடிவங்கள் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. அவை ஒரே மொழியிலும்கூட, காலந்தோறும் மாறி வருகின்றன. அவ்வகையில் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிவோம்.

மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான். காலப்போக்கில் தனது குரலைப் பயன்படுத்தி ஒலிகள் மூலம் தனது கருத்துகளை வெளிப்படுத்த முற்பட்டான். அடுத்துச் சிறிது சிறிதாகச் சொற்களைச் சொல்லக் கற்றுக்கொண்டான். அச்சொற்கள் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டதால் செம்மைப்பட்டன. காலப்போக்கில் அவை பண்பட்டுப் பேச்சுமொழி உருவானது.

எழுத்துகளின் தோற்றம்



மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என

உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர். இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன.

தெரிந்து தெளிவோம்

கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளின் அமைப்பு

1. 'ஸ' எனும் வடமொழி எழுத்து காணப்படுகிறது.
2. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை.
3. எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.

தமிழ் எழுத்துகள்

காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது. கல்வெட்டுகள் கி.மு. (பொ.ஆ.மு.) மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.

வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் ஆகும். சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன. முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி (சிலம்பு 5 : 112) என்னும் தொடரால் அறியலாம்.

வரிவடிவ வளர்ச்சி

பண்டைக்காலத்தில் தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துகளும் நாம் இன்று எழுதுவது போன்ற வடிவத்தில் எழுதப்படவில்லை. அவை காலத்திற்கேற்பப் பல உருவ மாற்றங்களைப் பெற்றுத்தான் இக்கால வடிவத்தை அடைந்திருக்கின்றன. இவ்வாறு எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைகின்றன.

பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப

தெரிந்து தெளிவோம்

தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன. பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர். சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.

புள்ளிகளும் எழுத்துகளும்

எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக எ̇து என எழுதப்பட்டால் எது என்றும் எது என எழுதப்பட்டால் ஏது என்றும் ஒலித்தனர்.

அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் கருதப்பட்டன. (க. = கா , த. = தா). ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின்முன் இரட்டைப் புள்ளி இட்டனர். (..க = கை). எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஒளகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன. (கெ.. = கௌ, தெ.. = தௌ). மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் உள்ளே புள்ளி (ப) இட்டனர். குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

உருவ மாற்றம்

நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுத்தப்படுகிறது. ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுத்தப்படுகிறது. ஒளகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுத்தப்படுகிறது. குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின்மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை

ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர். ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது. புள்ளி இடப்பட்டு எழுதவேண்டிய எழுத்துகள் புள்ளிகள் இல்லாமல் எழுதப்படும்போது அவற்றின் இடம் நோக்கி மெய்யா உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது. இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர். எகர ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார். எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும்

எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார். அதேபோல ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக் கொம்பு (ே), இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து (ே ா) புதிய வரிவடிவத்தை அறிமுகப்படுத்தினார்.

வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம்

எ்	எ	ஒ்	ஒ	ெக்	ெக	ெக்ா	ெகா
எ	ஏ	ஒ	ஓ	கெ	கே	கொ	கோ

பெரியார் எழுத்துச் சீர்திருத்தம்

இருபதாம் நூற்றாண்டுவரை ணா, றா, னா ஆகிய எழுத்துகளை ண, ற, ன என எழுதினர். அதே போல ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை ைண, ைல, ைள, ைன என எழுதினர். இவற்றை அச்சுக் கோப்பதற்காக இவ்வெழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டுத் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

வ.எண்	பழைய வடிவம்	சீர்திருத்த வடிவம்	சான்று
1.	ண	ணா	அண்ண - அண்ணா
2.	ைண	ணை	அைண - அணை
3.	ெண	ணொ	மண்ெணடு - மண்ணொடு
4.	ேண	ணோ	கண்ேணடு - கண்ணோடு
5.	ைல	லை	தைல - தலை
6.	ைள	ளை	கைள - களை
7.	ற	றா	சிறர் - சிறார்
8.	ெற	றொ	மற்ெறரு - மற்றொரு
9.	ேற	றோ	காற்ேறடு - காற்றோடு
10.	ன	னா	மன்ன - மன்னா
11.	ைன	னை	விைன - வினை
12.	ென	னொ	என்ெனடு - என்னொடு
13.	ேன	னோ	என்ேனடு - என்னோடு

காலந்தோறும் ஏற்பட்ட இவ்வாறான வரிவடிவ வளர்ச்சி காரணமாகத் தமிழ் மொழியைப் பிற மொழியினரும் எளிதில் கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது; தமிழ்மொழி கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகவும் ஆகியிருக்கிறது.

கற்பவை கற்றபின்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.

சுற்றுப்புறச் சூழ்நிைலப் பிரச்சிைனகள் பற்றிய இந்தியாவின் கவைல பல்லாண்டு காலமாக வளர்ந்ேத வருகிறது.

'மனிதன் ஏழ்ைமயிேல இருக்கும்போது சத்தற்ற உணவினலும், நோயினலும் அச்சுறுத்தப்படுகிறன். பலவீனனக இருப்பவன் போருக்கு அஞ்சுகிறன்; செல்வந்தனக இருப்பவேன தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிறன்' என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்ைறக்கு ஆற்றிய உைர நாம் நிைனவு கூரத் தக்கது.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற _____ காரணமாக அமைந்தது.

அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை

2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ______ என அழைக்கப்படுகிறது.

அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் _____.

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்

இ) வ.உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் _____ என அழைக்கப்பட்டன.
2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ______.

குறுவினா

1. ஓவிய எழுத்து என்றால் என்ன?
2. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
3. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?
4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

சிறுவினா

1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

நெடுவினா

எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

சிந்தனை வினா

1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.
2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து கலந்துரையாடவும்.

விரிவானம்

இயல் ஒன்று

சொற்பூங்கா

நுழையும்முன்

மொழி வளரும் தன்மை உடையது. ஒவ்வொரு மொழியிலும் காலந்தோறும் புதிதுபுதிதாக இலக்கியங்கள் தோன்றுவது போலவே புதிய சொற்களும் தோன்றுகின்றன. ஓர் அடிச்சொல்லில் இருந்து பல சொற்கள் கிளைத்துப் பெருகுவது மொழி வளர்ச்சியின் அடையாளம் ஆகும். தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகள் பற்றியும் அவற்றிலிருந்து தோன்றி வளரும் புதிய சொற்கள் பற்றியும் அறிவோம்.



மலையில் இருந்து பெருகி வரும் வெள்ளத்தில் உருண்டு வரும் கற்கள் உருளை உருளைகளாய் இருப்பதைக் காண்கிறோம். அங்கே இருந்து வரும் உருளைக் கற்கள் மேலும் தேய்கின்றன. உடைந்து பொடிப்பொடியாகின்றன அல்லவோ? வயல்வெளியில் மணலாய், கடல்முகத்தில் நொய்மணலாய் இருக்கக் காண்கிறோமே, ஏன்? நொய்மணலைப் பார்க்கும்போது அது கிடந்திருந்த காலமும் கடந்து வந்த தொலைவும் புலப்படும்.

கல்லின் தேய்மானம் போலச் சொல்லுக்கும் தேய்மானம் உண்டு. கல் தோன்றிய காலம், உயிரோட்ட இயக்கம் இவற்றைப் போலச் சொல் தோன்றிய காலம், இயக்கம் ஆகியவற்றால் சொல்லும் தேய்தல் இயற்கை.

தமிழ்மொழி பழங்காலம் தொட்டு இயங்கி வருதல் அதன் பெருஞ்சிறப்பு. தொன்மையான மொழிகள் பல ஏட்டளவில் மட்டுமே இருக்கக் காண்கிறோம். வேறு சில மொழிகளில் ஒரு நூற்றாண்டு, இரு நூற்றாண்டுக்கு முற்பட்ட நூல்களைப் படிக்க முடியாத நிலைமையில் இருப்பதையும் காண்கிறோம். ஆனால் தமிழறிந்த, தமிழ்ப் பற்றுள்ள தமிழர் யாரும் கற்க முடியாது எனச் சொல்லும் ஒரு நூல்கூடத் தமிழில் இல்லை. இப்பேறு எதனால்? தமிழ்மொழி செந்தமிழாகவும் செழுந்தமிழாகவும் உயிரோட்டத் தமிழாகவும் இருந்து வருவதாலேயே ஆகும்.

தமிழில் சொல் என்பதற்கு நெல் என்பது ஒரு பொருள். சொன்றி, சோறு என்பவை அவ்வழியில் வந்தவை. நெல்லில் பதர் உண்டு. ஆனால் சொல்லில் பதர் இருத்தலாகாது. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பியர் கூற்று.

மொழி என்பதற்குச் சொல் என்பதும் ஒரு பொருள். மொழியை (சொல்லை) ஓரெழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர்.

ஓர் எழுத்து மொழி எவை எனின், நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர். குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை என்பதைக் குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே என்பார்.

நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒரு மொழி என்றால் உயிர்நெட்டெழுத்துகள் ஏழுமா? உயிர்மெய் நெட்டெழுத்துகள் 126 உண்டே! அவை மொழியாகும் தன்மை இல்லாதனவா என ஐயம் தோன்றும். இந்த ஐயம் தோன்றாமல் இருக்கவே உயிர் நெடில் எழுத்து என்றோ உயிர்மெய் நெட்டெழுத்து என்றோ கூறாமல் நெட்டெழுத்து என்று மட்டும் கூறினார்.

தமிழில் சொல்லின் முதலில் வரும் எழுத்து, இடையில் வரும் எழுத்து, இறுதியில் வரும் எழுத்து, ஒன்றையொன்று அடுத்து வரும் எழுத்து என வரம்பு உண்டு. அதன்படி எல்லா எழுத்துகளும் எல்லா நிலைகளிலும் வாரா. சில எழுத்துகள் அரிச்சுவடியில் இருப்பினும் அவை மொழிநிலையில் இடம்பெறா. இவற்றைப் போலவே நெட்டெழுத்துகளில் சொல் என்னும் நிலையைப் பெறாதவையும் உண்டு.

உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந என்னும் வரிசைகளில் ஐந்து ஐந்து எழுத்துகளும், க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு நான்கு எழுத்துகளும், ய வரிசையில் ஒன்றும் ஆக நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார்; நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

தெரிந்து தெளிவோம் — **ஓரெழுத்து ஒருமொழிகள்**

உயிர் எழுத்து	– ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ	ககர வரிசை	– கா, கூ, கை, கோ
மகர வரிசை	– மா, மீ, மூ, மே, மை, மோ	சகர வரிசை	– சா, சீ, சே, சோ
தகர வரிசை	– தா தீ, தூ, தே, தை	வகர வரிசை	– வா, வீ, வை, வெள
பகர வரிசை	– பா, பூ, பே, பை, போ	யகர வரிசை	– யா
நகர வரிசை	– நா, நீ, நே, நை, நோ	குறில் எழுத்து	– நொ, து

தொல்காப்பியருக்கு நெடிதுநாள் பின்னே தோன்றிய நன்னூலார் நொ, து என்னும் உயிர்மெய் எழுத்துகளும் பொருளுடைய ஓர் எழுத்து மொழி என்பார். எந்தெந்த ஓரெழுத்துச் சொற்களை நாம் பயன்படுத்துகிறோம் என்பதை நாமே காண முயலலாமே! பூ என்பது ஓரெழுத்து ஒரு மொழி. கா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழி. இவை இரண்டையும் இணைத்துப் பூங்கா எனக் கலைச்சொல் ஆக்கி வைத்துள்ளனர். யா என்பது வினா. யாது, யாவர், யாவன், யாவள், யாங்கு, யாண்டு, யார், யாவை என்றெல்லாம் வினாவுவதற்கு முன் வந்து நிற்கும் எழுத்து 'யா' தானே!

ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே இவ்வாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும்உள்ளன. பூங்கா இணைந்தது போல ஆ, மா என்பவை இணைந்து ஆமா என்னும் கலைச்சொல் வடிவம் கொண்டமை பண்டைக் காலத்திலேயே உண்டு. காட்டுப் பசுவுக்கு 'ஆமா' என்று பெயர்.

மா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை மாநாடு என்கிறோம். பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம். உலகப் பெரும் பரப்பையும் இயக்கத்தையும் சுட்ட மாஞாலம் என்கிறோம். இவ்வாறெல்லாம் இயல்பாக மா என்னும் ஓரெழுத்து ஒருமொழி மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் திகழ்கின்றது. மாநிறம் என மாந்தளிர் நிறத்தை ஒப்புமை காட்டி உரைப்பது பெருவழக்கு. மா என்பது விலங்கையும் குறிக்கும். அரிமா, பரிமா, நரிமா, வரிமா, கரிமா என்றெல்லாம் வந்து விலங்கினப் பெயராகி நிற்கின்றது.

ஈ என்னும் பொதுப் பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது. மாட்டு ஈ, தேன் ஈ எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது. ஈ என்பது ஈக என்னும் பொருளில் வழங்குதல் வெளிப்படை. ஈ என்று பல்லைக் காட்டாதே என்று அறிவுரை கூறுவதும் உண்டு.



போ, வா, நீ, சூ, சே, சை, சோ என்பவை எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும் சொற்களே. நன்னூலார் போட்ட பட்டியலில் உள்ளவை பற்றிக் கருதாமல் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தால் சில விளக்கங்கள் கிட்டும். நன்னூலார் கூறிய சில ஓரெழுத்து ஒரு மொழிகள் இன்று வழக்கில் இல்லாதவை என்றும், வழக்கிலுள்ள சில ஓரெழுத்து ஒரு மொழிகள் நன்னூலார் கூறிய பட்டியலில் இல்லாதவை என்றும் தெளிவு ஏற்படும்.

இன்னொரு வகையாகவும் பார்க்கலாம். ஆன் என்பது ஆ ஆகியது; மான் என்பது மா ஆகியது; கோன் என்பது கோ ஆகியது; தேன் என்பது தே ஆகியது; பேய் என்பது பே

ஆகியது. இவையெல்லாம் காலவெள்ளத்தில் கரைந்து தேய்ந்தவை.

எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது என்னோடு கூடு, பொருந்து, சேர் என்னும் பொருளை உடையது. ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது. அம்பை ஏவு என்பர். ஏவுதல் என்பது 'அம்புவிடுதல்'. ஏவும் அம்பு 'ஏ' என்றாகியது. அம்பு விரைந்து செல்வது போலச் சென்று உரிய கடமை புரிபவன் ஏவலன் எனப்பட்டான். அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்; அதில் வல்லவனை ஏகலைவன் என்று பாராட்டியது.

ஏவு என்னும் சொல் 'ஏ' என்று ஆனது மட்டுமன்றி 'எய்' எனவும் ஆயிற்று. ஏவுகின்ற அம்பைப் போல் கூர்முள்ளை உடைய முள்ளம்பன்றியின் பழம்பெயர் எய்ப்பன்றி. அம்பை எய்பவர் எயினர். அவர்தம் மகளிர் எயினியர். சங்கப்புலவர்களுள் எயினனாரும் உளர். எயினியாரும் உளர்.

தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றைக் கையில் கனியாகக் காட்டும். இத்தகைய தமிழ்மொழியின் சொற்களை, மொழிப்பற்றை மீட்டெடுத்தலே வழிகாட்டிகளுக்கு முதல் கடமையாய் நிற்கிறது. மொழிப்பற்றுள்ள ஒருவனே மொழியை வளர்ப்பான்; அதன் இனத்தை, பண்பாட்டைக் காப்பான்.



நூல் வெளி

செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் எனப் பன்முகத் திறன் பெற்றவர். இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். தேவநேயம் என்னும் நூலைத் தொகுத்துள்ளார். திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.

இவரது தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள் என்னும் நூலிலிருந்து செய்திகள் தொகுத்து இங்குத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.

மதிப்பீடு

தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

கற்கண்டு

இயல் ஒன்று

எழுத்துகளின் பிறப்பு

அ, உ, க, ப –ஆகிய எழுத்துகளை ஒலித்துப் பாருங்கள். வாயைத் திறந்து ஒலித்தாலே அ என்னும் எழுத்து ஒலிக்கிறது. உ என்னும் எழுத்தை ஒலிக்கும்போது இதழ்கள் குவிகின்றன. நாக்கின் முதற்பகுதி மேல் அண்ணத்தில் ஒட்டும்போது க என்னும் எழுத்து பிறக்கிறது. ப என்னும் எழுத்து இதழ்கள் இரண்டும் ஒட்டுவதால் பிறக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு எழுத்துக்கும் பிறக்கும் இடமும் பிறக்கும் முயற்சியும் வெவ்வேறாக உள்ளன.

பிறப்பு


உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர். எழுத்துகளின் பிறப்பினை இடப்பிறப்பு , முயற்சிப் பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

எழுத்துகளின் இடப்பிறப்பு

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.

எழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

உயிர் எழுத்துகள்



- அ, ஆ ஆகிய இரண்டும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.
- இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.
- உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.

மெய் எழுத்துகள்



- ❖ க், ங் – ஆகிய இருமெய்களும் நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ❖ ச், ஞ் – ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி, நடுஅண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ❖ ட், ண் – ஆகிய இருமெய்களும் நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ❖ த், ந் – ஆகிய இருமெய்களும் மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கின்றன.
- ❖ ப், ம் – ஆகிய இருமெய்களும் மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ❖ ய் – இது நாக்கின் அடிப்பகுதி, மேல் வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது.
- ❖ ர், ழ் – ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.
- ❖ ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ❖ ள் – இது மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.
- ❖ வ் – இது மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கிறது.
- ❖ ற், ன் – ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.

சார்பெழுத்துகள்

ஆய்த எழுத்து வாயைத்திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது. பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.

கற்பவை கற்றபின்

'ஆய்தம்' – இச்சொல்லில் உள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.

எழுத்துகள்	ஆ	ய்	த	ம்
வகை				
பிறக்கும் இடம்				

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் _____.

   அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ

2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ______.

   அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு

3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் _____.

   அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

4. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் _____.

   அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம்

5. கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து _____.

   அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ்

பொருத்துக.

க், ங் – நாவின் இடை, அண்ணத்தின் இடை

ச், ஞ் – நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

ட், ண் – நாவின் முதல், அண்ணத்தின் அடி

த், ந் – நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

சிறுவினா

1. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
3. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.

மொழியை ஆள்வோம்!

கேட்க.

தமிழ்மொழியை வாழ்த்திப் பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும்.

சொல்லக்கேட்டு எழுதுக.

உலக மொழிகளின் எழுத்து வரலாற்றை உற்று நோக்கினால் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறியலாம். அவை ஒரு வரிவடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை ஏற்றுக் கொள்ளுதல்; இருக்கின்ற வரிவடிவத்தில் திருத்தம் செய்து கொள்ளுதல்; எழுத்து எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளுதல் ஆகியனவாகும். வரிவடிவ மாற்றம், வரிவடிவத் திருத்தம், எழுத்துகளின் எண்ணிக்கை மாற்றம் ஆகியவற்றை எழுத்துச் சீர்திருத்தம் என்று குறிப்பிடுகிறோம்.

அகரவரிசைப்படுத்துக.

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.

அறிந்து பயன்படுத்துவோம்.

மரபுத் தொடர்கள்

தமிழ் மொழிக்கெனச் சில சொல் மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்படுகின்றன.

பறவைகளின் ஒலிமரபு

ஆந்தை அலறும்	குயில் கூவும்	மயில் அகவும்
காகம் கரையும்	கோழி கொக்கரிக்கும்	கிளி பேசும்
சேவல் கூவும்	புறா குனுகும்	கூகை குழறும்

தொகை மரபு

மக்கள் கூட்டம்	ஆநிரை	ஆட்டு மந்தை

வினைமரபு

சோறு உண்	தண்ணீர் குடி	பூக் கொய்
முறுக்குத் தின்	பால் பருகு	இலை பறி
சுவர் எழுப்பு	கூடை முடை	பானை வனை

சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கோழி _____. (கூவும்/கொக்கரிக்கும்)
2. பால் _____. (குடி/ பருகு)
3. சோறு _____. (தின்/உண்)
4. பூ _____. (கொய்/பறி)
5. ஆ _____. (நிரை/மந்தை)

மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

கட்டுரை எழுதுக.

நான் விரும்பும் கவிஞர்.



மொழியோடு விளையாடு

பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.

கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை, ஈ, பசு, படம், பல், கடல், கை, பக்கம், பா.

கள்	க்கள்	ங்கள்	ற்கள்

ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

(எ.கா.) அணி – பல அணிகளை அணிந்த வீரர்கள், அணிஅணியாய்ச் சென்றனர்.

படி ____.

திங்கள் ____.

ஆறு ____.

சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.

1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.
2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.
3. வென்றதைப் பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.
4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.
5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. எழுத்துகளைச் சரியான வரிவடிவத்தில் எழுதுவேன்.
2. அறிவிப்புப் பலகைகளில் உள்ள பிழைகளை உரியவரிடம் கூறித் திருத்தச்செய்வேன்.

கலைச்சொல் அறிவோம்.

ஒலிபிறப்பியல்	– *Articulatory phonetics*	உயிரொலி	– *Vowel*
மெய்யொலி	– *Consonant*	அகராதியியல்	– *Lexicography*
மூக்கொலி	– *Nasal consonant sound*	ஒலியன்	– *Phoneme*
கல்வெட்டு	– *Epigraph*	சித்திர எழுத்து	– *Pictograph*

இணையத்தில் காண்க

தமிழ் வரிவடிவ எழுத்துகளில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இணையத்தில் தேடித் தொகுத்து வருக.

இயல்
இரண்டு

ஈடில்லா இயற்கை




கற்றல் நோக்கங்கள்

- பாடலை ஓசை நயத்துடன் படித்துச் சுவைத்தல்
- நாட்டுப்புறப் பாடல்கள் வழி மக்களின் உணர்வுகளை அறிதல்
- பழங்குடியினர் இயற்கையைப் போற்றும் உணர்வை அறிந்து பின்பற்றுதல்
- மொழிபெயர்ப்புப் படைப்புகளின் மூலம் நல் உணர்வுகளை உணர்ந்து மதித்தல்
- வினைமுற்றுச் சொற்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்

கவிதைப்பேழை

இயல் இரண்டு

ஓடை



மனித வாழ்வு இயற்கையோடு இயைந்தது. கவின்மிகு காலைப்பொழுதும், மயக்கும் மாலைப்பொழுதும், பிறை நிலவும், ஓடும் ஓடையும், பாயும் ஆறும், கத்தும் கடலும் நம் மனத்தை மயக்க வல்லவை. அவ்வாறு மனத்திற்கு இன்பமூட்டும் கவிதை ஒன்றைக் கற்போம் வாருங்கள்!


**ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்*
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்
(ஓடை ஆட ...)

பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போரா ரோடி!
(ஓடை ஆட ...)

நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி
(ஓடை ஆட ...)

நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
*சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்**
(ஓடை ஆட ...)

– வாணிதாசன்



சொல்லும் பொருளும்

தூண்டுதல்	–	ஆர்வம் கொள்ளுதல்	பயிலுதல்	–	படித்தல்
ஈரம்	–	இரக்கம்	நாணம்	–	வெட்கம்
முழவு	–	இசைக்கருவி	செஞ்சொல்	–	திருந்திய சொல்

நன்செய் – நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்

புன்செய் – குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்

வள்ளைப்பாட்டு – நெல்குத்தும்போது பாடப்படும் பாடல்

பாடலின் பொருள்

நீரோடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறதே! கற்களில் உருண்டும் தவழ்ந்தும் நெளிந்தும் செல்லும் ஓடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறதே! சலசல என்று ஒலி எழுப்பியபடி ஓடுவதற்கு இந்த ஓடை எந்தப் பள்ளியில் படித்ததோ? நூல்களால் வருணித்துச் சொல்ல முடியாத இதன் அழகுக்கு இணையாக யாரால் எழுத முடியும்?

நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது. அவ்வாறு விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது. கொஞ்சி மகிழும் அலைகளால் கரையை மோதுகிறது. குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது. நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது. சிறந்த சொற்களைப் பேசும் பெண்கள் பாடும் வள்ளைப் பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவது போல் ஒலி எழுப்புகிறது.

நூல் வெளி





தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் கவிஞர் வாணிதாசன். அரங்கசாமி என்கிற எத்திராசலு என்பது இவரின் இயற்பெயர் ஆகும். இவர் பாரதிதாசனின் மாணவர். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லவர். கவிஞரேறு, பாவலர்மணி முதலிய சிறப்புப்பெயர்களைப் பெற்றவர். இவருக்குப் பிரெஞ்சு அரசு செவாலியர் விருது வழங்கியுள்ளது. தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் என்பன இவரது நூல்களுள் சிலவாகும்.

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஓடை என்னும் பாடல் இவரது தொடுவானம் என்னும் நூலில் உள்ளது.

கற்பவை கற்றபின்

மலை, அருவி, ஓடை, மரங்கள், வயல்கள் ஆகியன இடம்பெறுமாறு ஓர் இயற்கைக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டி மகிழ்க.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பள்ளிக்குச் சென்று கல்வி __________ சிறப்பு.

   அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்

2. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ________.

   அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

3. 'நன்செய்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

   அ) நன் + செய் ஆ) நன்று + செய்

   இ) நன்மை + செய் ஈ) நல் + செய்

4. 'நீளுழைப்பு' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

   அ) நீளு + உழைப்பு ஆ) நீண் + உழைப்பு

   இ) நீள் + அழைப்பு ஈ) நீள் + உழைப்பு

5. சீருக்கு + ஏற்ப – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

   அ) சீருக்குஏற்ப ஆ) சீருக்கேற்ப

   இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப

6. ஓடை + ஆட – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.

   அ) ஓடைஆட ஆ) ஓடையாட

   இ) ஓடையோட ஈ) ஓடைவாட

குறுவினா

1. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?

சிறுவினா

ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?


சிந்தனை வினா

வள்ளைப்பாட்டு என்பது நெல்குத்தும் பொழுது பாடப்படும் பாடலாகும். இதுபோல் வேறு எந்தெந்தச் சூழல்களில் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?

இயல் இரண்டு

கவிதைப்பேழை

கோணக்காத்துப் பாட்டு



இயற்கை மிகவும் அழகானது; அமைதியானது; மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவது. ஆனால் அது சீற்றம் கொண்டு பொங்கி எழுந்தால் பெரும் அழிவை ஏற்படுத்திவிடும். தமிழ்நாடு அடிக்கடி புயலால் தாக்கப்படும் பகுதியாகும். முன்பு ஒருமுறை தமிழ்நாடு புயலால் தாக்குண்டபோது நாட்டுப்புறப் பாடல் வடிவில் பாடப்பட்ட பாடல்களை அறிவோம்.

உருமங்கட் டியமுகிலால் – கோணக்காத்து
உழன்று உழன்றுமெத்த அடித்ததினால்
பெரிதான வீடுகளெல்லாம் – கோப்புடனே
பிரிந்தும் கூரைத்தட்டுச் சரிந்ததங்கே

சிங்காரமாய் வாங்கல்நகரில் – வைத்திருந்த
தென்னம்பிள்ளை அத்தனையும் வின்னமாச்சுதே
மங்காத காங்கயநாட்டில் – மேட்டுக்காட்டில்
மாளாத பருத்திஎல்லாம் கோலாகப்போச்சுதே

ஆரங்கள்வைத்த சுவரெல்லாம் – மெத்தைவீடு
அடியோடே விழுந்ததங்கே கெடிகலங்கித்
தாரங்களும் பிள்ளைகளுடன் – கூட்டிக்கொண்டு
தானடந்து வேகமுடன் கூகூவென்றார்

வாகுடனே தொண்டைமான்சீமை – தன்னிலே
வளர்ந்தோங்கும் மாநகரம் தன்னிலேதானே
சேகரமாய் வைத்தமரங்கள் – அத்தனையும்
சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாச்சுதே

சம்பிரமுடன் கப்பல்களெல்லாம் – கடலிலே
தானடந்து வேகமுடன் வரும்போதிலே
கொம்புசுத்திக் கோணக்காத்து – காலனைப்போல்
கோணமழை வந்துகப்பல் தான்கவிழ்ந்ததே

ஆர்க்காடு மைசூர்வரைக்கும் – கோணக்காத்து
அலறி அலறிமெத்த அடித்ததனால்
மார்க்கமான சாலையில்போன – சனங்களெல்லாம்
மயங்கி மயங்கிமெத்தத் தவித்தார்களே

தெத்துக்காடு காளப்பநாயக்கன் – பட்டியிலே
செத்திறந்த ஆடுமாடு மெத்தவுண்டாம்
சித்தர்கள் பொருந்திவாழும் – கொல்லிமலை
சேர்ந்திருந்த நாடெல்லாம் காத்தடிச்சுதே

இப்படிக்கிச் சேதங்களானால் – குமரேசா
எப்படிப் பிழைத்துநாங்கள் ஒப்பிதமாவோம்
மெய்ப்புடன்வே லாயுதங்கொண்டு – வருகின்ற
விக்கினமெல் லாம்தீர்த்துக் காத்திடீரையா

– வெங்கம்பூர் சாமிநாதன்

சொல்லும் பொருளும்

முகில்	– மேகம்	வின்னம்	– சேதம்
கெடிகலங்கி	– மிக வருந்தி	வாகு	– சரியாக
சம்பிரமுடன்	– முறையாக	காலன்	– எமன்
சேகரம்	– கூட்டம்	மெத்த	– மிகவும்

காங்கேய நாடு – கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று

8th Std Tamil CBSE 17-12-2020.indd 27 16-12-2021 17:47:53



பாடலின் பொருள்

திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன. வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின. அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.

அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன. ஆடவர் தம் மனைவி, பிள்ளைகளுடன் 'கூகூ' என்று அலறியபடி ஓடினர். தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன. கடலில் விரைந்து வந்த கப்பல், எமனைப் போல வந்த பெருமழையினாலும் சுழல் காற்றினாலும் கவிழ்ந்தது.

ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர். தெத்துக்காடு, காளப்பநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான ஆடு மாடுகள் இறந்தன. சித்தர்கள் வாழும் கொல்லி மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

முருகப் பெருமானே! இத்தகைய அழிவுகளை நாங்கள் எவ்வாறு தாங்குவோம்? எங்களுக்கு வருகின்ற இடர்களை எல்லாம் தடுத்து எங்களைக் காப்பாயாக!

நூல் வெளி



நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப் பாடல்களாகப் பாடினர். பேச்சுத் தமிழில் அமைந்த இவை பஞ்சக்கும்மிகள் என்று அழைக்கப்பட்டன. புலவர் செ. இராசு தொகுத்த பஞ்சக்கும்மிகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள வெங்கம்பூர் சாமிநாதன் இயற்றிய கோணக்காத்துப் பாட்டு என்னும் காத்து நொண்டிச் சிந்திலிருந்து சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

1. மக்களைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களைப் பற்றி எழுதுக.
2. இயற்கைச் சீற்றங்கள் பற்றிய புகைப்படங்களை நாளேடுகளிலிருந்து திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வானில் கரு _____ தோன்றினால் மழை பொழியும் என்பர்.

   அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

2. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் _____யும் ஓட்டிவிடும்.

   அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை

3. 'விழுந்ததங்கே' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) விழுந்த + அங்கே ஆ) விழுந்த + ஆங்கே

   இ) விழுந்தது + அங்கே ஈ) விழுந்தது + ஆங்கே

4. 'செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) செ + திறந்த ஆ) செத்து + திறந்த

   இ) செ + இறந்த ஈ) செத்து + இறந்த

5. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) பருத்திஎல்லாம் ஆ) பருத்தியெல்லாம்

   இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம்

குறுவினா

1. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?
2. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
3. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

சிறுவினா

1. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?
2. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

சிந்தனை வினா

இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

உரைநடை உலகம்

இயல்
இரண்டு

நிலம் பொது

நுழையும்முன்

அமெரிக்காவில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் சுகுவாமிஷ் பழங்குடியினர். அவர்களின் தலைவராக விளங்கியவர் சியாட்டல். அவர் அப்பகுதியிலுள்ள இயற்கை வளங்கள் சிதையாமல் காக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி அமெரிக்கக் குடியரசுத்தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதினார். அக்கடிதத்தைப் படித்தறிவோம்.

மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு,

வணக்கம். இந்தப் பூமிக்கு அணுக்கமாக உள்ள வானத்தை எப்படி வாங்கவோ விற்கவோ முடியும்? இவ்வாறு செய்ய வேண்டுமென்ற எண்ணமே வேடிக்கையாகத் தோன்றுகிறது. காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. அப்படியிருக்கையில் நீங்கள் அவற்றை எவ்வாறு விலைகொடுத்து வாங்க முடியும்?

இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம் மக்களுக்குப் புனிதமானதாகும். கூடவே, மின்னும் ஒளியுடைய ஒவ்வொரு ஊசியிலையும் எல்லாக் கடற்கரைகளும் கருமரங்களில் தவழும் பனித்துளிகளும் இன்னிசை எழுப்பித் திரியும் பூச்சி வகைகளும் எம் மக்களின் நினைவிலும் வாழ்விலும் மிகவும் புனிதமானவை. பாலூறும் மரத்திலிருந்து ஒழுகும் திரவம்கூட, செவ்விந்தியர்களின் நினைவுகளைச் சுமந்து நிற்கின்றது.

எமது மக்கள், இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. ஏனெனில் இதுவே எமக்குத் தாயாகும். நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியதாகும். இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள். மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள். மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல்சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்.



சியாட்டல்

வாஷிங்டனின் பெருந்தலைவர் எங்கள் நிலங்களை வாங்க விருப்பம் தெரிவித்துச் சொல்லி அனுப்பியபோது, நாங்கள் மனநிறைவுடன் வாழ எங்களுக்கென்று தனியிடம் ஒதுக்கித் தருவதாகவும் கூறியிருக்கிறார். எனவே, அவர் எங்களுக்குத் தந்தையாகவும் நாங்கள் அவருக்குப் பிள்ளைகளாகவும் ஆகிறோம். எனினும், இந்நிலமானது எங்களுக்கு மிகவும் புனிதமானது என்பதால் இதற்குச் சம்மதிப்பது என்பது மிகவும் இயலாத ஒன்றாகும். இந்நிலையில் எங்களுடைய நிலத்தை வாங்கும் உங்கள் திட்டத்தைப் பற்றிச் சிந்திப்போம்.

ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை. இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்களேயாகும். இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள். இவர்கள்தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள். எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர்; குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர். இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று; எமது மூதாதையரின் குருதியாகும். இந்நிலம் புனிதமானது என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் இதனைக் கற்றுக்கொடுங்கள்.

எமது வாழ்வுமுறையின் சிறப்புகள் உங்களுக்குத் தெரியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியும் அதற்கடுத்துள்ள நிலப்பகுதியும் உங்களுக்கு ஒன்றுதான். நீங்கள் அயலவர்கள். இந்நிலத்திலிருந்து தேவையானவற்றை எடுத்துச் செல்லவே நீங்கள் இங்கு வருகின்றீர்கள்.

இப்பூமியானது உங்களின் உடன்பிறந்தார் அன்று; பகைவரே. இதனை வென்று கையகப்படுத்தியபின் நீங்கள் வேறு இடத்திற்கு நகர்ந்துவிடுவீர்கள். நீங்கள் உங்கள் தந்தையர்களின் இடுகாடுகளைக்கூட மறந்துவிட்டு வெகுதூரம் சென்றுவிடுவீர்கள். பிறப்புரிமைக்குரிய சொந்த மண்ணையுங்கூட நீங்கள் மறந்துவிடுவீர்கள். நிலத்தை வாங்குவதும் விற்பதும் உங்களுக்கு ஆடுகள் அல்லது மணிகள் விற்பது போன்றவை. உங்களுடைய கோரப் பசியானது இப்பூமியைக் கொன்றழித்துப் பாழாக்கி அதனைப் பாலைவனம் ஆக்கிவிடும். ஆனால் நாங்கள் பூமியைத் தாயாகவும் வானத்தைத் தந்தையாகவும் கருதக்கூடியவர்கள்.

எங்களுடைய வாழ்வுமுறை உங்களுடைய முறையிலிருந்து எந்த அளவு மாறுபட்டது என்பது எமக்குத் துல்லியமாகத் தெரியாது. உங்களுடைய நகரங்களின் காட்சிகளெல்லாம் எமது செவ்விந்தியர்களின் கண்களை உறுத்துகின்றன.

உங்கள் நகரங்களில் அமைதியான இடம் எதுவுமில்லை. நீங்கள் வாழும் எந்த ஓர் இடத்திலும் அசைந்தாடும் இலைகளின் ஓசைகளையோ பூச்சி இனங்களின் ரீங்காரங்களையோ கேட்க முடிவதில்லை. மாறாக, சடசடவொலிகள் காதைப் பிளக்கின்றன. மகிழ்வூட்டும் இராக்கூவற் பறவைகளின் ஒலிகளையோ, குளத்தைச் சுற்றிக் கேட்கும் தவளைகளின் கூச்சல்களையோ கேட்காத வாழ்வென்ன வாழ்வு? நான் ஒரு செவ்விந்தியன் என்பதால் இதனை எவ்வாறு புரிந்துகொள்வதெனத் தெரியவில்லை.

எம் மக்கள் யாவரும் அமைதியான குளத்தின் முகத்தை முகந்து வரும் தென்றலின் இன்னோசையையும் நடுப்பகலில் பெய்யும் மழையால் எழும் மண்வாசனையையும் தேவதாரு மரத்திலிருந்து பறக்கும் இலைகளின் மணத்தையும் நுகர்வதை விரும்புபவர்கள்.

நாங்கள் காற்றை மிகவும் மதித்துப் போற்றுபவர்கள். விலங்குகள், மரங்கள், மனிதர்கள் உள்ளிட்ட யாவற்றுக்கும் சுவாசித்தல் பொதுவானது. பொதுவான ஒரு காற்றையே இவை யாவும் சுவாசிக்கின்றன. நீங்கள் சுவாசிக்கும் காற்றைப் பற்றிச் சிந்தித்ததில்லை. இந்தக் காற்றானது அனைத்து உயிர்களையும் காக்கிறது. இவ்வுணர்வுகளைச் சுமந்து நிற்கும் காற்றின் இன்றியமையாமையை, நாங்கள் நிலத்தை விற்றுவிட நேர்ந்த பின்னரும் நீங்கள் மறக்கவே கூடாது.

எங்கள் கால்களைத் தாங்கி நிற்கும் இந்த நிலமானது எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனதாகும். இந்நிலமே எங்கள் தாயாகும்; எமது உறவுமுறையாரின் வளமான வாழ்வால் ஆனதே இந்நிலமாகும். இதனை நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் சொல்லிக் கொடுங்கள். அப்போதுதான் அவர்கள் இந்நிலத்தை மதிப்பார்கள்.

இப்பூமியின் மீது எது வந்து விழுந்தாலும் அவையெல்லாம் பூமித்தாயின் மீது வந்து விழுவனவேயாகும். மேலும், இப்பூமியின் மீது மக்கள் துப்பக்கூடுமானால் அஃது அவர்கள் தம் தாய் மீது துப்புவதற்கு ஒப்பானதாகும்.

இந்நிலமானது கடவுளும் மதிக்கக்கூடிய ஒன்றாகும். ஆகவே, இதற்குக் கெடுதல் செய்வதென்பது அதனைப் படைத்த கடவுளை அவமதிக்கும் செயலாகிவிடும். நீங்கள் மற்றப் பழங்குடியினரைக் காட்டிலும் முன்கூட்டியே இந்நிலத்தை விட்டுச் செல்லக்கூடும். நீங்கள் படுத்துறங்கிய இடத்தை நீங்களே அசுத்தப்படுத்தினால் ஒருநாள் இரவு நீங்கள் உங்கள் குப்பைகளுக்குள்ளேயே மூச்சு முட்டி இறந்துபோகக்கூடும்.

இப்பகுதியில் உள்ள எருமைகள் கொல்லப்படுவதையும் எங்குப் பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதையும் தொன்மையான மலைகளை மறைத்துத் தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருவதையும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இங்கிருந்த புதர்க்காடுகள் எங்கே சென்றன? மலைக் கழுகுகள் எங்கே சென்றன? விரைவாக ஓடக்கூடிய மட்டக் குதிரைகளையும் வேட்டையாடி அழித்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படித்தான் வாழவேண்டும் என்ற வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது.

நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக இருந்தால் எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே நீங்களும் நேசியுங்கள். நாங்கள் எப்படிக் காப்பாற்றி வைத்திருந்தோமோ அப்படியே காப்பாற்றுங்கள். முழுமையான விருப்பத்தோடு உங்கள் குழந்தைகளுக்காக இந்நிலத்தைப் போற்றிக் காப்பாற்றுங்கள். நிலத்தை நேசியுங்கள்; இயற்கை நம் எல்லோரையும் நேசிப்பது போல.

தங்கள் உண்மையுள்ள,

சியாட்டல்.



நூல் வெளி

இக்கட்டுரை பக்தவத்சல பாரதி எழுதிய தமிழகப் பழங்குடிகள் எனும் நூலில் இருந்து எடுத்துத்தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. நில வளத்தைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணிகளைத் தொகுத்து எழுதுக.
2. தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் குறித்த படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. செவ்விந்தியர்கள் நிலத்தைத் _____ மதிக்கின்றனர்.

   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

2. 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை

   இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை

3. பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) பால்ஊறும் ஆ) பாலூறும் இ) பால்லூறும் ஈ) பாஊறும்

தொடரில் அமைத்து எழுதுக.

1. வேடிக்கை – ____
2. உடன்பிறந்தார் – ____

குறுவினா

1. விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
2. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
3. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?

சிறுவினா

1. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
2. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

நெடுவினா

தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?

8th Std Tamil CBSE 17-12-2020.indd 33 16-12-2021 17:47:54

விரிவானம்

இயல் இரண்டு

வெட்டுக்கிளியும் சருகுமானும்

C0YI1

நுழையும்முன்

தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லைக்கு அருகேயுள்ள பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். தமது முன்னோர்கள் காடுகளில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை வருங்காலத் தலைமுறையினர் மறந்துவிடக் கூடாது என்று எண்ணினர். எனவே காடுகள், செடிகொடிகள், விலங்குகள் தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்றைப் படிப்போம்.

நடுக்காட்டில் சலசலவென ஓடும் ஓடையையுடைய பள்ளத்தாக்கில் பெரிய மரம் ஒன்று விழுந்து கிடந்தது. அதன்மீது மெத்துமெத்தென்று பச்சைப்பாசி படர்ந்திருந்தது. பூச்சி புழுக்கள், நத்தைகள் ஆகியன அந்த மரத்தை எப்போதும் மொய்த்துக் கொண்டிருக்கும். காட்டிலுள்ள அனைத்து விலங்குகளுமே நீர் அருந்த அந்த ஓடைக்கு வரும். தாகம் தணிந்தபின் சிறு விலங்குகள் பக்கத்திலுள்ள அடர்ந்த குறிஞ்சிப் புதரில் ஓய்வெடுத்துக் கொள்ளும்.



குறிஞ்சிப் புதரின் தாழப் படர்ந்திருந்த கிளையில் பளிச்சென்று பூத்திருந்த நீலப் பூவின் இதழ்களுக்கிடையே பச்சை வெட்டுக்கிளி ஒன்று வசித்துவந்தது. அது ஒரு வாயாடி வெட்டுக்கிளி. எப்போதும் பேசிக்கொண்டே இருப்பதால் அடிக்கடி சிக்கல்களில் மாட்டிக் கொள்ளும்.

ஒரு மாலை நேரம் கூரன் என்ற பெண் சருகுமானை வெட்டுக்கிளி பார்த்தது. சருகுமான் ஓடையைத் தாண்டுவதும் குதிப்பதுமாக இருந்தது. சருகுமான் சிறிய பிராணி; ஒரு பெரிய வீட்டுப்பூனை அளவு இருக்கும்; போதாததற்குக் கூச்சப்படும் விலங்கு வேறு. எனவே அதைப் பார்த்து வெட்டுக்கிளி பயப்படவில்லை. கூரன், குறிஞ்சிப் புதர் அருகில் இளைப்பாற வந்தது. இதுதான் சாக்கு என்று வெட்டுக்கிளி அதனிடம் பேசத் துவங்கியது.

"என்ன கூரன், பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்கும் வேகமாக ஓடுகிறாய்?"

"காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். இப்பொழுது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்திக்கொண்டு வருகிறது. நான் எங்காவது ஒளிய

வேண்டும். எனக்குச் சோர்வாக வேறு இருக்கிறது. பல மணி நேரமாக ஓடிஓடிக் களைத்துப் போய்விட்டேன்."

வெட்டுக்கிளி கொஞ்சநேரம் அமைதியாக இருந்தது. அதற்கும் பித்தக்கண்ணுவைத் தெரியும். பெரிய, மஞ்சள் கண்களையுடைய சிறுத்தைதான் அது; மிகச் சிறந்த வேட்டை விலங்கு. விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்ததும் அதன் அடியில் கூரன் ஒளிந்துகொண்டது. தலையை மட்டும் தூக்கி வெட்டுக்கிளியை எச்சரித்தது. 'வெட்டுக்கிளியே! நீ வளவளவென்று பேசக்கூடிய ஆள். பித்தக்கண்ணு உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே. அது என்னைப் பார்த்துவிட்டால் பிடித்து ஒரே வாயில் விழுங்கிவிடும்."

வெட்டுக்கிளி தலையை ஆட்டி உறுதிமொழி அளித்துவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டது. அதற்குள் கூரனைத் தேடிக்கொண்டு பித்தக்கண்ணு ஓடைப்பக்கம் வந்து சேர்ந்தது. சத்தமில்லாமல், அடிமேல் அடி வைத்து ஓடையில் ஆங்காங்கு இருந்த பாறைகளின் மீது ஏறி மோப்பம் பிடித்துக்கொண்டே நடந்தது. குறிஞ்சிப் புதரின் தாழக் கிடந்த கிளையின்மீது உட்கார்ந்திருந்த வெட்டுக்கிளி அதன் கண்ணில்பட்டதும் அதைப் பார்த்து உறுமியது.

"கூரன் இங்கு வந்தாளா? அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?"

வெட்டுக்கிளிக்கு உற்சாகம் தலைக்கு ஏறியது. பித்தக்கண்ணுவை இவ்வளவு பக்கத்தில் பார்ப்பது இதுதான் முதல்முறை. அது கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வாயைத் திறந்த பொழுது, கூரனுக்கு அளித்திருந்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. எனவே, உடனே வாயை மூடிக்கொண்டது. ஆனால், பித்தக்கண்ணுவைப் பார்த்ததால் ஏற்பட்ட பரவசத்தை அடக்க இயலாமல் தன்னை அறியாமல் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது.

அறிவாளியான பித்தக்கண்ணுவுக்கு வெட்டுக்கிளியின் குதியாட்டத்திற்கான பொருள் புரியாமலா போகும்? உடனே அது கூரன் பதுங்கிக் கிடந்த மரத்தடிப்பக்கம் சென்று மோப்பமிட்டது. நல்ல வேளையாக முதல் நாள் இரவுதான் அந்த மரத்தடியில் புனுகுப்பூனை ஒன்று தங்கியிருந்தது. அது தங்கிய இடம்தான் அப்படி நாறுமே. எனவே, பித்தக்கண்ணு என்னதான் மோப்பம் பிடித்தாலும், கூரனின் உடல்வாடை அதன் மூக்குக்கு எட்டவில்லை. மாறாக, புனுகுப்பூனையின் துர்நாற்றமே எட்டியது.

கொஞ்ச நேரம் பித்தக்கண்ணு அந்த இடத்தையே சுற்றிச் சுற்றி வந்து மோப்பம் பிடித்துப் பார்த்தது. ஆனால், எதுவும் தட்டுப்படாததால் உறுமிக்கொண்டே அந்த இடத்தை விட்டுக் கிளம்பி வேறு பக்கம் சென்றது.

ஒளிந்திருந்த இடத்திலிருந்து கூரன் வெளியே வந்தது. தன் மறைவிடத்தை ஏறக்குறையக் காட்டிக் கொடுத்ததற்காக

தெரிந்து தெளிவோம்

பரம்பிக்குளம், ஆனைமலைப் பகுதிகளில் காடர்கள் வசிக்கும் சிற்றூர்கள் பல உள்ளன. காடர்கள் மிகச்சிறிய பழங்குடிச் சமுதாயத்தினர். தாங்கள் பேசும் மொழியை 'ஆல்அலப்பு' என்று அழைக்கின்றனர். அவர்களின் வாழ்க்கைமுறை பற்றிய எழுத்துக் குறிப்புகள் ஏதும் அவர்களிடம் இல்லை.



வெட்டுக்கிளிமீது அதற்குக் கோபமான கோபம். அதற்கு ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும் என்று எண்ணியது. இனி எந்தச் சூழ்நிலையிலும் அது வாக்குறுதியை மீறக்கூடாது என்பதற்காக வெட்டுக்கிளியை மிரட்டிவிட்டுப் போனால் என்ன என்று தோன்றியது.

"முட்டாள்! பித்தக்கண்ணு முன் அப்படிக் குதியாட்டம் போடாவிட்டால் என்ன? நான் இன்று செத்துப் பிழைத்திருக்கிறேன். அது என்னைத் தன் பெரிய வாய்க்குள் திணித்துத் தின்னாமல் விட்டது அதிசயம்தான்" என்று கத்தியது. "இனி இப்படிச் செய்தால், திரும்பி வந்து உன்னை என் தங்கக் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன்."

இப்படிச் சொல்லிக்கொண்டே தனது சிறிய, கூர்மையான பாதங்களை மண்ணின்மீது அழுத்தி எகிறிக் குதித்தது. அதனுடைய இந்தச் செயலால் குறிஞ்சிப்புதர் அப்படியும் இப்படியும் ஆடியது. அந்த வேகத்தில் தாழக் கிடந்த கிளையில் இருந்த வெட்டுக்கிளி கீழே விழப்போனது. அதன் மீது கோபப் பார்வையை வீசிவிட்டுக் கூரன் காட்டுக்குள் ஓடியது.

அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே வெட்டுக்கிளி வாழ்ந்து வருகிறது. இதனால்தான் இன்றும்கூட வெட்டுக்கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்கமுடியாமல் குதித்த வண்ணமுள்ளன. ஆனாலும் அவை எந்தக் குறிப்பிட்ட திசையை நோக்கியும் குதிப்பதில்லை.

நூல் வெளி

மனிஷ் சாண்டி, மாதுரி ரமேஷ் ஆகியோர் காடர்களின் கதைகள் சிலவற்றைத் தொகுத்துள்ளனர். அவற்றை யானையோடு பேசுதல் என்னும் தலைப்பில் வ. கீதா தமிழாக்கம் செய்துள்ளார். அந்நூலில் இருந்து ஒரு கதை இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

'வெட்டுக்கிளியும் சருகுமானும்', கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.

மதிப்பீடு

'வெட்டுக்கிளியும் சருகுமானும்' , கதையைச் சுருக்கி எழுதுக.

கற்கண்டு

இயல்
இரண்டு

வினைமுற்று

7VZLB

படித்தான், ஆடுகின்றாள், பறந்தது, சென்ற, கண்டு ஆகியவை செயலை அடிப்படையாகக் கொண்ட சொற்கள் ஆகும். செயலை வினை என்றும் குறிப்பர். இவ்வாறு ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

வினைமுற்று

மலர்விழி எழுதினாள். கண்ணன் பாடுகிறான். மாடு மேயும்.

இத்தொடர்களில் எழுதினாள், பாடுகிறான், மேயும் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் பொருள் முழுமை பெற்று விளங்குகிறது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர். வினைமுற்று ஐந்து பால், மூன்று காலம், மூன்று இடம் ஆகிய அனைத்திலும் வரும்.

வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

தெரிநிலை வினைமுற்று

ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

(எ.கா.) மாணவி கட்டுரை எழுதினாள்.

செய்பவர்	-	மாணவி	காலம்	-	இறந்தகாலம்
கருவி	-	தாளும் எழுதுகோலும்	செய்பொருள்	-	கட்டுரை
நிலம்	-	பள்ளி	செயல்	-	எழுதுதல்

குறிப்பு வினைமுற்று

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

பொருள்	-	பொன்னன்	சினை	-	கண்ணன்
இடம்	-	தென்னாட்டார்	பண்பு (குணம்)	-	கரியன்
காலம்	-	ஆதிரையான்	தொழில்	-	எழுத்தன்

தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுகள் அன்றி ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று எனப் பிறவகை வினைமுற்றுகளும் தமிழில் உண்டு.

ஏவல் வினைமுற்று

பாடம் படி.   கடைக்குப் போ.

இத்தொடர்கள் ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடுகின்றன. இவ்வாறு தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்.

(எ.கா.) எழுது – ஒருமை   எழுதுமின் – பன்மை

பன்மை ஏவல் வினைமுற்று எழுதுங்கள் என வருவது இக்கால வழக்கு.

வியங்கோள் வினைமுற்று

வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். இவ்வினைமுற்று இரு திணைகளையும் (உயர்திணை, அஃறிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும். இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும்.

(எ.கா.) வாழ்க, ஒழிக, வாழியர், வாரல்

ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள்

ஏவல் வினைமுற்று	வியங்கோள் வினைமுற்று
முன்னிலையில் வரும்.	இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.
ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு.	ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.
கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்.	வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும்.
விகுதி பெற்றும் பெறாமலும் வரும்.	விகுதி பெற்றே வரும்.

தெரிந்து தெளிவோம்

1. விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று, தன்மை இடத்தில் வராது.
2. இயர், அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளன.

கற்பவை கற்றபின்

'வாழ்க' என்னும் சொல்லை ஐந்து பால்களிலும், மூன்று இடங்களிலும் இடம் பெறுமாறு தொடர்களை எழுதுக.

(எ.கா.) அவன் வாழ்க. (ஆண்பால்)   நாம் வாழ்க. (தன்மை)

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. – இத்தொடரிலுள்ள வினைமுற்று _____.

   அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது

2. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று _____.

   அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

3. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் _____.

   அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

சிறுவினா

1. வினைமுற்று என்றால் என்ன?
2. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
3. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
4. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

மொழியை ஆள்வோம்!

கேட்க.

இயற்கை என்னும் தலைப்பில் அமைந்த புதுக்கவிதைகளின் ஒலிப்பதிவுகளைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

இயற்கையைப் பாதுகாப்போம்.

சொல்லக்கேட்டு எழுதுக.

இயற்கையை விரும்புவது மட்டுமன்றி, அதைப் பாதுகாப்பதும் இன்றியமையாதது. அது நமது கடமை மட்டுமன்று; பொறுப்பும் ஆகும். நாம் விரும்பிக் கண்டு களித்த இயற்கைச் செல்வங்களை, வரும் தலைமுறையினருக்காகச் சேர்த்தும் பாதுகாத்தும் வைக்க வேண்டும். இயற்கை வளங்களின் இன்றியமையாமை குறித்து விழிப்புணர்வு உண்டாக்க ஒவ்வோர் ஆண்டும் சூலை 28 ஆம் நாள் உலக இயற்கைவளப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

தமிழ் எண்கள் அறிவோம்.

விடுபட்ட கட்டங்களை நிரப்புக.

1	2	3	4	5	6	7	8	9	10
க	உ	ங	ச	ரு	சு	எ	அ	கூ	க0
11	12	13	14	15	16	17	18	19	20
கக	க உ								
21	22	23	24	25	26	27	28	29	30
				உ ரு					

வண்ணமிடப்பட்டுள்ள எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

1. உலக ஈர நில நாள் பிப்ரவரி **2**. _ _ _ _ _
2. உலக ஓசோன் நாள் செப்டம்பர் **16**. _ _ _ _ _
3. உலக இயற்கை நாள் அக்டோபர் **3**. _ _ _ _ _
4. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் **6**. _ _ _ _ _
5. உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள் அக்டோபர் **5**. _ _ _ _ _

அறிந்து பயன்படுத்துவோம்.

தொடர் வகைகள்

தொடர்கள் பொருள் அடிப்படையில் நான்கு வகைப்படும்.

செய்தித் தொடர்

ஒரு செய்தியைத் தெளிவாகக் கூறும் தொடர் செய்தித் தொடர் ஆகும்.

(எ.கா.) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.

வினாத்தொடர்

ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமையும் தொடர் வினாத்தொடர் ஆகும்

(எ.கா.) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

விழைவுத் தொடர்

ஏவல், வேண்டுதல், வாழ்த்துதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும் தொடர் விழைவுத் தொடர் ஆகும்.

(எ.கா.) இளமையில் கல். (ஏவல்)

உன் திருக்குறள் நூலைத் தருக. (வேண்டுதல்)

உழவுத்தொழில் வாழ்க. (வாழ்த்துதல்)

கல்லாமை ஒழிக. (வைதல்)

உணர்ச்சித் தொடர்

உவகை, அழுகை, அவலம், அச்சம், வியப்பு முதலான உணர்ச்சிகளை உணர்த்தும் தொடர் உணர்ச்சித் தொடர் எனப்படும்.

(எ.கா.) அடடா! என் தங்கை பரிசு பெற்றாள்! (உவகை)

ஆ! புலி வருகிறது! (அச்சம்)

பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்துவிட்டனவே! (அவலம்)

ஆ! மலையின் உயரம்தான் என்னே! (வியப்பு)

கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.

1. முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். __________________
2. கடமையைச் செய். __________________
3. பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! __________________
4. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? __________________

தொடர்களை மாற்றுக.

(எ.கா.) நேற்று நம் ஊரில் மழை பெய்தது. (வினாத்தொடராக மாற்றுக.)

நேற்று நம் ஊரில் மழை பெய்ததா?

1. காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக.)

____

2. அந்தோ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே! (செய்தித்தொடராக மாற்றுக.)

____

3. அதிகாலையில் துயில் எழுவது நல்லது. (விழைவுத் தொடராக மாற்றுக.)

____

4. முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா? (செய்தித்தொடராக மாற்றுக.)

____

5. காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத்தொடராக மாற்றுக.)

____

கடிதம் எழுதுக.

விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.




மொழியோடு விளையாடு

உரிய வினைமுற்றுகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புக.

	நட	உண்	உறங்கு
ஆண்பால்	நடக்கிறான்		
பெண்பால்			
பலர் பால்			
ஒன்றன் பால்			உறங்கியது
பலவின் பால்			
தன்மை		உண்கிறேன்	
முன்னிலை			
படர்க்கை			
இறந்த காலம்			
நிகழ் காலம்			
எதிர் காலம்	நடப்பான்		

வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

1. நடக்கிறது – நட
2. போனான் – _________
3. சென்றனர் – _________
4. உறங்கினாள் – _________
5. வாழிய – _________
6. பேசினாள் – _________
7. வருக – _________
8. தருகின்றனர் – _________
9. பயின்றாள் – _________
10. கேட்டார் – _________



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. நீர்நிலைகளைத் தூய்மையாக வைக்க உதவுவேன்.
2. மரம் நட வாய்ப்புள்ள இடங்களில் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.

கலைச்சொல் அறிவோம்.

1. பழங்குடியினர் – *Tribes*
2. சமவெளி – *Plain*
3. பள்ளத்தாக்கு – *Valley*
4. புதர் – *Thicket*
5. மலைமுகடு – *Ridge*
6. வெட்டுக்கிளி – *Locust*
7. சிறுத்தை – *Leopard*
8. மொட்டு – *Bud*




இணையத்தில் காண்க

பழங்குடி மக்களின் வாழ்க்கை முறைகளை இணையத்தில் கண்டு அறிக.

வாழ்வியல்

இயல் இரண்டு

திருக்குறள்



திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று; அஃது ஒரு வாழ்வியல் நூல்; எக்காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துகளைக் கொண்ட நூல். திருக்குறளின் பெருமையை விளக்க, 'திருவள்ளுவ மாலை' என்னும் நூல் எழுதப்பட்டிருப்பதே அதற்குச் சான்றாகும். இத்தகைய பெருமை கொண்ட திருக்குறளைப் பயில்வோம்.

நடுவுநிலைமை

1. *தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
   *எச்சத்தால் காணப் படும்**.

பொருள் : நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும்.

2. *சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்*
   கோடாமை சான்றோர்க்கு அணி.

பொருள் : தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

அணி : உவமை அணி.

கூடா ஒழுக்கம்

3. *வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
   புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

பொருள் : மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

அணி : இல்பொருள் உவமை அணி.

4. *கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன*
   *வினைபடு பாலால் கொளல்**.

பொருள் : நேராக இருந்தாலும் அம்பு கொடியதாக இருக்கிறது. வளைவுடன் இருப்பினும் யாழின் கொம்பு இனிமையைத் தருகிறது. அதுபோல மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கல்லாமை

5. *உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்*
களர்அனையர் கல்லா தவர்.

பொருள் : கல்லாதவர் பயனில்லாத களர்நிலம் போன்றவர். அவர் உயிரோடு இருக்கிறார் என்பதைத் தவிர அவரால் வேறு எந்தப் பயனும் இல்லை.

6. *விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
கற்றாரோடு ஏனை யவர்.*

பொருள் : கற்றவர்க்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது, மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது.

குற்றங்கடிதல்

7. *வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
வைத்தூறு போலக் கெடும்.

பொருள் : பழிவருமுன்னே சிந்தித்து தம்மைக் காத்துக்கொள்ளாதவருடைய வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்துவிடும்.

அணி : உவமை அணி.

8. *தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
என்குற்றம் ஆகும் இறைக்கு.*

பொருள் : தலைவர் முதலில் தன்குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவருக்கு எந்தப் பழியும் ஏற்படாது.

இடனறிதல்

9. *தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்*
இடங்கண்ட பின்அல் லது.

பொருள் : பொருத்தமான இடத்தை அறியாமல் எந்தச் செயலையும் தொடங்கவும் கூடாது; இகழவும் கூடாது.

10. *கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்*
நாவாயும் ஓடா நிலத்து.

பொருள் : வலிமையான சக்கரங்களைக் கொண்ட பெரியதேர் கடலில் ஓட இயலாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓட இயலாது. அவரவர் தமக்குரிய இடங்களிலேயே சிறப்பாகச் செயல்பட முடியும்.

அணி : பிறிது மொழிதல் அணி.



நூல் வெளி

பெருநாவலர், முதற்பாவலர், நாயனார் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.



திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல் , ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.



மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புகழாலும் பழியாலும் அறியப்படுவது _____.

அ) அடக்கமுடைமை   ஆ) நாணுடைமை

இ) நடுவுநிலைமை   ஈ) பொருளுடைமை

2. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் _____.

அ) வலிமையற்றவர்   ஆ) கல்லாதவர்

இ) ஒழுக்கமற்றவர்   ஈ) அன்பில்லாதவர்

3. 'வல்லுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) வல் + உருவம்   ஆ) வன்மை + உருவம்

இ) வல்ல + உருவம்   ஈ) வல்லு + உருவம்

4. நெடுமை + தேர் என்பதனைச் சேர்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) நெடுதேர்   ஆ) நெடுத்தேர்   இ) நெடுந்தேர்   ஈ) நெடுமைதேர்

5. 'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி _____.

அ) எடுத்துக்காட்டு உவமை அணி   ஆ) தற்குறிப்பேற்ற அணி

இ) உவமை அணி   ஈ) உருவக அணி

குறுவினா

1. சான்றோர்க்கு அழகாவது எது?
2. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
3. 'புலித் தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?

திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக.

1. தக்கார் தகவிலரெ ன்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.

2. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட பின் அல்லது.

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வலியில் நிலைமையான் வல்லுருவம் ______

புலியின்தோல் ______மேய்ந் தற்று.

2. விலங்கொடு _____ அனையர் ______


கற்றாரோடு ஏனை யவர்.

சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது

வினைபடு பாலால் செவ்விதுஆங்கு.

படங்களுக்குப் பொருத்தமான திருக்குறள்களை எழுதுக.



1. __________ __________ __________ __________

__________ __________ __________



2. __________ __________ __________ __________

__________ __________ __________

இயல் மூன்று

உடலை ஓம்புமின்



கற்றல் நோக்கங்கள்

- உடலின் சிறப்பையும் உடல் ஓம்பும் முறைகளையும் இலக்கியங்கள் வழி அறிதல்
- தமிழர் மருத்துவத்தின் தொன்மையையும் சிறப்பையும் அறிந்து பெருமிதம் கொள்ளுதல்
- மூளையின் செயல்பாடுகள் பற்றிய புதுமையான செய்திகளை அறிந்து மகிழ்தல்
- எச்சச்சொற்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்

இயல் மூன்று

கவிதைப்பேழை

நோயும் மருந்தும்

UYQHL

நுழையும்முன்

மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் தருவன நோய்கள். உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களால் ஏற்படும் துன்பங்களையும் நோய்கள் என்றே நம் முன்னோர் குறிப்பிட்டனர். அந்நோய்களை நீக்கும் மருந்துகளாக விளங்கும் அறக்கருத்துகளை இலக்கியங்கள் விளக்குகின்றன. அத்தகைய கருத்துகளை விளக்கும் நீலகேசிப் பாடல்களை அறிவோம்.

தீர்வனவும் தீராத் திறத்தனவும் செய்ம்மருந்தின்
ஊர்வனவும் போலாதும் உவசமத்தின் உய்ப்பனவும்
யார்வினவும் காலும் அவைமூன்று கூற்றவா
நேர்வனவே ஆகும் நிழல்இகழும் பூணாய் (பா.113)

**பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி*
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
*பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே**
(பா.116)

சொல்லும் பொருளும்

தீர்வன	-	நீங்குபவை	திறத்தன	-	தன்மையுடையன
உவசமம்	-	அடங்கி இருத்தல்	கூற்றவா	-	பிரிவுகளாக
நிழல்இகழும்	-	ஒளிபொருந்திய	பூணாய்	-	அணிகலன்களைஅணிந்தவளே
பேர்தற்கு	-	அகற்றுவதற்கு	பிணி	-	துன்பம்
திரியோகமருந்து	-	மூன்று யோகமருந்து	ஓர்தல்	-	நல்லறிவு
தெளிவு	-	நற்காட்சி	பிறவார்	-	பிறக்கமாட்டார்

பாடலின் பொருள்

ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்த பெண்ணே! நோயின் தன்மைபற்றி யார் வினவினாலும் அது மூன்று வகைப்படும் என அறிவாயாக. மருந்தினால் நீங்கும் நோய்கள் ஒருவகை. எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள் மற்றொரு வகை. அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன இன்னொரு வகை.

அகற்றுவதற்கு அரியவை பிறவித்துன்பங்கள் ஆகும். இவற்றைத் தீர்க்கும் மருந்துகள் மூன்று. நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் என்பவையே அம்மருந்துகள். இவற்றை ஏற்றோர் பிறவித்துன்பத்திலிருந்து நீங்கி உயரிய இன்பத்தை அடைவர்.

நூல் வெளி

நீலகேசி ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று. இந்நூல் சமணசமயக் கருத்துகளை வாதங்களின் அடிப்படையில் விளக்குகிறது. கடவுள் வாழ்த்து நீங்கலாகப் பத்துச் சருக்கங்களைக் கொண்டது. சமயத் தத்துவங்களை விவாதிக்கும் தருக்க நூலான இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. நீலகேசிக் காப்பியத்தின் தருமவுரைச் சருக்கத்திலிருந்து இரண்டு பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உடல்நலம் என்பது _______ இல்லாமல் வாழ்தல் ஆகும்.

   அ) அணி　　ஆ) பணி　　இ) பிணி　　ஈ) மணி

2. நீலகேசி கூறும் நோயின் வகைகள் _______.

   அ) இரண்டு　　ஆ) மூன்று　　இ) நான்கு　　ஈ) ஐந்து

3. 'இவையுண்டார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

   அ) இ + யுண்டார்　　ஆ) இவ் + உண்டார்

   இ) இவை + உண்டார்　　ஈ) இவை + யுண்டார்

4. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.

   அ) தாம்இனி　　ஆ) தாம்மினி　　இ) தாமினி　　ஈ) தாமனி

குறுவினா

1. நோயின் மூன்று வகைகள் யாவை?
2. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?

சிறுவினா

நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?


சிந்தனை வினா

துன்பமின்றி வாழ நாம் கைக்கொள்ளவேண்டிய நற்பண்புகள் யாவை?

கவிதைப்பேழை

இயல் மூன்று

வருமுன் காப்போம்



'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. நோய் வந்தபின் தீர்க்க முயல்வதை விட வருமுன் காப்பதே அறிவுடைமை. நல்ல உணவு, உடல்தூய்மை, உடற்பயிற்சி ஆகியவையே நல்ல உடல் நலத்திற்கு அடிப்படை. இவற்றை விளக்கும் பாடல் ஒன்றை அறிவோம்.

*உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தம் உள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே! *

கூழை யேநீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா
ஏழை யேநீ ஆனாலும்,
இரவில் நன்றாய் உறங்கப்பா!

மட்டுக் குணவை உண்ணாமல்
வாரி வாரித் தின்பாயேல்
திட்டு முட்டுப் பட்டிடுவாய்!
தினமும் பாயில் விழுந்திடுவாய்!

தூய காற்றும் நன்னீரும்,
சுண்டப் பசித்த பின்உணவும்
நோயை ஓட்டி விடும்அப்பா!
நூறு வயதும் தரும்அப்பா!







அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே!
வருமுன் நோயைக் காப்பாயே!
வையம் புகழ வாழ்வாயே!

–கவிமணி தேசிக விநாயகனார்

சொல்லும் பொருளும்

நித்தம் நித்தம்	– நாள்தோறும்	வையம்	– உலகம்
மட்டு	– அளவு	பேணுவையேல்	– பாதுகாத்தால்
சுண்ட	– நன்கு	திட்டுமுட்டு	– தடுமாற்றம்

பாடலின் பொருள்


உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். உடல் உறுதியற்ற நோயாளர்க்கு வாழும் இடமும் செல்வமும் இனிய வாழ்வு தாரா. சுத்தம் நிறைந்துள்ள எல்லா இடங்களிலும் சுகம் உண்டு. நாள்தோறும் நீங்கள் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம்.

காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொண்டு, நல்லகாற்றைச் சுவாசித்து வருவோரை நோய் அணுகாது. அவர் உயிரைக் கவர எமனும் அணுகமாட்டான். எனவே, நீங்கள் கூழைக் குடித்தாலும் குளித்தபிறகே குடித்தல் வேண்டும்! நீங்கள் வறுமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும்.

அளவாக உண்ணாமல் அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டுப் பாயில் விழுவீர்கள். தூய்மையான காற்றும் நல்ல குடிநீரும் நன்கு பசித்த பிறகு உண்பதும் நம்மை நோய் அணுகாமல் காப்பாற்றும்! நூறாண்டு வாழ வைக்கும். அரிய நம் உடல் நலமோடு இருப்பதற்கான வழிகள் இவை என்பதை அறிவீர்களாக! ஆகவே நோய் வருமுன் காப்போம்! உலகம் புகழ வாழ்வோம்!.



நூல் வெளி



கவிமணி எனப் போற்றப்படும் தேசிக விநாயகனார், குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர்; முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர், ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை உள்ளிட்ட பல கவிதை நூல்களையும் உமர்கய்யாம் பாடல்கள் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் படைத்துள்ளார்.

மலரும் மாலையும் என்னும் நூலிலிருந்து ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. 'தன் சுத்தம்' என்னும் தலைப்பில் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.
2. சுகாதாரம் பற்றிய பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.

   (எ.கா.) சுத்தம் சோறு போடும்.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காந்தியடிகள் _____ போற்ற வாழ்ந்தார்.

அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்

2. 'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) நலம் + எல்லாம் ஆ) நலன் + எல்லாம்

இ) நலம் + எலாம் ஈ) நலன் + எலாம்

3. இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்_____.

அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும்

இ) இடமெங்கும் ஈ) இடம்மெங்கும்

வருமுன்காப்போம் – இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

மோனை	________	________	________	________
	________	________	________	________
எதுகை	________	________	________	________
	________	________	________	________
இயைபு	________	________	________	________
	________	________	________	________

குறுவினா

1. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
2. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகளாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?

சிறுவினா

உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?

இயல் மூன்று

உரைநடை உலகம்

தமிழர் மருத்துவம்

(நேர்காணல்)

8MXBQ

நுழையும்முன்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (குறள் 942)

என்றார் திருவள்ளுவர். அருந்தும் உணவே அருமருந்தென அறிந்தவர் நம் தமிழ் மக்கள். தமிழ்மக்கள் உடற்கூறுகள் பற்றிய அறிவிலும், மருத்துவம் பற்றிய புரிதலிலும் சிறந்து விளங்கினர்; உலகில் பல்வேறு மருத்துவ முறைகள் இருந்தாலும் தமக்கென மரபுசார்ந்த மருத்துவ முறைகளை உருவாக்கிப் பின்பற்றி வந்தனர். அத்தகைய தமிழர் மருத்துவ முறைகள் பற்றிய செய்திகளைச் சித்த மருத்துவர் கு. சிவராமன் அவர்களிடம் உரையாடி அறிவோம்.

மாணவர் சிலர், மருத்துவர் கு. சிவராமன் அவர்களைச் சந்திக்கின்றனர்.

மாணவர்: வணக்கம் ஐயா.

வணக்கம். வாருங்கள் குழந்தைகளே!

இலக்கியா: எங்கள் பள்ளி ஆண்டுமலரில் தமிழர் மருத்துவம் பற்றிய கட்டுரை ஒன்றை வெளியிட விரும்புகிறோம். அதற்காகத் தங்களை நேர்காணல் செய்ய வந்துள்ளோம்.

நல்ல முயற்சி. எனக்குத் தெரிந்த விவரங்களை விரிவாகக் கூறுகிறேன். கேளுங்கள்!

இலக்கியா: மனிதர்கள் மருத்துவத்தைப் பற்றி எப்போது அறிந்துகொண்டார்கள் ஐயா?

தொடக்க காலத்தில் மனிதனுக்கு நோய் வந்தபோது இயற்கையாக வளர்ந்த தாவரங்களைக் கொண்டும் அவனுக்கு அருகில் கிடைத்த பொருள்களைக் கொண்டும் நோயைத் தீர்க்க முயன்றிருப்பான். தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி முதலியவற்றை மருந்தாகப் பயன்படுத்தியிருப்பான். இவ்வாறுதான் மனிதர்களுக்கும் மருத்துவத்திற்குமான தொடர்பு தொடங்கியது.



செழியன்: அப்படியானால் பழந்தமிழர்களும் மருத்துவத்தை அறிந்திருந்திருப்பார்கள் அல்லவா?

ஆமாம். பழந்தமிழர்கள் மருத்துவத்தை அறிந்தது மட்டுமன்றி, மருத்துவத்தில் சிறந்தும் விளங்கினார்கள் என்பதற்கான குறிப்புகள் பழந்தமிழ் இலக்கியங்களில் கிடைக்கின்றன. மூலிகை மருத்துவம், அறுவை மருத்துவம், மருந்தில்லா மருத்துவம் போன்றவற்றையும் உடலை வளப்படுத்தி உள்ளத்தைச் சீராக்கும் யோகம் முதலிய கலைகளையும் அறிந்திருந்தார்கள்.

மேகலை: சித்த மருத்துவம், ஆயுர்வேதம், இயற்கை மருத்துவம், நாட்டு மருத்துவம் என்றெல்லாம் மருத்துவமுறைகள் பல உள்ளன. இவையெல்லாம் ஒன்றா, வெவ்வேறா?

இவற்றுக்கெல்லாம் அடிப்படை ஒன்றுதான். தமிழரது நிலம், நிறைந்த பண்பாடுகளும் தத்துவங்களும் அடங்கியது. நோய்கள் எல்லாம் பேய், பிசாசுகளால் வருகின்றன; பாவ, புண்ணியத்தால் வருகின்றன என்று உலகத்தின் பல பகுதிகளில் சொல்லிக்கொண்டிருந்த காலத்தில், தமிழர் தத்துவங்களான சாங்கியம், ஆசீவகம் போன்றவை உடலுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டறிந்து, உடலில் ஐம்பூதங்களினால் ஏற்படும் மாற்றங்களை விளக்கின. நோயை இயற்கையில் கிடைக்கும் பொருள்கள், அப்பொருள்களின் தன்மை, சுவை இவற்றைக்கொண்டே குணப்படுத்த முடியும் என்ற உண்மையை மிகத்தெளிவாக விளக்கினர். தமிழர் மருத்துவம் பண்பாட்டுக்கூறாக ஆகும்போது நாட்டு வைத்தியமாகவும் பாட்டி வைத்தியமாகவும் மரபுசார்ந்த சித்த வைத்தியமாகவும் உணவு சார்ந்த மருத்துவமாகவும், பண்பாடு சார்ந்த மருத்துவமாகவும் விரிந்திருக்கிறது.

பாரி: உயர்வாக இருந்த தமிழர் மருத்துவமுறை பிறகு பின்தங்கிப் போனதற்குக் காரணம் என்ன?

நிறைய காரணங்களைச் சொல்லலாம். நம்மீது நிகழ்ந்த படையெடுப்புகள் தாக்கத்தை ஏற்படுத்தின. தமிழர் மருத்துவம் அவரவர் வாழ்வியலுடனும் தத்துவங்களுடனும் பிணைந்துதான் வந்துகொண்டிருந்தது. சமண, பௌத்தர் காலத்தில் அந்தந்த மதங்களின் கூறுகள் நம் மருத்துவத்தில் இருந்தன. பிறகு சைவம் ஓங்கிய போது சைவ சித்தாந்தத்தின் கூறுகள் கலந்தன. இறுதியில் ஆங்கிலேயர்கள் வந்தனர். அவர்களுடைய நவீன அறிவியல் பார்வை நம்மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. சித்தமருத்துவம் என்பது மரபுவழி மருத்துவமாகவும் நாட்டு மருத்துவமாகவும் சுருங்கியது. இறுதியில் கிராமம் சார்ந்த மருத்துவமாக மாறிப்போனது. நவீன மருத்துவத்தில், துரிதமாகச் சிலநோய்களுக்குக் கிடைத்த தீர்வுகள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

மேகலை: தமிழர் மருத்துவம் இப்பொழுது மீண்டும் மறுமலர்ச்சி அடைந்து வருவதாகத் தோன்றுகிறதே?

ஆமாம். பல ஆண்டுகளுக்குப் பின்னால்தான் மரபுசார்ந்த மருத்துவம் மிகப்பெரிய அனுபவத்தின் நீட்சி என்பதும் மிகப்பெரிய பட்டறிவில் ஒரு பெரிய அறிவியல் கண்டிப்பாக ஒளிந்திருக்கும் என்பதும் புரியத் தொடங்கின. குறிப்பாகச் சர்க்கரை, இரத்தக்கொதிப்பு, புற்று, மாரடைப்பு முதலிய வாழ்வியல் நோய்கள் பெருகிய நிலையைச் சொல்லலாம். இவற்றைத் தீர்க்க வெறும் இரசாயன மருந்துகள் போதா. கூடவே உணவு, வாழ்வியல், உடற்பயிற்சி, யோகம் இவையும் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும். தொடர் சிகிச்சைக்குப் பிறகு பக்கவிளைவுகள் இல்லா மருந்துகளின் தேவை அவசியமாயிற்று. அதன் பிறகுதான் எல்லா நாடுகளிலும் இருக்கும் மரபுசார்ந்த மருத்துவ முறைகளின் மீது, நவீன அறிவியல் பார்வை விழத் தொடங்கியது. அதனால், சித்த மருத்துவத்தின் தொன்மையும்

தமிழர்களின் தொன்மையும் புரிய ஆரம்பித்தன; ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்பட்ட நோய்களுக்கு மட்டுமல்லாது, புதிய தொற்றுநோய் மாதிரியான சவால்களுக்கும் இது சிறந்த மாற்றாக இருப்பது தெரிய வந்தது. இன்றைக்குப் பெருவாரியாக இது மீண்டெழுந்து வந்துகொண்டிருக்கிறது.

இலக்கியா: சித்த மருத்துவத்தில் தாவரங்களில் இருந்து மட்டுமே மருந்து தயாரிக்கப்படுகிறதா?

வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே என்றனர் சித்தர்கள். வேர், தழை ஆகியவற்றால் குணம் அடையாதபோது சில நாட்பட்ட நோய்களுக்கு, தாவரங்கள் மட்டும் அல்லாமல் உலோகங்களையும் பாஷாணங்களையும் சித்த மருந்துகளாக நம் முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் எப்படி மூலிகைகளை மருந்தாகப் பார்த்தார்களோ அப்படியே தாதுப்பொருட்களையும், உலோகத்தையும் பார்த்தார்கள். அவற்றை மருந்துகளாக மாற்றும் வல்லமை சித்தமருத்துவத்தில் இருந்திருக்கிறது.

பாரி: எல்லாருடைய உடல்நலனுக்கும், உடல் அமைப்பிற்கும் ஒரே வகையான மருந்து ஏற்றதாக இருக்குமா?

60 கிலோ எடை கொண்ட ஒருவர் நியூசிலாந்தில் இருக்கிறார்; இந்தோனேசியாவில் இருக்கிறார்; இந்தியாவில் இருக்கிறார் என்றால் அவர்கள் அத்தனை பேருக்கும் ஒரே அளவு மருந்து கொடுக்க முடியாது. அவர் எந்த வகை மனிதர்; எப்படியான வாழ்வியலில் இருக்கிறார்; என்ன மாதிரியான சமூகச் சிக்கலில் வாழ்கிறார்; என்ன மாதிரி எண்ணப்போக்கு உடையவர்; அவருடைய உணவுமுறை என்ன? அவர் மரபுவழி எப்படிப்பட்டது என்றெல்லாம் ஆராய்ந்துதான் சிகிச்சை கொடுக்க வேண்டும். அந்த வகையில் தமிழர் மருத்துவம் தனித்துவம் மிக்கது.

இலக்கியா : மருத்துவத்தில் பக்கவிளைவுகள் பற்றிக் கூறுங்கள் ஐயா.

ஒரு மருந்தை எடுத்துக்கொண்டால் அதற்கு விளைவும் இருக்கும்; பக்கவிளைவும் இருக்கும். ஆனால், தமிழர் மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லை. அதற்குக் காரணம் மருந்து என்பதே உணவின் நீட்சியாக இருக்கிறது. ஒரு கவளம் சோற்றை உடல் எப்படி எடுத்துக்கொள்கிறதோ, அப்படியேதான் சித்த மருத்துவத்தின் இலேகியத்தையும், சூரணத்தையும் உடல் எடுத்துக்கொள்ளும். அதனால், உணவு எப்படிப் பக்க விளைவுகளைத் தருவதில்லையோ அதே போலச் சித்த மருந்துகளும் பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதில்லை. இருந்தபோதிலும் சித்த மருத்துவத்தின் மீது தற்போது நடக்கும் பல அறிவியல் ஆய்வுகள் மூலம் அவற்றைத் தர நிர்ணயம் செய்து யாருக்கு எந்த மருந்து, எந்த அளவில், எந்தத் துணை மருந்துடன் கொடுத்தால் பக்க விளைவு இருக்காது என்று பட்டியலிட்டுள்ளனர்.

செழியன்: தமிழர் மருத்துவத்தின் சிறப்பு என்று எதைச் சொல்வீர்கள்?

தனித்துவமான பார்வை இதன் முதல் சிறப்பு. இரண்டாவது, சூழலுக்கு இசைந்த மருத்துவம் இது. இந்த மருத்துவத்தின் பயன்பாடோ, மூலக்கூறுகளோ, மருந்துகளோ சுற்றுச்சூழலைச் சிதைக்காது. மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால், நோய்க்கான சிகிச்சையை மட்டும் சொல்லாமல், நோய் மீண்டும் வராமலிருப்பதற்கான வாழ்வியலையும்

சொல்கிறது. அதாவது, நோய்நாடி நோய் முதல்நாடி என்ற திருக்குறளின்படி நோயை மட்டுமன்றி, அதன் காரணிகளையும் கண்டறிந்து ஒருவரை நோயில்லாத மனிதராக்குகிறது.

இலக்கியா: இன்றைக்கு நோய்கள் பெருகியிருக்கக் காரணம் என்ன ஐயா?



மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் முதன்மைக் காரணம். மாறிப்போன உணவு, மாசு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம் இவை மூன்றும் குறிப்பிடத்தக்க காரணங்கள். சுற்றுச்சூழல் மாசு மற்றொரு காரணம். தன் உணவுக்காக வேறு எதைப்பற்றியும் கவலைகொள்ளாமல், நிலத்தை உரங்களாலும் பூச்சிக்கொல்லிகளாலும் நச்சுப்படுத்தலாம் என்ற அலட்சியமான எண்ணமும் மனஅழுத்தமும் எது கேளிக்கை, எது குதூகலம், எது படிப்பு, எது சிந்தனை என்ற புரிதல் இல்லாமையும் கூடுதல் காரணங்கள் ஆகும். நம்முடைய வாழ்வியலைச் செம்மைப்படுத்துவதற்காக நாம் அறிவியல் அறிவை, மேம்பட்ட அறிவை வளர்த்தோம். ஆனால், நுண்ணறிவைத் தொலைத்துவிட்டோம். இயற்கையோடு இயைந்து வாழலாம் என்கிற அறிவை நாம் மறந்துவிட்டோம். இவையே, இன்றைக்குப் பல நோய்கள் பெருக மிக முக்கியமான காரணம் ஆகும்.

மேகலை: உடல் எடைக்கும் உடல் நலத்திற்கும் தொடர்பு உண்டா ஐயா?

மரபு சார்ந்து ஒருவர் உடல் எடை அதிகமாக இருக்கிறது. ஆனால், அவருக்குத் தற்போது எந்த நோயும் இல்லாமல், நலமாக இருக்கிறார் என்றால் அவர் உடல் எடையைக் குறைக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், எடை அதிகரிப்பால் சர்க்கரைநோய், இரத்தக்கொதிப்பு வர வாய்ப்புள்ளது என்றால், அவர் குறைத்துத்தான் ஆக வேண்டும். அழகுக்காக மட்டும் உடல் எடையைக் குறைப்பதும் மிகவும் மெலிவதும் நல்லவையல்ல.

பாரி: உணவைக் குறைப்பதுதான் எடையைக் குறைக்கும் வழியா ஐயா?

இன்றைக்குப் பல உணவுக் கட்டுப்பாட்டு முறைகள் உள்ளன. எல்லாம் நல்ல முயற்சிகள்தாம். ஆனால், அவற்றைப் பின்பற்றுவதற்கு நம் உடல் ஏற்றதாக இருக்கிறதா என்பதைக் குடும்ப மருத்துவரிடம் கேட்டு முடிவெடுக்க வேண்டும். ஏனென்றால், இன்றைக்குப் பலரும் இணையத்தைப் பார்த்து அம்முறைகளுக்குச் செல்கிறார்கள். சிலருக்கு அவை கேடு விளைவிக்கக்கூடும். ஒரே அடியாக எடையைக் குறைப்பது சரியன்று. ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஒன்று, ஒன்றரை ஆண்டுகளில் எடையைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். அவசர

தெரிந்து தெளிவோம்

நடைமுறையில் உள்ள மருத்துவ முறைகளுள் சில

- சித்த மருத்துவம்
- ஆயுர்வேத மருத்துவம்
- யுனானி மருத்துவம்
- அலோபதி மருத்துவம்

யுகம் என்றாலும் உணவு உண்பதில், சில ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தாக வேண்டும். உணவுக்காகச் சமையலறையில் செலவிடும் நேரத்தை, நல்வாழ்விற்காகச் செலவிடும் நேரம் என நினைக்க வேண்டும்.


சிறுதானியங்கள்

பாரி: உடல் நலத்துக்காக உடலுக்கு, நாள்தோறும் என்ன செய்ய வேண்டும்?

தினமும் நாற்பத்தைந்து நிமிடத்தில் மூன்று கி.மீ. நடைப்பயணம், பதினைந்து நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி, ஏழு மணிநேரத் தூக்கம், மூன்று லிட்டர் தண்ணீர் அருந்துதல் ஆகியன அவசியம். எங்கோ விளையும் ஆப்பிளைச் சாப்பிடுவதை விட, நமது ஊரில் விளையும் கொய்யா, இலந்தை, நாவல், பப்பாளி, நெல்லி, வாழைப்பழங்கள் ஆகியவற்றைக் காலை உணவுக்கு முன்பு சாப்பிடலாம்.

செழியன் : பல வகை மருத்துவ முறைகள் இருக்கின்றனவே, அவை இணைந்து செயல்பட முடியுமா?

உலகத்தின் அத்தனை மரபுசார்ந்த மருத்துவமுறைகளுக்கும் பலமும் இருக்கிறது; பலவீனமும் இருக்கிறது. தொற்றுநோய் வராமல் காப்பதிலும், அவசரகாலச் சிகிச்சையிலும், மருத்துவ ஆராய்ச்சியிலும் நவீன மருத்துவம் முன்னணியில் உள்ளது. மரபுசார்ந்த மருந்து வேலை செய்யும் விதத்தைப் புரிந்துகொள்வதற்கு நவீன அறிவியல் பயன்படுகிறது. எனவே, எல்லா மருத்துவ முறைகளும் கைகோர்க்க வேண்டும்.

இலக்கியா : பள்ளிக் குழந்தைகளாகிய எங்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் யாவை?

நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதைவிட வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ளுங்கள். சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் உங்களை நலமாக வாழவைக்கும். விலை உயர்ந்த உணவுதான் சரியான உணவு என்று எண்ணாதீர்கள். எளிமையாகக் கிடைக்கக்கூடிய காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். கணினித்திரையிலும் கைபேசியிலும் விளையாடுவதைத் தவிர்த்து நாள்தோறும் ஓடியாடி விளையாடுங்கள். இரவுத்தூக்கம் மிகவும் இன்றியமையாதது. உரிய நேரத்தில் உறங்கச் செல்லுங்கள்; அதிகாலையில் விழித்தெழுங்கள். உங்களை எந்த நோயும் அண்டாது.

மேகலை : மிகவும் பயனுள்ள செய்திகளை இன்று அறிந்துகொண்டோம். மிகவும் நன்றி ஐயா.

மிகவும் மகிழ்ச்சி. சென்று வாருங்கள்.

கற்பவை கற்றபின்

1. நீங்கள் மருத்துவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்களை எழுதுக.
2. உங்கள் பகுதிகளில் கிடைக்கும் மூலிகைகளின் மாதிரிகளைத் திரட்டி அவற்றின் பயன்களை எழுதிக் காட்சிப்படுத்துக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்குத் _____ பயன்படுத்தினர்.

   அ) தாவரங்களை ஆ) விலங்குகளை இ) உலோகங்களை ஈ) மருந்துகளை

2. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது _____ நீட்சியாகவே உள்ளது.

   அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்

3. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று _____.

   அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு

4. சமையலறையில் செலவிடும் நேரம் _____ செலவிடும் நேரமாகும்.

   அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக இ) நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக

குறுவினா

1. மருத்துவம் எப்போது தொடங்கியது?
2. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
3. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?

சிறுவினா

1. நோய்கள் பெருகக் காரணம் என்ன?
2. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

நெடுவினா

தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

விரிவானம்

இயல் மூன்று

தலைக்குள் ஓர் உலகம்

நுழையும்முன்

உலகத்திலேயே மிகமிக வியப்பானது மனித மூளை. அதன் செயல்பாடுகள் விந்தையானவை மட்டுமல்ல, புதிரானவை. மருத்துவ மேதைகளும் அறிவியலாளர்களும் இதனைத் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது உடல் இயக்கத்திற்கும் மன இயக்கத்திற்கும் காரணமான மூளையைப் பற்றி அறிந்துகொள்வோம்.

இந்தப் பிரபஞ்சத்திலேயே மிகவும் அடர்த்தியான சிக்கலான ஒரு பொருள் எதுவென்றால் அது மனித மூளைதான் என்று சொல்கிறார்கள். அதனுள் இருக்கும் செல்களின் எண்ணிக்கை ட்ரில்லியன். அவற்றில் நூறு பில்லியன் அதாவது பத்தாயிரம் கோடி நியூரான்கள் உள்ளன. இந்த நியூரான்களின் வலைப்பின்னல்தான் புத்திசாலித்தனம், படைப்பு உணர்ச்சி, ஞாபகம், தன்னுணர்வு ஆகியன எல்லாம்.

மூளையின் அமைப்பு

மூளை, முதுகுத் தண்டில் இருந்து முளைக்கிறது. தண்டிலிருந்து மடிப்பு மடிப்பாக முட்டைக்கோஸ் இலைகள் வருவது போல அல்லது வெங்காயம் போல உள்ளது. இதை மூன்று பாகங்களாக மேம்போக்காகப் பிரிக்கின்றனர். அவை உள்மூளை, நடுமூளை, பின்மூளை. முன்மூளையில் மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ளன. உடம்பிலுள்ள சிறுமூளைதான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.

மூளையின் உணவு



மூளை ரொம்ப பசி உள்ளது. பசி என்றால் சாம்பார்சாதம், தயிர்சாதம் போன்ற பசியில்லை. உயிர்வளிப்பசி. மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மி.லி. குருதி தேவைப்படுகிறது. மூளை, உடம்பின் எடையில் ஐம்பதில் ஒரு பங்கே இருந்தாலும் அது குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை அபகரித்துக் கொள்கிறது. மூளைக்கு அத்தனை ஆற்றல் தேவைதான். தனக்கான ஆற்றலைச் சேகரித்து வைக்க அதற்கு இடமும் இல்லை. அதனால் அதற்குக் குருதியோட்டம் எப்போதும் இருந்துகொண்டே இருக்க வேண்டும்.

மூளையும் உடல் இயக்கமும்

நாம், உடலின் நிறைய பாகங்களை நம் விருப்பப்படி செயல்படுத்துகிறோம். கையை ஆட்டு, பரதநாட்டியம் ஆடு, அடி, மூக்கைத் தொடு இவையெல்லாம் மேலிடத்திலிருந்து ஆணை வந்து செயல்படும் செய்கைகள். தும்மல், இருமல், சூடான பாத்திரத்தைத் தொட்டால் உடனே கையை விலக்கிக் கொள்வது இவற்றுக்கெல்லாம் மேலிடத்துக்குத் தகவல் போய் ஆணை வருவதற்குக் காத்திருக்க முடியாது. ஆகவே, இவையெல்லாம் பஞ்சாயத்து, தாலுகா அலுவலகங்களிலேயே தீர்மானம் ஆகிவிடுகின்றன. இந்த மாதிரி தன்னிச்சையான செயல்களுக்காகத்தான் முதுகுத்தண்டின் குறுக்கு இணைப்புகள் இருக்கின்றன.

> **தெரிந்து தெளிவோம்**
>
> தலையின் பகுதியில் நடைபெறும் சில தன்னிச்சையான செயல்களான வெளிச்சத்திற்கு ஏற்றபடி கண்களைத் திறப்பது, தலையைத் திருப்பும்போது கண்களை நிலைநிறுத்துவது ஆகியவற்றை எல்லாம் மூளையே பார்த்துக் கொள்கிறது. ஆனால், ஏப்பம் விடுவது, இருமல், தும்மல், கொட்டாவி, வாந்தி ஆகியவற்றுக்கெல்லாம் மூளைக்குப் பதிலாக முதுகெலும்பு இருந்தாலே போதும்.

மூளையின் வலதும் இடதும்

மூளைக்குச் செல்லும் நரம்புகளில் இட – வல மாற்றம் ஒன்று நிகழ்கிறது. அதாவது வலப்பக்கச் செய்திகள் மூளையின் இடப்பக்கப் பகுதிக்கும், இடப்பக்கச் செய்திகள் வலப்பக்கப் பகுதிக்கும் செல்கின்றன. நம்மில் பெரும்பாலானவர்கள் வலதுகைக்காரர்களாக இருப்பதற்குக் காரணம் நம் மூளையின் இடது பகுதியின் அதிகப்படியான பாதிப்பினால்தான் என்று சொல்கிறார்கள். இடது பாதிதான் பேச, எழுத, கணக்கிட, தர்க்கரீதியில் சிந்திக்க உதவுகிறது. அறிவாற்றல், பிரச்சனைகளை அலசுதல், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறப்பது இவற்றையெல்லாம் இடது பகுதி பார்த்துக்கொள்கிறது. நம் மொழி அறிவு கூட இடது பகுதியே.

இடது பாதி அண்ணன் என்றால், வலது பாதி தம்பி. இந்தப் பாதியால்தான் நாம் வடிவங்களை உணர்கிறோம். கவிதை எழுதுவது, படம் போடுவது, நடனம் ஆடுவது, நடிப்பது போன்ற கலை தொடர்பானவை எல்லாம் வலது பாதியில்தான். வலது பாதி சரியில்லையெனில் வீட்டுக்குப் போக வழி தெரியாமல் திண்டாடுவோம்.

வலது பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் நடிகர்கள், பாடகர்கள், நடனக் கலைஞர்கள், இசைக்கருவிகளைக் கையாளுபவர்கள் இன்ன பிறர். இடது பகுதி ஆக்கிரமிப்பு அதிகம் இருப்பவர்கள் பட்டயக் கணக்கர்கள், கணக்கு ஆசிரியர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்கள் போன்றோர். இடதும் வலதும் சரியான அளவில் கலந்து இருப்பவர்களும் உண்டு.

மூளையும் உணர்வுகளும்

நம்மில் எத்தனை உணர்ச்சிகள் உள்ளன எனச் சிந்தித்துப் பாருங்கள்! கோபம், பாசம், அன்பு, வியப்பு, வெறுப்பு என எத்தனை உணர்ச்சிகளை நம் முகம் காட்டுகின்றது. மனிதனுக்குத்தான் முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டும் திறமை அதிகம். கோபம், பயம்

போன்ற ஒன்றிரண்டைத்தான் மிருகங்களால் காட்டமுடியும். மற்றபடி மனிதன் போல் நவரசங்களையும் காட்டமுடியாது. உணர்ச்சிகளின் பிறப்பிடம் மூளைதான். மூளை – உடல் இரண்டும் இணைந்து செயல்படுவதால் வெளிப்படுபவைதான் உணர்ச்சிகள்.

தெரிந்து தெளிவோம்

மறதி என்பது சில நினைவுகள், மற்ற நினைவுகளுடன் குறுக்கிட்டு அவற்றை அழிப்பது என்று சிலர் கருதுகின்றனர். பொதுவாக நாம் உயிர் வாழத் தேவையான செய்திகளை நாம் விரைவில் மறப்பதில்லை. நம் பெயர், நண்பர், உறவினர், மேலதிகாரிகளின் பெயர்கள், வீட்டுக்குப் போகும் வழி இவற்றையெல்லாம் நாம் விரைவில் மறப்பதில்லை.

மூளையும் நினைவாற்றலும்

நினைவாற்றல், மூளையின் மற்றொரு விந்தை. ஏறக்குறைய பிறந்த சில வருடங்களில் இருந்து வாழ்நாள் முழுவதும் பல செய்திகள் நமக்கு நினைவில் இருக்கின்றன. மனிதனின் நினைவாற்றலை ஒரு கணிப்பொறி அல்லது நூலகத்துடன் சிலர் ஒப்பிடுவார்கள். நம் புலன்களிலிருந்து (கண், காது, தொண்டை) வரும் செய்திகளை மூளை தற்காலிகமாக ஓரிடத்தில் போட்டுவைத்துக் கொள்கிறது. அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில செய்திகள் குறுகிய கால நினைவுக்கு அனுப்பப்படுகின்றன. தற்காலிக நினைவில் புதியதாகச் செய்திகள் உள்ளே நுழையும் பொழுது பழைய செய்திகள் நீக்கப்படுகின்றன. உங்களுக்கு இன்று காலை சாப்பிட்டது நினைவில் இருக்கும். போன வாரம் சாப்பிட்டது நினைவில் இருக்காது. ஆனால் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தால் ஒரு செய்தியை அதிககாலம் தற்காலிக நினைவில் நிறுத்த முடியும்; தேர்வுக்கு மனப்பாடம் செய்வது போல. இவ்வாறு மீண்டும் மீண்டும் நினைக்கப்படும் செய்திகள் தேர்ச்சி பெற்று நம் மூளையின் நிலையான நினைவுக்கு அனுப்பப்படுகின்றன.

மூளையும் தன்னுணர்வும்

உங்கள் பெயர் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், சின்ன குழந்தையில் இருந்து நான் என்ற உணர்வு நிச்சயம் நம் எல்லோருக்கும் ஏற்பட்டுவிடுகிறது. இந்தத் தன்னுணர்வுதான் மனத்தின் செயல்பாடு என்கின்றனர். தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும்போது நாம் இதன் பல நிலைகளைச் சந்திக்கிறோம். சிலருக்கு மத்தியானத் தூக்கத்தில் இருந்து எழுந்திருக்கும்பொழுது 'அமுக்குவான்' வரும். அதாவது நினைவு திரும்பிவிடும். ஆனால், கைகால் அசைக்கும் திறமை சிறிது நேரத்திற்குப் பிறகே வரும். முழுதும் விழித்துக் கொண்டிருக்கும்போதே இரண்டு விதமான மனம் இயங்குவதை நீங்கள் கவனிக்கலாம். மகிழுந்து அல்லது இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஒரு மனம் வேறு சிந்தனையில் இருக்க, மற்றது கியர் மாற்றுவது, சாலை விதிகளுக்குப் பணிவது என்று மற்றொரு தளத்தில் இயங்கும்.

மூளையும் அன்றாட நிகழ்வுகளும்

அவசரமே இல்லாத அன்றாட நிகழ்ச்சிகளை மூளை எப்படிச் சமாளிக்கிறது என்று பார்க்கலாம். சுமார் தொண்ணூறு நிமிடங்களுக்கு ஒருமுறை நாம் எல்லோரும் மனநிலை மாறுகிறோம் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். கொஞ்சநேரம் சுறுசுறுப்பு, கொஞ்சநேரம் பகல்கனா இப்படித்தான் நாம் மாறிமாறி வாழ்கிறோம். பகலிலும் சரி, இரவிலும் சரி இந்நிலை தொடரும்.

8th Std Tamil CBSE 17-12-2020.indd 61 16-12-2021 17:47:58


சராசரி மனிதன் தனது வாழ்நாளில் இருபது வருடம் தூங்குகிறான். மூன்று லட்சம் கனவுகள் காண்கிறான். நினைவு போல் தூக்கமும் நம் நரம்புகளின் முக்கிய நிலை ஆகும். கனவு என்பது, மனதில் உள்ள நினைவலைகளில் அன்றைய அல்லது சமீபத்திய நினைவுகளை வகைப்படுத்தி வரிசைப்படுத்தும் செயல் என்கின்றனர். கனவுகள் அலமாரியில் உள்ள பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துத் திருப்பி வைப்பது போன்றது என்கிறார்கள்.

மூளையும் கற்றலும்

மொழியை இலக்கண விதியின்படி பேசுவது மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமை. சிம்பன்சி போன்ற குரங்குகளுக்கு மன்றாடிச் சொல்லிக் கொடுத்தும் இந்தத் திறமை வரவில்லை. மொழியாராய்ச்சி இப்படி என்றால் கற்பது, அனுபவத்திலிருந்து அறிவு பெறுவது ஆகியவை பற்றியும் நிறைய ஆராய்ச்சி செய்கிறார்கள். நாம் சட்டை போட்டுக் கொள்வது, சைக்கிள் ஓட்டுவது, ஸ்பூனால் சாப்பிடுவது ஆகியவை எல்லாம் அனுபவ அறிவுதான். இவற்றையெல்லாம் நாம் எப்படிக் கற்கிறோம் என்ற ஆராய்ச்சிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

எது எப்படியோ, கற்பது நம் மூளையில் மாறுதல்களை ஏற்படுத்துகிறது என்பது பரிசோதனை மூலம் கண்டறிந்த உண்மை. நாம் தினமும் கற்கின்றோம்; கற்ற வித்தைகளை மாற்றி அமைத்துக்கொள்கிறோம். கற்க கற்க நம் நியூரான்களின் இணைப்புச் சிக்கல்கள் அதிகமாகிக்கொண்டே வருகின்றன; மூளையின் எடை கொஞ்சம் கூடுகிறது; அதில் உள்ள புரோட்டீன் அளவு அதிகரிக்கிறது; கற்பது, அனுபவ அறிவு ஆகியவை மூளையின் பல பகுதிகளைப் பாதிக்கின்றன என்பது மட்டும் உறுதி.

நூல் வெளி



சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன் என்பதாகும். இவர் சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், அறிவியல் புனைவுக்கதைகள், திரைப்படக் கதை வசனம் எனப் பலதுறைகளில் பணியாற்றியுள்ளார். மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் இவர் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளார். என் இனிய எந்திரா, மீண்டும் ஜீனோ, ஸ்ரீரங்கத்துத் தேவதைகள், தூண்டில் கதைகள் உள்ளிட்ட பலநூல்களை எழுதியுள்ளார்.

இவரது தலைமைச்செயலகம் என்னும் நூலிலிருந்து செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

மூளையின் செயல்கள் குறித்துப் பிற நூல்களிலிருந்து தகவல்களைத் திரட்டி எழுதுக.

மதிப்பீடு

மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

கற்கண்டு

இயல் மூன்று

எச்சம்

படித்தான், படித்த, படித்து – ஆகிய சொற்களைக் கவனியுங்கள்.

படித்தான் என்னும் சொல்லில் பொருள் முற்றுப் பெறுகிறது. எனவே, இது வினைமுற்று ஆகும்.

படித்த, படித்து ஆகிய சொற்களில் பொருள் முற்றுப்பெறவில்லை. இவ்வாறு பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும். இது பெயரெச்சம், வினையெச்சம் என்று இருவகைப்படும்.

பெயரெச்சம்

படித்த என்னும் சொல் மாணவன், மாணவி, பள்ளி, புத்தகம், ஆண்டு போன்ற பெயர்ச்சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

(எ.கா.) படித்த மாணவன்.

படித்த பள்ளி.

இவ்வாறு பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும். பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்.

(எ.கா.) பாடிய பாடல் – இறந்தகாலப் பெயரெச்சம்

பாடுகின்ற பாடல் – நிகழ்காலப் பெயரெச்சம்

பாடும் பாடல் – எதிர்காலப் பெயரெச்சம்

தெரிநிலை, குறிப்புப் பெயரெச்சங்கள்

எழுதிய கடிதம் – இத்தொடரில் உள்ள எழுதிய என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்தகாலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

சிறிய கடிதம் – இத்தொடரில் உள்ள சிறிய என்னும் சொல்லின் செயலையோ, காலத்தையோ அறிய முடியவில்லை. பண்பினை மட்டும் குறிப்பாக அறியமுடிகிறது. இவ்வாறு செயலையோ, காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

வினையெச்சம்

படித்து என்னும் சொல் முடித்தான், வியந்தாள், மகிழ்ந்தார் போன்ற வினைச் சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

(எ.கா.) படித்து முடித்தான்.

படித்து வியந்தான்.

இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.

தெரிநிலை, குறிப்பு வினையெச்சங்கள்

எழுதி வந்தான் – இத்தொடரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

மெல்ல வந்தான் – இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்திவரும் வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

முற்றெச்சம்

வள்ளி படித்தனள்.

இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்தாள் என்னும் வினைமுற்றுப் பொருளைத் தருகிறது.

வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.

இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

கற்பவை கற்றபின்

1. 'வந்த' – என்னும் சொல்லைப் பயன்படுத்தி வெவ்வேறு தொடர்களை எழுதுக.

   (எ.கா.) வந்த மாணவன்.

   வந்த மாடு.

2. 'வரைந்து' – என்னும் சொல்லைப் பயன்படுத்தி வெவ்வேறு தொடர்களை எழுதுக.

   (எ.கா.) வரைந்து வந்தான்.

   வரைந்து முடித்தான்.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் _____ எனப்படும்.

அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

2. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் _____.

அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த

3. குறிப்பு வினையெச்சம் _____ வெளிப்படையாகக் காட்டாது.

அ) காலத்தை ஆ) வினையை இ) பண்பினை ஈ) பெயரை

பொருத்துக.

நடந்து - முற்றெச்சம்

பேசிய - குறிப்புப் பெயரெச்சம்

எடுத்தனன் உண்டான் - பெயரெச்சம்

பெரிய - வினையெச்சம்

கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.

நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்து, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்த, பார்த்து.

பெயரெச்சம்	வினையெச்சம்

சிறுவினா

1. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
2. 'அழகிய மரம்' – எச்ச வகையை விளக்குக.
3. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
4. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

மொழியை ஆள்வோம்!

கேட்க.

உடல்நலம் குறித்த விழிப்புணர்வு உரைகளின் ஒலிப்பதிவுகளைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

உணவே மருந்து.

சொல்லக்கேட்டு எழுதுக.

நலமான உடலுக்கு இரண்டுவேளை சிற்றுண்டியும் ஒருவேளை நிறைவான உணவும் போதுமானது. காலை உணவைத் தவிர்த்தல் கூடாது. இரவெல்லாம் வெற்றுக் குடலுடன் இருந்த உடலுக்குக் குளிர்ச்சியான உணவு மிகவும் நல்லது. மதிய உணவில் காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றை அதிக அளவு சேர்த்துக்கொள்ள வேண்டும். அரிசி உணவை அளவாக உண்ண வேண்டும். மிகுதியான காரத்தையும் உப்பையும் தவிர்க்க வேண்டும். சரியான நேரத்திற்கு உணவை உட்கொள்ள வேண்டும். இரவு எளிமையான உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். இவையே உடல்நலம் பேணும் வழிமுறைகளாகும்.

அறிந்து பயன்படுத்துவோம்.

உவமைத் தொடர்கள்

நாம் பேச்சிலும் எழுத்திலும் கருத்துகளை எளிதாக விளக்குவதற்காகச் சில தொடர்களைப் பயன்படுத்துவோம். அவை உவமைத் தொடர்கள் எனப்படும். ஒவ்வொரு உவமைத் தொடருக்கும் தனிப் பொருள் உண்டு.

(எ.கா) 1. மடை திறந்த வெள்ளம் போல் – தடையின்றி மிகுதியாக.

திருவிழாவைக் காண மடைதிறந்த வெள்ளம் போல மக்கள் வந்தனர்.

2. உள்ளங்கை நெல்லிக்கனி போல – வெளிப்படைத் தன்மை

பாரதியின் பாடல்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல அனைவருக்கும் விளங்கும்.

பொருத்துக.

1. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல – ஒற்றுமையின்மை
2. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல – பயனற்ற செயல்
3. பசு மரத்து ஆணி போல – தற்செயல் நிகழ்வு
4. விழலுக்கு இறைத்த நீர் போல – எதிர்பாரா நிகழ்வு
5. நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல – எளிதில் மனத்தில் பதிதல்

உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.

1. குன்றின் மேலிட்ட விளக்கைப் போல

2. வேலியே பயிரை மேய்ந்தது போல

3. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல

4. உடலும் உயிரும் போல

5. கிணற்றுத் தவளை போல

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை


மொழியோடு விளையாடு

கீழ்க்காணும் படம் சார்ந்த சொற்களை எழுதுக.



8th Std Tamil CBSE 17-12-2020.indd 67 16-12-2021 17:47:59

வட்டத்திலுள்ள பழமொழிகளைக் கண்டுபிடித்து எழுதுக.



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. காலை மாலை உடற்பயிற்சி செய்வேன்.
2. உரிய நேரத்தில் உறங்கச் செல்வேன்; உரிய நேரத்தில் விழித்தெழுவேன்.

கலைச்சொல் அறிவோம்.

நோய்	-	*Disease*	பக்கவிளைவு	-	*Side Effect*
மூலிகை	-	*Herbs*	நுண்ணுயிர் முறி	-	*Antibiotic*
சிறுதானியங்கள்	-	*Millets*	மரபணு	-	*Gene*
பட்டயக் கணக்கர்	-	*Auditor*	ஒவ்வாமை	-	*Allergy*

இணையத்தில் காண்க

நாம் நாள்தோறும் உண்ணும் காய்கறிகளின் மருத்துவப் பயன்கள் பற்றித் தகவல்களைத் தேடித் திரட்டுக.

இயல் நான்கு

கல்வி கரையில



கற்றல் நோக்கங்கள்

- நீதி நூல்களைப் படித்து அறக்கருத்துகளை வாழ்வில் பின்பற்றுதல்
- திரையிசைப் பாடல்களில் உள்ள நற்கருத்துகளை அறிந்து கொள்ளுதல்
- பல்துறைக் கல்வி பற்றி அறிந்து, கற்று வாழ்வில் உயர்தல்
- வாழ்க்கை நிகழ்வுகள் மூலம் வாழ்வியல் விழுமியங்களை அறிதல்
- பொருள் வேறுபாடுகளை உணர்த்துவதில் வேற்றுமை உருபுகளின் பங்கினை அறிந்து பயன்படுத்துதல்

கவிதைப்பேழை

இயல் நான்கு

கல்வி அழகே அழகு



மனிதர்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ள எண்ணற்ற அணிகலன்களைப் பயன்படுத்துகின்றனர். அவை தங்கம், வெள்ளி போன்ற விலைமதிப்பு மிக்க உலோகங்களால் செய்யப்பட்டவையாக உள்ளன. ஆனால் மனிதனுக்கு அழகையும் உயர்வையும் தரக்கூடிய உண்மையான அணிகலன் எது என்பதைக் கூறும் நீதிநெறி விளக்கப்பாடல் ஒன்றை அறிவோம்.

*கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்*

–குமரகுருபரர்

சொல்லும் பொருளும்

கலன் – அணிகலன் முற்ற – ஒளிர


பாடலின் பொருள்

ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை. அதுபோலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.

நூல் வெளி



குமரகுருபரர் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ஆகியன அவற்றுள் சிலவாகும்.



மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்து உட்பட 102 வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. இந்நூலின் பதின்மூன்றாம் பாடல் நமக்குப் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.
2. கற்றோரின் சிறப்புகளைப் பற்றிப் பிற நூல்களில் இடம்பெற்ற பாடல்களைத் தொகுத்து எழுதுக.
3. பின்வரும் நாலடியார் பாடலைப் படித்துச் சுவைக்க.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல – தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கற்றவருக்கு அழகு தருவது ________.

அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

2. 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால்

இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. அழகு ______________________________________
2. கற்றவர் ______________________________________
3. அணிகலன் ______________________________________

குறுவினா

யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

சிறுவினா

நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.


சிந்தனை வினா

கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

கவிதைப்பேழை

இயல் நான்கு

புத்தியைத் தீட்டு



அறிவே ஆற்றல் என்பது ஆன்றோர் கூற்று. அறிவும் உழைப்புமே ஒரு மனிதனை வாழ்வில் உயரச் செய்யும். வன்முறையால் பிறரை வெல்வது சரியான செயலன்று. அறிவினாலும் அன்பினாலும் பிறரை வெல்லும் வெற்றியே நமக்குப் பெருமை தரும். இக்கருத்துகளை விளக்கும் பாடல் ஒன்றை அறிவோம்.

கத்தியைத் தீட்டாதே – உந்தன்
புத்தியைத் தீட்டு
கண்ணியம் தவறாதே – அதிலே
திறமையைக் காட்டு!

ஆத்திரம் கண்ணை
மறைத்திடும் போது
அறிவுக்கு வேலை கொடு – உன்னை
அழித்திட வந்த
பகைவன் என்றாலும்
அன்புக்குப் பாதை விடு! (கத்தியைத்)

மன்னிக்கத் தெரிந்த
மனிதனின் உள்ளம்
மாணிக்கக் கோயிலப்பா – இதை
மறந்தவன் வாழ்வு
தடம் தெரியாமல்
மறைந்தே போகுமப்பா! (கத்தியைத்)

இங்கே இருப்பது சில காலம்
இதற்குள் ஏனோ அகம்பாவம்
இதனால் உண்டோ ஒரு லாபம் – இதை
எண்ணிப்பாரு தெளிவாகும்! (கத்தியைத்)

– ஆலங்குடி சோமு

சொல்லும் பொருளும்

தடம் – அடையாளம்
அகம்பாவம் – செருக்கு

நூல் வெளி



ஆலங்குடி சோமு திரைப்படப் பாடல் ஆசிரியராகப் புகழ்பெற்றவர். சிவகங்கை மாவட்டத்திலுள்ள ஆலங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

இவரது திரையிசைப்பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

அறிவின் பெருமையை விளக்கும் பழமொழிகளைத் திரட்டுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் _____ இன்றி வாழ்ந்தார்.

   அ) சோம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி

2. 'கோயிலப்பா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா

   இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா

3. பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) பகைவென்றாலும் ஆ) பகைவனென்றாலும்

   இ) பகைவன்வென்றாலும் ஈ) பகைவனின்றாலும்

குறுவினா

1. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
2. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?

சிறுவினா

புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

சிந்தனை வினா


உங்கள் மீது பிறர் வெறுப்புக் காட்டினால் அவர்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?

உரைநடை உலகம்


இயல் நான்கு

பல்துறைக் கல்வி

S1WBI



கேடில் விழுச்செல்வம் கல்வி. மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது கல்வி ஆகும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அதைச் சீர்திருத்தி இட்டுச் செல்வதிலும் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. மனித ஆற்றலை மேம்படுத்தவும் பண்பாட்டினைக் காக்கவும் அறிவியலை வளர்க்கவும் நாட்டுப்பற்றை ஊட்டிடவும் சான்றோர் பலர் பெரிதும் முயன்றனர். அவ்வகையில் திரு.வி.க.வின் கல்விச் சீர்திருத்தச் சிந்தனைகளை அறிவோம்.



அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே இளமையில் கல் என்னும் முதுமொழி பிறந்தது.

ஏட்டுக்கல்வி

இந்நாளில் ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு

மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

தெரிந்து தெளிவோம்

கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்.

– விஜயலட்சுமி பண்டிட்
ஐ. நா. அவையின் முதல் பெண் தலைவர்

தாய்மொழி வழிக்கல்வி

நாம் தமிழ் மக்கள்; நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும் நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம். ஆனால் முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறப்பது.

தமிழ்வழிக் கல்வி

தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே; சிறப்பான அறிவியல் கலைகளில்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார். அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்து எழுதப்படுகின்றன. அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது? குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றும் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது. கலப்பில் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம். தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவோம் என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங் காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும்.

காப்பியக் கல்வி

வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றும் கூறலாம். நாம் தமிழர்கள். நாம் பாட்டின்பத்தை நுகர வேண்டுமேல் நாம் எங்குச் செல்லல் வேண்டும்? தமிழ் இலக்கியங்களுக்கிடையே அன்றோ? தமிழில் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன. இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள். இத்தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது. இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்! தமிழ் இன்பத்திலுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ? தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள்.

இயற்கைக் கல்வி



நீங்கள் ஏடுகளைப் பயில்வதுடன் நில்லாது, ஓய்ந்த நேரங்களில் இயற்கை நிலையங்களில் புகுந்து, இயற்கைக் கழகத்தில் நின்று, இயற்கைக் கல்வி பயில்வீர்களானால், இயற்கையோடியைந்த வாழ்வு நடத்த வல்லவர்களாவீர்கள். காடு செறிந்த ஒரு மலை மீது ஏறி, ஒரு மரத்தடியில் நின்று, மண்ணையும் விண்ணையும் நோக்குங்கள்; இயற்கை ஓவியத்தைக் கண்டு கண்டு மகிழுங்கள்; மண் வழங்கும் பரந்த பசுமையிலும் வெண்மையிலும் விண் வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள்; காலையில் இளஞாயிறு, கடலிலும் வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங்காட்சியை நெஞ்சில் எழுதுங்கள்.

அருவி முழவும் குயில் குரலும் வண்டிசையும் மயில் அகவலும் மலர் மணமும் தேனினிமையும் தென்றல் வீசலும் புலன்களுக்கு விருந்தாகும் இயற்கை அன்னையைப் பாருங்கள். ஆங்கே சூழ்ந்துள்ள செடி, கொடி மரங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் உற்றுநோக்கி, சில செடிகள் பூமியில் பரந்தும் சில செடிகள் எழுந்து நின்றும் சில கொடிகள் சுருண்டு சுருண்டு படர்ந்தும் இருப்பதற்கும், சில மரங்கட்கு நீள் கிளையும் கிளிக்கு வளைந்த மூக்கும் யானைக்குத் துதிக்கையும் மானிற்குக் கொம்பும் அமைந்திருப்பதற்கும் என்ன காரணம் என்று சிந்தியுங்கள்.

அந்தியில் ஞாயிறு அமருங் கோலத்தையும் பறவைகள் பறந்து செல்வதையும் கால்நடைகளின் மணியோசையையும் காணுங்கள்; கேளுங்கள். இவ்வாறு, இயற்கைக் கழகத்தில் பயின்றுபயின்று சங்கப்புலவர் இளங்கோ, திருத்தக்கத்தேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எவ்வாறு எழுத்தோவியத்தில் இறக்கியிருக்கின்றனர் என்று ஆராயுங்கள். நந்தமிழ்க் காவியங்களும், ஓவியங்களும் இயற்கை அமிழ்தாய் உயிரையும் உடலையும் பேணுவதை உணர்வீர்கள்.

இசைக்கல்வி

இன்றைய சூழலில் இசைப்பயிற்சியும் இன்றியமையாதது. இசை பாட இயற்கை சிலருக்குத் துணை செய்யும்; சிலர்க்குத் துணை செய்வதில்லை. அத்துணை பெறாதார் இசை இன்பத்தையாதல் நுகரப் பயில்வாராக. பழைய தமிழர் இசைத்துறையின் நிலை கண்டவர் என்று ஈண்டு இறுமாந்து கூறுகிறேன். தமிழ் யாழையும் குழலையும் என்னென்று சொல்வது? அந்த மகரங்களை நினைக்கும் போதே அமிழ்தூறுகிறது. கொடிய காட்டு வேழங்களையும் பாணர் தம் யாழ் மயக்குறச் செய்யுமாம். அந்த யாழ் எங்கே? இனி இசைப் புலவர்தொகை நாட்டிற்

> **தெரிந்து தெளிவோம்**
>
> ஏடன்று கல்வி; சிலர் எழுதும் பேசும்
> இயலன்று கல்வி; பலர்க் கெட்டா தென்னும்
> வீடன்று கல்வி; ஒரு தேர்வு தந்த
> விளைவன்று கல்வி; அது வளர்ச்சி வாயில்
> – குலோத்துங்கன்

பெருகப் பெருக நாடு பல வழியிலும் ஒழுங்கு பெறுதல் ஒருதலை. ஆகவே அத்துறை மீதும் மாணவர் கருத்துச் செலுத்துவாராக.

நாடகக்கல்வி

நாடகக்கல்வி வாழ்விற்கு வேண்டா என்று யான் கூறேன். இடைக்காலத்தில் நாடகக் கலையால் தீமை விளைந்தபோது அதைச் சிலர் அழிக்க முயன்றதுண்டு. இப்போதைய நாடகம் நன்னிலையிலில்லை என்பதை ஈண்டு விளக்க வேண்டுவதில்லை. நாடகத்துக்கு நல்வழியில் புத்துயிர் வழங்க வேண்டும். நாடகத்தை நல்வழிப்படுத்தி மாணாக்கரை அதன்கண் தலைப்படுமாறு செய்யத் தமிழ்ப் பெரியோர் முயல்வாராக.

அறிவியல் கல்வி



உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'அறிவியல்' என்னும் அறிவுக்கலை. உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வேண்டும். இந்நாளில் இவைகளைப் பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும். புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது. நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது. இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

நூல் வெளி





திரு.வி.க. என்று அனைவராலும் குறிப்பிடப்படும் திருவாரூர் விருத்தாசலம் கல்யாணசுந்தரனார் அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்; சிறந்த மேடைப் பேச்சாளர்; தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுபவர். இவர் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை, பொதுமை வேட்டல், முருகன் அல்லது அழகு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

இவரது இளமை விருந்து என்னும் நூலிலிருந்து சிலபகுதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்ஆகிய தொகுப்புகளில் இடம்பெறும் நூல்களின் பெயர்களைத் திரட்டி எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது _____.

   அ) விளக்கு   ஆ) கல்வி   இ) விளையாட்டு   ஈ) பாட்டு

2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ______.

   அ) இளமை   ஆ) முதுமை   இ) நேர்மை   ஈ) வாய்மை

3. இன்றைய கல்வி _____ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

   அ) வீட்டில்   ஆ) நாட்டில்   இ) பள்ளியில்   ஈ) தொழிலில்

நிரப்புக.

1. கலப்பில் _____ உண்டென்பது இயற்கை நுட்பம்.
2. புற உலக ஆராய்ச்சிக்கு _____ கொழுகொம்பு போன்றது.
3. வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது _____ இன்பம் ஆகும்.

பொருத்துக.

1. இயற்கை ஓவியம்	–	சிந்தாமணி
2. இயற்கைத் தவம்	–	பெரியபுராணம்
3. இயற்கைப் பரிணாமம்	–	பத்துப்பாட்டு
4. இயற்கை அன்பு	–	கம்பராமாயணம்

குறுவினா

1. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு. வி.க. கூறுவன யாவை?
2. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
3. திரு. வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

சிறுவினா

1. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி.க. கூறுவனவற்றை எழுதுக.
2. அறிவியல் கல்வி பற்றித் திரு. வி.க. கூறுவன யாவை?

நெடுவினா

காப்பியக் கல்வி குறித்துத் திரு. வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

திரு. வி.க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?

விரிவானம்

இயல் நான்கு

ஆன்ற குடிப்பிறத்தல்

AOFEH

நுழையும்முன்

ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் உயர்த்துவதில் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. புதிய செய்திகளைக் கற்பது மட்டும் கல்வியன்று. மனிதனின் உள்ளத்தில் புதைந்துகிடக்கும் நற்பண்புகளை வெளிக்கொண்டு வருவதும் அவனது வாழ்வில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதும் கல்வியின் நோக்கங்களாகும். ஒரு மாணவனின் உள்ளத்தில் ஆசிரியர் விதைத்த விதை எவ்வாறு பயன் தந்தது என்பதை ஒரு நிகழ்வின் மூலம் அறிவோம்.



செய்யுள் வகுப்புகள் எனக்குச் சுவையானவை; பிள்ளைகளுக்கும் சுவையானவை.

சில நேரங்களில் சில வரிகளை நெடுநேரம் விவரிக்க நேரும்! வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி – என்பதையெல்லாம் சுலபமாக விளக்கிவிடலாம். "உண்மையுமாய் இன்மையுமாய்" என்பதையும் "யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு வானாகி நின்றாயை" என்பதையும் விளக்குவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகும்.

நான்காம் ஐந்தாம் வகுப்புகளில், அதிகாரத்துக்கு இரண்டாகச் சில திருக்குறள் பாக்கள் வரும். அவ்வாறு வந்த ஒரு திருக்குறளுக்குப் பொருள் கூற நான் சற்றுத் திண்டாடியதும், கடைசியில் அது சிறப்பாக நிறைவேறியதும் ஒரு சுவையான நிகழ்ச்சியாகும்.

அப்போது நான் ஒரு சிற்றூர்ப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வந்தேன். அதே ஊரில் ஓர் எளிய குடிசை வீட்டில் நானும் என் மனைவியும் வசித்து வந்தோம். நாங்கள் குடியிருந்த குடிசை வீட்டுக்கு உள் தாழ்ப்பாள் கூடக் கிடையாது. ஜாதிக்காய்ப் பலகையினாலான ஓர் எளிய கதவை வெறுமனே சாத்தி, அது திறந்து கொள்ளாமல் இருக்க ஓர் இரும்பு நாற்காலியையும் நீர் நிறைந்த ஒரு இரும்பு வாளியையும் முட்டுக் கொடுத்து வைத்துவிட்டு, இரவில் உறங்கப்போவோம். சம்பள நேரமாயிருந்தால், பணப்பையைத் தலையணைக்கு அடியில் வைத்துத் தூங்கிவிடுவோம்.

ஒரு நாள் காலை, பள்ளி புறப்படும் முன்பு, எனது எட்டு முழ வேட்டியைத் தும்பைப்பூப் போல் துவைத்து, மெலிதாக நீலம் போட்டு, மூங்கில் கம்புகளுக்கு இடையே கட்டிய கொடிக்கயிற்றில் காயப் போட்டுவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டேன்.

பிறகு வந்து பார்த்தபோது வாசலில் காயப் போட்டிருந்த வேட்டியைக் காணோம். என்னவாயிற்று என்று தெரியவில்லை.

அன்று மாலைக்குள், என்னோடு பழகும் ஊர் மக்கள் சிலரிடையே, ஆசிரியரின் வேட்டியைக் காணவில்லை என்கிற செய்தி பரவி, பலவாறான கற்பனைகளை உற்பத்தி செய்துவிட்டது. அதிலே பெரும்பாலோர் சேர்ந்து சொன்ன கருத்து இதுதான்.

" சிகாமணிதான் எடுத்திருப்பான்!"

நான் குடியிருந்த வீட்டிற்கு அருகே இருந்த சேந்து கிணற்றில் இருந்து அப்பகுதி மக்கள் அடிக்கடி குடிநீர் முகந்து கொண்டு போவார்கள். அந்தக் கிணற்றின் எளிய அழகையும் அதன் தீஞ்சுவைத் தண்ணீரையும் விவரிப்பதற்கு, நான் பல வரிகள் எழுதவேண்டும்.

அன்றைக்குச் சிகாமணி, ஆறேழு குடங்கள் தண்ணீர் எடுப்பதற்காகப் பலமுறை எங்கள் வாசல் வழியே போய்வந்திருக்கிறான்.

பொதுவாகப் பத்து பத்தரை மணிக்கு மேல் கிராமத்தில் ஆள் அரவம் அதிகம் இருக்காது. பெரும்பாலும் கூலி வேலைக்குப் போய்விட்டிருப்பார்கள்.

சிகாமணியைப் பற்றி அறிந்த பலரும், அவன்தான் வேட்டியை எடுத்திருப்பான் என்று உறுதிபடக் கூறினார்கள்.

சிகாமணியின் தந்தை "பண்டுக்கிழவர்". அவரை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். வேலை இல்லாத நேரங்களில் அவரும் ஒரு மாதிரிதான். அவரது பழக்கம்தான் சிகாமணியைத் தொற்றிக்கொண்டது என்பது அவ்வூராரின் கணிப்புகளுள் ஒன்று. எல்லாவற்றையும் வாங்கிக் காதில் போட்டுக் கொண்டேன். கிராமிய வாழ்வை, ஒரு காவியம் பயில்வது போல் கற்றுக்கொண்டிருந்த காலம் அது!

ஒன்றை மட்டும் நான் குறித்து வைத்துக்கொண்டேன். சிகாமணியின் மகன் சகாதேவன், என்னிடத்தில் நான்காம் வகுப்பு பயில்கிற மாணவன். ஒல்லியாக, சிவப்பாகக் கொஞ்சம் உயரமாக இருப்பான்.

மறுநாள் காலை விடிகிற வரையில், வேட்டியின் மர்மம் விளங்கவில்லை. ஆனால், பள்ளிக்கூடம் வழக்கம் போல் இருக்கிறதே! போனேன்; வகுப்பெடுத்தேன்.

அன்று செய்யுள் பகுதியில் திருக்குறள் வந்திருந்தது. பண்புடைமை என்கிற அதிகாரத்திலிருந்து இரண்டு குறள்கள்.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

என்னும் குறளை நான் நடத்த வேண்டியதாய் இருந்தது.

அந்தக் குறளை நிதானமாகப் படித்துக் காட்டி, அதற்குப் பொருள் சொல்லப் போனபோதுதான் எனக்கு அந்தப் பொறி தட்டியது.

"அன்புடையவர்களாயிருப்பதும் சிறந்த குடியில் பிறந்திருப்பதும் பண்புடைமை என்று சொல்லப்படும்."

இஃது அதன் பொருள்.

இதிலே, 'அன்புடைமை' யை என் மனம் ஒப்பியது. 'ஆன்ற குடிப்பிறத்தலில்' என்னமோ ஆழமாக நெருடியது.

சிறந்த குடியில் பிறப்பது என் கையிலா இருக்கிறது? நற்பண்பு இல்லாத பெற்றோருக்கு நான் மகனாகப் பிறந்திருக்கக்கூடும். அதனால், பிற நல்ல இலக்கணங்கள் பூண்டு, நான் பண்புடையவன் ஆக மாட்டேனா?

திருவள்ளுவர் எவ்வளவு பெரிய ஞானி! அவர் இப்படிப்பட்ட பொருளிலா அந்தக் குறளை வடித்திருப்பார்? இருக்காது.

அப்படியானால், இந்தக் குறளுக்கு நான் என்ன பொருள் கூற முடியும்?

ஆன்ற குடிப்பிறத்தல் என்றால், சிறந்த குடி உன்னிடமிருந்து பிறக்க வேண்டும் என்பதாக நான் பொருள் சொல்லத் துணிந்தேன். அதற்காக அத்தொடரை ஆன்றகுடிபிறத்தல் எனக்கொண்டு பொருள் கூறினேன்.

சிகாமணியின் மகன் சகாதேவன் நான் பாடம் நடத்தும்போது, அடிக்கடி என் கண்ணில் பட்டுக் கொண்டிருந்தான். அவன் என்னைக் கூர்ந்து நோக்குவதாகவே எனக்குத் தோன்றியது. அதில் நான் உற்சாகம் கொண்டேன். தொடர்ந்து திருக்குறளுக்கு விளக்கம் சொன்னேன். "அப்பன் திருடனாயிருக்கலாம், மகன் நல்லவனாக இருப்பான். அவங்க அப்பனைச் சொல், திருடன்தான்! அவன் பையனைச் சொல்லாதே, அவன் மிக நல்லவன்!" என்று உலகோர் பேசுவதைக் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா?"

மாணவர்கள் 'ஆம்' என்பதைப் போலத் தலையாட்டினார்கள்.

நான் தொடர்ந்து விளக்கமளித்தேன். இதற்கு எதிராகவும் இருப்பது உண்டு. 'அவனுடைய அப்பன் எவ்வளவு நல்லவன், இந்தப் பிள்ளை அவனுக்குப்போய் பிறந்திருக்கிறதே!' என்றும் மக்கள் கூறுவர். "உங்க அப்பன் திருடனா, அவனுடைய அப்பனாகிய உன் பாட்டனும் திருடனா? அந்தப் பழக்கம் அத்தோடு முடியட்டும். உன்னிலிருந்து திருடாதவன் என்னும் ஒரு புதியகுடி உதிக்கட்டும். ஒழுக்கம் இல்லாத

பரம்பரையில் நீ வந்திருந்தாலும் ஒழுக்கத்தின் உறைவிடமாக நீ இருக்க வேண்டும். உன் குடியின் பழைய பெயரில் உள்ள இழிவுகள் எல்லாம் நீங்கி, உன்னிலிருந்து பெருமை கொண்ட புதியகுடி பிறக்கட்டும். இதையே வள்ளுவர் ஆன்ற குடிப்பிறத்தல் என்று கூறுகிறார்" என விளக்கம் கூறி முடித்தேன்.

முத்தாய்ப்பாக, "அன்புடையவனாக இருத்தலும், குடும்பத்தின் வசை நீங்குமாறு ஒரு புதுத்தலைமுறை உன்னிலிருந்து தொடங்குவதும் பண்புடைமை என்று சொல்லப்படும்" என்று அந்தத் திருக்குறளுக்குப் பொருள் கூறினேன். நான் கூறி முடிப்பதற்கும் மதிய உணவு வேளைக்காகப் பள்ளி முடிவதற்கும் சரியாக இருந்தது.

இவ்வளவையும் நான் கூறியபோது சகாதேவனை நானும் என்னைச் சகாதேவனும் அடிக்கடி பார்த்துக்கொண்டோம். என் வேட்டி தொடர்பாக ஒருசொல் கூட நான் சொல்லவில்லை.

மதிய உணவிற்கு எங்கள் வீட்டிற்குச் சென்றேன். மனைவியார் தட்டெடுத்து வைத்து உணவு பரிமாறினார். நான் கைவைத்து இன்னும் பிசைய ஆரம்பிக்கவில்லை. அதற்குள் அவ்வூரைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்னும் இளைஞன் எங்கள் வீட்டிற்குள் வந்தான். கைகளிரண்டையும் பின்னால் கட்டியிருந்தான்.

"என்னப்பா?" என்று கேட்டேன் நான்.

கிருஷ்ணமூர்த்தி பின்னால் கட்டியிருந்த கைகளை முன்னால் கொண்டு வந்தான்.

அவற்றில் என் வேட்டி இருந்தது.

"அடடே... என்னப்பா!" என்று என் வியப்பின் அளவு அதிகரிக்கக் கேட்டேன்.

"சகாதேவன் கொடுத்தான் சார்! அவங்க அப்பன் சிகாமணிதான் எடுத்துக்கொண்டு போய் அவங்க வீட்ல இருவாய்ச்சாலில் வைத்திருக்கிறான்! சகாதேவனுக்கு அது தெரிஞ்சிருக்குது! இன்னைக்குக் காத்தாலே நீங்க ஏதோ பாடம் நடத்தினீங்களாமே? அதக் கேட்டு, பள்ளிக்கூடம் விட்டு வந்தவன், என்னைக்கூப்பிட்டு, இந்தா வாத்தியார் வேட்டி! எங்கப்பாதான் கொணாந்து இருவாய்ச்சாலில் வச்சிருந்தாரு! நான் கொண்டு போய்க் கொடுக்க வெக்கமாயிருக்குது... நீ கொண்டு போய்க் கொடுத்துடண்ணான்னு சொல்லிச் சகாதேவன்தான் கொடுத்தான்!" என்று கூறிச் சிரித்தவாறு நின்றான் கிருஷ்ணமூர்த்தி.

எனக்கு ஒரே பூரிப்பு. வேட்டி கிடைத்த மகிழ்ச்சி மட்டும்தானா அது! உண்மையின் நாற்றொன்று ஊன்றி நடப்பட்டதோர் உற்சாகம் அது. "சொல்" எத்தனை சக்தி வாய்ந்தது என்பதை உணர்ந்த தூய மகிழ்ச்சி அது. காலந்தோறும் சிஷ்யனுக்கும் குருவுக்கும் மத்தியில் நிகழும் ஒரு சுகானுபவத்தின் தொடர்ச்சி அது. "அப்பாடா! எல்லாம் நல்லபடி முடிந்தது" என்கிற வேளையில், வேறொரு பிரச்சினை முளைத்தது.

"இவனை இப்படியே விடக்கூடாது. வாத்தியார் வேட்டியையே திருடியிருக்கான் பாரேன்! வசமாகச் சிக்கினான். அவன் புள்ளையே அவனைக் காட்டிக் கொடுத்திட்டான்!" என்று ஆர்வத்தோடு பலர் அணிவகுத்தனர்.

நடக்கப் போகிற காரியம், காரியத்தின் பலன் எல்லாம் எனக்கு நன்கு புரிந்தது.

ஊரில் நியாயம் போட்டு, சிகாமணிக்கு ஐந்நூறோ ஆயிரமோ அபராதம் போடுவார்கள். கையில் பைசா இல்லை என்று சொன்னாலும் சிகாமணி கட்டித்தான் தீர வேண்டும். கொஞ்சம் வாய்தா தருவார்கள்.

ஆனால், நியாயத்திலிருந்து வீடு திரும்பும் சிகாமணி என்ன செய்வான்? போனவுடனே சகாதேவனைத்தான் முதுகில் நாலு சாத்து சாத்துவான்! "ஆனால், சகாதேவன் என்ன ஆவான்?" என்பதுதான் என் முதல் பிரச்சினையாக அன்று என்முன் நின்றது.

"நம்ம வாத்தியார் சொன்ன பாடம், நல்ல பாடம்னு நெனச்சோமே, இப்படி ஆயிடுச்சே!" என்று நினைப்பான். அப்போது அவன் முதுகு எரியும். குருவின் சொற்படி நடந்து, கண்ட பலன் இதுதான் என்று அவன் மனம் நம்பிக்கை இழக்கும். சேச்சே! இதற்கெல்லாம் இடம் கொடுக்கலாமா? நான் ஊராரைப் பார்த்துச் சொன்னேன்.

"அவங்க அப்பன் செய்தது தப்புன்னு தெரிஞ்சு, ஒரு நல்ல மகன் அதைச் சரியாக்கிட்டான். விஷயம் நல்லபடி முடிந்தது. இதுக்கும் மேலே இதை நீட்டிக்க வேண்டாம்! நீங்க சிகாமணிக்குப் போடற அபராதமெல்லாம் அவன் மகன் சகாதேவன் முதுகிலே அடியாத்தான் விழும். நாம செஞ்ச நல்ல காரியத்துக்கு இதுதானா பலன் என்று அவன் மனசு சோர்ந்து போகும்! இது வேண்டாம்!"

"இல்ல சார், அவனை விடக்கூடாது சார்!" என்று யாரோ கடைசிவரையில் சொன்னார்கள். அப்போது நான் ஒரே முடிவாகக் கூறினேன்."இதோ பாருங்க.. நீங்க ஊர் நியாயத்திலே சிகாமணி என் வேட்டியைத் திருடிட்டான்னு புகார் செஞ்சா, நான் என் வேட்டியே திருடு போகலைன்னு சாட்சியம் சொல்லுவேன்!" அந்த மக்களுக்கு இது புரிந்து, இறுதியில் என்னோடு உடன்பட்டார்கள். அதோடு, எல்லாம் முடிந்தது. சிகாமணியும் சகாதேவனும் நானும் தப்பித்தோம்.

நூல் வெளி



பி.ச. குப்புசாமி சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவர். இவர் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஜெயகாந்தனோடு நெருங்கிப்பழகி ஜெயகாந்தனோடு பல்லாண்டு என்னும் நூலை எழுதியுள்ளார். இவர் எழுதிய ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியனின் குறிப்புகள் என்னும் நூலிலிருந்து ஒரு பகுதி இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

திருக்குறள் கருத்துகளை உணர்த்தும் கதைகளை அறிந்து வந்து வகுப்பில் பகிர்க.

மதிப்பீடு

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

கற்கண்டு

இயல் நான்கு

வேற்றுமை

பாவை அண்ணன் பார்த்து, "அண்ணன் எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டாள். "இந்த அண்ணன் செய்ய முடிந்த உதவி என்றால் உறுதியாகச் செய்வேன்" என்றான் அண்ணன். "என் அண்ணன் உள்ளம் எனக்குத் தெரியும். என் அண்ணன் என் மீது மிகுந்த அன்பு உண்டு" என்றாள் பாவை.

மேலே உள்ள பகுதியைப் படித்துப் பாருங்கள். இதில் கூறப்பட்டுள்ள செய்தியைப் புரிந்துகொள்ள இயலாதவாறு ஒரு குழப்பம் உள்ளது அல்லவா?

இதே பகுதியைக் கீழே உள்ளவாறு படித்துப் பாருங்கள்.

பாவை அண்ணனைப் பார்த்து, "அண்ணா எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டாள். "இந்த அண்ணனால் செய்ய முடிந்த உதவி என்றால் உறுதியாகச் செய்வேன்" என்றான் அண்ணன். "என் அண்ணனது உள்ளம் எனக்குத் தெரியும். என் அண்ணனுக்கு என் மீது மிகுந்த அன்பு உண்டு" என்றாள் பாவை.

இப்போது எளிதாகப் பொருள் புரிகிறது அல்லவா?

இரண்டாம் பகுதியில் அண்ணன் என்னும் பெயர்ச்சொல் அண்ணனை, அண்ணா, அண்ணனால், அண்ணனுக்கு, என்றெல்லாம் மாற்றப்பட்டிருப்பதால் பொருள் தெளிவாக விளங்குகிறது. அண்ணன் என்னும் பெயர்ச்சொல்லுடன் ஐ, ஆல், கு, இன், அது போன்ற அசைகள் இணைந்து அச்சொல்லின் பொருளைப் பல்வேறு வகையாக வேறுபடுத்துகின்றன. இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறையை வேற்றுமை என்பர். இதற்காகப் பெயர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் அசைகளை வேற்றுமை உருபுகள் என்று கூறுவர்.

தெரிந்து தெளிவோம்

- சில இடங்களில் உருபுகளுக்குப் பதிலாக முழுச்சொற்களே வேற்றுமை உருபாக வருவதும் உண்டு. அவற்றைச் சொல்லுருபுகள் என்பர்.
- ஓவியர் தூரிகையால் ஓவியம் தீட்டினார். இதில் ஆல் என்பது வேற்றுமை உருபாக வந்துள்ளது.
- ஓவியர் தூரிகை கொண்டு ஓவியம் தீட்டினார். இதில் கொண்டு என்பது சொல்லுருபாக வந்துள்ளது.

வேற்றுமையின் வகைகள்

வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை ஆகியனவாகும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் உருபுகள் உண்டு.

தெரிந்து தெளிவோம்

வேற்றுமை உருபுகள் இடம் பெற்றுள்ள தொடர்களை வேற்றுமைத் தொடர்கள் என்பர். வேற்றுமை உருபுகள் இடம் பெற வேண்டிய இடத்தில் அஃது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத்தொகை என்பர்.

முதல் வேற்றுமை

பெரும்பாலான சொற்றொடர்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகிய மூன்று உறுப்புகள் இடம் பெற்றிருக்கும். எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும். முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் குறிப்பிடுவர்.

(எ.கா.) பாவை வந்தாள்.

இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும்.

கபிலர் பரணரைப் புகழ்ந்தார். கபிலரைப் பரணர் புகழ்ந்தார்.

இவ்விரு தொடர்களையும் கவனியுங்கள். இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) எந்தப் பெயருடன் இணைகிறதோ அப்பெயர் செயப்படுபொருளாக மாறிவிடுகிறது. இவ்வாறு ஒரு பெயரைச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவதால் இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என்றும் கூறுவர்.

இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வரும்

ஆக்கல் – கரிகாலன் கல்லணையைக் கட்டினான்

அழித்தல் – பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார்

அடைதல் – கோவலன் மதுரையை அடைந்தான்

நீத்தல் – காமராசர் பதவியைத் துறந்தார்

ஒத்தல் – தமிழ் நமக்கு உயிரைப் போன்றது

உடைமை – வள்ளுவர் பெரும் புகழை உடையவர்

மூன்றாம் வேற்றுமை

ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகிய நான்கும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் ஆகும். இவற்றுள் ஆல், ஆன் ஆகியவை கருவிப்பொருள், கருத்தாப் பொருள் ஆகிய இரண்டு வகையான பொருள்களில் வரும். கருவிப் பொருள் முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

கருவியே செய்யப்படும் பொருளாக மாறுவது முதற்கருவி – மரத்தால் சிலை செய்தான்.
ஒன்றைச் செய்வதற்குத் துணையாக இருப்பது துணைக்கருவி – உளியால் சிலை செய்தான்.

கருத்தாப்பொருள் ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இருவகைப்படும். பிறரைச் செய்யவைப்பது ஏவுதல் கருத்தா – கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது. தானே செய்வது இயற்றுதல் கருத்தா – சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது. ஆன் என்னும் உருபு பெரும்பாலும் செய்யுள் வழக்கில் இடம்பெறும். (எ.கா.) புறந்தூய்மை நீரான் அமையும்.

ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். (எ.கா.) தாயொடு குழந்தை சென்றது. அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்.

நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமைக்கு உரிய உருபு கு என்பதாகும். இது கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருள்களில் வரும்.

கொடை – முல்லைக்குத் தேர் கொடுத்தான்.

பகை – புகை மனிதனுக்குப் பகை.

நட்பு – கபிலருக்கு நண்பர் பரணர்.

தகுதி – கவிதைக்கு அழகு கற்பனை.

அதுவாதல் – தயிருக்குப் பால் வாங்கினான்.

பொருட்டு – தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

முறை – செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ.

எல்லை – தமிழ்நாட்டுக்குக் கிழக்கு வங்கக்கடல்.

தெரிந்து தெளிவோம்

நான்காம் வேற்றுமை உருபுடன் கூடுதலாக ஆக என்னும் அசை சேர்ந்து வருவதும் உண்டு.
(எ.கா.) கூலிக்காக வேலை

ஐந்தாம் வேற்றுமை

இன், இல் ஆகியவை ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ஆகும். இவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது போன்ற பொருள்களில் வரும்.

நீங்கல் – தலையின் இழிந்த மயிர்.

ஒப்பு – பாம்பின் நிறம் ஒரு குட்டி.

எல்லை – தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல்.

ஏது – சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்.

ஆறாம் வேற்றுமை

அது, ஆது, அ ஆகியவை ஆறாம் வேற்றுமை உருபுகள் ஆகும்.

இவ்வேற்றுமை, உரிமைப் பொருளில் வரும். உரிமைப் பொருளைக் கிழமைப் பொருள் என்றும் கூறுவர்.

(எ.கா.) இராமனது வில். நண்பனது கை.

ஆது, அ ஆகிய உருபுகளை இக்காலத்தில் பயன்படுத்துவது இல்லை.

ஏழாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமைக்கு உரிய உருபு கண். மேல், கீழ், கால், இல், இடம் போன்ற உருபுகளும் உண்டு.

இடம், காலம் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களில் ஏழாம் வேற்றுமை உருபு இடம்பெறும். (எ.கா.) எங்கள் ஊரின்கண் மழை பெய்தது. இரவின்கண் மழை பெய்தது.

தெரிந்து தெளிவோம்

இல் என்னும் உருபு ஐந்தாம் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் உண்டு. நீங்கல் பொருளில் வந்தால் ஐந்தாம் வேற்றுமை என்றும் இடப் பொருளில் வந்தால் ஏழாம் வேற்றுமை என்றும் கொள்ள வேண்டும்.

எட்டாம் வேற்றுமை

இது விளிப்பொருளில் வரும். படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம். இவ்வேற்றுமைக்கு என்று தனியே உருபு கிடையாது. பெயர்கள் திரிந்து வழங்குவது உண்டு. அண்ணன் என்பதை அண்ணா என்றும் புலவர் என்பதைப் புலவரே என்றும் மாற்றி வழங்குவது எட்டாம் வேற்றுமை ஆகும்.

வேற்றுமை உருபுகளும் அவற்றின் பொருள்களும்

வேற்றுமை	உருபு	சொல்லுருபு	பொருள்
முதல் (எழுவாய்)	இல்லை	ஆனவன், ஆவான், ஆகின்றவன்	பயனிலை ஏற்றல்
இரண்டாம்	ஐ	இல்லை	செயப்படுபொருள்
மூன்றாம்	ஆல், ஆன், ஒடு, ஓடு	கொண்டு, வைத்து, உடன், கூட	கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி
நான்காம்	கு	ஆக, பொருட்டு, நிமித்தம்	கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை
ஐந்தாம்	இல், இன்	இலிருந்து, நின்று, காட்டிலும், பார்க்கிலும்	நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது
ஆறாம்	அது, ஆது, அ	உடைய	கிழமை
ஏழாம்	கண்		இடம், காலம்
எட்டாம் (விளி)	இல்லை	இல்லை	விளி (அழைத்தல்)

கற்பவை கற்றபின்

பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள ஒரு பத்தியைத் தேர்ந்தெடுத்து, அதிலுள்ள வேற்றுமை உருபுகளை எடுத்து எழுதி வகைப்படுத்துக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது _________ ஆகும்.

   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை

2. எட்டாம் வேற்றுமை ___________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.

   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை

3. உடனிகழ்ச்சிப் பொருளில் ______________ வேற்றுமை வரும்.

   அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

4. 'அறத்தான் வருவதே இன்பம்' - இத்தொடரில் ________ வேற்றுமை பயின்று வந்துள்ளது.

   அ) இரண்டாம் ஆ) மூன்றாம் இ) ஆறாம் ஈ) ஏழாம்

5. 'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் ________ பொருளைக் குறிக்கிறது.

   அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

பொருத்துக.

1. மூன்றாம் வேற்றுமை – இராமனுக்குத் தம்பி இலக்குவன்.
2. நான்காம் வேற்றுமை – பாரியினது தேர்.
3. ஐந்தாம் வேற்றுமை – மண்ணால் குதிரை செய்தான்.
4. ஆறாம் வேற்றுமை – ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்.

சிறுவினா

1. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
2. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
3. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?

மொழியை ஆள்வோம்!

654T0

கேட்க.

கல்வியின் சிறப்புகளை விளக்கும் கதைகளைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

கல்வியே அழியாச் செல்வம்.

சொல்லக் கேட்டு எழுதுக.

தமிழ் மொழிக்கு வளம் சேர்த்த ஒரு நூல்; தமிழுக்கு வாழ்வியல் உண்மைகளை உணர்த்தும் ஒரு நூல்; தன் தோற்றத்தால் தமிழ்நாட்டுக்கு உலகப் பெரும் புகழைப் பெற்றுத்தந்த சிறந்த நூல் திருவள்ளுவரின் திருக்குறள். திருக்குறள் பற்றிப் பேசாத புலவர் இலர்; எழுதாத அறிஞர், எழுத்தாளர் இலர். பள்ளிப் பருவத்திலும் திருக்குறள் படிக்கப்படுகின்றது. பருவம் வளரவளர அதுவும் நுட்பமாகக் கற்கப்படுகின்றது. திருக்குறளுக்குரிய சிறப்பே அதுதான். அஃது எல்லாப் பருவத்தாருக்கும் வேண்டிய விழுமிய நூல். எனவே திருக்குறளில்லாத வீடும் இருக்கக் கூடாது! திருக்குறள் படிக்காத தமிழரும் இருக்கக் கூடாது.

கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

மா	தேன்	மலர்	செம்மை	சிட்டு	கனி
குருவி	இலை	காய்	கூடு	முட்டை	மரம்

அறிந்து பயன்படுத்துவோம்.

நிறுத்தக்குறிகள்

காற்புள்ளி (,)

1. பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி வரும்.
   (எ.கா) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன ஐந்திணைகள்.
2. கடிதத்தில் விளி முன் காற்புள்ளி வரும். (எ.கா.) அன்புள்ள நண்பா,
3. வினையெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) பொழிலன் தோட்டத்திற்குச் சென்று, வாழை இலை பறித்து வந்தான்.
4. மேற்கோள் குறிகளுக்கு (") முன் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) குழந்தை நிலவைப் பார்த்து," நிலா நிலா ஓடி வா" என்று பாடியது.
5. முகவரியில் இறுதி வரி நீங்க ஏனைய வரிகளின் இறுதியில் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) ச. ஆண்டாள், எண் 45, காமராசர் தெரு, திருவள்ளூர்.

அரைப்புள்ளி (;)

1. ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் அரைப்புள்ளி வரும். (எ.கா.) கரிகாலன் கங்கை வரை படையெடுத்துச் சென்றான்; கனக விசயருடன் போரிட்டான்.

2. உடன்பாடு, எதிர்மறைக் கருத்துகளை ஒன்றாகக் கூறும் இடத்தில் அரைப்புள்ளி வரும். (எ.கா.) நல்லவன் வாழ்வான்; தீயவன் தாழ்வான்.

முக்காற்புள்ளி (:)

சிறு தலைப்பான தொகைச் சொல்லை விரித்துக் கூறும் இடத்தில் முக்காற்புள்ளி வரும்.

(எ.கா.) முத்தமிழ் : இயல், இசை, நாடகம்.

முற்றுப்புள்ளி (.)

1. சொற்றொடரின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும். (எ.கா.) கல்வியே மனிதனின் வாழ்வை உயர்த்தும்.

2. சொற்குறுக்கங்களை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.

   (எ.கா.) திரு. வி.க. மா. க. அ. ஊ. ஒ. ந. நி. பள்ளி

3. பெயரின் தலைப்பெழுத்தை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.

   (எ.கா.) நெ. து. சுந்தரவடிவேலு

வினாக்குறி (?)

வினாப்பொருளை உணர்த்தும் வாக்கியத்தின் இறுதியில் வினாக்குறி இட வேண்டும். (எ.கா.) சேக்கிழார் எழுதிய நூல் எது?

வியப்புக்குறி (!)

மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல் முதலான உணர்ச்சியை வெளியிடும் இடங்களில் வியப்புக்குறி இட வேண்டும்.

(எ.கா.)	தமிழின் இனிமைதான் என்னே!	–	வியப்பு
	பாம்பு! பாம்பு!	–	அச்சம்
	அந்தோ! இயற்கை அழிகிறதே!	–	அவலம்

ஒற்றை மேற்கோள் குறி (' ')

தனிச் சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும்போதும், இரட்டை மேற்கோள் குறியில் இன்னொரு கூற்று உட்பட்டு வரும்போதும் ஒற்றை மேற்கோள் பயன்படும்.

(எ.கா.) 'நல்ல' என்பது குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.

கூட்டத்தின் தலைவர், "அறிஞர் அண்ணா அவர்கள் இப்போது 'தலைப்பில்லை' என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்.

இரட்டை மேற்கோள் குறி (" ")

நேர்கூற்றுகளிலும் செய்யுள் அடிகளையோ பொன்மொழிகளையோ குறிப்பிடும் இடங்களிலும் இரட்டை மேற்கோள் குறியைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) திரு. வி.க. மாணவர்களிடம்," தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்; இன்பம் நுகருங்கள்" என்று கூறினார்.

பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

1. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்
2. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது
3. தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது
4. கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்
5. திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது

பின்வரும் பத்தியில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

நூல் பல கல் என்பர் பெரியோர் அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா முடியாது நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகம் ஆகும். நூலகத்தின் வகைகளாவன மையநூலகம் மாவட்ட நூலகம் கிளை நூலகம் ஊர்ப்புற நூலகம் எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன் என்றார் நேரு ஆகவே நூலகத்தின் பயன் அறிவோம் அறிவு வளம் பெறுவோம்

கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.



1. எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
4. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
5. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

நூலகம்

முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை.

மொழியோடு விளையாடு

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகளைக் கட்டத்தில் நிரப்புக. வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக. எழுத்துகளை முறைப்படுத்திக் கல்வி பற்றிய பழமொழியைக் கண்டறிக.

1. திரைப்படப் பாடலாசிரியர் சோமுவின் ஊர். 2. கேடில் விழுச்செல்வம் ____.

3. குமர குருபரர் எழுதிய நூல்களுள் ஒன்று.

4. 'கலன்' என்னும் சொல்லின் பொருள்.

5. ஏட்டுக்கல்வியுடன் ________ கல்வியும் பயில வேண்டும்.

6. திரு.வி.க. எழுதிய நூல்களுள் ஒன்று. 7. தமிழ்த் _____ திரு. வி.க.

1.

○				டி

2.

	○	வி

3.

		நெ	○					ம்

4.

○	ணி			

5.

இ		○	கை

6.

பொ			○			ல்

7.

	ன்	○	

வட்டத்தில் சிக்கிய எழுத்துகள்

பழமொழி : ____

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. நாள்தோறும் ஒரு திருக்குறள் கற்பேன்.
2. அனைவரிடமும் அன்பு கொண்டு வாழ்வேன்.

கலைச்சொல் அறிவோம்.

நிறுத்தக்குறி	Punctuation	மொழிபெயர்ப்பு	Translation
அணிகலன்	Ornament	விழிப்புணர்வு	Awareness
திறமை	Talent	சீர்திருத்தம்	Reform

இணையத்தில் காண்க

திரு. வி.க. எழுதிய நூல்களின் விவரங்களை இணையத்தில் தேடி எழுதுக.

இயல்
ஐந்து

குழலினிது யாழினிது



கற்றல் நோக்கங்கள்

- இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இசை பற்றிய செய்திகளை அறிந்து போற்றுதல்
- சங்ககாலத் தமிழரின் பண்பாடு பற்றிய கருத்துகளை உணர்தல்
- கைவினைக் கலைகளின் சிறப்புகளை அறிந்து அவற்றை வளர்த்தல்
- பழந்தமிழர் பயன்படுத்திய இசைக்கருவிகளின் நுட்பங்களைப் புரிந்து கொள்ளுதல்
- தொகைநிலை, தொகாநிலைத் தொடர்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்

கவிதைப்பேழை

இயல் ஐந்து

திருக்கேதாரம்

NU9R3

நுழையும்முன்

உயிர்கள் அனைத்தையும் இசைவிப்பது இசை. இது மனிதர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் ஆற்றல் உடையது. இசைக்கருவிகளின் ஓசையாடு பாடல் இணையும்போது அது செவிகளுக்கு மட்டுமன்றிச் சிந்தைக்கும் விருந்தாகிறது. தமிழ் இசை பாடப்படும் இனிய சூழலை விளக்கும் தேவாரப்பாடல் ஒன்றை அறிவோம்.

பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவெய்முழவு அதிரக்
கண்ணின்ஒளி கனகச்சுனை வயிரம்அவை சொரிய
மண்நின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண்டு எறியக்
கிண் என்றுஇசை முரலும்திருக் கேதாரம்என் னீரே.

– சுந்தரர்

சொல்லும் பொருளும்

பண் – இசை

கனகச்சுனை – பொன் வண்ண நீர்நிலை

மதவேழங்கள் – மதயானைகள்

முரலும் – முழங்கும்

பழவெய் – முதிர்ந்த மூங்கில்



பாடலின் பொருள்

பண்ணோடு சேர்ந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் போது அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆகிய புல்லாங்குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும். கண்களுக்கு இனிய குளிர்ச்சி தரும் ஒளியை உடைய பொன்வண்ண நீர்நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த்திவலைகளை வாரி இறைக்கும். நிலத்தின் மீது நின்று கொண்டிருக்கும் மதயானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் இடையறாது எழும் 'கிண்' என்னும் ஒலியானது இசையாக முழங்கும். இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் ஆகும்.

நூல் வெளி



சுந்தரர், தேவாரம் பாடிய மூவருள் ஒருவர். இவர் நம்பியாரூரர், தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். இவர் அருளிய தேவாரப்பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டே சேக்கிழார் பெரியபுராணத்தைப் படைத்தளித்தார்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆகும். இந்நூலைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார். இந்நூலில் சுந்தரர் பாடியுள்ள கேதாரப்பதிகப்பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

தே + ஆரம் – இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை என்றும், தே + வாரம் – இனிய இசை பொருந்திய பாடல்கள் எனவும் பொருள் கொள்ளப்படும். பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது.

கற்பவை கற்றபின்

தேவாரம் பாடிய மூவர் பற்றிய செய்திகளைத் திரட்டுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காட்டிலிருந்து வந்த _____ கரும்பைத் தின்றன.

   அ) முகில்கள்　　ஆ) முழவுகள்　　இ) வேழங்கள்　　ஈ) வேய்கள்

2. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) கனகச் + சுனை　　ஆ) கனக + சுனை　　இ) கனகம் + சுனை　　ஈ) கனம்+சுனை

3. முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) முழவுதிர　　ஆ) முழவுதிரை　　இ) முழவதிர　　ஈ) முழவுஅதிர

குறுவினா

தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?

சிறுவினா

திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

சிந்தனை வினா

விழாக்களின்போது இசைக்கருவிகளை இசைக்கும் வழக்கம் எவ்வாறு தோன்றியிருக்கும் என எழுதுக.

இயல் ஐந்து

கவிதைப்பேழை

பாடறிந்து ஒழுகுதல்

6HRFD

நுழையும்முன்

அன்பு, அறிவு, பண்பு போன்றவை ஒவ்வொரு மனிதனும் வளர்த்துக்கொள்ள வேண்டிய உயர்குணங்கள் ஆகும். இச்சொற்களின் பொருளை மேலோட்டமாக அனைவரும் அறிவர். ஆனால் இவை ஒவ்வொன்றுக்கும் நுட்பமான பொருள் உண்டு. அதனை விளக்கும் கலித்தொகைப் பாடல் ஒன்றை அறிவோம்.

*ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்*

– நல்லந்துவனார்

சொல்லும் பொருளும்

அலந்தவர் – வறியவர்		கிளை – உறவினர்	
செறாஅமை – வெறுக்காமை		பேதையார் – அறிவற்றவர்	
நோன்றல் – பொறுத்தல்		மறாஅமை – மறவாமை	
போற்றார் – பகைவர்		பொறை – பொறுமை	

பாடலின் பொருள்

இல்வாழ்வு என்பது வறியவர்களுக்கு உதவி செய்தல். பாதுகாத்தல் என்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல். பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல். அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல். அறிவு எனப்படுவது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்தல். செறிவு எனப்படுவது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல். நிறை எனப்படுவது மறைபொருளைப் பிறர் அறியாமல் காத்தல். நீதிமுறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல். பொறுமை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல். நாம் ஒவ்வொருவரும் இத்தகைய பண்புநலன்களைப் பின்பற்றி வாழவேண்டும்.

நூல் வெளி

கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது கலிப்பா என்னும் பாவகையால் ஆன நூல்; நூற்று ஐம்பது பாடல்களைக் கொண்டது. குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி, பாலைக்கலி என்னும் ஐந்து பிரிவுகளை உடையது. கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். நெய்தற்கலிப் பாடல்களை இயற்றியவரும் இவரே.

கற்பவை கற்றபின்

அன்பு, வாய்மை, நேர்மை போன்ற நற்பண்புகளின் பெயர்களைத் தொகுத்து பட்டியல் ஒன்று உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பசியால் வாடும் _____ உணவளித்தல் நமது கடமை.

அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு

2. நம்மை _____ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

3. மறைபொருளைக் காத்தல் _____ எனப்படும்.

அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை

4. 'பாடறிந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) பாட் + அறிந்து ஆ) பா + அறிந்து இ) பாடு + அறிந்து ஈ) பாட்டு + அறிந்து

5. முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) முறையப்படுவது ஆ) முறையெனப்படுவது

இ) முறைஎனப்படுவது ஈ) முறைப்படுவது

குறுவினா

1. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
2. முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?

சிறுவினா

நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா


வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நீங்கள் கருதுவன யாவை?

இயல்
ஐந்து

உரைநடை உலகம்

நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

W35GP



கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்ச்சியளித்து நற்பண்புகளை வளர்ப்பது கலைகளின் இயல்பாகும். மேலும் அவை தொன்மையான பண்பாட்டுக்கூறுகளையும் எடுத்துக்காட்டுகின்றன. அன்றாடப் பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களைத் தொழில்முறையில் உருவாக்கும் கலையைக் கைவினைக்கலை எனலாம். அக்கலையைப் பற்றி அறிவோம்.

(கல்லூரி மாணவி மலர்விழி, அவளுடைய தம்பி அமுதன், நண்பர்கள் சையது, சாலமன் ஆகியோர் கைவினைப் பொருள்கள் கண்காட்சி அரங்குக்குள் நுழைகின்றனர்.)

அமுதன் : அடேயப்பா! எத்தனை அரங்குகள். எவ்வளவு அழகான பொருள்கள்...

சையது : எல்லாவற்றையும் ஓடி ஓடிப் பார்க்கவேண்டும் என்று தோன்றுகிறது.

மலர்விழி: அவசரம் வேண்டாம். ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். இதோ இந்த மண்பாண்ட அரங்கை முதலில் பார்ப்போம்.

பொறுப்பாளர்: உலகின் பழமையான கலைகளுள் ஒன்றாகிய மண்பாண்டக்கலை அரங்கு உங்களை வரவேற்கிறது.

சாலமன் : என்ன? உலகின் பழமையான கலைகளுள் ஒன்றா?

பொறுப்பாளர்: ஆமாம். மிகவும் பழமையான கைவினைக்கலைகளுள் ஒன்று மண்பாண்டக் கலை. சிந்துசமவெளி அகழாய்வில் பானைஓடுகள் கிடைத்துள்ளன என்பதைப் படித்திருப்பீர்களே. தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் ஏராளமான சுடுமண் பொருள்கள் கிடைத்துள்ளன. இவை எல்லாம் தமிழருக்கும் மண்பாண்டக்கலைக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் சான்றுகள் ஆகும்.

சையது: ஐயா, மண்பாண்டம் என்றால் பானை, சட்டி ஆகியவைதானே?

பொறுப்பாளர்: இங்கே பாருங்கள். குடம், தோண்டி, கலயம், கடம், மூடி, உழக்கு, அகல், உண்டியல், அடுப்பு, தொட்டி என்று எத்தனை பொருள்கள் இருக்கின்றன பார்த்தீர்களா? இவைகளெல்லாம் சுத்தமான களிமண்ணால் செய்யப்பட்டவை. குளங்கள், ஆற்றங்கரைகள், வயல்வெளிகள் ஆகிய இடங்களில் இத்தகைய களிமண் கிடைக்கும்.

மலர்விழி: நல்ல களிமண் கிடைத்தால் உடனே பாண்டங்கள் செய்யத் தொடங்கிவிடலாம் அல்லவா?



பொறுப்பாளர்: அப்படி உடனே செய்துவிட முடியாது. பள்ளம் தோண்டி அதில் களிமண்ணை நிரப்பவேண்டும். அதில் தண்ணீர் ஊற்றி ஒரு நாள் முழுவதும் ஊறவைக்க வேண்டும். பின்பு அதனுடன் குறிப்பிட்ட அளவில் மெல்லிய மணல், சாம்பல் ஆகியவற்றைக் கலந்து பக்குவப்படுத்த வேண்டும். இதுதான் பானை செய்யும் சக்கரம். இதனை நாங்கள் திருவை என்போம். திருவையை வேகமாகச் சுழலச்செய்து அதன் நடுவில் மண்ணை வைத்துக் கையால் அணைத்துப் பிடித்து மண்பாண்டங்களை உருவாக்குவோம். உரிய வடிவம் வந்ததும் அடிப்பகுதியில் நூல் அல்லது ஊசியால் அறுத்து எடுத்துக் காயவைப்போம்.

(அங்கிருக்கும் உதவியாளர் சக்கரத்தைப் பயன்படுத்தி மண்பானை செய்து காட்டுகிறார்.)

பொறுப்பாளர்: பானை செய்தலைப் பானை வனைதல் என்று சொல்வது மரபு. வனையப்பட்ட பானைகள் ஓரளவு காய்ந்ததும் தட்டுப்பலகையைக் கொண்டு தட்டிப் பானையின் அடிப்பகுதியில் இருக்கும் ஓட்டையை மூடிப் பானையை முழுமையாக்குவோம். பிறகு உருட்டுக்கல் கொண்டு தேய்த்துப் பானைகளை மெருகேற்றுவோம்.

அமுதன் : எங்கள் ஊரில் பாட்டி மண்பாண்டங்களில்தான் சமையல் செய்வார்.

பொறுப்பாளர்: மண்பாண்டங்களில் சமைத்தால் உணவு நல்ல சுவையுடன் இருக்கும். மேலும் உடல்நலத்திற்கும் நல்லது. மண்பானையில் வைத்த தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும். இப்போது மண்பாண்டங்களின் பயன்பாடு குறைந்து வருகிறது. ஆனால் இன்னும் திருவிழாக்களிலும், சமயச் சடங்குகளிலும் மண்பானைகளே பயன்பட்டு வருவது சற்று ஆறுதல் அளிக்கிறது. இந்த மண்பாண்டக் கலையின் இன்னொரு வளர்ச்சிநிலைதான் சுடுமண் சிற்பக்கலை.

மலர்விழி : டெரகோட்டா என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதுதானே?

பொறுப்பாளர்: ஆம். அதுவேதான். இந்த அரங்கின் அடுத்த பகுதிக்கு வாருங்கள். அவற்றைப் பார்க்கலாம்.

(அடுத்த பகுதிக்குச் செல்கின்றனர். அங்கு அழகான சுடுமண் சிற்பங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.)

சாலமன் : அடடா! எவ்வளவு சிற்பங்கள்!

அமுதன்: இங்கு மனித உருவங்கள் மட்டுமல்லாமல் விலங்குகள், பறவைகள், பொம்மைகள், அலங்கார வடிவங்கள் எனப் பலவகையான சிற்பங்களும் உள்ளனவே!

பொறுப்பாளர்: ஆமாம். மண்பாண்டங்களைப் போன்றே களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை சுடுமண் சிற்பங்கள் ஆகும். தமிழர்கள் பழங்காலத்தில் இருந்தே சுடுமண் சிற்பக்கலையிலும் சிறந்து விளங்கியுள்ளனர். சுடுமண் சிற்பங்களுக்கு

வண்ணங்கள் பூசுவதும் தொன்றுதொட்டு இருந்துவரும் வழக்கமாகும். பெரிய மாளிகைகளிலும் கலையரங்குகளிலும் இவைபோன்ற சுடுமண் சிற்பங்களை அழகுக்காக வைத்திருப்பார்கள். முன்பெல்லாம் சிற்றூர்களில் உள்ள கோயில்களில் மட்டுமே இவற்றைக் காண முடியும். இப்போது கலைப்பொருளாக அழகுக்காகப் பல இடங்களிலும் பயன்படுத்துகின்றனர்.



அமுதன்: எங்கள் ஊர்க் கோயிலில் இவைபோன்ற ஏராளமான குதிரைச் சிற்பங்கள் உள்ளன. எதற்காக அத்தனை சிற்பங்கள் உள்ளன?

பொறுப்பாளர்: மக்கள் தங்கள் வேண்டுதல் நிறைவேறினால் குதிரைச் சிற்பம் செய்து வைப்பதாக வேண்டிக்கொள்வது உண்டு. அப்படி வேண்டிக்கொண்டவர்கள் வைத்தவையாக இருக்கும்.

மலர்விழி: மண்ணால் உருவாகும் அழகிய கலைகளைப் பற்றிச் சிறப்பாகச் சொன்னீர்கள். மிக்க நன்றி ஐயா. நாங்கள் பிற கைவினைக்கலை அரங்குகளையும் பார்த்துவிட்டு வருகிறோம்.

(அவர்கள் அடுத்துள்ள மூங்கில்கலை அரங்கிற்குச் செல்கின்றனர். அவ்வரங்கின் பொறுப்பாளர் அவர்களை வரவேற்கிறார்.)

மலர்விழி: மூங்கிலால் கூடைகளும் ஏணிகளும் மட்டும்தான் செய்வார்கள் என நினைத்திருந்தேன். என் எண்ணம் தவறு என்று இங்கு வந்தபிறகுதான் புரிகிறது.

பொறுப்பாளர்: உண்மைதான். மூங்கிலைக் கொண்டு பலவகையான கைவினைப் பொருள்கள் செய்யப்படுகின்றன. இதோ பாருங்கள். மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய் என எத்தனையோ பொருள்கள் மூங்கில் மூலம் உருவாகின்றன. சுருக்கமாகச் சொன்னால் பிறந்த குழந்தைக்கு விளையாட்டுப்பொருள் முதல் இறந்தவரை எடுத்துச்செல்லும் பாடை வரை மூங்கிலால் செய்யப்படுகின்றன.



மலர்விழி: முன்பெல்லாம் திருமணத்தின்போது துணிகள், பழங்கள், பலகாரங்கள் முதலியவற்றை வைத்துக் கொடுப்பதற்குச் சீர்க்கூடைகளைப் பயன்படுத்துவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

தெரிந்து தெளிவோம்

கல்மூங்கில், மலைமூங்கில், கூட்டுமூங்கில் என மூன்றுவகை மூங்கில்கள் உண்டு. அவற்றுள் கூட்டு மூங்கில்களே கைவினைப் பொருள்கள் செய்வதற்கு ஏற்றவை.

பொறுப்பாளர்: ஆமாம். அதுமட்டுமல்லாமல் கடவுள் வழிபாட்டின்போது வெற்றிலை, பாக்கு, பூ, பழம் போன்றவற்றை முறத்தில் வைத்துப் படைக்கும் வழக்கமும் சில பகுதிகளில் இருந்தது. அவையெல்லாம் இப்போது வழக்கொழிந்து விட்டன.

(அவர்கள் அடுத்துள்ள கோரைப்பாய் அரங்குக்குச் செல்கின்றனர்)

சையது: பாய் என்பது படுக்கப் பயன்படுவது. அதில் வேறு என்ன சிறப்பு இருக்கிறது?

பொறுப்பாளர்: பாய்களில் பலவகை உண்டு. குழந்தைகளைப் படுக்கவைப்பது தடுக்குப்பாய், உட்கார்ந்து உண்ண உதவுவது பந்திப்பாய், உட்காரவும், படுக்கவும் உதவுவது திண்ணைப்பாய், திருமணத்துக்குப் பயன்படுத்துவது பட்டுப்பாய், இசுலாமியர் தொழுகைக்குப் பயன்படுத்துவது தொழுகைப்பாய். இப்படிப் பலவகைப் பாய்கள் உண்டு. இங்கேயுள்ள பாய்களைப்பாருங்கள். முற்காலத்தில் பாய்மரக்கப்பல்களில் பயன்பட்டதுகூடப் பாய்தான். இதனைப் புறநானூறு *கூம்பொடு மீப்பாய் களையாது* என்னும் அடியால் குறிப்பிடுகிறது.

மலர்விழி: திருமணத்திற்குப் பயன்படுத்தும் பட்டுப்பாய்களில் மணமக்கள் பெயர்கள் இடம்பெற்றிருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

பொறுப்பாளர்: பெயர்கள் மட்டுமன்றிக் குத்துவிளக்கு, மயில், பூக்கள் போன்றவையும் வழிபாட்டுச் சின்னங்களும்கூடப் பாய்களில் இடம்பெறுவதுண்டு. பாய் பின்னுவதும் சிறந்த கலையே!

(அடுத்துப் பனையோலை அரங்கிற்குச் செல்கின்றனர்)

பொறுப்பாளர்: தம்பிகளே, பனையோலை என்றதும் உங்களுக்கு என்ன நினைவுக்கு வருகிறது?

அமுதன்: ஓலைச்சுவடிதான் நினைவுக்கு வருகிறது.

பொறுப்பாளர்: ஆம். பழந்தமிழ் இலக்கியங்களை எல்லாம் நமக்காகப் பாதுகாத்து வைத்திருந்தவை பனையோலைகள் அல்லவா? அதுமட்டுமல்லாமல் பனையோலைகளினால் பல வகையான பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் பாருங்கள். குழந்தைகளுக்கான கிலுகிலுப்பை, பொம்மைகள், பொருள்களை வைத்துக்கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய் எல்லாம் இருக்கின்றன. பனைமட்டையின்

தெரிந்து தெளிவோம்

தமிழ்நாட்டின் மாநில மரம் பனை.

நாரிலிருந்து கயிறு, கட்டில், கூடை போன்றவை செய்யப்படுகின்றன.

மலர்விழி: பனைமரம் தோற்றத்தில் மட்டுமல்லாமல் பயன்தருவதிலும்கூட மிகவும் உயர்வான மரம்தான் போலிருக்கிறது.

(அடுத்துப் பிரம்புக்கலை அரங்கிற்குச் செல்கின்றனர்.)

பொறுப்பாளர்: பிரம்பினால் செய்யப்பட்ட பலவகையான பொருள்கள் இங்கே உள்ளன. வந்து பாருங்கள். இங்குக் குழந்தைகளுக்கான தொட்டில், பெரியவர்களுக்கான கட்டில், ஊஞ்சல், நாற்காலி, மேசை, பூக்கூடை, பழக்கூடை, இடியாப்பத்தட்டு, அருச்சனைத்தட்டு, வெற்றிலைப்பெட்டி என வகைவகையான பொருள்கள் பிரம்பிலேயே உள்ளன.

மலர்விழி: பிரம்பு ஒரு தாவரம்தானே, அதனை எப்படி உலோகம்போல வளைத்துப் பொருள்களைச் செய்ய முடிகிறது?

பொறுப்பாளர்: அதுதான் பிரம்பின் சிறப்பு. முதலில் பிரம்பினை நெருப்பில் காட்டிச் சூடுபடுத்துவோம். சூடான பிரம்பை நட்டுவைத்திருக்கும் இரண்டு கடப்பாரைகளுக்கு இடையே செலுத்தி வளைப்போம். அது வேண்டிய வடிவத்தில் கம்பிபோல வளையும். பின்னர் அதனைத் தண்ணீரில் நனைத்து வைத்துவிட்டால் அப்படியே நிலைத்துவிடும். பிறகு அவற்றை இணைத்துச் சிறு ஆணிகளை அறைந்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கட்டியும் தேவையான பொருள்களாக மாற்றுவோம். பிரம்பு மிகவும் குளிர்ச்சியானது. எனவே, அதில் அமர்வதும் படுப்பதும் உடல்நலத்துக்கு நல்லது. மேலும் பிரம்புப் பொருள்கள் வீட்டுக்கு அழகையும் கொடுக்கும்.

தெரிந்து தெளிவோம்

பிரம்பு என்பது கொடிவகையைச் சேர்ந்த தாவரம். இதன் தாவரவியல் பெயர் கலாமஸ் ரொடாங் (*Calamus Rotang*) என்பதாகும். இது நீர்நிறைந்த வாய்க்கால் வரப்புகளிலும், மண்குகைகளிலும் செழித்து வளரும். தமிழகத்தில் இப்போது இஃது அருகிவிட்டது. நமது தேவைக்காக அசாம், அந்தமான், மலேசியா ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.

மலர்விழி: இந்தக் கண்காட்சிக்கு வந்ததன்மூலம் நாட்டுப்புறக் கைவினைக் கலைகளைப்பற்றிப் பல புதிய செய்திகளை அறிந்துகொண்டோம். மிகவும் நன்றி ஐயா.

பொறுப்பாளர்: இவை மட்டுமல்ல. மண் பொம்மைகள் செய்தல், மரப்பொம்மைகள் செய்தல், காதிதப்பொம்மைகள் செய்தல், தஞ்சாவூர்த்தட்டு செய்தல், சந்தனமாலையும் ஏலக்காய் மாலையும் செய்தல், மாட்டுக்கொம்பினால் கலைப்பொருள்கள் செய்தல், சங்கு, கிளிஞ்சல் போன்றவற்றால் பொருள்கள் உருவாக்குதல் என இன்னும் பலவகையான கைவினைக்கலைகள் உள்ளன. இவற்றைப்பற்றி அறிந்துகொண்டால் மட்டும் போதாது. இவைபோன்ற கைவினைப் பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றை உருவாக்கும் கலைஞர்களையும் ஊக்குவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் சுற்றுச்சூழலையும் மாசடையாமல் பாதுகாக்கலாம்.

மலர்விழி: அப்படியே செய்கிறோம் ஐயா.

(நால்வரும் விடைபெற்றுத் திரும்புகின்றனர்.)

8th Std Tamil CBSE 17-12-2020.indd 102 16-12-2021 17:48:07

கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் கிடைக்கும் களிமண், பனையோலை போன்ற பொருள்களைப் பயன்படுத்திக் கைவினைப்பொருள்களைச் செய்து காட்சிப்படுத்துக.
2. பனையோலையால் செய்யப்படும் பல்வேறு கைவினைப்பொருள்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ______.

   அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

2. பானை______ ஒரு சிறந்த கலையாகும்.

   அ) செய்தல் ஆ) வனைதல் இ) முடைதல் ஈ) சுடுதல்

3. 'மட்டுமல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

   அ) மட்டு + மல்ல ஆ) மட்டம் + அல்ல இ) மட்டு + அல்ல ஈ) மட்டும் + அல்ல

4. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில் இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில்

பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. முழுவதும் 2. மட்டுமல்லாமல் 3. அழகுக்காக 4. முன்பெல்லாம்

குறுவினா

1. எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?
2. மண்பாண்டம் , சுடுமண் சிற்பம் – ஒப்பிடுக.
3. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

சிறுவினா

1. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.
2. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

நெடுவினா

தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.


சிந்தனை வினா

கைவினைக்கலைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பு குறித்து எழுதுக.

விரிவானம்

இயல் ஐந்து

தமிழர் இசைக்கருவிகள்



ஒரு சொல்லின் பொருளை அறியப் பயன்படுவது அகராதி. ஒரு பொருள் குறித்த அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ளப் பயன்படுவது கலைக்களஞ்சியம் ஆகும். இது பல்துறை அறிவை உள்ளடக்கியதாக அல்லது ஒரு குறிப்பிட்ட துறை அறிவை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். கலைக்களஞ்சியத்தில் தகவல்கள் பெரும்பாலும் அகரவரிசையில் தொகுக்கப் பட்டிருக்கும். இசைத்துறை பற்றிய கலைக்களஞ்சியம் ஒன்றை அறிவோம்.

இசை



மக்களின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி, குரல் வழியாக அல்லது செயற்கைக் கருவி ஒன்றின் வழியாக வெளிப்பட்டது. இது நகை, அழுகை, வீரம் உள்ளிட்ட ஒன்பது சுவைகளை வெளிப்படுத்தக்கூடிய கலையாகப் பிறந்தது. இக்கலையே இசை எனப்பட்டது. குரல்வழி இசை, கருவிவழி இசை என இசையை இரண்டாகப் பிரிப்பர்.

இசைக்கருவிகள்



இசையின் இனிமைக்குத் துணை செய்பவை இசைக் கருவிகள் ஆகும். காலத் தேவைகள், சமயச்சடங்குகள், திருவிழாக்கள் போன்ற பல நிகழ்வுகளின் பொருட்டு பலவிதமான இசைக்கருவிகள் தோன்றி வளர்ச்சிபெற்றன. இசைக்கருவிகள் குரல்இசைக்கு மட்டும் பயன்படுபவை, நாடகத்திற்கு மட்டும் பயன்படுபவை, இரண்டிற்கும் பயன்படுபவை எனப் பலவாகத் தோன்றிக் கிளைத்தன. இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர் பாணர் எனப்பட்டனர்.

நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்

– புறநானூறு

இசைக்கருவிகளின் வகைகள்

இசைக்கருவிகள் தோல்கருவி, நரம்புக்கருவி, காற்றுக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைப்படும்.

1. விலங்குகளின் தோலால் மூடப்பட்டுச் செய்யப்படும் கருவிகள் தோல்கருவிகள் எனப்படும். (எ.கா.) முழவு, முரசு
2. நரம்பு அல்லது தந்திகளை உடையவை நரம்புக்கருவிகள் எனப்படும். (எ.கா.) யாழ், வீணை
3. காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை காற்றுக்கருவிகள் எனப்படும். (எ.கா.) குழல், சங்கு
4. ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை கஞ்சக்கருவிகள் எனப்படும். (எ.கா.) சாலரா, சேகண்டி

உடுக்கை

வகை – தோல்கருவி



உடுக்கை என்பது இடை சுருங்கிய ஒரு கைப்பறை ஆகும். இதன் உடல் பித்தளையால் ஆனது. வாய்ப்பகுதி ஆட்டுத்தோலால் பொருத்தப்பட்டிருக்கும். இரு வாய்களையும் இணைக்கும் கயிறுகள் இடையில் கோக்கப்பட்டிருக்கும். இவற்றின் மீது ஒரு நாடா சுற்றப்பட்டுத் தொங்கும். வலது வாயின் மீதுதான் அடிப்பர். அவ்வப்போது இடையின் மீதுள்ள நாடாவை அழுக்குவர். பெரிய உடுக்கையைத் தவண்டை என்பர். சிறு உடுக்கையைக் குடுகுடுப்பை என்பர். தில்லையில் நடனமாடும் நடராசரின் கைகளுள் ஒன்றில் இதனைக் காணலாம். இறை வழிபாட்டின் போதும் குறிசொல்லும் போதும் இக்கருவி இசைக்கப்படுகிறது.

தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார்

– சம்பந்தர் தேவாரம்

குடமுழா

வகை – தோல்கருவி



ஐந்து முகங்களை உடைய முரசு வகையைச் சேர்ந்தது குடமுழா. ஒரு பெரிய குடத்தின் வடிவில் ஐந்து வட்டவடிவ வாய்களுடன் அமைந்திருக்கும். நடுவில் இருக்கும் வாய் மற்றவற்றைவிடப் பெரியதாக இருக்கும். ஒவ்வொரு வாயும் தோலால் மூடப்பட்டிருக்கும். ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒரு தனி வகையான இசை பிறக்கும். இதன் காரணமாக இதனைப் பஞ்சமகா சப்தம் என்றும் அழைப்பர். இது கோயில்களில் ஒலிக்கப்படும் இசைக்கருவியாகும். சென்னை அருங்காட்சியகத்தில் இவ்வகை முழவு ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

குழல் *வகை – காற்றுக்கருவி*



காடுகளில் வளரும் மூங்கிலில் வண்டுகள் துளையிடும். அவற்றின் வழியாகக் காற்று வீசும்போது இன்னிசை எழும்பும். இதனைக் கேட்டு மகிழ்ந்த நம் முன்னோர் அமைத்துக் கொண்டவையே குழல்கள். இதனை வேய்ங்குழல், புல்லாங்குழல் என்றும் அழைப்பர். குழல் ஏழு சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகளை உடையதாக இருக்கும். இது சுமார் இருபது விரல் நீளம் உடையதாக இருக்கும். மூங்கில் மட்டுமன்றிச் சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன. கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

– திருக்குறள்

கொம்பு *வகை – காற்றுக்கருவி*



மனிதர்கள் தொடக்க காலத்தில் இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர். அதுவே பிற்காலத்தில் கொம்பு என்னும் இசைக்கருவிக்கு அடிப்படையாயிற்று. இக்காலத்தில் பித்தளை அல்லது வெண்கலத்தால் கொம்புகள் செய்யப்படுகின்றன. இதனை வேடர் வேட்டையின் போது ஊதுவர். கழனி மேடுகளில் காவல் புரிபவர்கள் விலங்குகள், கள்வரை விரட்டவும் மற்ற காவல்காரர்களை விழித்திருக்கச் செய்யவும் கொம்பினை ஊதுவர். ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பலவகையான கொம்புகள் இக்காலத்தில் திருவிழா ஊர்வலங்களின்போது இசைக்கப்படுகின்றன.

சங்கு *வகை – காற்றுக்கருவி*



இஃது ஓர் இயற்கைக் கருவி. கடலில் இருந்து எடுக்கப்படுவது. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். கோயில் திருவிழாக்களின் போதும் சமயச் சடங்குகளில் போதும் சங்கு முழங்கும் வழக்கம் உண்டு.

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்

– திருப்பாவை

சாலரா

வகை – கஞ்சக்கருவி



இது பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கும். அதன் உட்புறம் குவிந்து இருக்கும். இதனை ஒன்றோடு ஒன்று பொருத்தியும் விளிம்பின் மீது தட்டியும் தாளத்தின் தேவைக்கு ஏற்ப இசைப்பர். இதனைப் பாண்டில் எனவும் அழைப்பர். இது கோயில் கூட்டு வழிபாட்டின் போதும் இன்னிசை அரங்குகளிலும் இசைக்கப்படும் இன்றியமையாத இசைக்கருவி ஆகும். இதனை இக்காலத்தில் 'ஜால்ரா' என்பர்.

சேகண்டி

வகை – கஞ்சக்கருவி



வட்டவடிவமான மணி வகையைச் சேர்ந்தது சேகண்டி. இதனைக் குச்சியாலோ அல்லது இரும்புத் துண்டாலோ அடித்து ஒலி எழுப்புவர்.

இது தேவைக்கு ஏற்பப் பல அளவுகளில் உருவாக்கப்படும். இதனைச் சேமங்கலம் என்றும் அழைப்பர். இதனைக் கோவில் வழிபாட்டின் போதும் இறுதி ஊர்வலத்தின் போதும் இசைப்பர்.

திமிலை

வகை – தோல்கருவி



பலா மரத்தினால் செய்யப்பட்டு விலங்குத் தோலினால் கட்டப்படும் கருவி திமிலை ஆகும். மணற்கடிகார வடிவத்தில் இக்கருவி அமைந்திருக்கும். இதனைப் பாணி என்னும் பெயரால் அழைப்பர்.

சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி

– பெரியபுராணம்

பறை

வகை – தோல்கருவி



விலங்குத் தோலால் இழுத்துக் கட்டப்பட்ட கருவி பறையாகும். பழங்காலத்தில் செய்திகளைத் தெரிவிக்கக் கோட்பறையை முழக்கினர். பகைவர்களின் ஆநிரையைக் கவரச் செல்லும்போது ஆகோட்பறையை முழக்குவர்.

இக்காலத்தில் இது தப்பு என்னும் பெயரில் வழங்கப்படுகிறது. இதனை முழக்கிக்கொண்டு ஆடும் ஆட்டம் தப்பாட்டம் என்று அழைக்கப்படுகிறது.

மத்தளம்

வகை – தோல்கருவி



மத்து என்பது ஓசையின் பெயர். இசைக்கருவிகளுக்கு எல்லாம் தளம் அடிப்படை ஆகும். மத்து + தளம் = மத்தளம் என்று ஆகியது என்கிறார் அடியார்க்கு நல்லார்.

மத்தளத்தின் நடுப்பகுதி பெருத்தும் கடைப்பகுதி சிறுத்தும் காணப்படும். மரத்தால் செய்யப்பட்டிருக்கும் இதன் வாய்ப்பகுதி வளையங்களில் தோல் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். இக்கருவி இரண்டு கைகளாலும் இசைக்கப்படுகிறது. ஆகவே இதனை முதற்கருவி என்பர். தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டில் கோயிலுக்கு நியமிக்கப்பட்ட இசைக்கலைஞர்களுள் கொட்டி மத்தளம் வாசிப்பவர் ஒருவரும் இருந்தார் என்பர்.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ் – *நாச்சியார் திருமொழி*

முரசு

வகை – தோல்கருவி



தமிழர்கள் போர்த் துணையாகக் கொண்ட கருவிகளுள் முதன்மையானது முரசு ஆகும்.

படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு என்று மூன்று வகையான முரசுகள் பழந்தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருந்தன. தமிழ் மக்களிடம் முப்பத்தாறு வகையான முரசுகள் வழக்கத்தில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. மாக்கண் முரசம் என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

வகை – தோல்கருவி

முழவு



ஒரே முகத்தையுடைய முரசு வகையைச் சேர்ந்தது முழவு. ஒரு பெரிய குடத்தின் வாயில் தோலை இழுத்துக் கட்டப்பட்ட கருவியாகும். இத்தோலில் ஒருவகை பசை மண்ணைத் தடவி முழக்குவர். மண்ணமை முழவு எனப் பொருநராற்றுப்படையில் இடம் பெற்றுள்ளது.

காலத்தை அறிவிக்க நாழிகை முழவு, காலை முழவு ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

கலைஉணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்

– புறநானூறு

யாழ்

வகை – நரம்புக்கருவி

வேட்டுவர் இறுகக் கட்டிய தங்கள் வில் நாணில் இருந்து எழும் ஓசையை உணர்ந்தனர். வில்லைப் போன்ற வளைவு உடையதும் நரம்புகளால் ஆனதும் விரலால் வருடக் கூடியதுமான கருவி ஒன்றை உருவாக்கினார். இதன் அடிப்படையில் உருவான கருவியே யாழ் ஆகும். பேரியாழ், செங்கோட்டியாழ் போன்றவை மிகப் பழமையானவை. யாழின் வகைக்கு ஏற்ப அதில் இருக்கும் நரம்புகளின் எண்ணிக்கை வேறுபடுகிறது. இருபத்தொரு நரம்புகளைக் கொண்டது பேரியாழ், பத்தொன்பது நரம்புகளைக் கொண்டதாக மீன் வடிவில் அமைந்தது மகரயாழ், பதினான்கு நரம்புகளைக் கொண்டது சகோடயாழ். யாழின் வடிவமே மெல்லமெல்ல மாற்றமடைந்து பிற்காலத்தில் வீணையாக உருமாறியது என்பர்.



வீணை

வகை – நரம்புக்கருவி

யாழ் போன்ற அமைப்பையுடைய நரம்புக்கருவி வீணையாகும். இஃது ஏழு நரம்புகளைக் கொண்டது. இடக்கை விரல்களால் நரம்புகளை அமுக்கியும் தேய்த்தும் வலக்கை சுண்டுவிரலால் கம்பிகளை மீட்டியும் இசை எழுப்புவர்.

இவ்வாறு நரம்புகள் மூலம் எழுப்பப்படும் இசையை அதன் குடம், தண்டு முதலிய பாகங்கள் பெருக்கி அனுப்புகின்றன. பரிவாதினி என்னும் வீணை பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் வழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.



கற்பவை கற்றபின்

1. இசைக்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.
2. இக்கால இசைக்கருவிகள் குறித்துக் கலைக்களஞ்சிய வடிவில் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

கற்கண்டு

இயல் ஐந்து

தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்

FLSVD

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் என்பதை அறிந்தோம். சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது சொற்றொடர் அல்லது தொடர் என்பதையும் அறிவோம்.

பால் பருகினான். வெண்முத்து.

என்னும் தொடர்களைப் பாருங்கள். இவை பாலைப் பருகினான், வெண்மையான முத்து என்னும் பொருள்களைத் தருகின்றன. முதல் தொடரில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் அடுத்த தொடரில் 'மை' என்னும் விகுதியும் 'ஆன' என்னும் உருபும் மறைந்து நின்று பொருள் உணர்த்துகின்றன.

இவ்வாறு இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) வருமானால் அதனைத் தொகைநிலைத் தொடர் என்பர். இத்தொகைநிலைத் தொடர் 1. வேற்றுமைத் தொகை 2. வினைத்தொகை 3. பண்புத்தொகை 4. உவமைத்தொகை 5. உம்மைத்தொகை 6. அன்மொழித்தொகை என ஆறுவகைப்படும்.

வேற்றுமைத்தொகை

திருக்குறள் படித்தாள்.

இத்தொடர் திருக்குறளைப் படித்தாள் என விரிந்து நின்று பொருள் தருகிறது. இரு சொற்களுக்கும் இடையில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது. இவ்வாறு இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத்தொகை என்பர்.

1. திருவாசகம் படித்தான் – (ஐ) இரண்டாம் வேற்றுமைத்தொகை
2. தலைவணங்கு – (ஆல்) மூன்றாம் வேற்றுமைத்தொகை
3. சிதம்பரம் சென்றான் – (கு) நான்காம் வேற்றுமைத்தொகை
4. மலைவீழ் அருவி – (இன்) ஐந்தாம் வேற்றுமைத்தொகை
5. கம்பர் பாடல் – (அது) ஆறாம் வேற்றுமைத்தொகை
6. மலைக்குகை – (கண்) ஏழாம் வேற்றுமைத்தொகை

உருபும் பயனும் உடன்தொக்க தொகை

பணப்பை

இது பணத்தைக் கொண்ட பை என விரிந்து பொருள் தருகிறது. பணம், பை என்னும் இரு சொற்களுக்கு இடையில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் 'கொண்ட' என்னும் சொல்லும் (உருபின் பயன்) மறைந்து வந்துள்ளன.

இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் சொல்லும் (பயன்) மறைந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை எனப்படும்.

இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(எ.கா.) பால் குடம் – (பாலைக் கொண்ட குடம்)

மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(எ.கா.) பொற்சிலை – (பொன்னால் ஆகிய சிலை)

நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(எ.கா.) மாட்டுக் கொட்டகை – (மாட்டுக்குக் கட்டப்பட்ட கொட்டகை)

வினைத்தொகை

ஆடுகொடி, வளர்தமிழ்

இத்தொடர்களில் ஆடு, வளர் என்பவை வினைப்பகுதிகள். இவை முறையே கொடி, தமிழ் என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து காலம் காட்டாத பெயரெச்சங்களாக உள்ளன. அதாவது காலம் காட்டும் இடைநிலைகள் தொக்கி உள்ளன. மேலும் இவை முறையே ஆடிய கொடி, ஆடுகின்ற கொடி, ஆடும் கொடி எனவும் வளர்ந்த தமிழ், வளர்கின்ற தமிழ், வளரும் தமிழ் எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி பொருள் தருகின்றன.

இவ்வாறு காலம் காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சத்தை வினைத்தொகை என்பர்.

காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை – (நன்னூல் 364)

பண்புத்தொகை

வெண்ணிலவு, கருங்குவளை

இத்தொடர்களில் வெண்மை, கருமை என்னும் பண்புகள் நிலவு, குவளை என்னும் பெயர்ச்சொற்களைத் தழுவி நிற்கின்றன. ஆன, ஆகிய என்னும் பண்புருபுகள் மறைந்து வெண்மையான நிலவு, கருமையாகிய குவளை என்னும் பொருள்களைத் தருகின்றன.

இவ்வாறு பண்புப் பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே ஆன, ஆகிய என்னும் பண்புருபுகள் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை

பனைமரம்

இத்தொடர் பனையாகிய மரம் என விரியும். மரம் என்பது பொதுப்பெயர். பனை என்பது மரங்களுள் ஒன்றனைக் குறிக்கும் சிறப்புப்பெயர். இவ்வாறு சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நிற்க, இடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவதை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர்.

உவமைத்தொகை

மலர்விழி - இத்தொடர் மலர்போன்ற விழி என்ற பொருள் தருகிறது. மலர் -உவமை, விழி – உவமேயம். இடையில் போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது. இவ்வாறு உவமைக்கும் உவமேயத்துக்கும் இடையில் போல, போன்ற, நிகர, அன்ன முதலிய உவம உருபுகளுள் ஒன்று மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

உம்மைத்தொகை

இரவுபகல், தாய்தந்தை

இத்தொடர்கள் இரவும் பகலும் தாயும் தந்தையும் என விரிந்து பொருள் தருகின்றன. இதில் சொற்களின் இடையிலும், இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருகிறது. இவ்வாறு சொற்களுக்கு இடையிலும், இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவதை உம்மைத்தொகை என்பர்.

தெரிந்து தெளிவோம்

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களில் உம் என்னும் உருபு வெளிப்பட வருவது எண்ணும்மை எனப்படும்.

(எ.கா.) இரவும் பகலும், பசுவும் கன்றும்

அன்மொழித்தொகை

பொற்றொடி வந்தாள். (தொடி–வளையல்)

இத்தொடரில் பொற்றொடி என்பது பொன்னாலான வளையல் எனப் பொருள் தரும். இத்தொடர் வந்தாள் என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் பொன்னாலாகிய வளையலை அணிந்த பெண் வந்தாள் என்னும் பொருள் தருகிறது. இதில் 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் 'ஆகிய' என்னும் அதன் பயனும் மறைந்து வந்து, வந்தாள் என்னும் சொல்லால் பெண் என்பதையும் குறிப்பதால் இது மூன்றாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

இவ்வாறு வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுள், அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை (அல் + மொழி + தொகை) எனப்படும்.

தொகாநிலைத் தொடர்

ஒரு தொடரில் இரு சொற்கள் வந்து அவற்றின் இடையில் எச்சொல்லும் எவ்வுருபும் மறையாமல் நின்று பொருள் உணர்த்தினால் அதனைத் தொகாநிலைத் தொடர் என்பர்.

இத்தொகாநிலைத் தொடர் 1. எழுவாய்த் தொடர் 2. விளித்தொடர் 3. வினைமுற்றுத் தொடர் 4. பெயரெச்சத் தொடர் 5. வினையெச்சத் தொடர் 6. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் 7. இடைச்சொல் தொடர் 8. உரிச்சொல் தொடர் 9. அடுக்குத்தொடர் என ஒன்பது வகைப்படும்.

1. எழுவாய்த் தொடர்

(எ.கா.) மல்லிகை மலர்ந்தது. -இதில் 'மல்லிகை' என்னும் எழுவாயைத் தொடர்ந்து 'மலர்ந்தது' என்னும் பயனிலை அமைந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இஃது எழுவாய்த் தொடர் ஆகும்.

2. விளித்தொடர்

(எ.கா.) நண்பா படி. – இதில் 'நண்பா' என்னும் விளிப்பெயர் 'படி' என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது விளித்தொடர் ஆகும்.

3. வினைமுற்றுத் தொடர்

(எ.கா.) சென்றனர் வீரர். – இதில் 'சென்றனர்' என்னும் வினைமுற்று 'வீரர்' என்னும் பெயரைக் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது வினைமுற்றுத் தொடர் ஆகும்.

4. பெயரெச்சத் தொடர்

(எ.கா.) வரைந்த ஓவியம். – இதில் 'வரைந்த' என்னும் எச்சவினை 'ஓவியம்' என்னும் பெயர்ச்சொல் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது பெயரெச்சத் தொடர் ஆகும்.

5. வினையெச்சத் தொடர்

(எ.கா.) தேடிப் பார்த்தான். – இதில் 'தேடி' என்னும் வினையெச்சச் சொல் 'பார்த்தான்' என்னும் வினைமுற்றுச்சொல் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது வினையெச்சத் தொடர் ஆகும்.

6. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

(எ.கா.) கவிதையை எழுதினார். – இதில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துவதால் இது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் ஆகும்.

7. இடைச்சொல் தொடர்

(எ.கா.) மற்றுப் பிற (மற்று + பிற) – இதில் 'மற்று' என்னும் இடைச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால் இஃது இடைச்சொல் தொடர் ஆகும்.

8. உரிச்சொல் தொடர்

(எ.கா.) சாலவும் நன்று. – இதில் 'சால' என்னும் உரிச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால் இஃது உரிச்சொல் தொடர் ஆகும்.

9. அடுக்குத்தொடர்

(எ.கா.) நன்று நன்று நன்று – இதில் ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்துள்ளதால் இஃது அடுக்குத்தொடர் ஆகும்.

கற்பவை கற்றபின்

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிந்து தனித்தனியே தொகுக்க.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது _____.
   அ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
   இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை
2. 'செம்மரம்' என்னும் சொல் _____த்தொகை.
   அ) வினை ஆ) பண்பு இ) அன்மொழி ஈ) உம்மை
3. 'கண்ணா வா!' – என்பது _____த் தொடர்.
   அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை

பொருத்துக.

1. பெயரெச்சத் தொடர் – கார்குழலி படித்தாள்.
2. வினையெச்சத் தொடர் – புலவரே வருக.
3. வினைமுற்றுத் தொடர் – பாடி முடித்தான்.
4. எழுவாய்த் தொடர் – எழுதிய பாடல்.
5. விளித் தொடர் – வென்றான் சோழன்.

சிறுவினா

1. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. இரவுபகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.
3. அன்மொழித்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

மொழியை ஆள்வோம்!

கேட்க.

கைவினைக் கலைகளின் சிறப்புகள் குறித்த ஒலிப்பதிவைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.
2. இதயம் கவரும் இசை.

சொல்லக் கேட்டு எழுதுக.

முல்லை நில மக்களாகிய ஆயர்கள் குழல் ஊதுவதில் வல்லவர்கள். இதனைச் சம்பந்தர் திருப்பதிகத்தில் அமைந்த நிகழ்ச்சி ஒன்று விளக்குகிறது. திருவண்ணாமலைச் சாரலில் ஆயர் ஒருவர் ஆநிரைகளையும் எருமையினங்களையும் மேய்த்துக் கொண்டிருந்தார். மாலையில் அவற்றையெல்லாம் ஒன்று திரட்டினார். அப்போது எருமை ஒன்று காணாமல் போனதை அறிந்தார். தம் கையிலிருந்த குழலை எடுத்து இனிய இசையை எழுப்பினார். இன்னிசை கேட்ட எருமை அவரை வந்தடைந்தது. இவ்வாறு ஆயர்களின் இசைத் திறத்தைத் திருப்பதிகம் விளக்குகிறது.

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.

(கொண்டு, இருந்து, உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)

1. இடி ____________ மழை வந்தது.
2. மலர்விழி தேர்வின் _____________ ஆயத்தமானாள்.
3. அருவி மலையில் ______________ வீழ்ந்தது.
4. தமிழைக் _____________ சுவையான மொழியுண்டோ!
5. யாழ், தமிழர் _____________ இசைக்கருவிகளுள் ஒன்று

பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகரவரிசைப்படுத்துக.

படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி.

அறிந்து பயன்படுத்துவோம்.

இணைச்சொற்கள்

தொடர்களில் சில சொற்கள் இணையாக இடம்பெற்று, பொருளுக்கு வலுவூட்டும். அவற்றை இணைச்சொற்கள் என்கிறோம்.

(எ.கா.) தாய் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தாள்.

இணைச்சொற்கள் மூன்று வகைப்படும். அவை,

1. நேரிணை, 2. எதிரிணை, 3. செறியிணை

அ) ஒரே பொருளைத் தரும் இணை நேரிணை எனப்படும்.

(எ.கா.) சீரும் சிறப்பும், பேரும் புகழும்

ஆ) எதிரெதிர்ப் பொருளைத் தரும் இணை எதிரிணை எனப்படும்.

(எ.கா.) இரவுபகல், உயர்வுதாழ்வு

இ) பொருளின் செறிவைக் குறித்து வருவன செறியிணை எனப்படும்.

(எ.கா.) பச்சைப்பசேல், வெள்ளைவெளேர்

பின்வரும் இணைச்சொற்களை வகைப்படுத்துக.

உற்றார்உறவினர், விருப்புவெறுப்பு, காலைமாலை, கன்னங்கரேல், ஆடல்பாடல், வாடிவதங்கி, பட்டிதொட்டி, உள்ளும்புறமும், மேடுபள்ளம், நட்டநடுவில்.

நேரிணை	எதிரிணை	செறியிணை

சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக.

(மேடுபள்ளம், ஈடுஇணை, கல்விகேள்வி, போற்றிப்புகழப்பட, வாழ்வுதாழ்வு, ஆடிஅசைந்து)


1. சான்றோர் எனப்படுபவர் __________ களில் சிறந்தவர் ஆவர்.
2. ஆற்று வெள்ளம் __________ பாராமல் ஓடியது.
3. இசைக்கலைஞர்கள் __________ வேண்டியவர்கள்.
4. தமிழ் இலக்கியங்களின் பெருமைக்கு __________ இல்லை
5. திருவிழாவில் யானை __________ வந்தது.

கடிதம் எழுதுக.

இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

மொழியோடு விளையாடு

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. முதற்கருவி எனப் பெயர் பெற்றது.
2. யாழிலிருந்து உருவான பிற்காலக் கருவி
7. இயற்கைக் கருவி
12. விலங்கின் உறுப்பைப் பெயராகக் கொண்ட கருவி

வலமிருந்து இடம்

4. வட்டமான மணி போன்ற கருவி
8. ஐந்து வாய்களைக் கொண்ட கருவி
9. இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர்

மேலிருந்து கீழ்

1. 19 நரம்புகளைக் கொண்ட யாழ்
3. ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை _______ க் கருவி
5. சிறியவகை உடுக்கை.
6. பறை ஒரு _________ கருவி

கீழிருந்து மேல்

8. மூங்கிலால் செய்யப்படும் காற்றுக்கருவி
10. வீணையில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கை.
11. திருமணத்தின் போது கொட்டும் முரசு.

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. கைவினைக்கலைகளுள் ஒன்றைக் கற்றுக் கொள்வேன்.
2. இசைக் கலையை வளர்த்த சான்றோர்களைப் பற்றி அறிந்து போற்றுவேன்.

கலைச்சொல் அறிவோம்.

கைவினைப் பொருள்கள்	–	Crafts	பின்னுதல்	–	Knitting
புல்லாங்குழல்	–	Flute	கொம்பு	–	Horn
முரசு	–	Drum	கைவினைஞர்	–	Artisan
கூடைமுடைதல்	–	Basketry	சடங்கு	–	Rite

இணையத்தில் காண்க

இசையின் வகைப்பாடுகள் பற்றிய செய்திகளை இணையத்தில் தேடி எழுதுக.

வாழ்வியல்

இயல் ஐந்து

திருக்குறள்

JCWZ8

தெரிந்து வினையாடல்

1. *செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு*
 எய்த உணர்ந்து செயல்.

 பொருள் : செயலாற்றும் திறன் உடையவரையும் செய்யவேண்டிய செயலையும் செய்வதற்குரிய காலத்தையும் ஆராய்ந்து அச்செயலை நிறைவேற்ற வேண்டும்.

2. ***இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து***
 அதனை அவன்கண் விடல்.*

 பொருள்: இச்செயலை இந்தவகையால் இவர் செய்துமுடிப்பார் என்று ஆராய்ந்து அச்செயலை அவரிடம் ஒப்படைக்கவேண்டும்.

செங்கோன்மை

3. *ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
 தேர்ந்துசெய் வஃதே முறை.

 பொருள்: எதையும் நன்கு ஆராய்ந்து ஒருபக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.

4. *இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
 முறைகாக்கும் முட்டாச் செயின்.

 பொருள்: உலகத்து உயிர்களை எல்லாம் அரசர் காப்பாற்றுவார். அவரை அவரது குற்றமற்ற ஆட்சி காப்பாற்றும்.

வெருவந்த செய்யாமை

5. *தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தால்*
 ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

 பொருள்: ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசனின் கடமையாகும்.

6. *இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்*
 உறைகடுகி ஒல்லைக் கெடும்.

 பொருள்: நம் அரசர் கடுமையானவர் என்று குடிமக்களால் தூற்றப்படும் கொடுஞ்சொல்லை உடைய அரசர், தன் வாழ்நாள் குறைந்து விரைவில் அழிவார்.

சொல்வன்மை

7. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
*வேட்ப மொழிவதாம் சொல்.**

பொருள்: கேட்பவரைத் தன்வயப்படுத்துவதும் கேளாதவரைக் கேட்கத் தூண்டுவதும் சிறந்த சொல்லாற்றலின் இயல்பாகும்.

8. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
*வெல்லும்சொல் இன்மை அறிந்து.**

பொருள்: நாம் சொல்லும் சொல்லை வேறு சொல்லால் வெல்ல இயலாதவாறு சிறந்த சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசவேண்டும்.

அவையறிதல்

9. அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

பொருள்: சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் அவையின் தகுதி அறிந்து பேசுதல் வேண்டும்.

10. கற்றுஅறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து.

பொருள்: சொற்களை ஆராயும் அறிஞர்நிறைந்த அவையில் பேசும்போதுதான் பலநூல்களைக் கற்றவரின் கல்வி பெருமையடையும்.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அரசரை அவரது _____ காப்பாற்றும்.

அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை

2. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் _____ தகுதி அறிந்து பேச வேண்டும்.

அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்

3. 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) கண் + ஓடாது ஆ) கண் + ணோடாது
இ) க + ஓடாது ஈ) கண்ணோ + ஆடாது

4. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) கச + டற ஆ) கசட + அற இ) கசடு + உற ஈ) கசடு + அற

5. என்று + ஆய்ந்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) என்றாய்ந்து ஆ) என்றுஆய்ந்து இ) என்றய்ந்து ஈ) என்ஆய்ந்து

குறுவினா

1. நன்மையைத் தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழி யாது?
2. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
3. அரசன் தண்டிக்கும் முறை யாது?
4. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?

பின்வரும் நிகழ்வுக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

பள்ளி ஆண்டுவிழா ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலைக்குழுத் தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்று பேசப்பட்டது. ஆசிரியர்கள் பள்ளி மாணவர் தலைவன் செழியனை பரிந்துரைத்தனர். தலைமை ஆசிரியர் 'செழியன் மாணவர் தலைவனாக இருக்கிறான். ஆனால் இது கலைக்குழுவிற்கான தலைவர் பதவி. நடனம், இசை, நாடகம் என அனைத்துத் துறைகளிலும் ஆர்வமுள்ள ஒருவரே இதற்குத் தகுதியானவர். எனவே என்னுடைய தேர்வு கலையரசன்' என்று நன்கு ஆராய்ந்து கூறினார். ஆசிரியர்கள் அனைவரும் 'சிறந்த தேர்வு' என்று மகிழ்ந்தனர்.

1. அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

2. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

3. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

இயல்
ஆறு

வையம்புகழ் வணிகம்



கற்றல் நோக்கங்கள்


- நாட்டுப்புறப் பாடல்கள்வழி தமிழர் பண்பாட்டினை அறிதல்
- தமிழரின் வணிகம் தொடர்பான செய்திகளை அறிந்து போற்றுதல்
- தொழில்களின் வகைகளை உணர்தல்
- சிறுகதை மூலம் தொழிலாளர்களின் வாழ்வியலைப் புரிந்துகொள்ளுதல்
- புணர்ச்சி விதிகளை அறிந்து சொற்களைப் பிழையில்லாமல் எழுதுதல்

கவிதைப்பேழை

இயல் ஆறு

வளம் பெருகுக

WRHJ6



மன்பதை காக்கும் மாபெரும் சிறப்பு மாமழைக்கு உண்டு. மண்ணில் பொழியும் மழை நீரே சத்தான வித்துகளை நித்தமும் முளைக்கச் செய்து உணவைத் தந்து உலக உயிர்களை ஊட்டி வளர்க்கின்றது. வளமான வான்மழையால் பயிர்கள் செழித்து உழவர் பெருமக்கள் உவக்கும் காட்சி ஒன்றைத் *தகடூர் யாத்திரைப்* பாடலில் காண்போம்.

பெருநீரால் வாரி சிறக்க! இருநிலத்து
இட்ட வித்து எஞ்சாமை நாறுக! நாறார
முட்டாது வந்து மழை பெய்க! பெய்தபின்
ஒட்டாது வந்து கிளைபயில்க! அக்கிளை
பால்வார் பிறைஞ்சிக் கதிரீன! அக்கதிர்
ஏர்கெழு செல்வர் களம்நிறைக! அக்களத்துப்
போரெல்லாங் காவாது வைகுக! போரின்
உருகெழும் ஓதை வெரீஇப் பெடையோடு
நாரை பிரியும் விளைவயல்
யாணர்த் தாகஅவன் அகன்றலை நாடே!

சொல்லும் பொருளும்

வாரி – வருவாய்		வைகுக – தங்குக	
எஞ்சாமை – குறைவின்றி		ஓதை – ஓசை	
முட்டாது – தட்டுப்பாடின்றி		வெரீஇ – அஞ்சி	
ஒட்டாது – வாட்டம்இன்றி		யாணர் – புதுவருவாய்	

பாடலின் பொருள்

சேர மன்னரின் அகன்ற பெரிய நாட்டில் பெருகிய மழைநீரால் வருவாய் சிறந்து விளங்குக. அகன்ற நிலப்பகுதியில் இட்டவிதைகள் குறைவின்றி முளைவிடுக. முளைத்த விதைகள் செழிப்புடன் வளரத் தட்டுப்பாடின்றி மழை பொழிக. தகுந்த காலத்தில் மழை பொழிவதால் பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளர்க. கிளைத்துச் செழித்த பயிர்கள் பால்முற்றிக் கதிர்களை ஈனுக. அக்கதிர்கள் அறுவடை செய்யப் பெற்று ஏரினால் வளம் சிறக்கும் செல்வர்களின் களத்தில் வந்து நிறைக. அக்களத்தில் வந்து நிறைந்துள்ள நெற்போர் காவல் இன்றியே விளங்குக. போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும்

காலத்தில் உழவர்கள் எழுப்பும் ஆரவார ஒலியால் நாரை இனங்கள் அஞ்சித் தம் பெண்பறவைகளோடு பிரிந்து செல்லும் சிறப்புடைய சேர மன்னரின் அகன்ற பெரிய நாடு புதுவருவாயுடன் சிறந்து விளங்குக.

நூல் வெளி

ஆசிரியர் பெயர் அறிய முடியாத நூல்களுள் ஒன்று தகடூர் யாத்திரை. தகடூர் இன்று தர்மபுரி என்று அழைக்கப்படுகிறது. இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் கிடைக்கின்றன.

கற்பவை கற்றபின்

உமது பகுதியில் நடைபெறும் ஏதேனும் ஒரு தொழிலின் பல செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தோட்டத்தில் தம்பி ஊன்றிய __________ எல்லாம் முளைத்தன.

   அ) சத்துகள் ஆ) பித்துகள் இ) முத்துகள் ஈ) வித்துகள்

2. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு ___________ பெருகிற்று.

   அ) காரி ஆ) ஓரி இ)வாரி ஈ) பாரி

3. 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.

   அ) அ + களத்து ஆ) அக் + களத்து

   இ) அக்க + அளத்து ஈ) அம் + களத்து

4. கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.

   அ) கதிரென ஆ) கதியீன இ) கதிரீன ஈ) கதிரின்ன

குறுவினா

1. பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?
2. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

சிறுவினா

உழவுத்தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?

சிந்தனை வினா

உழவுத்தொழில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருதுவன யாவை?

இயல் ஆறு

கவிதைப்பேழை

மழைச்சோறு

GPJK5

நுழையும்முன்

ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது மழை. மழை பொய்த்துவிட்டால் நீர்நிலைகளும் வற்றிவிடும். நாட்டில் பசியும் பஞ்சமும் தலைவிரித்தாடும். அத்தகைய காலங்களில் மழை வேண்டி மக்கள் வழிபாடு செய்வர். அத்தகைய வழிபாட்டின்போது பாடப்படும் பாடல் ஒன்றை அறிவோம்.



(மழை பொய்த்ததால் மக்கள் வருந்திப் பாடுகின்றனர்)

வாளியிலே மாக்க ரைச்சு
வாசலெல்லாம் கோலம் போட்டு
கோலம் கரைய வில்லை
கொள்ளை மழை பேயவில்லை

பானையிலே மாக்கரைச்சு
பாதையெலாம் கோலம் போட்டு
கோலங் கரையவில்லை
கொள்ளை மழை பேயவில்லை

கல்லு இல்லாக் காட்டிலதான்
கடலைச் செடிபோட்டு வச்சோம்
கடலைச் செடிவாட வாட ஒரு
கனத்த மழை பேயவில்லை

முள்ளு இல்லாக் காட்டுலதான்
முருங்கைச்செடி நட்டு வச்சோம்
முருங்கைச்செடி வாட வாட ஒரு
முத்துமழை பேயவில்லை

கருவேலங் காட்டுலதான்
கனமழையும் இல்லாமே
கருவேலும் பூக்கலையே
கமகமன்னும் மணக்கலையே

காட்டுமல்லி வேலியிலே
கனமழையும் இல்லாமே
காட்டு மல்லியும் பூக்கலையே
காததூரம் மணக்கலையே

மானத்தை நம்பி நாங்க
மக்களைத் தான் பெற்றெடுத்தோம்
மானம் செய்த பாவமுங்க
மக்கள் பசி தீரலையே

கலப்பைப் பிடிக்கும் தம்பி
கைசோர்ந்து நிக்குதம்மா!
ஏற்றம் இறைக்கும் தம்பி
ஏங்கி மனம் தவிக்குதம்மா!

(இவ்வாறு மூன்று அல்லது ஐந்து நாள்கள் பாடி வழிபாடு செய்கின்றனர். அதன் பிறகும் மழை பெய்யாததால் காட்டிற்குச் செல்ல முடிவெடுக்கின்றனர்.)

கண்மணியே பெண்டுகளே
கனத்த மழை பெய்யவில்லை
கதறி அழுது விட்டோம்
கடிமழையும் பெய்ய வில்லை

மண்ணு வறண்டும் நம்
மாரியாத்தா இரங்கலையே
வாடிகளா பெண்டுகளே – நாம்
வனவாசம் சென்றிடுவோம்

(இவ்வாறு பாடிக் கொண்டே சோறு வாங்கிய பானை, அகப்பை, பழைய முறம் போன்றவற்றைத் தலையில் வைத்தவாறு ஊரை விட்டு வெளியேற முனைகின்றனர். அப்பொழுது மழை பெய்யத் தொடங்குகிறது.)

பேயுதைய்யா பேயுது
பேய்மழையும் பேயுது
ஊசிபோலக் காலிறங்கி
உலகமெங்கும் பேயுது

சிட்டுப் போல மின்னி மின்னி
சீமையெங்கும் பேயுது
சீமை யெங்கும் பேஞ்சமழை
செல்ல மழை பேயுது

தெரிந்து தெளிவோம்

மழை பெய்யாமல் ஊரில் பஞ்சம் ஏற்படும் காலங்களில், சிற்றூர் மக்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று உப்பில்லாச் சோற்றை ஒரு பானையில் வாங்குவர். ஊர்ப் பொது இடத்தில் வைத்து அச்சோற்றை அனைவரும் பகிர்ந்து உண்பர். கொடிய பஞ்சத்தைக் காட்டும் அடையாளமாக நிகழும் இதனைக் கண்டு வானம் மனமிரங்கி மழை பெய்யும் என்பது மக்களின் நம்பிக்கை. இந்நிகழ்வை மழைச்சோற்று நோன்பு என்பர்.



நூல் வெளி

பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலில் உள்ள கொங்குநாட்டு மழைச்சோற்று வழிபாடு என்னும் கட்டுரையிலிருந்து இப்பாடல் எடுக்கப்பட்டுள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் அ. கௌரன்.

கற்பவை கற்றபின்

உங்கள் பகுதியில் பாடப்படும் மழை தொடர்பான நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்தெடுத்து எழுதுக.

1. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் _____.

   அ) பெருமழை ஆ) சிறு மழை

   இ) எடைமிகுந்த மழை ஈ) எடை குறைந்த மழை

2. 'வாசலெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) வாசல் + எல்லாம் ஆ) வாசல் + எலாம்

   இ) வாசம் + எல்லாம் ஈ) வாசு + எல்லாம்

3. 'பெற்றெடுத்தோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) பெறு+ எடுத்தோம் ஆ) பேறு + எடுத்தோம்

   இ) பெற்ற + எடுத்தோம் ஈ) பெற்று + எடுத்தோம்

4. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) கால்லிறங்கி ஆ) காலிறங்கி

   இ) கால் இறங்கி ஈ) கால்றங்கி

குறுவினா

1. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறுப்படுகிறது?
2. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?

சிறுவினா

1. கோலம் கரையாத நிலையை மழைச்சோறு பாடல் எவ்வாறு விளக்குகிறது?
2. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.
3. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?


சிந்தனை வினா

மழைவளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?

உரைநடை உலகம்

இயல் ஆறு

கொங்குநாட்டு வணிகம்



'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது பழமொழி. அதற்குப் பழந்தமிழர்களே சான்றுகளாக விளங்கினர். காலத்தால் முற்பட்டவர்களான பழந்தமிழர் சோம்பித் திரிந்தவர் அல்லர். உழைத்து உயர்ந்து வாழ்க்கையில் இன்பங்காணுவதிலேயே கண்ணுங்கருத்துமாய் விளங்கினர் என்பர். அவர்கள் மலைகளுடனும் காடுகளுடனும் கடலுடனும் கலந்து உறவாடினர். பழந்தமிழர்கள் ஆண்ட கொங்கு நாட்டின் அன்றைய வணிகம், இன்றைய வணிகம் குறித்து அறிவோம்.

தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறுகின்றன. வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. மூவேந்தர்களின் காலத்தை வரையறுத்துக் கூறமுடியவில்லை. வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. இதனால் இவர்கள் பன்னெடுங் காலத்திற்கு முற்பட்டவர்கள் என்பதை அறியலாம்.



சேரர்

முடியுடைய மூவேந்தர்களில் சேரர்களே பழமையானவர்கள் என்று கூறுபவர் உண்டு. சேர, சோழ, பாண்டியர் என்னும் தொடரையே இதற்குச் சான்றாகக் காட்டுவர். மேலும் தொல்காப்பியமும் போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும் எனச் சேரரை முன் வைக்கின்றது.

சேரர்களின் நாடு குடநாடு எனப்பட்டது. இவர்களின் தலைநகராக வஞ்சி விளங்கியது. இந்நகர் மேற்கு மலைத்தொடரில் தோன்றி அரபிக்கடலில் கலக்கும் பேரியாற்றங்கரையில் இருந்தது. இதனைக் கருவூர் என்றும் அழைப்பர். தொண்டி, முசிறி, காந்தளூர் என்பன சேரநாட்டின் துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. சேரர்களின் கொடி விற்கொடி ஆகும். பனம்பூ இவர்களுக்குரிய பூ ஆகும்.

8th Std Tamil CBSE 17-12-2020.indd 127 16-12-2021 17:48:11

சேர நாட்டின் எல்லைகள்

பண்டைய சேர நாடு என்பது இன்றைய கேரளப் பகுதிகளும் தமிழ்நாட்டின் சேலம், கோவை மாவட்டங்களின் பகுதிகளும் இணைந்த பகுதியாக விளங்கியது என்பர். சேலம், கோவைப் பகுதிகள் கொங்கு நாடு என்று பெயர்பெற்றன. இப்பகுதிகளைச் சேரர்களின் உறவினர்கள் ஆட்சி செய்து வந்தனர்.

கொங்கு மண்டலம்

கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டலச் சதகம் என்னும் நூலில் வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கரை என இந்நான்கு எல்லைகளுக்குட்பட்ட பகுதியாகக் கொங்குமண்டலம் விளங்கியதாகக் கூறப்படுகிறது. இன்றைய நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களையும் சேலம், கரூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் கொங்குமண்டலம் விளங்கியது என்பர்.

கொங்குநாட்டுப் பகுதியை காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை என்று அழைக்கப்படும் அமராவதி ஆகிய ஆறுகள் வளம் செழிக்கச் செய்கின்றன.

பழங்கால வணிகம்

உழவு, கைத்தொழில், வணிகம் என்னும் மூன்றும் ஒரு நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு அடிப்படைகளாகும் என்பர். உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியுள்ளனர். கடல் வணிகத்தில் சேரநாடு சிறப்புற்றிருந்தது. அதற்கு அந்நாட்டின் இயற்கை அமைப்பே காரணமாக அமைந்திருந்தது. சேரர்கள் வலிமை மிகுந்த கப்பல் படையை வைத்திருந்தனர். செங்குட்டுவனின் கடற்போர் வெற்றியால் அவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று அழைக்கப்பட்டான். கடம்பர் என்னும் கடற்கொள்ளையர்களைச் சேரமன்னர்கள் அடக்கினர். முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது. இங்கிருந்துதான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத் தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. பொன்,



மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன. இச்செய்தியை,

மீனோடு நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
....
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரைசேர்க்குந்து – புறம் 343 : 1– 8

என்னும் பாடல் விளக்குகிறது.

சேரநாட்டில் உள்நாட்டு வணிகமும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது. மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருளைப் பெற்றனர். நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாக இருந்தது என்பர். உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன என்பதை,

நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும் – (அக. 390)

என்னும் அகப்பாடல் மூலம் அறியலாம்.

கொங்கு மண்டலப் பகுதிகளில் இன்றைய வணிகம்


நீலகிரி



கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும் இடமே நீலகிரி ஆகும். இம்மாவட்டம் முழுவதும் மலைப் பகுதியாலானது. காடுகள் நிறைந்த இம்மாவட்டத்தில் தோட்டப்பயிர்களான காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு, கேரட், முட்டைகோசு ஆகியவை பெருமளவில் பயிரிடப்படுகின்றன; தைலமரம் (யூகலிப்டஸ்) வளர்க்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டம் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறைந்தது. புகைப்படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை, துப்பாக்கி வெடிமருந்துத் தொழிற்சாலை, தைலமரம் (யூகலிப்டஸ்) எண்ணெய்த் தொழிற்சாலை ஆகியனவும் உள்ளன.

கோயம்புத்தூர்



கோவன்புத்தூர் என்னும் பெயரே கோயம்புத்தூர் என்று மருவி வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் நெல், வாழை, கரும்பு, காய்கறிகள், பூக்கள் போன்றவை பெருமளவில் பயிரிடப்படுகின்றன. பஞ்சாலைகள், நூற்பாலைகள், மின்சாரப் பொருள்கள், எந்திரங்கள், வீட்டுஉபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இம்மாவட்டத்தில் நிறைந்துள்ளன.

திண்டுக்கல்

வரலாற்றுச் சிறப்புமிக்க திண்டுக்கல்லில் நெல், சோளம், தினை வகைகள், வாழைப்பழம், காய்கறிகள் போன்றவை விளைவிக்கப்படுகின்றன. இப்பகுதி மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது. எனவே தமிழ்நாட்டின் ஹாலந்து என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

அரிசி, தோல், பூட்டுத் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் இது. இங்குள்ள சின்னாளபட்டிச் சுங்குடிச் சேலைகள் புகழ்பெற்றவை.

ஈரோடு



பரப்பளவில் ஈரோடு தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது. இம்மாவட்டத்தில் நெல், நிலக்கடலை, மஞ்சள், கரும்பு, பருத்தி, எள் போன்றவை பயிரிடப்படுகின்றன. தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை ஈரோட்டில்தான் நடைபெறுகின்றது.

துணி நூற்பாலைகள், எண்ணெய் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் பெருமளவில் உள்ளன. நூல் நூற்பு, துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், அச்சிடுதல், தோல் பதனிடுதல் முதலான தொழில்களும் இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றன.

திருப்பூர்



இன்று திருப்பூர் மிகச்சிறந்த பின்னலாடை நகரமாக விளங்குகிறது. நெல், கரும்பு, பருத்தி, வாழை போன்றவை இங்கு விளைவிக்கப்படும் முதன்மையான பயிர்களாகும். இம்மாவட்டம் பின்னலாடைகள், ஆயத்த ஆடைகள் மூலம் தமிழ் நாட்டிற்குப் பெரும் வருவாயை ஈட்டித்தருகிறது. இந்தியாவின் முதல் ஆயத்த ஆடைப் பூங்காவான நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது. தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

நாமக்கல்

பச்சைமலை, கொல்லிமலை, சேர்வராயன் மலையின் ஒரு பகுதி ஆகியவை இம்மாவட்டத்தில் உள்ளன. நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை, பருத்தி ஆகியவற்றுடன் மலைப்பகுதிகளில் விளையும் திராட்சை, ஆரஞ்சு, காப்பி, பாக்கு, ஏலம் போன்றவையும் பயிரிடப்படுகின்றன.

முட்டைக்கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் தென்னிந்தியாவிலேயே

நாமக்கல் முதன்மையான இடம் வகிக்கின்றது. இங்கே சிமெண்ட், காகிதத் தொழிற்சாலைகள் உள்ளன. கைத்தறி நெசவு, வெண்கலப் பொருள்கள் செய்தல் முதலான தொழில்களும் நடைபெறுகின்றன. சிற்றுந்து, சரக்குந்து ஆகியவை அதிக அளவில் இயங்கும் மாவட்டமாக நாமக்கல் விளங்குகிறது.



சேலம்

மாங்கனி நகரம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது சேலம். இம்மாவட்டத்தில் நெல், பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி, பாக்கு ஆகியன பயிரிடப்படுகின்றன. இந்தியாவிலேயே இம்மாவட்டத்தில்தான் ஜவ்வரிசி அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம் இதுவே. இங்குப் பால் பண்ணைத் தொழிலும் சிறப்பாக நடைபெறுகின்றது. இரசாயனப் பொருள், அலுமினியம், சந்தன எண்ணெய், வனஸ்பதி ஆகியவை தயாரிக்கும் ஆலைகள் நிறைந்த மாவட்டமாகவும் சேலம் விளங்குகிறது. முலாம் பூசும் தொழிலும் பெருமளவில் நடைபெறுகிறது. *ஏழைகளின் ஊட்டி* என்று அழைக்கப்படும் *ஏற்காடு* இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.

கரூர்

கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய இப்பகுதிக்கு 'வஞ்சிமாநகரம்' என்னும் பெயரும் உண்டு. *கிரேக்க அறிஞர் தாலமி,* கரூரைத் தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, கரும்பு போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன. கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர்பெற்ற மாவட்டமாகக் கரூர் விளங்குகிறது. தோல் பதனிடுதல், சாயமேற்றுதல், கற்சிற்ப வேலைகள் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன. பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாகக் கரூர் விளங்குகிறது.

தெரிந்து தெளிவோம்

ஊர்களும் சிறப்புப் பெயர்களும்

தூத்துக்குடி	– முத்து நகரம்
சிவகாசி	– குட்டி ஜப்பான்
மதுரை	– தூங்கா நகரம்
திருவண்ணாமலை	– தீப நகரம்

கற்பவை கற்றபின்

1. உங்கள் மாவட்டம் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.
2. பல்வகைத் தொழில்கள் என்னும் தலைப்பில் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் _____.
   அ) தொல்காப்பியம் ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்
2. சேரர்களின் தலைநகரம் _____.
   அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி
3. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது _____.
   அ) புல் ஆ) நெல் இ) உப்பு ஈ) மிளகு
4. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு _____.
   அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி
5. வீட்டுஉபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் _____.
   அ) நீலகிரி ஆ) கரூர் இ) கோயம்புத்தூர் ஈ) திண்டுக்கல்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் _____.
2. சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் _____.
3. சேரர்களின் நாடு _____ எனப்பட்டது.
4. பின்னலாடை நகரமாக _____ விளங்குகிறது.

குறுவினா

1. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.
2. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
3. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

சிறுவினா

1. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?
2. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.

நெடுவினா

கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுவணிகம் குறித்து எழுதுக.

சிந்தனை வினா

நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு வணிகம் தவிர்த்து வேறு எவையெல்லாம் உதவும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

விரிவானம்

இயல் ஆறு

காலம் உடன் வரும்

LKS14

நுழையும்முன்

உழவும் நெசவும் பழந்தமிழர் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. உழவு மக்களின் பசியைப் போக்குகிறது. நெசவு மக்களின் மானம் காக்கிறது. நெசவுத் தொழிலாளர்கள் இரவு, பகல் என்ற பேதமின்றி உழைக்கக் கூடியவர்கள். அவ்வாறு அவர்கள் வியர்வைசிந்தி உழைத்தவையே நாம் அணியும் வண்ண உடைகள். நெசவுத் தொழிலாளரின் வாழ்வை விளக்கும் கதை ஒன்றை அறிவோம்.



நாளை மறுநாளுக்குள் லாரி பிடித்துச் சரக்கை ஏற்றித் தூத்துக்குடி துறைமுகத்தில் சேர்க்க வேண்டிய நிர்பந்தம். 'அனந்திகா நிறுவனத்து'க்கு இன்னும் மிச்சம்மீதிகளாக வரவேண்டிய துணிகள் தறிகளில் இருந்தன. இவற்றைச் சேகரிக்க பள்ளிப்பாளையம், மொங்கநல்லாம்பாளையம், வெள்ளக்கோயில் இப்படிப் பல இடங்களுக்கு நேரில் ஆட்கள் சென்றனர். ஆட்கள் அவசியமில்லை எனும் இடத்துக்கு, தொலைபேசி அழைப்புகள். வெள்ளக்கோயில் தினேஷ் டெக்ஸில் தொலைபேசி மணி ஒலித்தது. சுப்பிரமணி போனை எடுத்தான்.

"அனந்திகாவுல இருந்து பேசறமுங்க.... நாளைக்குச் சாயங்காலத்துக்குள்ள லாரில ஏத்தணும். சீக்கிரமா முடிங்க. உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை...."

"இங்கே பாவு பிணைக்கக்கூட ஆள் இல்லீங்க...."

"ஏனுங்க. நம்ம சிரமந் தெரியாதவராட்டம் புதுசாப் பேசறீங்க....? எப்படியாச்சும் ஓட்டி வச்சிருங்க. நாளைக்கு ரண்டு மணிக்கு நம்ம டெம்போ உங்க பட்டறைல நிக்கும். ஏத்தி அனுப்ப வேண்டியது உங்க பொறுப்பு...."

தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. கூடவே உற்சாக நரம்புகளும் துண்டித்தாற்போலிருந்தது சுப்பிரமணிக்கு. நேரம் இப்போது இரவு பதினொன்று.

பாவு பிணைக்க ரங்கன் இருந்தால் பரவாயில்லை. முந்தாநாள் மனைவியோடு மாமனார் ஊருக்குப் போய்விட்டான். இப்போது என்ன செய்வது...?

உள்ளே நான்கு தறிகள் ஓடிக்கொண்டிருந்தன. மாணிக்கம் ஓட்டுகிற தறியில், சற்று நேரத்தில் 'பாவு' தீர்ந்துவிடும். மிச்சம் கொஞ்சம் நூல் வைத்து அடுத்த பாவைப் பிணைத்து விட்டால் நாளைக்குள் ஓடி அடைந்து விடும். பாவு பிணைக்க ஆள் வேண்டும் இப்போது. நண்பன் ரகுவின் 'குமரன் டெக்ஸில்' யாராவது இருப்பார்கள். இம்மாதிரி அவசர காலத்துக்கு ஆபத்பாந்தவன் ரகுநாதன்.

பாவு பிணைக்க இரண்டு ஆளாகக் கிடைத்தால் வேலை விரைவில் முடியும். அதைவிட ஆள் தேடி அஞ்செட்டுக் கிலோமீட்டர் போகவும் வேண்டி வரலாம். வெளியே குளிர் வேறு தாக்கிக்கொண்டிருக்கிறது. 'கார்' தான் நல்லது. காரில் போகையில் அவனுக்குப் பாட்டு கேட்கக்கூடத் தோணவில்லை. தேவைகளின் அவசரப் பதற்றம் கடல் தாண்டி இங்கு வரை தாக்கிக்கொண்டிருக்கிறது.

தறியின் வாசலிலேயே நின்றுகொண்டிருந்த ரகுவைப் பார்த்துக் காரிலிருந்து இறங்கிக் கொண்டே, 'நீயும் வீட்டுக்குப் போகலியா,...? ' என்றான்.

ரகு விரக்தியை வென்ற புன்னகையோடு, "எங்கே போறது? கடவுள் நம்மளத் தூங்கறதுக்கா படைச்சிருக்கான்? என்ன சோலியா இப்ப வந்தே... நீ ஒண்ணும் சும்மா வரமாட்டியே!"

"பாவு பிணைக்க ஆள் வேணும். உடனடியா யாரையாவது அனுப்பு... இங்க யாரும் இருக்காங்களா...?

"இங்க ஒருத்தரும் இல்லியே..."

சுப்பிரமணியின் முகம் சோர்ந்து விழுவதைப் பார்த்துவிட்டு ரகு, " உனக்கு மாயழகு தெரியுமா?... இங்கே தறி ஓட்ற ஆள் ....?" என்று கேட்டான்.

"ஆமா ! தெக்கத்திக்காரன் ...."

"ம்... அந்த ஆளும் சம்சாரமும் வீட்லதான் இருப்பாங்க. நான் சொன்னேன்னு சொல்லிக் கூட்டிக்கிட்டுப் போ. சம்பளம் சேர்த்துப் போட்டுக் கொடுத்துடு..."

"திடுதிப்புனு இப்ப நடுராத்திரியில போயி..."

பேய்களும்கூடத் தூங்கும் இந்த நடுராத்திரியில் போய், புதிய ஒரு பெண்ணை வேலைக்கெனக் கூப்பிடுவதைக் குறித்துச் சுப்பிரமணி தயங்கினான்.

"உனக்குப் பாவு ஓடணுமா, வேண்டாமா...? அவங்க வந்தாலும் நீ விட மாட்டே போலிருக்கே" – ரகு முறைத்தான்.

"இப்ப இங்க வேலை இல்லீனா, நானே வந்திருவேன். மாயழகுகிட்ட ரகு சொன்னார்னு சொல்லு, அனுப்பி வைப்பாப்டி."

மாயழகுவின் வீட்டைக் கண்டுபிடித்து, சுப்பிரமணி கதவைத் தட்டினான். மாயழகுதான் கதவு திறந்தான். கண்களை இடுக்கிப் பார்த்துவிட்டுப் பின் புன்னகைத்தான்.

"பாவு பிணைக்கணும்ப்பா... ரொம்ப அவசரம்! எங்க பட்டறை ஆளு ஊருக்குப் போயிட்டான். வேற வழியே இல்ல. உங்க ஓனரைப் பார்த்தேன். அவருதான் சொன்னார், உஞ் சம்சாரம் பாவு பிணைக்குமாம்ல..."

"அவ்வளவுதானுங்களா...? இதா எழுப்பறேன்..." என்றவாறு அவளை நோக்கித் திரும்பினான்.

ஒச்சம்மா மூச்சுக்காற்றைத் தவிர உலகின் சகல தொடர்புகளையும் துண்டித்தாற்போலத் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளது தூக்கத்துக்காக, சரக்குக் கப்பல்கள் காத்து நிற்பதில்லை. மார்போடணைந்து இரண்டரை வயதுக் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

"யே...ஒச்சு... எந்திரி புள்ளே..." என அவளை எழுப்பினான். கண்ணைக் கசக்கிக் கொண்ட நான்காம் வினாடியில் "வாங்கண்ணே..." என்றாள், சுப்பிரமணியைப் பார்த்து.

அடுத்த இரு வினாடிகளில் மாயழகைப் பார்த்தாள். அவளது கண்கள் 'இவருக்கிட்டே ஏதும் கடன் வாங்கியிருக்கியா...?' என்கின்றன.

"பாவு பிணைக்கக் கூட்டிக்கிட்டுப் போக வந்திருக்காரு..."

ஒச்சம்மா கையில் நீர்ச்சொம்புடன் எழுந்து வெளியே சென்றாள். முகம் கழுவிக்கொண்டு வரும்போது சற்றே மலர்ச்சியாகத் தெரிந்தாள்.

"கார்ல வந்தீங்களா..?" எனக் கேட்டவாறு குழந்தையைத் தூக்கிக்கொண்டு வெளியில் இறங்கினாள்.

சுப்பிரமணி, மாயழகைப் பார்த்து, "மாயழகு வர்றாப்டியா...?" என்றான்.

"நான் எதுக்குண்ணே...? காவலா?... காலை முத ஷிஃப்ட்டுக்குப் போகணும். நீங்க கொண்டு வந்து விட்டுருங்க, அது போதும்..."

"ம்..." என்றவாறு சுப்பிரமணி வெளியே வந்து காரின் பின் கதவைத் திறந்து ஒச்சம்மாவை உட்கார வைத்துவிட்டுக் காரைக் கிளப்பினான்.

தனது பட்டறைக்குச் சுப்பிரமணி காரைச் செலுத்தினான். தறிப்பட்டறைக்குள் நுழைகிற நேரம், இரண்டாம் நம்பர் தறி ஓடி முடிந்து ஒன்றரை மீட்டர் நூலை மிச்சம் வைத்திருந்தது. இனி, அதே நூலின் பாவைப் பிணைத்து, தொடர்ந்து ஓட்ட வேண்டியதுதான். பாவு பீமிலிருந்து செல்கிற இந்த நாலாயிரம் நூல்கள் பெரிய இசைக்கருவியின் தந்திகள் போல் உள்ளன. இத்தனை தந்திகளிலிருந்தும் 'டக்..டடக்..' என ஒற்றைத் தறிச் சத்தம்தான்.

தறிமுகப்பில் ஊடுபாவாக நூல் கோத்துக்கொண்டு எலி மாதிரி 'தார்க்கதிர்' ஓடினால், நூல்களுக்குத் துணி வடிவம் வந்துவிடும். துணியின் டிசைனைத் தறிக்கு மேலே வெட்டி வெட்டி நகரும் ஜக் கார்டுகள் தீர்மானிக்கும்.

பழைய வெற்று பீமைக் கழற்றிவிட்டு, புதிய பாவு பீமைத் தறிப் பையன்கள் உதவியோடு சுப்பிரமணி பொருத்தினான். ஒச்சம்மாவுக்கு வேலை துவங்க இருந்தது. குழந்தை தோளில் தூங்கிக் கொண்டிருந்தது.

சுவரோரமாக ஒரு பெட்ஷீட்டைத் தேடி விரித்து, அதில் குழந்தையைப் படுக்க வைத்தாள். தறிச் சத்தத்தில் கூட விழிக்காத குழந்தை, தாயின் அருகாமை தவறியதும் சிணுங்கியது. சில கழிநூல்களை எடுத்து அதன் விலாப் பகுதியில் வைத்தாள். அதன் மீது கைபோட்டு குழந்தை அமைதியானது.

தறியின் அருகே வந்து நூல்களை முடிச்சிட்டு இணைக்க ஆரம்பித்தாள் ஒச்சம்மா. அவளுக்குச் சொந்த ஊர் உசிலம்பட்டி பக்கமுள்ள கிருஷ்ணாபுரம். சீமைக்கருவேல முட்கள் அதிகம் உள்ள ஊர். மாயழகு 'கோம்பைத்தொழுவு' க்காரன். கோம்பைத் தொழுவென்றால் அது வெள்ளிமலை அடிவாரத்தில் இருக்கிறது. வருசநாட்டு மலைத் தொடர்ச்சி. கண்டமனூர் எல்லை தாண்டிப்போக வேண்டும்.

அங்கிருந்துதான் மூன்று மாவட்டங்களைத் தாண்டி மாயழகு வெள்ளக்கோயிலுக்குத் தறி ஓட்டவருவான். கொஞ்சம் காசு பிடித்ததும் கோம்பைத்தொழுவுக்குப் போய்ச் சுற்றிக் கொண்டிருந்துவிட்டு வருவான். அப்படித் தனது ஊரில் இருந்தபோதுதான் ஒச்சம்மாவுடன் முடிச்சானது.

எதிர்கால நலன்களை எடுத்துப் பேசி வெள்ளக்கோயிலுக்குக் குடும்பத்துடன் வரச் செய்தான். வீடு முதலான ஏற்பாடுகள் முடித்தபின் மாயழகுக்கு 'இது பரவாயில்லையே' என்று தோன்றியது. ஆனால் வெள்ளக்கோயில் வந்த அன்று ஒச்சம்மா அழுத அழுகை இருக்கிறதே! " தினம் ஒரு மரத்தின் கீழ் அடுப்புப் பற்ற வைக்கிற நாடோடிப் பிழைப்புதானா நம்முது" என விம்மிவிட்டாள். ஆயினும், இனியும் இடம் மாறினால், தான் பிழைக்க மாட்டோம் என்பதாக அவளுக்குப் பட்டது. இந்தப் பகுதியின் வேலிகள், வீடுகள், நாகரிகம் குறிப்பாக உணவுப்பழக்கம் எல்லாமே வியப்பைத் தந்தன அவளுக்கு. ஒச்சம்மா "வெஞ்சனம் இல்லாமல் சாப்பிட முடியாது" என்றாள். இங்குள்ள பெண்கள், "வெஞ்சனம்... ஓ பொரியலா? பொரியல் இல்லாமல் சாப்பிட்டுறலாம். தயிரோ மோரோ இல்லாமத்தான் சாப்பிட முடியாது" என்றார்கள். உணவு, காற்று, நீர், ஒப்பனை எல்லாமும் மாற வேண்டியிருந்தது.

தறித்தொழில் இயந்திர நேர்த்தி அதிகம் கொண்டது. நுட்பங்களுக்கு மூளையைச் செலவிடத் தேவையில்லை. ஆனால் பிசகாமல் ஒரே மனசாக நேரம் செலவிட்டாக வேண்டும். பாவு பிணைத்தல், ஒடி எடுத்தல், கோன் போடுதல் எல்லாம் சில மாதங்களில் ஒச்சம்மா கற்றுக் கொண்டாள். தறிதான் ஓட்டத்தெரியாது. தொழிலில் தறி ஓட்டுகிற பெண்களும் இருக்கிறார்கள். விமானமே ஓட்டுகிறவர்கள் தறி ஓட்ட மாட்டார்களா என்ன?

தன் குழந்தையின் கல்வி பற்றி இப்போதே கவலை வந்துவிட்டது. தன் பையன் "தார் போடுகிற பையனாக" மாறுவதை அவளால் சகிக்க முடியாது. தம்மைப் போல வந்தேறிய சக குடும்பங்களைக் கவனித்துத்தான் வருகிறாள். அடிக்கடி ஊர் மாறினால் குழந்தைகள்

படிப்பு போச்சு. பக்கத்து வீட்டு ராமாயி அக்கா மகனுக்கு வயசு பதினாலு. அ… ஆ… தெரியாது. பாவு பிணைத்தலினூடே அவள் குழந்தையைப் பார்த்துக் கொள்கிறாள். அவளது பூங்கனா படுத்திருக்கிறது. "உன்னை நிச்சயம் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைப்பேன்" என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டாள்.


பாவு பிணைத்தல்

சட்டென பாவு பிணைப்பதை நிறுத்திவிட்டுக் குழந்தையை நோக்கி நடந்தாள். குழந்தை அழ ஆரம்பித்தது. மழலையின் பசி தாய் அறிவாள். குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். தறிக்கு வெளியில் வந்து இருள் நிழல் தேடிப் போய் அமர்ந்து பாலூட்டினாள். குழந்தை அப்படியே தூங்கிவிட்டது. அவள் தூங்க முடியாது.

திரும்ப உள்ளே எடுத்துவந்து கிடத்தினாள். குழந்தை ஒருவிதமாகப் பிறை வடிவத்தில் கிடந்தது. ஒச்சம்மா நூல் பிணைவதன் வேகம் மங்குவதைச் சுப்பிரமணி உணர்ந்தான். அவன் எல்லாவற்றையும் பார்த்துத்தான் ஆக வேண்டும். தார் போடுகிற பையனைப் பார்த்து, "டேய் முருகா இங்கே வா" என அழைத்தான். இருபது ரூபாயைக் கொடுத்ததும் எல்லாருக்கும் அவன் தேநீர் வாங்கி வந்தான்.

ஒச்சம்மா தேநீரை வாங்கிப் பருகினாள். பின், பழைய வேகத்தோடு நூல் பிணைக்கத் தொடங்கினாள். வேலையும் முடிந்துவிட்டது. இரவும் விடிந்துவிட்டது. அந்தத் தறிக்கான மாணிக்கத்தைக் கூப்பிட்டு சுப்பிரமணி, "டீ, பீடின்னு அடிக்கடிப் போகாம இதச் சீக்கிரமா முடிக்கணும்!" எனக் கட்டளை வடிவத்தில் கேட்டுக் கொண்டான்.

ஒச்சம்மா குழந்தையைத் தூக்கிக் கொண்டு சுப்பிரமணி அருகில் வந்தாள். சுப்பிரமணி இரட்டைச் சம்பளத்துக்கான தொகையை அவளிடம் தந்தான். அவளது கண்கள் திளைப்பிலும் திகைப்பிலும் ஒரு கணம் ஒளிர்ந்தன. தனது எதிர்காலமேபோல் அந்த ரூபாய்த் தாள்களை வலது கையில் இறுக்கிக் கொண்டாள்.

சுப்பிரமணி, 'கொண்டுவந்து விட்டுடறேன்…' என்று காருக்கு நடக்க, அவள் பின்னால் நடந்தாள். அவன் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து, இருபது விநாடிகள் கண்களை மூடிக்கொண்டான். இந்த இரவுக்கும் பகலுக்குமான இடைவெளியை இப்போது பிரித்து விடுவது போல இருந்தது இந்தச்செயல். பின் அடக்கமாகச் சோம்பல் முறித்துவிட்டுக் காரைக் கிளப்பினான். ஆங்காங்கே டீக்கடைகள் விழித்து டேப் சத்தம் கேட்கவும் பாட்டுப் போடலாமே எனத் தோன்றி டேப்பைப் போட்டான்.

செம்மாண்டம்பாளையத்தில் அவளது வீடு வந்தாயிற்று. கார்ச்சத்தம் கேட்டு மாயழகு வெளியே வந்தான். ஒச்சம்மாளை இறக்கி விட்டுவிட்டு அப்படியே போக எண்ணியிருந்த சுப்பிரமணியை, "டீ சாப்பிட்டுதாண்ணே போகணும்!" என வற்புறுத்தி மாயழகு இறங்க வைத்துவிட்டான். பிறகு தூக்குச் செம்பை எடுத்துக்கொண்டு தேநீர்க் கடைக்கு ஓடினான்.

ஒச்சம்மா எந்தப் புள்ளியில் துவங்கினாள் எனத் தெரியாதபடி வீட்டுக் காரியங்களில் முனைந்துவிட்டாள். குழந்தை இதற்குள் விழித்துவிட்டான். பயல் நேற்றுப்படுத்த கூரையின் கீழ்தான் இன்றைக்கும் விழிக்கிறான். மாயழகு தேநீருடன் வந்து ஒச்சம்மாவுக்கும் சுப்பிரமணிக்கும் அவனே ஊற்றியும் கொடுத்தான்.

ஏதாவது பேசவேண்டும் என்பதற்காகச் சுப்பிரமணி "ரொம்ப கஷ்டந்தான் நம்ம தொழிலு..." என்றான்.

"அப்படித்தாண்ணே இருக்கும் எல்லாமும்... உங்கள நம்பித்தான் ஊருவிட்டு ஊரு வந்திருக்கோம். உங்களுக்கு நாங்க ஒத்தாசை... இப்படி ஏதும் அவசரம்னா சொல்லுங்கண்ணே... எங்களால முடிஞ்சதச் செய்யறம்..."

"சரி, வர்றேன் மாயழகு" என்றவாறு காரில் ஏறினான். ஒச்சம்மா உள்ளிருந்து வந்து, "வாங்கண்ணே..." என்று விடையளித்துத் தலையாட்டினாள். சுப்பிரமணி எதிர்பாராவிதமாக "டாட்டா டாட்டா" என்று குழந்தையின் குரல் கேட்டது. பதிலுக்குத் தலையசைத்துவிட்டுக் காரைக் கிளப்பினான்.

நூல் வெளி

கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கன்னிவாடியில் பிறந்தவர். சிறந்த சிறுகதை, புதின எழுத்தாளர். நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறந்த சிறுகதைக்கான இலக்கியச் சிந்தனை விருது பெற்றவர். கன்னிவாடி, குணச்சித்திரங்கள், உப்புக்கடலைக் குடிக்கும் பூனை முதலிய நூல்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய சிறுகதைகளில் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.



கற்பவை கற்றபின்

1. காலம் உடன் வரும் – கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக்காட்டுக.
2. காலம் உடன் வரும் கதையில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

மதிப்பீடு

'காலம் உடன் வரும்' – கதையைச் சுருக்கி எழுதுக.

இயல் ஆறு

கற்கண்டு

புணர்ச்சி

தமிழ், அமுதம் ஆகிய இரு சொற்களையும் சேர்த்துச் சொல்லிப் பாருங்கள். தமிழமுதம் என்று ஒலிக்கிறது அல்லவா?

இவற்றுள் முதலில் உள்ள சொல்லை நிலைமொழி என்றும் அதனுடன் வந்து சேரும் சொல்லை வருமொழி என்றும் கூறுவர். இவ்விரு சொற்களும் சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைகின்றன. இவ்வாறு நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் இணைவதைப் புணர்ச்சி என்கிறோம்.

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அஃது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) சிலை + அழகு = சிலையழகு (லை=ல்+ஐ)

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அஃது மெய்யீற்றுப் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) மண் + அழகு = மண்ணழகு

வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அஃது உயிர்முதல் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) பொன் + உண்டு = பொன்னுண்டு

வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அஃது மெய்முதல் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) பொன் + சிலை = பொற்சிலை (சி = ச்+ இ)

இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும். (எ.கா.) தாய் + மொழி = தாய்மொழி (இரு சொற்களிலும் எம்மாற்றமும் நிகழவில்லை.)

உடல் + ஓம்பல் = உடலோம்பல் (இங்கு ல் + ஓ இணைந்து லோ என்னும் உயிர்மெய் எழுத்து ஆயிற்று. புதிய எழுத்து எதுவும் தோன்றவோ வேறு எழுத்தாகத் திரியவோ மறையவோ இல்லை.)

இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின், அது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவது தோன்றல் விகாரம் ஆகும். (எ.கா.) தமிழ் + தாய் = தமிழ்த்தாய்

நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து வேறு எழுத்தாக மாறுவது திரிதல் விகாரம் ஆகும். (எ,கா.) வில் + கொடி = விற்கொடி

நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து மறைவது கெடுதல் விகாரம் ஆகும். (எ.கா.) மனம் + மகிழ்ச்சி = மனமகிழ்ச்சி

இரண்டு சொற்கள் இணையும்போது ஒன்றுக்கு மேற்பட்ட விகாரங்கள் நிகழ்வதும் உண்டு. (எ.கா.) நாடகம் + கலை = நாடகக்கலை

இங்குக் கெடுதல் விகாரத்தின்படி நிலைமொழி ஈற்றில் உள்ள மகர மெய் மறைந்தது. தோன்றல் விகாரத்தின்படி க் என்னும் மெய்யெழுத்து தோன்றியது.

கற்பவை கற்றபின்

இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய புணர்ச்சிகளுக்குரிய எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பட்டியல் ஒன்று உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. விகாரப் புணர்ச்சி _____ வகைப்படும்.

   அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

2. 'பாலாடை' – இச்சொல்லுக்குரிய புணர்ச்சி _____

   அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

பொருத்துக.

1. மட்பாண்டம்	–	தோன்றல் விகாரம்
2. மரவேர்	–	இயல்புப் புணர்ச்சி
3. மணிமுடி	–	கெடுதல் விகாரம்
4. கடைத்தெரு	–	திரிதல் விகாரம்

சிறுவினா

1. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. மரக்கட்டில் – இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.

மொழியை ஆள்வோம்!

SWAU6

கேட்க.

நெசவுத்தொழில் குறித்த நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.

1. உழவும் நெசவும்.
2. தொழில்கள் பலவிதம்.

சொல்லக் கேட்டு எழுதுக.

பூமிக்குள் புதைந்த தாவர இனங்களும் விலங்கினங்களும் அழுகி, மட்கிப் பழுப்பு நிலக்கரியாக மாறுகின்றன. இது மின் உலைகளிலும் ஊது உலைகளிலும் எரிபொருளாகப் பயன்படுகின்றது. உலோக உருக்குத் தொழிலிலும் பயன்படுகின்றது. தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டம் நெய்வேலியிலும் புதுச்சேரியின் சில பகுதிகளிலும் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. இது தஞ்சை, பெரம்பலூர், சிவகங்கை, நீலகிரி, திண்டுக்கல், திருவள்ளூர், கன்னியாகுமரி மாவட்டங்களிலும் குறைந்த அளவு காணப்படுகிறது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. இங்குக் கிடைக்கும் நிலக்கரி அனல்மின்சாரம் தயாரிக்க உதவுகின்றது.

அறிந்து பயன்படுத்துவோம்.

மரபுத்தொடர்கள்.

நாம் பேச்சிலும் எழுத்திலும் சில மரபுத்தொடர்களைப் பயன்படுத்துகிறோம். அத்தொடர்கள் நம்முடைய கருத்துகளுக்கு வலுச்சேர்க்கின்றன. சில மரபுத்தொடர்களுக்கு நேரடிப்பொருள் கொள்ளாமல், அவற்றின் உட்பொருளை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) 1. திண்டுக்கல், பூக்கள் உற்பத்தியில் கொடிகட்டிப் பறக்கும் நகரமாக விளங்குகிறது.

கொடிகட்டிப் பறத்தல் – புகழ்பெற்று விளங்குதல்

2. அவர் ஓர் அவசரக்குடுக்கை.

அவசரக்குடுக்கை – எண்ணிச் செயல்படாமை

பின்வரும் மரபுத்தொடர்களைப் பொருளோடு பொருத்துக.

ஆயிரங்காலத்துப் பயிர்	–	இயலாத செயல்.
கல்லில் நார் உரித்தல்	–	ஆராய்ந்து பாராமல்.
கம்பி நீட்டுதல்	–	இருப்பதுபோல் தோன்றும்; ஆனால் இருக்காது.
கானல்நீர்	–	நீண்டகாலமாக இருப்பது.
கண்ணை மூடிக்கொண்டு	–	விரைந்து வெளியேறுதல்

பின்வரும் மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. வாழையடி வாழையாக – ____________________________________
2. முதலைக்கண்ணீர் – ____________________________________
3. எடுப்பார் கைப்பிள்ளை – ____________________________________

கட்டுரை எழுதுக.

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.

மொழியோடு விளையாடு

ஊர்களையும் அவற்றின் சிறப்புகளையும் அறிவோம்!

1						2			
					3				
									4
	5						6		
		7							
			8						
									9
			10			11			
12									

இடமிருந்து வலம்

1. சிவகாசி
5. திருபாச்சி
7. திருநெல்வேலி
12. கோவில்பட்டி

வலமிருந்து இடம்

3. மதுரை
4. பண்ருட்டி
9. தஞ்சாவூர்
10. மணப்பாறை

மேலிருந்து கீழ்

1. காஞ்சிபுரம்
2. சேலம்
4. பழனி

கீழிருந்து மேல்

6. தூத்துக்குடி
8. ஸ்ரீவில்லிப்புத்தூர்
11. திண்டுக்கல்

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுத் தெளிவேன்.
2. நெசவுத் தொழிலின் சிறப்பை அறிந்து போற்றுவேன்.

கலைச்சொல் அறிவோம்.

நூல்	Thread	தையல்	Stitch
தறி	Loom	ஆலை	Factory
பால்பண்ணை	Dairy farm	சாயம் ஏற்றுதல்	Dyeing
தோல் பதனிடுதல்	Tanning	ஆயத்த ஆடை	Readymade Dress

இணையத்தில் காண்க

குடிசைத் தொழில்களின் பட்டியலை இணையத்தில் தேடி எழுதுக.

இயல் ஏழு

பாருக்குள்ளே நல்ல நாடு



கற்றல் நோக்கங்கள்

- *சிற்றிலக்கியங்களில் உள்ள இலக்கிய நயங்களை நுகர்தல்*
- *தேசிய விழாக்களின் சிறப்பினை உணர்ந்து கொண்டாடுதல்*
- *நாட்டுக்கு உழைத்த நல்லோரின் வாழ்க்கையை அறிந்து பின்பற்றுதல்*
- *நாடகத்தைப் படித்துக் கதையைப் புரிந்துகொள்ளும் திறன் பெறுதல்*
- *வல்லினம் மிகும் இடங்கள், மிகா இடங்கள் அறிந்து பயன்படுத்துதல்*

இயல் ஏழு

கவிதைப்பேழை

படை வேழம்

நுழையும்முன்

தமிழர்கள் அறத்தையும் வீரத்தையும் தமது உடைமைகளாகக்கொண்டவர்கள். அவர்தம் வீரமும் போர்அறமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. பகைவரை அஞ்சச்செய்யும் வீரமும் அஞ்சியோடும் பகைவரைத் துன்புறுத்தாத அறமும் தமிழரின் மாண்பினை நமக்கு உணர்த்துவன. அதனைப் போற்றிப் பாடும் சிற்றிலக்கியமான கலிங்கத்துப்பரணியின் பாடல்கள் சிலவற்றை அறிவோம்.



கலிங்கப் படையின் நடுக்கம்

எதுகொல் இது மாயை ஒன்றுகொல்
  எரிகொல் மறலிகொள் ஊழி யின்கடை
அதுகொல் என அலறா இரிந்தனர்
  அலதி குலதியொடு ஏழ்க லிங்கரே (1)

கலிங்கர் தோற்றுச் சிதைந்தோடல்

*வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
  மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
  இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
  உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
  அபயம் அபயம் எனநடுங்கியே* (3)

மழைகள் அதிர்வன போல் உடன்றன
  வளவன் விடுபடை வேழம் என்றிருள்
முழைகள் நுழைவர்கள் போரில் இன்றுநம்
  முதுகு செயும்உப காரம் என்பரே (4)

– செயங்கொண்டார்

சொல்லும் பொருளும்

மறலி	– *காலன்*	*வழிவர்*	– *நழுவி ஓடுவர்*
கரி	– *யானை*	*பிலம்*	– *மலைக்குகை*
தூறு	– *புதர்*	*மண்டுதல்*	– *நெருங்குதல்*
அருவர்	– *தமிழர்*	*இறைஞ்சினர்*	– *வணங்கினர்*
உடன்றன	– *சினந்து எழுந்தன*	*முழை*	– *மலைக்குகை*

பாடலின் பொருள்

சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர், இஃது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்கவந்த தீயோ என அஞ்சினர். சோழர்படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர்; தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.

அப்படி நடுங்கிய கலிங்கப் படையினர் படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர். சிலர் கடலில் தாவிக் குதித்துத் தப்பினர். சிலர் யானைகளின் பின்னே மறைந்துகொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.

கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடினர். தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சினர்; தஞ்சம் வேண்டி வணங்கினர்.

சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின; அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்; ஏனையோர் புறமுதுகுகாட்டி ஓடிப் பிழைத்தனர்.

நூல் வெளி



செயங்கொண்டார் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர் என்பர். இவர் முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். இவரைப் பரணிக்கோர் செயங்கொண்டார் என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் புகழ்ந்துள்ளார்.

கலிங்கத்துப்பரணி தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையைச் சார்ந்த நூல். தமிழில் முதல்முதலில் எழுந்த பரணி இந்நூலே ஆகும். இது முதலாம் குலோத்துங்க சோழன், அவருடைய படைத்தலைவர் கருணாகரத் தொண்டைமான் ஆகியோரின் கலிங்கப்போர் வெற்றியைப் பேசுகிறது. இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார். கலிங்கத்துப் பரணி கலித்தாழிசையால் பாடப்பெற்றது; 599 தாழிசைகள் கொண்டது.

போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

கற்பவை கற்றபின்

1. உங்களுக்குத் தெரிந்த சிற்றிலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.
2. போர்க்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிங்கம் _ _ _ _ _யில் வாழும்.

அ) மாயை ஆ) ஊழி இ) முழை ஈ) அலை

2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு _ _ _ _ _.

அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

3. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _.

அ) வெம் + கரி ஆ) வெம்மை + கரி இ) வெண் + கரி ஈ) வெங் + கரி

4. 'என்றிருள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _.

அ) என் + இருள் ஆ) எட்டு + இருள்

இ) என்ற + இருள் ஈ) என்று + இருள்

5. போல் + உடன்றன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _.

அ) போன்றன ஆ) போலன்றன

இ) போலுடன்றன ஈ) போல்உடன்றன

குறுவினா

1. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?
2. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
3. சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?

சிறுவினா

சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?

சிந்தனை வினா

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள்?

கவிதைப்பேழை

இயல் ஏழு

விடுதலைத் திருநாள்

RV8LI

நுழையும்முன்

பிறந்தநாள், திருமணநாள் போன்றன தொடர்புடைய குடும்பத்தினருக்கு மட்டுமே மகிழ்ச்சி அளிக்கும் நாள்களாகும். சமயத் தொடர்பான விழாக்கள் குறிப்பிட்ட சமயத்தினருக்கு மட்டுமே மகிழ்ச்சி அளிக்கும். இந்தியர் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் இன்றியமையா நாள் ஒன்றின் சிறப்பை அறிவோம்.

முன்னூறு வருடமாய்
முற்றுகை யிட்ட
அந்நிய இருட்டின்
அரக்கக் கூத்து
முடிந்தது என்று
முழங்கி நின்றது
எந்த நாளோ
அந்த நாள் இது.

செத்த பிணமாய்ச்
சீவனில் லாமல்
மொத்தமாய்த் தேசத்தை
முற்றுகையிட்ட
மூட மூட
நிர்மூட உறக்கத்தை
ஓட ஓட
விரட்டி யடித்து
விழிக்க வைத்தது –
வையம்
வியக்க வைத்தது –
எந்த நாளோ
அந்த நாள் இது.

பரிதவித் திருந்த
பாரத அன்னை
காளியாய்ச் சீறிக்
கைவிலங் கொடித்து
பகையைத் துடைத்து
சத்திய நெஞ்சின்
சபதம் முடித்து
கூந்தல் முடித்துக்
குங்குமப் பொட்டு வைத்து
ஆனந்த தரிசனம்
அளித்து நின்றது
எந்த நாளோ
அந்த நாள்இது.

சதி வழக்கினிலே
சம்பந்தப் பட்டுத்
தூக்குக் கயிற்றில்
தொங்கப் போகும்
கடைசிக் கணத்திலும்
கண்முன் நிறுத்திப்
பகத்சிங் பார்த்துப்
பரவசப் பட்ட
அற்புத விடியலை
அழைத்து வந்தது
எந்த நாளோ
அந்த நாள் இது.

முற்றிப் படர்ந்த
முட்காட்டை எரித்து
விளைந்த மூங்கிலை
வீரமாய்த் துளைத்து
மூச்சுக் காற்றை
மோகித்து நுழைத்து
புரட்சிப்
புல்லாங் குழலில்



பூபாளம் இசைத்தது
எந்த நாளோ
அந்த நாள் இது.

இதந்தரும் இந்தச்
சுதந்திர நாளைச்
சொந்தம் கொண்டாடத்
தந்த பூமியைத்
தமிழால் வணங்குவோம்.

– மீரா

சொல்லும் பொருளும்

சீவன் – உயிர்		வையம் – உலகம்	
சத்தியம் – உண்மை		சபதம் – சூளுரை	
ஆனந்த தரிசனம் – மகிழ்வான காட்சி		மோகித்து – விரும்பி	

பாடலின் பொருள்

முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்தது என்பதைக் கூறும் நாள் இன்று. உயிரற்ற பிணங்களைப் போலக் கிடந்த நாட்டு மக்கள் அனைவரையும் பற்றியிருந்த அறியாமை என்னும் உறக்கத்தை ஓட ஓட விரட்டிய நாள் இன்று.

அடிமையாய்த் தவித்துக் கொண்டிருந்த இந்தியத்தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு, இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளித்த நாள் இன்று.

சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பகத்சிங், தூக்கிலிடப்படும் கடைசி நேரத்திலும் தன் மனக்கண்ணில் கனவுகண்ட இந்தியாவின் விடியல் தோன்றிய நாள் இன்று. பகைமை என்னும் முள்காட்டினை அழித்து, அங்கு விளைந்த மூங்கிலைப் புரட்சி என்னும் புல்லாங்குழல் ஆக்கி மூச்சுக்காற்றால் பூபாள இசை பாடும் இனிய நாள் இன்று.

இன்பம் தரும் இந்த விடுதலைத் திருநாளைக் கொண்டாட வாய்ப்பளித்த நம் தாய்நாட்டை தமிழால் வணங்குவோம்.

நூல் வெளி



மீ. இராசேந்திரன் என்னும் இயற்பெயரை உடைய மீரா கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அன்னம் விடு தூது என்னும் இதழை நடத்தியவர். ஊசிகள், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய கோடையும் வசந்தமும் என்னும் நூலிலிருந்து ஒரு கவிதை இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

நீங்கள் விரும்பும் விழா ஒன்றனைப் பற்றி ஒரு பத்தி அளவில் எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வானில் முழுநிலவு அழகாகத் ___________ அளித்தது.

   அ) தயவு ஆ) தரிசனம் இ) துணிவு ஈ) தயக்கம்

2. இந்த _________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.

   அ) வையம் ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம்

3. 'சீவனில்லாமல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) சீவ + நில்லாமல் ஆ) சீவன் + நில்லாமல்

   இ) சீவன் + இல்லாமல் ஈ) சீவ + இல்லாமல்

4. 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து

   இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து

5. காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) காட்டைஎரித்து ஆ) காட்டையெரித்து

   இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து

6. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) இதந்தரும் ஆ) இதம்தரும் இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

குறுவினா

1. பகத்சிங் கண்ட கனவு யாது?
2. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?

சிறுவினா

இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?


சிந்தனை வினா

நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாளை எவ்வாறு கொண்டாடலாம்?

உரைநடை உலகம்

இயல் ஏழு

பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்



தான் எடுத்துக்கொண்ட செயலில் வெற்றியாளராக விளங்கிட வேண்டும் என்கிற எண்ணம் எல்லோருக்கும் உண்டு. எண்ணியதை எண்ணியவாறே செய்து முடிக்கும் வல்லமை சிலருக்கே வாய்க்கும். அத்தகையோர் மக்கள் மனத்தில் தலைவர்களாக நின்று வாழ்கிறார்கள். அத்தகைய தலைவரைப் பற்றி அறிந்து கொள்வோம்.

கும்பகோணத்தில் உள்ள ஆனையடிப் பள்ளி. நண்பகல் உணவு இடைவேளையின்போது மாணவர்கள் ஆங்காங்கே அமர்ந்து தாம் கொண்டுவந்த உணவை உண்கின்றனர். உடன்பிறந்தோராகிய இரண்டு சிறுவர்கள் பசியுடன் ஓர் ஓரமாக அமர்ந்திருக்கின்றனர்.

"பசிக்குது அண்ணா" என்கிறான் தம்பி.

"கொஞ்சம் பொறுத்துக்கோ தம்பி. மாலை வீட்டுக்குப் போனதும் சாப்பிடலாம்" என்கிறான் அண்ணன்.

"அம்மா ஏன் நமக்குச் சாப்பாடு கொடுத்தனுப்புறதில்ல?"

"வீட்டுவேலை செஞ்சு அம்மா கொண்டுவருகிற பணம் நமக்கு ஒருவேளை சாப்பாட்டுக்குத்தான் போதுமானதா இருக்கு. அம்மா என்ன செய்வாங்க பாவம். வீட்டுவேலைக்குப் போயிருக்கிற அம்மா, மாலையில் எப்படியும் அரிசியோடு வருவாங்க. நமக்கு ஏதாவது உணவு சமைச்சுத் தருவாங்க" என்று தம்பியை அணைத்துக்கொண்டு ஆறுதல் கூறுகிறான் அண்ணன்.

இருவரும் பசியுடன் பாடம் படிக்கின்றனர்.

காலம் வேகமாகச் சுழல்கிறது.

அந்தச் சிறுவர்களில் தம்பி இப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சர். பசியால் வாடிய தமது இளமைக்கால நினைவுகள் இப்போதும் மறையாமல் அவரது உள்ளத்தில் சுற்றிக்கொண்டே இருக்கின்றன. தமிழ்நாட்டுக் குழந்தைகள் பசியறியாமல் படிக்கவேண்டும் என்று விரும்புகிறார் அவர். எனவே, "காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத்திட்டத்தை விரிவுபடுத்தப்போகிறேன். இனிமேல் பள்ளிக் குழந்தைகளுக்குக் காய்கறிகள், பருப்பு முதலியவற்றுடன்கூடிய உணவு வழங்கப்படும். இந்தத் திட்டம் இனி சத்துணவுத் திட்டம் என அழைக்கப்படும்" என்று அறிவிக்கிறார்.



இளமைக்காலத்தில் பசியின் கொடுமையால் வாடியதை மறவாமல், தாம் ஆட்சிக்கு வந்ததும் பள்ளிக்குழந்தைகளின் பசியைத் தீர்க்கத் திட்டம் தீட்டியஅந்த உயர்ந்த மனிதர்தாம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். என்று அனைவராலும் அழைக்கப்படும் எம்.ஜி.இராமச்சந்திரன்.

புரட்சி நடிகர்

எம்.ஜி.ஆர். வறுமையின் கொடுமையை நன்கு உணர்ந்தவர். வறுமை காரணமாகவே அவரும் அவருடைய அண்ணனும் பள்ளிப்படிப்பைத் தொடரமுடியாமல் நாடகக்குழுவில் சேர்ந்தனர். நாடகங்களில் சிறுசிறு வேடங்களில் நடிக்கத் தொடங்கினர். எம்.ஜி.ஆர். தமது நடிப்பாற்றலால் நாடகக்குழுவின் முதன்மை நடிகராக உயர்ந்தார்.

அதன்பின்னர் எம்.ஜி.ஆர். திரைப்படத்துறையில் நுழைந்தார். நாடகத்துறையைப் போலவே, திரைத்துறையிலும் முதலில் சிறுசிறு வேடங்களில் நடிக்கத் தொடங்கி விரைவிலேயே கதாநாயகனாக உயர்ந்தார். எம்.ஜி.ஆர். தாம் ஏற்று நடித்த கதைமாந்தர்கள் மூலம் ஏழை, எளியோர், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் முன்னேற்றத்துக்கு உரிய கருத்துகளை எடுத்துரைத்தார். எனவே, மக்கள் அவரைப் புரட்சி நடிகர், மக்கள் திலகம் என்றெல்லாம் போற்றினர். மேலும் இந்திய அரசு மிகச் சிறந்த நடிகருக்கு வழங்கும் பாரத் பட்டத்தை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தது. திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டு விளங்கினார்.

தெரிந்து தெளிவோம்

கேரளாவைச் சேர்ந்தவர்களாகிய எம்.ஜி.ஆரின் பெற்றோர் குடும்பத்துடன் இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர். இலங்கையில் உள்ள கண்டியில் கி.பி. (பொ. ஆ.) 1917 சனவரித் திங்கள் பதினேழாம் நாள் கோபாலன் – சத்தியபாமா இணையருக்கு ஐந்தாம் மகனாக எம்.ஜி.ஆர். பிறந்தார். இவர் குழந்தையாக இருக்கும்போதே தந்தையை இழந்தார். இதனால் எம்.ஜி.ஆரின் தாயார் குழந்தைகளுடன் தமிழ்நாட்டுக்கு வந்து, கும்பகோணத்தில் குடியேறினார்.

எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் தாம் பாடி நடித்த பாடல்கள் மூலம் உயர்ந்த கருத்துகளை மக்களிடம் விதைத்தார்.

மாபெரும் சபைதனில் நீ நடந்தால்
உனக்கு மாலைகள் விழவேண்டும் – ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று
போற்றிப் புகழ வேண்டும்

போன்ற பாடல்கள் மூலம் மனிதன் எத்தகைய நோக்கத்துடன் வாழவேண்டும் என்பதை எடுத்துரைத்தார்.

வாழ்வில் உயர்நிலையை அடைந்த பின்னரும் எளிமையாக வாழவேண்டும் என்பதை,

பதவி வரும்போது பணிவு வர வேண்டும்!

துணிவு வர வேண்டும் தோழா!

என்னும் பாடல் வரிகள் மூலம் எடுத்துரைத்தார். மேலும் அப்பாடல் வரிகளுக்குத் தாமே இலக்கணமாகவும் திகழ்ந்தார்.

பொன்மனச் செம்மல்

எம்.ஜி.ஆர். தாம் ஈட்டிய செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தவர். புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் நிகழ்ந்த போதெல்லாம், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை வழங்கி அவர்களின் துயர் துடைக்க இவரின் கொடைக்கரங்கள் நீண்டன.



எம்.ஜி.ஆர். ஒருமுறை வெளியூரிலிருந்து மகிழ்வுந்தில் சென்னைக்கு வந்துகொண்டிருந்தார். வழியில் மூதாட்டி ஒருவரும் பத்து வயதுச் சிறுமி ஒருத்தியும் தலையில் புல்கட்டுகளைச் சுமந்தவாறு கால்களில் காலணிகள் இல்லாமல் சென்றுகொண்டிருந்தனர். சாலையின் சூடு பொறுக்கமுடியாமல் அவர்கள் சாலையோர மரநிழலில் நிற்பதும் ஓடுவதுமாக இருந்ததைக் கண்ட எம்.ஜி.ஆர். உடனே தமது மகிழ்வுந்தை நிறுத்தச்செய்தார். உடன்வந்த தமது துணைவியாரது காலணியையும் உறவினரான பெண்ணின் காலணியையும் அவர்களிடம் கொடுக்கச்செய்தார். மேலும் அவர்களுக்குப் பணமும் கொடுத்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார்.

ஏழை எளியவர்கள் காலில் காலணிகூட இல்லாமல் நடந்துசெல்லும் இந்நிகழ்ச்சி அவரது மனத்தில் ஆழமாகப் பதிந்திருக்கவேண்டும். அதனால்தான் பின்னர்ப் பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

எம்.ஜி.ஆர். ஒருமுறை படப்பிடிப்பிற்காகக் காஷ்மீருக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த இந்தியப் படைவீரர் நலச்சங்கத்தினர் தமது

தெரிந்து தெளிவோம்

சென்னைப் பல்கலைக் கழகம் எம்.ஜி.ஆரின் பணிகளைப் பாராட்டி டாக்டர்பட்டம் வழங்கியது. தமிழக அரசு அவர் நினைவைப் போற்றும் வகையில் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தை நிறுவியுள்ளது; சென்னைக் கடற்கரையில் இவருக்கு எழிலார்ந்த நினைவிடம் ஒன்றையும் அமைத்துள்ளது. அவரது இறப்புக்குப்பின் இந்திய அரசு, மிக உயரிய பாரத ரத்னா (இந்திய மாமணி) விருதினை 1988ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

சங்க விழாவிற்கு எம்.ஜி.ஆர். வருகைதர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். அதற்கு ஒப்புக்கொண்ட அவர் அச்சங்கத்திற்கு நன்கொடை வழங்க விரும்பினார். ஆனால், அப்பொழுது அவரிடம் பணம் இல்லை. எனவே, அங்குத் தங்கியிருந்த தமிழ்நாட்டுத் தொழிலதிபர் ஒருவரிடம் பெருந்தொகையைக் கடனாகப் பெற்று அதனை நன்கொடையாக வழங்கினார். சென்னை திரும்பியதும் முதல்வேலையாக அத்தொகையைத் திருப்பிக்கொடுத்தார்.

இவ்வாறு பிறர் வியக்கத்தக்க வகையில் தம் செல்வத்தை வாரி வழங்கியமையால்தான் அவரைப் பொன்மனச் செம்மல் என்று மக்கள் அன்புடன் அழைக்கின்றனர்.

சமூக நலத்திட்டங்கள்

எம்.ஜி.ஆர். தமிழக முதலமைச்சராக இருந்தபோது ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர அரும்பாடுபட்டார். உழவர்களின் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்கான வீட்டு வசதித்திட்டம், ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம், தாய்சேய் நல இல்லங்கள், பற்பொடி வழங்கும் திட்டம், நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடநூல் வழங்கும் திட்டம், முதியோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம், வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திப் புகழ் பெற்றார்.

தமிழ் வளர்ச்சிப் பணிகள்

எம்.ஜி.ஆர். தமிழ் வளர்ச்சிக்காகப் பல்வேறு பணிகளை ஆற்றினார். தந்தை பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்களுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தித் தமிழ் எழுத்துமுறையை எளிமைப்படுத்தினார். மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்.

இத்தகைய தமது செயல்பாடுகள்மூலம் அனைவரையும் கவர்ந்த எம்.ஜி.ஆர். புரட்சி நடிகராகப் பெயர்பெற்று, பொன்மனச் செம்மலாக வளர்ந்து,மக்கள் திலகமாக உயர்ந்து புரட்சித்தலைவராக மக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்று நிலைத்து வாழ்கிறார்.

தெரிந்து தெளிவோம்

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை ஒட்டி (2017 – 2018) தமிழக அரசால் சென்னையிலும் மதுரையிலும் பேருந்து நிலையங்களுக்கு எம்.ஜி.ஆர். பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்திய அரசு, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குப் புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய ரயில் நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்து, அவரைப் பெருமைப்படுத்தியுள்ளது.

கற்பவை கற்றபின்

1. தமிழக முதலமைச்சர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. எம்.ஜி.ஆர். நடித்த திரைப்படங்களில் உள்ள சமூகநலன் சார்ந்த பாடல்களைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. எம்.ஜி.ஆர். _____ என்னும் ஊரில் கல்வி பயின்றார்.
   அ) கண்டி ஆ) கும்பகோணம் இ) சென்னை ஈ) மதுரை
2. எம்.ஜி.ஆர். படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் _____ .
   அ) நடிப்பு ஆர்வம் ஆ) பள்ளி இல்லாமை
   இ) குடும்ப வறுமை ஈ)படிப்பில் ஆர்வமில்லாமை
3. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான _____ எனும் பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கியது.
   அ) புரட்சித் தலைவர் ஆ) பாரத் இ) பாரத மாமணி ஈ) புரட்சி நடிகர்
4. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் _____
   அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை
5. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் _____.
   அ) மதிய உணவுத்திட்டம் ஆ) வீட்டு வசதித் திட்டம்
   இ) மகளிர் நலன் திட்டம் ஈ) இலவசக் காலணித் திட்டம்

குறுவினா

1. எம்.ஜி.ஆர். நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?
2. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?
3. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.

சிறுவினா

1. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.
2. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் யாவை?

நெடுவினா

எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக.

சிந்தனை வினா

சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

விரிவானம்

இயல் ஏழு

அறிவுசால் ஔவையார்

நுழையும்முன்

கல்வி அறிவில் சிறந்த அறவோரையும் நல்லொழுக்கம் மிக்க மக்களையும் கொண்டது நம் தமிழ்நாடு. இவர்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது மன்னர்களின் கடமையாகக் கருதப்பட்டது. அறிவிற் சிறந்த புலவர்கள் மன்னர்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கி நாட்டைப் பாதுகாக்க உதவினர். அவ்வாறு இரண்டு நாடுகளுக்கு இடையே நடைபெற இருந்த போரை ஔவையார் தடுத்த நிகழ்வை நாடகமாகப் படித்துச் சுவைப்போம்.

காட்சி – 1

இடம் : அதியமான் அரண்மனை

நாடக மாந்தர்கள் : அதியமான், ஔவையார், அமைச்சர்.



ஔவையார்: நாட்டுமக்கள் நலனையே நாளெல்லாம் நினைத்து நல்லாட்சி செய்யும் அதியமான் நெடுமான் அஞ்சியே வணக்கம்.

அதியமான்: அருந்தமிழ்க் கவிதைகளால் அனைவரையும் கவர்ந்த ஔவையே வாருங்கள்! வாருங்கள்! வணக்கம்.

ஔவையார்: ஊர் ஊராகச் சென்று மக்களையும் மன்னர்களையும் கவிதையால் மகிழ்வித்து வந்த என்னை, உன் அன்பினால் கட்டிப்போட்டுவிட்டாய். நானும் நீண்டகாலமாக உன் அரண்மனையிலேயே தங்கிவிட்டேன்.

அதியமான்: நீங்கள் என் அரண்மனையில் தங்கியிருப்பது எனக்குக் கிடைத்த பெரும்பேறு.

ஔவையார்: அதெல்லாம் இருக்கட்டும். காலையிலிருந்து உன்னை அரண்மனையில் காணவில்லையே, எங்கே சென்றிருந்தாய்?

அதியமான்: காட்டுவளத்தைக் கண்டுமகிழ்ந்து நீண்ட நாள்கள் ஆகிவிட்டன. அதனால்தான் இன்று நம் அமைச்சரோடும் வீரர்கள் சிலரோடும் காட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கே

இந்தக் கனியைப் பறித்தேன். இதைச் சாப்பிட்டுப் பார்த்துச் சுவை எப்படி இருக்கிறது என்று சொல்லுங்கள் தாயே.

ஔவையார்: நீ தரும் கனி என்றால் அது சுவையாகத்தான் இருக்கும். பல கடல்களுக்கு அப்பால் எங்கோ தொலைவில் இருக்கும் ஒரு நாட்டிலிருந்து இந்தத் தமிழ்நாட்டிற்குக் கரும்பைக் கொண்டு வந்தவர்கள் உனது முன்னோர்கள்தானே? இனிப்புக்கும் உங்கள் குலத்திற்கும் தொடர்பு உண்டு அல்லவா? அதனால் நீ கொடுக்கும் கனியும் இனிக்கத்தானே செய்யும்?

அதியமான்: அந்தக் கரும்பைவிட இனிக்கிறது தங்கள் பேச்சு. சரி, இதோ இந்தக்கனியைச் சுவைத்துப் பாருங்கள்.

(அதியமான் நெல்லிக்கனியை ஔவையாரிடம் தருகிறான். ஔவையார் அதனை வாயிலிட்டுச் சுவைக்கிறார்.)

ஔவையார்: அடடா! என்ன சுவை! என்ன சுவை! இவ்வளவு சுவையுள்ள கனியை நான் இதுவரை உண்டதே இல்லை. என்ன கனி இது?

அதியமான்: இது நெல்லிக்கனியின் ஒரு வகை.

அமைச்சர்: தாயே, நமது அரசர் மிகவும் எளிதாகக் கூறிவிட்டார். இஃது எங்கும் எளிதாகக் கிடைக்கும் கனியன்று. கிடைப்பதற்கு அரிதான நெல்லிக்கனி இது. எப்போதாவது ஒருமுறைதான் காய்த்துப் பழுக்கும். இன்று நாங்கள் காட்டுப்பகுதிக்குச் சென்றிருந்தபோது ஒரு மலையுச்சியில் இருந்த கருநெல்லி மரத்தில் இக்கனி பழுத்திருந்தது. அந்த மரத்தில் நமது வீரர்களால் ஏறமுடியவில்லை. பிறகு நமது அரசரே முயன்று மரத்தில் ஏறி இந்தக் கனியைப் பறித்தார்.

ஔவையார்: (வியப்புடன்) என்ன, அதியமானே மலையுச்சியில் இருந்த மரத்தில் ஏறி இதனைப் பறித்தானா?

அமைச்சர்: அது மட்டுமன்று. இக்கனியை உண்டவர்கள் நோய்நொடியின்றி நீண்டகாலம் வாழ்வார்கள் என்று பெரியோர் கூறுவர்.

ஔவையார்: அதியமானே! என்ன செயல் செய்துவிட்டாய்? நாட்டைக் காக்கும் பொறுப்பை உடைய நீ இதனை உண்ணாமல் எனக்குக் கொடுத்துவிட்டாயே. முன்பே தெரிந்திருந்தால் இதனை நான் உண்ணாமல் உன்னையே சாப்பிட வைத்திருப்பேனே.

அதியமான்: என்னைப்போன்ற ஓர் அரசன் இறந்துபோனால் வேறு ஒருவர் அரசராகிவிடுவார். ஆனால் உங்களைப் போன்ற அறிவிற்சிறந்த புலவர் ஒருவர் மறைந்தால் அந்த இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது. அதனால்தான் நான் எதுவும் கூறாமல் நெல்லிக்கனியை உங்களை உண்ணச்செய்தேன்.

ஔவையார்: அதியமானே! தமிழின்மீது நீ கொண்டுள்ள பற்று என் உள்ளத்தை உருகச்

தெரிந்து தெளிவோம்

சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே.

– *ஔவையார்*

செய்கிறது. உன்னைப் புகழமுடியாமல் என் தமிழே தடுமாறுகிறது.

அதியமான்: அப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் தமிழுக்குத் தடுமாற்றமும் இல்லை. தாழ்வும் இல்லை. உங்கள் நாவில் பிறக்கும் தமிழ் என்றும் நிலைபெற்று வாழும். அதில் என் பெயரும் ஒட்டியிருக்கும். அதுதான் எனக்கு மகிழ்ச்சி.

காட்சி – 2

இடம் : அதியமான் அரண்மனை

நாடக மாந்தர்கள் : அதியமான், ஔவையார்

ஔவையார்: மக்களின் முகங்களில்கூடக் கவலையின் நிழல் படியக்கூடாது என்று கருதும் அதியமானே, இன்று உன் முகத்தில் கவலையின் இருள் கவிழ்ந்திருப்பதன் காரணம் என்னவோ?

அதியமான்: இன்று காலை நம் ஒற்றர்கள் கொண்டுவந்த ஒரு செய்தி என் உள்ளத்தில் சிறு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மன்னன் தொண்டைமான் நம்மோடு பகைமை கொண்டவன் என்பது தாங்கள் அறிந்ததுதானே? அவன் இப்போது நம்மீது படையெடுத்துவர ஏற்பாடு செய்துவிட்டானாம். நம் தலைக்குமேல் போர்மேகங்கள் சூழ்ந்துவிட்டன.

ஔவையார்: அதியமான் நெடுமான் அஞ்சியே, உன் பெயரில்தான் அஞ்சி என்னும் சொல் இருக்கிறதேயன்றி, நீ அஞ்சி நான் ஒருநாளும் கண்டதில்லையே. போர் உனக்குப் புதிதா என்ன?

அதியமான்: போர் எனக்குப் புதிதும் அன்று. நான் போரைக் கண்டு அஞ்சுபவனும் அல்லேன். ஆனாலும்....

ஔவையார்: ஆனாலும் ஏன் இந்தக் கலக்கம்? ஈரத்திலும் வீரத்திலும் உனக்கு இணைசொல்ல யாருண்டு? நீர்நிலையில் படுத்திருக்கும் யானையானது, தன்மீது ஏறிக்குதித்தும் தந்தங்களைக் கழுவியும் விளையாடும் சிறுவர்களிடம் பணிந்து அன்புகாட்டும். அதுபோல நீயும் எம்மைப் போன்ற புலவர்களிடம் அன்புகாட்டிக் காட்சிக்கு எளியவனாக விளங்குகிறாய். அதே யானை, போர்க்களத்தில் பகைவரின் படையை வெருண்டோடச் செய்வதுபோல நீயும் பகைவரை எதிர்த்து வெல்கிறாய். அத்தகைய வீரமுடைய நீ இன்று போரைக்கண்டு தயங்கலாமா?

அதியமான்: தமிழ் அறிந்த அன்னையே! நான் எத்தனையோ போர்க்களங்களைக் கண்டவன். பகைவர்களை வென்றவன் என்பது தங்களுக்குத் தெரியாததன்று. ஆனால், ஒவ்வொரு போரின்போதும் எத்தனை உயிரிழப்புகள்? எவ்வளவு அழிவு? தந்தையை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த பெண்கள், மகனை இழந்த தாய்மார்கள், அண்ணனை இழந்த தம்பிதங்கைகள் என எத்தனையோ பேரின் கண்ணீர் ஒவ்வொரு போர்வெற்றிக்குப் பின்னாலும் மறைந்திருக்கிறது. எனவே, இந்தப்போரைத் தவிர்த்தால் என்ன?

ஔவையார்: அன்பிற்சிறந்த அதியமானே, இப்போதுதான் உன் உள்ளம் எனக்குப் புரிந்தது. உன் கவலையை நான் தீர்க்கிறேன். நான் இப்போதே தொண்டைமானிடம் செல்கிறேன். அவனிடம் பேசிப் போர் ஏற்படாதவாறு தடுக்கிறேன்.

அதியமான்: ஆனால்...

ஔவையார்: நீ என்ன நினைக்கிறாய் என எனக்குப் புரிகிறது. உன் தன்மானத்துக்கும் வீரவுணர்வுக்கும் சிறிதுகூட இழுக்கு ஏற்படாமல் நான் நடந்துகொள்வேன். நான் சென்றுவருகிறேன்.

(ஔவையார் செல்கிறார். அதியமான் திகைத்து நிற்கிறான்)

காட்சி – 3

இடம் : தொண்டைமான் அரண்மனை

நாடக மாந்தர்கள் : தொண்டைமான், ஔவையார், படைத்தலைவர்.



தொண்டைமான்: படைத்தலைவரே, நமது படையினர் போருக்கு ஆயத்தமாக உள்ளனரா?

படைத்தலைவர்: படைவீரர்களும் ஆயத்தமாக உள்ளனர். போர்க் கருவிகளும் தேவைக்கு அதிகமாகவே உள்ளன அரசே.

தொண்டைமான்: மகிழ்ச்சி. நம் படையின் பெருக்கத்தைக் கண்டு அந்த அதியமான் அதிர்ந்துபோக வேண்டும்.

படைத்தலைவர்: அதியமான் இப்போதே அதிர்ந்துதான் போயிருக்கிறார் அரசே. அதனால்தான் அவர் சமாதானம் வேண்டிப் புலவர் ஒருவரைத் தூது அனுப்பியுள்ளார்.

தொண்டைமான்: என்ன, அதியமான் தூது அனுப்பியுள்ளானா?

படைத்தலைவர்: ஆம் அரசே. சற்றுமுன்தான் நமது ஒற்றரிடமிருந்து செய்தி வந்தது. அதியமானின் தூதுவராக ஔவையார் நமது அரண்மனைக்கு வந்துகொண்டிருக்கிறாராம்.

தொண்டைமான்: வரட்டும் வரட்டும். அஞ்சியிடமிருந்து தூது வரும் ஔவை நம் போர்க்கருவிகளின் பெருக்கினைக் கண்டு அஞ்சி ஓடப்போகிறார் பாருங்கள்.

படைத்தலைவர்: அதோ ஔவையாரே வந்துவிட்டார்.

(ஔவையார் வருகிறார்.)

தொண்டைமான்: போரை நிறுத்த வந்திருக்கும் ஔவையே வருக! வருக!

ஔவையார்: தொண்டைமான் தரும் வரவேற்பைப் பார்த்தால் என் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தோன்றுகிறதே!

தொண்டைமான்: என் பகைவரின் நாட்டிலிருந்து வந்தாலும் தாங்கள் தமிழ்ப்புலவர்

அல்லவா? தங்கள் வருகை எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

ஔவையார்: நீயும் தமிழின் மீது அன்புடையவன் என்பதை அறியும்போது நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

தொண்டைமான்: அந்த மகிழ்ச்சியோடு எனது படைக்கலக் கொட்டிலைப் பார்த்துவரலாம் வாருங்களேன்.

ஔவையார்: போர்க்கருவிகளைப் பார்த்து நான் என்ன செய்யப்போகிறேன்?

தொண்டைமான்: எத்துணைப் பெரிய படைவலிமை உடைய அரசரோடு உங்கள் அதியமான் மோதப்போகிறான் என்பதை நீங்கள் அறியவேண்டாமா?

ஔவையார்: அதையும்தான் பார்ப்போம் வா.

தெரிந்து தெளிவோம்

இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியன் நகரவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே

– ஔவையார்

காட்சி – 4

இடம் : தொண்டைமானின் படைக்கலக் கொட்டில்.

நாடக மாந்தர்கள் : தொண்டைமான், ஔவையார்,

தொண்டைமான்: என் படைக்கருவிகளைப் பாருங்கள் ஔவையாரே! இவ்வளவு பெரிய படைக்கலக் கொட்டிலை இதற்கு முன் நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள்.

ஔவையார்: ஆமாம். வில், அம்பு, வேல், ஈட்டி, வாள், கேடயம், மழு என எத்தனை கருவிகள்! ஒவ்வொன்றிலும் எத்தனை வகைகள்! ஒவ்வொரு வகையிலும் எத்தனை எண்ணிக்கை!

தொண்டைமான்: பார்க்கும்போதே வியப்பாக இருக்கிறது அல்லவா?

ஔவையார்: ஆமாம். கருவிகளின் அளவு மட்டுமன்றி, அவற்றை அழகாக அடுக்கி வைத்திருக்கும் முறையும் கண்களைக் கவர்கிறது. எல்லாக் கருவிகளும் புத்தம்புதியனவாக, நெய் பூசப்பெற்று, மாலையும் மயில்தோகைகளும் அணிவிக்கப்பட்டு எழிலாகக் காட்சியளிக்கின்றன.

தொண்டைமான்: உங்கள் அதியமானின் படைக்கருவிகளைப்பற்றிச் சொல்லுங்களேன்.

ஔவையார்: அதை ஏன் கேட்கிறாய்? அவை இவ்வளவு அழகாக இல்லை. அதியமான் அடிக்கடி போர்புரிந்துகொண்டே இருப்பதால், அவனது படைக்கருவிகள் எல்லாம் பகைவர் உடலைத் துளைத்த குருதிக்கறைகளுடன் நுனி ஒடிந்தும் கூர் மழுங்கியும் கொல்லனின் உலைக்களத்தில் கிடக்கின்றன.

(தொண்டைமானின் முகம் சுருங்குகிறது)

ஔவையார்: தொண்டைமானே ஏன் உன் முகம் மாறிவிட்டது?

தொண்டைமான்: உங்கள் சொற்கள் என்னைக் குழப்பிவிட்டன.

ஔவையார்: என்ன குழப்பம்?

தொண்டைமான்: என் படைக்கருவிகளின் அளவையும் அழகையும் பாராட்டிக் கூறினீர்கள். அதைக் கேட்ட என் உள்ளம் மகிழ்ச்சியடைந்தது.

ஔவையார்: உண்மைதான். உனது படைக்கருவிகள் புது மெருகு குறையாமல் அப்படியே இருக்கின்றன.

தொண்டைமான்: அடுத்ததாக நீங்கள் கூறிய செய்திதான் என்னைச் சிந்திக்க வைத்துவிட்டது. அதியமானின் படைக்கருவிகள் போரில் பயன்படுத்தப்பட்டு வளைந்தும் நெளிந்தும் கிடக்கின்றன என்று கூறினீர்களே, அதுதான் எனக்கு உண்மையைப் புரியவைத்தது.

ஔவையார்: என்ன உண்மையைப் புரிந்துகொண்டாய்?

தொண்டைமான்: என்னிடம் கருவிகள்தாம் மிகுதியாக உள்ளன. நான் இதுவரை போர்க்களத்தைக் கண்டதில்லை. ஆனால் அதியமான் பல போர்களை நடத்தி வெற்றி கண்டவன். அவனோடு போரிடுவது எத்தகைய அழிவைத் தரும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

ஔவையார்: அருமை! அருமை! நான் கூறியதன் உட்பொருளைத் தெளிவாகப் புரிந்துகொண்டாய்.

தொண்டைமான்: என் கண்களைத் திறந்த தாயே, போர் வேண்டாம் என்று அதியமானிடம் கூறிவிடுங்கள்.

ஔவையார்: மிகவும் மகிழ்ச்சி தொண்டைமானே. அவ்வாறே கூறிவிடுகிறேன். போரில்லா மகிழ்ச்சியில் இந்த உலகம் திளைக்கட்டும். நான் சென்று வருகிறேன்.

(ஔவையார் விடைபெற்றுச் செல்கிறார்.)

(திரை)

கற்பவை கற்றபின்

1. அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தை வகுப்பில் நடித்துக் காட்டுக.
2. சங்ககாலப் பெண் புலவர்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

8th Std Tamil CBSE 17-12-2020.indd 160 16-12-2021 17:48:15

கற்கண்டு

இயல் ஏழு

வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

கதையை படித்தேன்; எழுதி கொண்டேன். அப்படி சொன்னது, எப்படி தெரியும்?

மேலே உள்ள தொடர்களைப் படித்துப் பாருங்கள். இவற்றை இயல்பாகப் படிக்க இயலாதவாறு சொற்களுக்கு இடையே ஓர் ஓசை இடைவெளி இருப்பதை உணர முடிகிறதல்லவா? அவற்றைக் கீழே உள்ளவாறு படித்துப் பாருங்கள்.

கதையைப் படித்தேன்; எழுதிக் கொண்டேன். அப்படிச் சொன்னது, எப்படித் தெரியும்?

இப்போது இயல்பாகப் படிக்க முடிகிறது அல்லவா? மேலும் நாம் பேசும்போது இவ்வாறுதான் பேசுகிறோம். ஒரு சொல்லின் முதலெழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய்எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். இதனை வல்லினம் மிகல் என்று கூறுவர். எல்லா இடங்களிலும் வல்லின மெய்எழுத்து மிகும் என்று கூறமுடியாது. மிதந்து சென்றது, செய்து பார்த்தான், படித்த கவிதை, பெரிய தாவரம் ஆகிய சொற்களில் வல்லினம் மிகவில்லை என்பதைக் கவனியுங்கள். இவ்வாறு வல்லின மெய் மிகக்கூடாத இடங்களை வல்லினம் மிகா இடங்கள் எனக் குறிப்பிடுவர்.

வல்லின மெய்களைச் சேர்த்து எழுதுவதன் நோக்கம் படிப்பதற்கு எளிமையாக இருக்கவேண்டும் என்பது மட்டுமன்று. செய்திகளில் கருத்துப் பிழையோ, பொருள் குழப்பமோ ஏற்படாமல் இருப்பதற்கும் வல்லினம் மிகுதலும் மிகாமையும் உதவுகின்றன.

மண்வெட்டி கொண்டு வா. மண்வெட்டிக் கொண்டு வா.

இவற்றில் முதல் தொடர் மண்வெட்டியை எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இரண்டாம் தொடர் மண்ணை வெட்டி எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இவ்வாறு பொருள் தெளிவை ஏற்படுத்தவும் வல்லினம் மிகுதல் உதவுகிறது.

வல்லினம்மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய் இட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப் பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர்.

வல்லினம் மிகும் இடங்கள்

அந்த இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அந்தப்பக்கம். இந்தக்கவிதை.

எந்த என்னும் வினாத்திரிபை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) எந்தத்திசை? எந்தச்சட்டை?

இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) தலையைக் காட்டு. பாடத்தைப்படி.

நான்காம் வேற்றுமை உருபாகிய கு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) எனக்குத் தெரியும். அவனுக்குப் பிடிக்கும்.

இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும். (எ.கா.) எழுதிப் பார்த்தாள். ஓடிக் களைத்தான்.

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா.) பெற்றுக் கொண்டேன். படித்துப் பார்த்தார்.

எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதில் வல்லினம் மிகும்.

(எ.கா.) செல்லாக்காசு, எழுதாப்பாடல்.

உவமைத்தொகையில் வல்லினம் மிகும். (எ.கா.) மலர்ப்பாதம், தாய்த்தமிழ்.

உருவகத்தில் வல்லினம் மிகும். (எ.கா.) தமிழ்த்தாய், வாய்ப்பவளம்.

எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா.) எட்டுப்புத்தகம், பத்துக்காசு.

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அப்படிச்செய், இப்படிக்காட்டு, எப்படித்தெரியும்?

திசைப்பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) கிழக்குக்கடல், மேற்குச்சுவர், வடக்குத்தெரு, தெற்குப்பக்கம்.

மகர மெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) மரம் + சட்டம் = மரச்சட்டம், வட்டம் + பாறை = வட்டப்பாறை.

வல்லினம் மிகா இடங்கள்

எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) தம்பி படித்தான் , யானை பிளிறியது.

அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) அது சென்றது. இது பெரியது, எது கிடைத்தது?

பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) எழுதிய பாடல், எழுதாத பாடல்.

இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வரும் இடங்களில் (இரண்டாம் வேற்றுமைத்தொகை) வல்லினம் மிகாது. (எ.கா.) இலை பறித்தேன், காய் தின்றேன்.

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் மென்தொடர்க் குற்றியலுகரமாகவோ, இடைத்தொடர்க் குற்றியலுகரமாகவோ இருந்தால் வல்லினம் மிகாது. (எ.கா.) தின்று தீர்த்தான், செய்து பார்த்தாள்.

வினைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதுபொருள், சுடுசோறு

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களைத் தவிர, படி என முடியும் பிறசொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதும்படி சொன்னேன். பாடும்படி கேட்டுக்கொண்டார்.

உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா.) தாய்தந்தை, வெற்றிலைபாக்கு

கற்பவை கற்றபின்

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கோடிட்டு அறிக. அவற்றின் காரணங்களை எழுதுக.

மதிப்பீடு

பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.

1. சுட்டுத் திரிபு – ____________________________.
2. திசைப் பெயர்கள் – ____________________________.
3. பெயரெச்சம் – ____________________________.
4. உவமைத் தொகை – ____________________________.
5. நான்காம் வேற்றுமை விரி – ____________________________.
6. இரண்டாம் வேற்றுமை தொகை – ____________________________.
7. வினைத் தொகை – ____________________________.
8. உருவகம் – ____________________________.
9. எழுவாய்த் தொடர் – ____________________________.
10. எதிர்மறைப் பெயரெச்சம் – ____________________________.

சிறுவினா

1. சந்திப்பிழை என்றால் என்ன?
2. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.
3. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.

மொழியை ஆள்வோம்!

கேட்க.

நாட்டுப்பற்றை வளர்க்கும் நாடகங்களின் ஒலிப்பதிவுகளைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

1. நான் விரும்பும் தலைவர்.
2. நான் முதலமைச்சர் ஆனால்...

LI7CV

சொல்லக்கேட்டு எழுதுக.

அனைவருக்கும் தலைவராகும் விருப்பம் இருக்கலாம். ஆனால் சிறந்த ஆளுமைப் பண்பும் அனைவரையும் கட்டுப்படுத்தும் திறனும் இருப்பவர்களால்தான் தலைவர்கள் ஆக முடிகிறது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் நிகழ்வைக் காணலாம். ஒரு விளையாட்டு அணியின் தலைவருக்கான தேர்வு நடந்தது. அணியின் பயிற்சியாளர் வீரர்களிடம் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளக் கேட்டுக்கொண்டார். சிலர் தங்களைத் தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப் என அறிமுகப்படுத்திக்கொள்ள, ஒருவர் மட்டும் தன்னை 'இந்தியர்' என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர்தான் அணியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். காரணம் மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டியதும், 'இந்தியர்' என்று குழுவாகச் சிந்தித்ததுமே ஆகும். இப்படிப்பட்ட தகுதிகள் இருந்தால் நீங்களும் தலைவர் ஆகலாம்.

அறிந்து பயன்படுத்துவோம்.

எதிர்மறைச் சொற்கள்

வந்தது நீ அல்ல; பார்த்தது நான் அல்ல; நான் படித்த புத்தகம் இது அல்ல என்றெல்லாம் பேசுகின்றோம். இவையெல்லாம் சரியான தொடர்கள் அல்ல. எதிர்மறை வினைமுற்றுகள் பல உண்டு. அவற்றை இடம் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

தன்மை	ஒருமை	–	நான் அல்லேன்.
	பன்மை	–	நாம் அல்லோம்.
முன்னிலை	ஒருமை	–	நீ அல்லை.
	பன்மை	–	நீவீர் அல்லீர்.
படர்க்கை	ஆண்பால்	–	அவன் அல்லன்.
	பெண்பால்	–	அவள் அல்லள்.
	பலர்பால்	–	அவர் அல்லர்.
	ஒன்றன்பால்	–	அஃது அன்று.
	பலவின் பால்	–	அவை அல்ல.

'வேறு, உண்டு, இல்லை' – ஆகியவை மூவிடத்திற்கும், ஐம்பாலுக்கும் பொதுவான சொற்கள் ஆகும்.

பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. அதைச் செய்தது நான் அன்று.
2. பானையை உடைத்தது கண்ணன் அல்ல.
3. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.
4. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.
5. பகைவர் நீவீர் அல்லர்.

சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.

1. தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை _____.
2. உங்களோடு வருவோர் _____ அல்லோம்.
3. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் _____.
4. ஈ மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன _____.
5. இந்த நிலத்துக்கு உரிமையாளர் _____ அல்லை.

கட்டுரை எழுதுக.

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு.

மொழியோடு விளையாடு

வட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக



____

____

____

____

____

____

____

8th Std Tamil CBSE 17-12-2020.indd 165
16-12-2021 17:48:15

கதை நிகழ்வுக்கேற்பச் சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துக.

1. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்.
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்குத் தெரிவித்தல்.
3. ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
4. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
5. தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்.
6. தொண்டைமானிடம் ஔவை அதியமானின் படைச்சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்.

1. ____.
2. ____.
3. ____.
4. ____.
5. ____.
6. ____.

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. தலைமைக்குரிய பண்புகளை அறிந்து வளர்த்துக்கொள்வேன்.
2. சமூக மாற்றத்திற்குக் காரணமான தலைவர்களின் வரலாறுகளை அறிந்து போற்றுவேன்.

கலைச்சொல் அறிவோம்.

குதிரையேற்றம்	- *Equestrian*	ஆதரவு	- *Support*
கதாநாயகன்	- *The Hero*	வரி	- *Tax*
முதலமைச்சர்	- *Chief Minister*	வெற்றி	- *Victory*
தலைமைப்பண்பு	- *Leadership*	சட்ட மன்ற உறுப்பினர்	- *Member of Legislative Assembly*

இணையத்தில் காண்க

இந்தியப் பிரதமர்களின் பெயர்ப்பட்டியலை இணையத்தில் தேடி எடுத்து எழுதுக.

இயல்
எட்டு

அறத்தால் வருவதே இன்பம்




கற்றல் நோக்கங்கள்

- அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்று அவை கூறும் கருத்துகளைப் பின்பற்றுதல்
- அயோத்திதாசரின் சிந்தனைகள் வழியாகச் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை உணர்தல்
- நவீனச் சிறுகதைகளைப் படித்து அவற்றின் நுட்பங்களை அறியும் திறன்பெறுதல்
- யாப்பிலக்கணச் செய்திகளை அறிந்து கவிதை வடிவங்களைப் புரிந்துகொள்ளுதல்

கவிதைப்பேழை

இயல் எட்டு

ஒன்றே குலம்



மனிதர்களிடையே பிறப்பால் உயர்வுதாழ்வு பாராட்டுவது தவறானது. உலகமக்கள் அனைவரையும் உடன்பிறந்தாராகக் கருதி அன்புகாட்ட வேண்டும். பிறருக்கு ஏற்படும் பசி முதலிய துன்பங்களைத் தமக்கு ஏற்பட்டதாகக் கருதி அவற்றைப்போக்க முயல்வதே மனிதர்களின் சிறந்த கடமையாகும். அதுவே இறைத்தொண்டாகும். இக்கருத்துகளை விளக்கும் திருமூலரின் பாடல்களை அறிவோம்.

*ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே*

– திருமூலர்

சொல்லும் பொருளும்

நமன் – எமன்		நாணாமே – கூசாமல்	
சித்தம் – உள்ளம்		உய்ம்மின் – ஈடேறுங்கள்	
நம்பர் – அடியார்		ஈயில் – வழங்கினால்	

படமாடக்கோயில் – படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயில்

பாடலின் பொருள்

மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே. இக்கருத்துகளை நன்றாக மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை. கூசாமல் செல்லவேண்டிய நல்வழி இதைவிட வேறு இல்லை. உலகத்து மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழவேண்டுமாயின் இவற்றை நினைத்து ஈடேறுங்கள்.

படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு ஒருபொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால் அது நடமாடும் கோயிலாகிய உடம்பையுடைய அடியார்களுக்குச் சேராது. அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்கும் சேரும்.

நூல் வெளி



அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகவும் பதினெண் சித்தர்களுள் ஒருவராகவும் கருதப்படுபவர் திருமூலர். இவர் இயற்றிய திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. எனவே, இந்நூலைத் தமிழ் மூவாயிரம் என்பர். இது பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.

திருமந்திரம் என்னும் நூலிலிருந்து இரண்டு பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

பிறர் துன்பம் கண்டு வருந்தி அவர்களுக்குத் தொண்டுசெய்த சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் _____ க் கண்டு அஞ்சமாட்டார்கள்.

   அ) புலனை ஆ) அறனை இ) நமனை ஈ) பலனை

2. ஒன்றே _____ என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.

   அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்

3. 'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) நம் + இல்லை ஆ) நமது + இல்லை

   இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை

4. நம்பர்க்கு + அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) நம்பரங்கு ஆ) நம்மார்க்கு இ) நம்பர்க்கங்கு ஈ) நம்பங்கு

குறுவினா

1. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?
2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்யவேண்டியது யாது?

சிறுவினா

மக்களுக்குச் செய்யவேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

சிந்தனை வினா


அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?

இயல்
எட்டு

கவிதைப்பேழை

மெய்ஞ்ஞான ஒளி

73H5V



எப்படியும் வாழலாம் என்பது விலங்குகளின் இயல்பு. இப்படித்தான் வாழ வேண்டும் என்பது மனிதப் பண்பு. நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை அறிஞர்கள் பலர் எடுத்துக் கூறியுள்ளனர். ஐம்பொறிகளின் ஆசையை அடக்கி, அறிவின் வழியில் சென்றால் வாழ்வாங்கு வாழலாம். அவ்வாறு வாழ வேண்டிய முறைகளை விளக்கும் குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பாடல்களை அறிவோம்.

கள்ளக் கருத்துகளைக் கட்டோடு அறுத்தவருக்கு
உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பராபரமே!

காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத
ஆசை விரும்பாது அலைந்தேன் பராபரமே!

அறிவை அறிவோருக்கு ஆனந்த வெள்ளமதாய்க்
கரையறவே பொங்கும் கடலே பராபரமே!

அடக்கத் தாம்மாய ஐம்பொறியைக் கட்டிப்
படிக்கப் படிப்பு எனக்குப் பகராய் பராபரமே!

– குணங்குடி மஸ்தான் சாகிபு

சொல்லும் பொருளும்

பகராய்	– தருவாய்	பராபரம்	– மேலான பொருள்
ஆனந்த வெள்ளம்	– இன்பப்பெருக்கு	அறுத்தவருக்கு	– நீக்கியவர்க்கு

பாடலின் பொருள்

மேலானபொருளே! தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள் மனத்துள்ளே எழுந்தருளி இருக்கும் உண்மையான அறிவு ஒளி ஆனவனே! உன் திருவடிகளின்மேல் பற்று வைக்காமல், பணத்தின்மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன்.

நீ உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்துக்குள் இன்பப் பெருக்காய்க் கரைகடந்து பொங்கிடும் கடலாக விளங்குகின்றாய். மேலானபொருளே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிகவும் அரியசெயலாகும். அப்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து அருள்செய்வாயாக.

8th Std Tamil CBSE 17-12-2020.indd 170 16-12-2021 17:48:17

நூல் வெளி

குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் சுல்தான் அப்துல்காதர். இவர் இளம் வயதிலேயே முற்றும் துறந்தவராக வாழ்ந்தார். சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றார். எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலான நூல்களை இயற்றியுள்ளார். நம் பாடப்பகுதி குணங்குடியார் பாடற்கோவை என்னும் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது.

கற்பவை கற்றபின்

கண்ணி வகையில் பாடப்பட்ட வேறு பாடல்களைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மனிதர்கள் தம் _____ தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.

   அ) ஐந்திணைகளை ஆ) அறுசுவைகளை

   இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை

2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் _____.

   அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர் இ) சிறந்தனர் ஈ) துறந்தனர்

3. 'ஆனந்தவெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) ஆனந்த + வெள்ளம் ஆ) ஆனந்தன் + வெள்ளம்

   இ) ஆனந்தம் + வெள்ளம் ஈ) ஆனந்தர் + வெள்ளம்

4. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும் இ) உளிருக்கும் ஈ) உளருக்கும்

குறுவினா

1. உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?
2. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?

சிறுவினா

குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?

சிந்தனை வினா

ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்யவேண்டிய நற்செயல்கள் யாவை?

உரைநடை உலகம்

இயல் எட்டு

அயோத்திதாசர் சிந்தனைகள்

நுழையும்முன்

ஒருவருடைய வாழ்க்கை என்பது பிறந்து, வாழ்ந்து, மறைவதோடு முடிந்துவிடுவதில்லை. நேர்மையான சிந்தனையும் செயலும் ஒருவருக்கு வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுத்தருகின்றன. ஒரு காலத்தில் மக்களின் மனத்தில் நின்றவர்கள் பிற்காலத்தில் மக்கள் நினைவிலிருந்து மறைந்துபோகின்றனர். காலவெள்ளத்தில் மக்களால் மறக்கப்பட்டு, பின்னர் நினைவுக்கு வரும் சிந்தனையாளர்களும் உண்டு. அத்தகைய சிந்தனையாளர் ஒருவரைப் பற்றி அறிவோம்.



அயோத்திதாசர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவர் பண்டைய இலக்கிய, சமூக, சமய, வரலாற்று ஆய்வுகளில் ஈடுபட்டார். அவற்றின் அடிப்படையில் புதிய சமுதாயத்தைக் கட்டமைக்கும் பெரும்பணியில் ஈடுபட்டார். சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ஆவர். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்திதாசர்.

நல்ல சிந்தனை, சிறப்பான செயல், உயர்வான பேச்சு, உவப்பான எழுத்து, பாராட்டத்தக்க உழைப்பு ஆகிய ஐந்து பண்புகளையும் ஒருசேரப்பெற்ற சிந்தனையாளர்தான் அயோத்திதாசர். இவரைத் தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றுவர்.

வாழ்க்கை

அயோத்திதாசர் 1845ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள் சென்னையில் பிறந்தார். இவரது இயற்பெயர் காத்தவராயன் என்பதாகும். இவர் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் என்பதால் பள்ளிப்பருவத்தில் பல இன்னல்களுக்கு உள்ளானார். அயோத்திதாசப்


தமிழன்

பண்டிதர் என்பவரிடம் இவர் கல்வியும் சித்தமருத்துவமும் பயின்றார்; தம்மீது அன்பு காட்டிய அந்த ஆசிரியரது பெயரையே தமது பெயராக வைத்துக்கொண்டார். நீலகிரிக்குச் சென்று அங்கு வாழ்ந்த அயோத்திதாசர், திருமணத்திற்குப் பிறகு பர்மாவுக்குச் சென்றார். அங்குக் கூலித்தொழிலாளர்களாக வேலை செய்துவந்த தமிழர்களின் உரிமைகளுக்காக இவர் பாடுபட்டார். பின்னர் இவர் தமிழ்நாட்டுக்குத் திரும்பி ஒடுக்கப்பட்டோர் உரிமைக்காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார்.

சிந்தனைகளின் அடித்தளம்

அயோத்திதாசர் தமிழ் மட்டுமன்றி, பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருந்தார்; இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத்தத்துவம் உள்ளிட்ட பல்துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார். இத்தகைய ஆழ்ந்த படிப்பே அவரது புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

இதழ்ப்பணி

1907ஆம் ஆண்டு சென்னையில் ஒருபைசாத்தமிழன் என்னும் வாரஇதழை காலணா விலையில் தொடங்கினார். ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார். உயர்நிலையையும் இடைநிலையையும் கடைநிலையையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதே இவ்விதழின் நோக்கம் என்று அயோத்திதாசர் குறிப்பிட்டார். இவர் 'தமிழன்' இதழ் மூலம் தமிழ்நாடு மட்டுமன்றி மைசூர், கோலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச் சிந்தனை, இன உணர்வு, சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார். இவர் தமது நூல்கள் மூலமாகவும் தமது சீர்திருத்தச் சிந்தனைகளை வெளியிட்டார்.

கல்விச் சிந்தனைகள்

ஒரு மனிதனின் அறிவு வளர்ச்சிபெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று அயோத்திதாசர் கருதினார். நிலவு நாளும் வளர்ந்து முழுநிலவாகி ஒளிவீசுவதுபோல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்படவேண்டும்; கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம்வளர்த்தல் போன்றவற்றையும் கற்கவேண்டும் என்று இவர் வலியுறுத்தினார். சங்ககாலப் பெண்களைப்போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக்கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றும் இவர் எடுத்துரைத்தார்.

தெரிந்து தெளிவோம்

அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள்

போகர் எழுநூறு, அகத்தியர் இருநூறு, சிமிட்டு இரத்திரனச் சுருக்கம், பாலவாகடம்.

வாழும் முறை

மக்கள் வாழவேண்டிய முறை பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகள் சிறப்பானவையாகும். மக்கள் அனைவரும் அன்புகொண்டு வாழவேண்டும்; கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றைத் தம் வாழ்விலிருந்து நீக்கி வாழவேண்டும்; பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது; மேலும் மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது; ஒரு குடும்பத்தில் அன்பும் ஆறுதலும் நிறைந்தால், அக்குடும்பம் வாழும் ஊர் முழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும்; ஊர்கள் அன்பும் ஆறுதலும் பெறுமானால் நாடு முழுவதும் அன்பும் ஆறுதலும் பெற்றுத் திகழும்; இத்தகைய நாட்டில் புலியும் பசுவும் ஒரே நீர்த்துறையில் நீர் அருந்தும் என்பவை அயோத்திதாசர் கருத்துகள்.

தெரிந்து தெளிவோம்

என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள்.

– தந்தை பெரியார்

தலைமைத் தகுதி

ஒரு நாட்டுக்கு வழிகாட்டும் தலைவர் எத்தகையவராக இருக்கவேண்டும் என்பதை அயோத்திதாசர் விளக்குகிறார். 'மக்களும் அவர்தம் நோக்கங்களும் பெருமைப்படத்தக்கனவாக இருக்கவேண்டுமானால், அவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி அமையவேண்டும். அவர் மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல்பெற்றவராக, நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட தலைவரை வணக்கத்திற்கு உரியவராக மக்கள் ஏற்பார்கள்; கடவுளெனத் துதிப்பார்கள்' என்பது அயோத்திதாசர் கருத்து.

மக்களும் மழையும்

மக்களையும் மழையையும் தொடர்புபடுத்தி அயோத்திதாசர் கூறும் கருத்து சிந்திக்கத்தக்கதாகும். 'வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. ஞானிகள் இல்லாமைக்குக் காரணம் நீதியும் நெறியும் வாய்மையும் நிறைந்த அறிவாளிகள் இல்லாமையாகும். அறிவாளிகள் இல்லாமைக்குக் காரணம் ஆட்சித்திறனும் அன்பும் உடைய அரசர்கள் இல்லாமையே. அத்தகைய அரசர்கள் இல்லாமைக்குக் காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிகள் இல்லாமையே என்று கூறுவதன்மூலம் நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது' என்கிறார் அயோத்திதாசர்.

தெரிந்து தெளிவோம்

அயோத்திதாசர் எழுதிய நூல்கள்

புத்தரது ஆதிவேதம், இந்திரர் தேச சரித்திரம், விவாக விளக்கம், புத்தர் சரித்திரப்பா முதலியன.

திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியுள்ளார்.

சமத்துவம்

அயோத்திதாசர், மக்கள் அனைவரும் சமஉரிமை பெற்றுச் சமத்துவமாக வாழவேண்டும் என்று விரும்பினார். கல்வி, வேளாண்மை, காவல்துறை

போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கவேண்டும்; ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் போன்றவற்றிலும் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்; இவற்றில் இந்து, பௌத்தர், கிறித்துவர், இசுலாமியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பளிக்கவேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்திவந்தார் அயோத்திதாசர்.

தெரிந்து தெளிவோம்

சென்னை தாம்பரத்தில் உள்ள சித்த ஆராய்ச்சி மையத்துடன் இணைந்த மருத்துவமனைக்கு அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

திராவிட மகாஜன சங்கம்

அயோத்திதாசர் தமது கொள்கைகளை வலியுறுத்தவும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். இவ்வமைப்பு சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்புக்குக் காவல்துறையினரை நியமித்தல், பொதுமருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்கள்தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றுக்காகவும் போராடியது.

அரசியல் விடுதலையும் மக்கள் உரிமையும்

விடுதலை என்பது வெறும் ஆட்சிமாற்றம் மட்டுமன்று. அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமையவேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து. 'சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது; மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அஃது அமையவேண்டும். மக்கள் வாழ்க்கையில் மாற்றம் உண்டானால் ஒழிய, நாடு முன்னேற முடியாது' என்று ஆணித்தரமாகக் கூறினார் அயோத்திதாசர்.

தனித்தன்மை

அயோத்திதாசர் காலத்தில் பண்டிதர், புலவர், நாவலர், பேச்சாளர், எழுத்தாளர் எனப் பலர் இருந்தனர். ஆயினும், பகுத்தறிவு, இலக்கியம், சமூகம், சமயம், அரசியல், வரலாறு, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறைகொண்டு புதிய சிந்தனைகளை விதைத்தவர் அயோத்திதாசரே. எனவே, அவரை அன்றைய தமிழர்கள் தனித்தன்மை உடைய சிந்தனையாளராக மதித்தனர்.

அயோத்திதாரின் சிந்தனைகள் ஒரு தனிமனிதரின் சிந்தனைகளாக மட்டும் அமையாமல், அகன்ற சமுதாயத்தில் விழிப்புணர்வையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் சித்தாந்தங்களாக விளங்கின என உறுதியாகக் கூறலாம்.

கற்பவை கற்றபின்

சமூகச் சீர்திருத்தத்திற்குப் பாடுபட்ட சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அயோத்திதாசர்_____சமூகச்சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

அ) தமிழக   ஆ) இந்திய   இ) தென்னிந்திய   ஈ) ஆசிய

2. அயோத்திதாசர் நடத்திய இதழ்_____.

அ) ஒருபைசாத் தமிழன்   ஆ) காலணாத் தமிழன்

இ) அரைப்பைசாத் தமிழன்   ஈ) அரையணாத் தமிழன்

3. கல்வியோடு _____ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.

அ) சிலம்பமும்   ஆ) கைத்தொழிலும்

இ) கணிப்பொறியும்   ஈ) போர்த்தொழிலும்

4. அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது ________.

அ) ஆழ்ந்த படிப்பு   ஆ) வெளிநாட்டுப்பயணம்

இ) இதழியல் பட்டறிவு   ஈ) மொழிப்புலமை

5. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது ________.

அ) வானம்   ஆ) கடல்   இ) மழை   ஈ) கதிரவன்

குறுவினா

1. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
2. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்கவேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?
3. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?

சிறுவினா

1. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.
2. அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?

நெடுவினா

வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனைவினா


ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர்பண்புகள் யாவை?

விரிவானம்

இயல் எட்டு

மனித யந்திரம்

LC935



ஒரே மனிதனுக்குள் இரண்டு வகையான பண்புகள் புதைந்துகிடக்கும் என்கின்றனர் உளவியல் அறிஞர்கள். நல்லதையே நினைத்து, நல்லதையே செய்வது ஒன்று; தீயனவற்றைச் செய்யத் தூண்டுவது மற்றொன்று. இவற்றுள் எப்பண்பு மேலோங்கி இருக்கிறதோ, அத்தகைய செயல்களையே மனிதர்கள் செய்வர். தவறு செய்யும் எண்ணம் தோன்றும்போது அதனை அடக்கி, நேர்மையாக வாழ்வதே உயர்ந்த மனிதர்களின் இயல்பு. இக்கருத்துகள் பொதிந்த கதையொன்றை அறிவோம்.

மீனாட்சிசுந்தரம் ஒரு ஸ்டோர் குமாஸ்தா. அவருக்குச் சென்ற நாற்பத்தைந்து வருடங்களாக அதே பாதை, அதே வீடு, அதே பலசரக்குக் கடையின் கமறல்தான் விதி. கடையும் மீனாட்சிசுந்தரமும் ஒன்றாக வளர்ந்தார்கள்; ஆனால் ஒட்டி வளரவில்லை. கடையில் வரவுசெலவு வளர்ந்தது; மீனாட்சிசுந்தரத்துக்குக் கவலையும் வளர்ந்தது.

மீனாட்சிசுந்தரம் பற்றுவரவுக் கணக்குகளில் உள்ள சிக்கல்களையெல்லாம் அற்புதமாகத் தீர்த்துவைப்பார். அந்தக்காலத்தில் புன்னை எண்ணெய்க் குத்துவிளக்கடியில் இரவு பன்னிரண்டுமணிவரை மல்லாடுவார். இப்பொழுதும் அந்த மல்லாட்டத்திற்கெல்லாம் குறைச்சல் இல்லை; ஆனால் இப்பொழுது மின்சாரவிளக்கும் விசிறியும் உடன்விழித்திருக்கும்.

அவரது சம்பளமும் ஆமைவேகத்தில் 'ஓடி' மாதத்துக்கு இருபது ரூபாய் என்ற எல்லையை எட்டிவிட்டது. வீட்டு வரவுசெலவுக் கணக்கு மட்டும் அவருடைய இந்திரஜால வித்தைகளுக்கெல்லாம் மீறி, உலகளந்த பெருமாளாக, சென்ற நாற்பத்தைந்து வருடங்களாகப் பெருகிக் கொண்டு வருகிறது.

மழையானாலும் பனியானாலும் ஆற்றில் குளித்துவிட்டு ஈரவேட்டியைச் சற்று உயர்த்திய கைகளால் பின்புறம் பறக்கவிட்டுக்கொண்டு, உலர்ந்தும் உலராத நெற்றியில் விபூதி, குங்குமம், சந்தனம் விகசிக்க அவர் செல்லும் காட்சியைச் சென்ற நாற்பத்தைந்து வருடங்களாகக் கண்டவர்களுக்கு நன்றாக முடுக்கிவிடப்பட்ட பழுதுபடாத யந்திரம் ஒன்று நினைவிற்கு வரும்.

மீனாட்சிசுந்தரம் மிகவும் சாது; அதாவது, விநயமாக இருக்கவேண்டும், தம்மைப் பாதுகாத்துக்கொள்ள உண்மை, நாணயம் முதலிய பழக்கங்களைக் கைக்கொள்ளவேண்டும் என்று உறுதிப்பட்டவர். ஆனால் பெட்டிப் பாம்பாக அடங்கிக்கிடக்கும் அவரது உள்ளத்தில், அலாவுதீன் ஜீனியைப்போல் ஆசை பூதாகாரமாய் விரிந்து, அவரது சித்தப்பிரபஞ்சத்தையே கவித்து ஆக்கிரமித்துக்கொண்டது.

இந்தமனம் இருக்கிறதே, மீனாட்சிசுந்தரத்துக்கும் அஃது உண்டு. நீறுபூத்த நெருப்பை வேதாந்திகள் பெரியவிஷயங்களுக்கு உபமானம் சொல்லுவார்கள். ஆசையைப் பொறுத்தவரை அந்த உபமானத்தால் மீனாட்சிசுந்தரம் பெரியமனுஷர்தான்.

'மீனாட்சியா! அந்த அப்பாவிப் பயல்!' என்று பலர் துச்சமாகக் கருதுவார்கள். முகத்திற்கெதிரேயும் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட 'அப்பாவி'ப் பிராணியின் மனத்தில் புகைந்து கவிகிறது ஆசை. வீட்டில் குழந்தைக்குப் பால் தட்டாமலிருக்க – ஏன், பால்விற்று நாலுகாசும் சம்பாதிக்க – மாடும் கன்றும் வாங்கவேண்டும்! தெற்குத்தெரு மாவன்னாவுக்கு 'மேடோவர்' செய்தநிலத்தைத் திருப்பவேண்டும். இதுமட்டுமா? கால்மேல் கால்போட்டு, 'ஏ மீனாட்சி!' என்று தாம் அழைக்கப்படுவதுபோல், தம் இஷ்டப்படி ஆட ஒரு மீனாட்சி ஸ்டோர் கடையும் கைக்குள்வரவேண்டும்.

ஒருமுறை கொழும்புக்குப் போய்விட்டுத் தங்க அரைஞாண், கடிகாரச்சங்கிலி, வாட்டசாட்டமான உடம்பு, கையில் நல்ல ரொக்கம் முதலிய சகல வைபவங்களுடனும் திரும்பவேண்டும். தெருவில் எதிரே வருகிறவர் எல்லாரும் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, பல்லை இளித்தவண்ணம் 'அண்ணாச்சி சௌக்கியமா?' என்று கேட்க வேண்டும்!

தினசரி பணப்புழக்கம் எல்லாம் அவர் கையில்தான். கடைசியாய், தனியாகக் கடையைப் பூட்டிச்சாவியை எடுத்துக்கொண்டு போகிறவரும் அவர்தான். அதேசமயத்தில்தான் கடைக்குக் கூப்பிடுகிற தூரத்தில் இருக்கும் ரயில்வே ஸ்டேஷனில் ஐந்து நிமிஷம் நின்றுவிட்டுத் தூத்துக்குடி வண்டி புறப்படுகிறது. டிக்கட் வாங்கிக்கொண்டு ராத்திரியோடு ராத்திரியாகக் கம்பி நீட்டிவிடலாம். டிக்கட்டுக்கு மட்டிலும் பணம் எடுக்கத் தினசரி கடையில் புரளும் பணம் போதும்.

மூலைத்தெருவில் மற்ற இடங்களெல்லாம் ஒடுங்கிவிட்டன. ஸ்டோரில் பெட்டியடிமேல் ஒற்றை மின்சாரவிளக்குப் பிரகாசிக்கிறது. மீனாட்சிசுந்தரம் ஓலைப்பாயில் உட்கார்ந்துகொண்டு மேஜையின் மேலுள்ள சிட்டைப்புத்தகத்தில் ஏதோ பதிந்துகொண்டு இருக்கிறார்.

"சுப்புவின் கணக்கு. நாலு, நாலரை, நாலரையே மாகாணி, நாலரையே மாகாணியும் ஒரு சல்லியும், நாலரையே மாகாணி ஒரு சல்லி, ஒருதுட்டு, நாலு, ஒம்பது, அஞ்சு சல்லி!... சவத்துப்பயலுக்குக் குடுத்துக் குடுத்துக் கட்டுமா? நாளைக்கு வரட்டும் சொல்லறேன்" நெற்றியில் வழியும் வியர்வையைத் துடைத்துவிட்டு ராமையாவின் பேரேட்டைத் திருப்பிக்கூட்ட ஆரம்பித்தார். "வீசம், அரைக்கால், அரையே அரைக்கால்..."

மீனாட்சிசுந்தரத்துக்கு மனம் கணக்கில் லயிக்கவில்லை. பெட்டியில் மூடி வைத்தார். 'தூத்துக்குடி வண்டி இன்னும்

தெரிந்து தெளிவோம்

மாகாணி, வீசம் போன்றவை அக்காலத்தில் வழக்கிலிருந்த அளவைப்பெயர்களாகும்.

அணா, சல்லி, துட்டு என்பது அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த நாணயப் பெயர்கள் ஆகும். பதினாறு அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய். அதனால்தான் இன்றும் பேச்சுவழக்கில் அரை ரூபாயை எட்டணா என்றும் கால் ரூபாயை நாலணா என்றும் கூறுகின்றனர்.

புறப்படவில்லையே!' என்ற எண்ணம் திடீரென்று உதித்தது. 'சவத்தைக் கட்டி எத்தனை நாள்தான் மாரடிப்பது!' என்று முணுமுணுத்தார். நெற்றியில் குபீர் என்று வியர்வை எழும்பியது. பெட்டிச்சொருகை அனாவசிய பலத்தை உபயோகித்து வெளியே இழுத்தார். உள்ளேயிருந்த சில்லறையும் ரூபாயும் குலுங்கிச் சிதறின. செம்பு, நிக்கல், வெள்ளி என்று பாராமல் மடமடவென்று எண்ணினார். நாற்பதும் சில்லறையும் இருந்தது. அவசர அவசரமாக எடுத்து மடியில் கொட்டிக்கொண்டு, விளக்கை அணைத்து, மடக்குக் கதவுகளைப் பூட்டினார்.

சாவிக்கொத்து கையில் இருக்கிற உணர்வுகூடஇல்லாமல் வேகமாக ஸ்டேஷனை நோக்கி நடந்தார்.

'நாற்பத்தைந்து வருஷமாக உழைத்துப் போட்டும் என்ன பலன்? நாக்குக்கு ருசியாகச் சாப்பிட முடிந்ததா? என்ன பண்ணிவிடுவான்?'

கொஞ்சதூரம் சென்றபிறகுதான் செருப்பைக்கூடக் கடையிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டார் என்ற உணர்வு தட்டியது.

நல்லகாலமாக எதிரில் யாரையும் காணோம். 'பார்த்தால்தான் என்ன? கடையைப் பூட்டினபிறகு நேரே வீட்டிற்குத்தான் போகவேண்டுமா? நம்ம நினைப்பு அவனுக்கெப்படி தெரியும்?'

ஸ்டேஷனுக்கு வந்தாய்விட்டது. பெட்ரோமாக்ஸ் விளக்கடியில் தூங்கும் சில்லறைச் சிப்பந்திகள், பக்கத்து வெற்றிலைபாக்குக் கடையில் வாயடிக்கும் போர்ட்டர்கள்! வெளிக்கேட்டில் அவ்வளவு கூட்டம் இல்லை. ரயிலுக்குக் கூட்டம்இருக்காததும் நல்லதுதான் என்று நினைத்து உள்ளுக்குள்சந்தோஷப்பட்டுக்கொண்டார்.



டிக்கட் கவுண்டரில் பத்தேகாலணாவைக் கொடுத்து டிக்கெட் வாங்கிக்கொண்டு பிளாட்பாரத்தில் நுழைந்தார். வண்டி வந்து நின்றுகொண்டிருக்கிறது. புறப்பட இன்னும் பத்து நிமிஷம். ஒருவரும் இல்லாத தனி வண்டியில் ஏறி, ஜன்னல் அண்டையில் உட்கார்ந்தார். வண்டி எப்பொழுது புறப்படும் என்பதை ஆவலாக அறிய எஞ்சின் பக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"மீனாட்சிசுந்தரம்... ஏது இந்த ராத்திரியில்!" என்றது கம்பீரமான ஒருகுரல். வேறு ஒருவரும் இல்லை. ரயில்வே போலீஸைச் சேர்ந்த அவரது நண்பர் கலியாணசுந்தரம். திடுக்கிட்டுத் திரும்பினார்.

போலீஸ்காரர்! மீனாட்சிசுந்தரம் நண்பரைப் பார்க்கவில்லை; காக்கி உடையைத்தான் பார்த்தார்! தன்னையறியாமல் அவரது வாய், "தூத்துக்குடிவரை!" என்றது.

"என்ன அவசரம்! நான் உங்களை மணியாச்சியில் பார்க்கிறேன்!" என்று சொல்லி, அளவெடுத்து வைக்கும் பெருமிதமான நடையுடன் ஸ்டேஷன் மாஸ்டரை நாடினார் கலியாணசுந்தரம்.

மீனாட்சிசுந்தரத்துக்கு நுனிநாக்குமுதல் அடித்தொண்டைவரை ஒரே வறட்சி; கண்கள் சுழன்றன.

"கலர்! சோடா!" என்று நீட்டினான் சோடாக்காரன். 'பூப்!' என்று ஏப்பமிட்டுக்கொண்டே ஓரணாவை அவன் கையில் கொடுத்துவிட்டுப் பலகையில்சாய்ந்து கண்ணை மூடினார். 'கலியாணி பார்த்துவிட்டானே! நாளைக்கு நம் குட்டு வெளிப்பட்டுப் போகுமே!'

ரயில் விஸில் கிரீச்சிட்டது. மீனாட்சிசுந்தரம் அவசர அவசரமாகக் கதவுப்பக்கம் வந்து ரயிலை விட்டு இறங்கினார்.

மெதுவாக, நிதானமாக ஸ்டேஷனைவிட்டு வெளியேறி ஸ்டோர்பக்கமாக நடந்தார். வழியில் சிறிதுதூரம் செல்கையில்தான் பாஸ் இல்லாமல் எப்படிக் கப்பலில் செல்வது என்ற ஞாபகம் வந்தது. 'புத்தியைச் செருப்பால்தான் அடிக்கணும்!' என்று சொல்லிக்கொண்டார். அவருக்குத் தமது ஆபத்தான நிலைமை அப்பொழுதுதான் தெளிவாயிற்று. உடல்நடுங்கியது.

ஸ்டோருக்கு வந்துவிட்டார். கதவைத் திறந்து, விளக்கை ஏற்றினார். மடியில் இருந்த சில்லறையைப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, சிட்டையை எடுத்து, 'மீனாட்சி பற்று பதினொன்றே காலணா' என்று எழுதினார்.



மறுபடியும் விளக்கு அணைந்தது. காலில் செருப்பை மாட்டிக்கொள்ளும் சப்தம்; பூட்டு கிளிக் என்றது.

முதலாளி வீட்டை நோக்கிச் சருக்சருக்கென்ற செருப்புச் சப்தம்.

முதலாளி காற்றுக்காக வெளியே விசிப்பலகையில் தூங்குகிறார்.

"ஐயா! ஐயா!" என்றார் மீனாட்சிசுந்தரம்.

"என்னவே, இவ்வளவு நேரம்!" என்று புரண்டுகொண்டே கொட்டாவிவிட்டார் முதலாளி ஐயா.

"இல்லே, சோலி இருந்தது. எம்பத்துலே இன்னக்கி பதினொண்ணேகாலணா எழுதியிருக்கேன்!" என்றார் மீனாட்சிசுந்தரம். அப்பொழுதும் அந்த நாவறட்சி போகவில்லை.

"சரி! விடியனெ வரப்போ மூக்கனெ வண்டியைப் போட்டுக்கிட்டு வரச்சொல்லும். சந்தைக்குப் போகணும்!" என்றார். சொல்லிவிட்டுக் கொடுங்கையைத் தலைக்கு வைத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டார்.

மீனாட்சிசுந்தரம் முதலாளி ஐயாவைச் சற்றுநேரம் பார்த்துக்கொண்டே நின்றார். அப்புறம் மெதுவாகத் திரும்பி நடந்தார்.

நூல் வெளி



சிறுகதை மன்னன் என்று போற்றப்படும் புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ.விருத்தாசலம். சிறுகதைகளில் புதுப்புது உத்திகளைக் கையாண்டவர் என்று இவரைத் திறனாய்வாளர்கள் போற்றுகின்றனர். நூற்றுக்குமேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். சில திரைப்படங்களுக்குக் கதை, உரையாடலும் எழுதியுள்ளார். கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், சாபவிமோசனம், பொன்னகரம், ஒருநாள் கழிந்தது போன்றன இவரது சிறுகதைகளுள் புகழ்பெற்றவை.

மணிக்கொடி இதழில் வெளியான புதுமைப்பித்தனின் சிறுகதை ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த யாரேனும் ஒருவரைப் பற்றிய செய்தியை அறிந்துவந்து வகுப்பறையில் பகிர்க.

மதிப்பீடு

மனித யந்திரம் கதையை மீனாட்சிசுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.

கற்கண்டு

இயல் எட்டு

யாப்பு இலக்கணம்

பாவலர்கள் தம் உள்ளத்தில் தோன்றும் உயர்ந்த கருத்துகளைப் பாடல்களாகப் படைக்கின்றனர். குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகளை மரபுக்கவிதைகள் என்பர். இலக்கணக் கட்டுப்பாடுகளின்றிக் கருத்துக்கு மட்டும் முதன்மை கொடுத்து எழுதப்படும் கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். மரபுக்கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம் எனப்படும்.

யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்கு உரிய உறுப்புகள் ஆறு. அவை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவாகும்.

எழுத்து

யாப்பிலக்கணத்தின்படி எழுத்துகளை மூன்றாகப் பிரிப்பர்.

அவையாவன:

குறில் – உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்

நெடில் – உயிர்நெடில், உயிர்மெய் நெடில்

ஒற்று – மெய்யெழுத்து, ஆய்த எழுத்து

அசை

எழுத்துகள் ஒன்றோ சிலவோ சேர்ந்து அமைவது அசை. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும்.

(எ.கா.) ந, நம், நா, நாம்.

இரண்டு குறில்எழுத்துகள் அல்லது குறில், நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும்.

(எ.கா.) கட, கடல், கடா, கடாம்.

சீர்

ஓர்அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது சீர்.

சீர்களை ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என வகைப்படுத்துவர்.

8th Std Tamil CBSE 17-12-2020.indd 182 16-12-2021 17:48:18

தளை

சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர். முதல் சீரின் இறுதியிலும் வரும்சீரின் முதலிலும் உள்ள அசைகள் எவ்வகை அசைகள் என்பதன் அடிப்படையில், தளைகள் ஏழு வகைப்படும்.

அடி

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டு அமைவது அடி ஆகும். அடி ஐந்து வகைப்படும்.

தொடை

செய்யுளில் ஓசைஇன்பமும் பொருள்இன்பமும் தோன்றும் வகையில் சீர்களுக்கு இடையிலோ, அடிகளுக்கு இடையிலோ அமையும் ஒற்றுமையே தொடை ஆகும். தொடை எட்டு வகைப்படும். முதன்மையான தொடைகள் வருமாறு:

1. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை.

2. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை.

3. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றிவரத் தொடுப்பது இயைபு.

4. ஒரு பாடலின் இறுதிச்சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல்சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதித் தொடை.

பாவகைகள்

பா நான்கு வகைப்படும். அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

- வெண்பா செப்பல் ஓசை உடையது. அறநூல்கள் பலவும் வெண்பாவால் அமைந்தவை.
- ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது. சங்க இலக்கியங்கள் பலவும் ஆசிரியப்பாவால் அமைந்தவை.
- கலிப்பா துள்ளல் ஓசை உடையது. கலித்தொகை கலிப்பாவால் ஆனது.
- வஞ்சிப்பா தூங்கல் ஓசை உடையது.

கற்பவை கற்றபின்

1. எழுத்து இலக்கணத்தின்படியும் யாப்பு இலக்கணத்தின்படியும் எழுத்துகளின் வகைகளை வேறுபடுத்தி ஓர் அட்டவணை உருவாக்குக.

2. வெண்பாக்களால் அமைந்த நூல்களின் பெயர்களைத் திரட்டுக.

8th Std Tamil CBSE 17-12-2020.indd 183 16-12-2021 17:48:19

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அசை _____ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

2. விடும் என்பது_____ சீர்.

அ) நேரசை ஆ) நிரையசை இ) மூவசை ஈ) நாலசை

3. அடி _____ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) நான்கு இ) எட்டு ஈ) ஐந்து

4. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது _____.

அ) எதுகை ஆ) இயைபு இ) அந்தாதி ஈ) மோனை

பொருத்துக.

வெண்பா	-	துள்ளல் ஓசை
ஆசிரியப்பா	-	செப்பலோசை
கலிப்பா	-	தூங்கலோசை
வஞ்சிப்பா	-	அகவலோசை

சிறுவினா

1. இருவகை அசைகளையும் விளக்குக.
2. தளை என்பது யாது?
3. அந்தாதி என்றால் என்ன?
4. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

மொழியை ஆள்வோம்!

Q3GI8

கேட்க.

அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் கதைகளைப் பெரியோர்களிடம் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

மக்கள் பணியே மகத்தான பணி!

சொல்லக் கேட்டு எழுதுக.

ஒரு நாட்டின் தலைவன் வீரம், விடாமுயற்சி, ஈகை, ஆராய்ந்து அறியும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றவனாக விளங்குதல் வேண்டும். அவன் அறம் அல்லாதவற்றை நீக்கி, அறத்தை நிலைநிறுத்த வேண்டும். தான் குற்றம் செய்யுமிடத்து நாணி, தன் தகுதியை நிலைநிறுத்த வேண்டும். குற்றம் கண்டவிடத்துத் தானே நேரில் சென்று ஆராய்ந்து, நெறிமுறை தவறாது நீதி வழங்குதல் வேண்டும். இவ்வாறு விளங்கும் தலைவனை மக்கள், துன்பம் போக்கும் இறை என்றும், இருளை அகற்றும் ஒளி என்றும் கொண்டாடுவர் என்று அயோத்திதாசர் கூறுகிறார்.

இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.

(எ.கா.) முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்தான்.

முத்து நன்கு படித்ததால் வாழ்வில் உயர்ந்தான்.

1. மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.

____.

2. எனக்குப் பால் வேண்டும். எனக்குப் பழம் வேண்டும்.

____

____.

3. திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகக் கருதப்படுபவர். அவர் பதினெண் சித்தர்களில் ஒருவராகக் கருதப்படுபவர்.

____

____.

4. அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்க வேண்டும். அவை கூறும் கருத்துகளைப் பின்பற்ற வேண்டும்.

____

____.

5. குணங்குடி மஸ்தான் சாகிபு எக்காளக்கண்ணி நூலை இயற்றியுள்ளார். நந்தீசுவரக் கண்ணி நூலை இயற்றியுள்ளார்.

____

____.

அறிந்து பயன்படுத்துவோம்

பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

விபத்தில்லா வாகனப் பயணம்

சாலைவிதிகளுக்கு உட்பட்டு வாகனம் ஓட்டும் முறைகளை அறிந்து, வாகனங்களை இயக்கினால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.

- ஓட்டுநர் வாகனத்தைச் சாலையின் இடப்புறத்தில் செலுத்துவதுடன், எதிரேவரும் வாகனத்திற்கு வலப்புறமாகக் கடந்து செல்லப் போதிய இடம்விட வேண்டும்.
- சந்திப்புச் சாலைகள், பயணிகள் கடக்கும் இடங்கள், திரும்பும் இடங்கள் ஆகியவற்றை நெருங்கும்போது வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டும். அவ்விடங்களில் இருப்பவர்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராது என்று உறுதி செய்த பிறகே கடந்து செல்ல வேண்டும்.
- சாலைச்சந்திப்பில் நுழையும்போது, அந்தச் சாலையில் ஏற்கெனவே செல்லும் வாகனங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.
- தீயணைப்பு வாகனம், அவசரச்சிகிச்சை ஊர்தி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து, அவை தடையின்றிச் செல்வதற்குக் கண்டிப்பாக வழிவிட வேண்டும்.
- எல்லா ஓட்டுநர்களும் தேவையான இடங்களில் கை சைகை அல்லது வாகன எச்சரிக்கை விளக்குகளைத் தவறாமல் பயன்படுத்த வேண்டும்.
- மலைச்சாலைகள், மிகவும் சரிவான சாலைகள் ஆகியவற்றில் கீழ்நோக்கிச் செல்லும் வாகனங்கள், மேல்நோக்கி வரும் வாகனங்கள் பாதுகாப்பாகக் கடந்து செல்ல முன்னுரிமை தர வேண்டும்.

வினாக்கள்

1. விபத்துகளை எவ்வாறு தவிர்க்கலாம்?
2. கண்டிப்பாக வழிவிட வேண்டிய வாகனங்கள் யாவை?
3. சாலைச் சந்திப்புகளில் எவற்றுக்கு முதலிடம் தர வேண்டும்?
4. மலைச்சாலைகளில் பின்பற்ற வேண்டிய விதிமுறை யாது?
5. வாகனம் செலுத்தும் முறையை எழுதுக.

கடிதம் எழுதுக.

புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

மொழியோடு விளையாடு

படத்தைப் பார்த்து எழுதுக.





ஓரெழுத்துச் சொல்	ஆ	_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
இரண்டு எழுத்துச் சொல்	_ _ _ _ _ _ _ _ _ _ _	_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
மூன்று எழுத்துச் சொல்	_ _ _ _ _ _ _ _ _ _ _	_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
நான்கு எழுத்துச் சொல்	_ _ _ _ _ _ _ _ _ _ _	_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
ஐந்து எழுத்துச் சொல்	_ _ _ _ _ _ _ _ _ _ _	கன்றுகள்

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. அறக்கருத்துகளைப் படித்து, வாழ்வில் பின்பற்றுவேன்.
2. அறவாழ்வு வாழ்ந்த சான்றோர்களைப்பற்றி அறிந்து போற்றுவேன்.

கலைச்சொல் அறிவோம்.

தொண்டு	–	*Charity*	நேர்மை	–	*Integrity*
ஞானி	–	*Saint*	பகுத்தறிவு	–	*Rational*
தத்துவம்	–	*Philosophy*	சீர்திருத்தம்	–	*Reform*

இணையத்தில் காண்க

சமூகச் சீர்திருத்தத்திற்கு உழைத்த சான்றோர்களின் பெயர்ப்பட்டியலை இணையத்தில் தேடித் தொகுக்க.

இயல் எட்டு

வாழ்வியல்

திருக்குறள்

BVAGJ

படைச்செருக்கு

1. *கான முயல்எய்த அம்பினில் யானை*
   *பிழைத்தவேல் ஏந்தல் இனிது.**

   பொருள்: காட்டுமுயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும். (பெரிய முயற்சியே பெருமை தரும்.)

   அணி : பிறிதுமொழிதல் அணி

2. *பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்*
   ஊராண்மை மற்றுஅதன் எஃகு.

   பொருள்: பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ஆண்மை என்று கூறுவர். பகைவருக்கும் துன்பம் வரும்போது, உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.

நட்பு

3. *நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
   *பண்புடை யாளர் தொடர்பு.**

   பொருள்: நல்ல நூல்கள் படிக்கப் படிக்க இன்பம் தருவதுபோலப் பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும்.

   அணி : உவமைஅணி

4. *நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்*
   மேற்சென்று இடித்தல் பொருட்டு.

   பொருள்: நட்பு, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியது அன்று; நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது.

நட்பு ஆராய்தல்

5. *ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை*
   தான்சாம் துயரம் தரும்.

   பொருள்: மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பாராமல் ஒருவருடன் கொண்ட நட்பு தாம் சாகும் அளவுக்குத் துன்பம் தரும்.

6. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

பொருள்: நமக்கு வரும் துன்பத்தினாலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும்.

மானம்

7. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

பொருள்: செல்வம் மிகுந்த காலத்தில் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். வறுமை வந்த காலத்தில் ஊக்கம் குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும்.

8. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

பொருள்: மலையளவு பெருமை உடையவராக இருந்தாலும் குன்றிமணியளவு தவறு செய்தால் அவரது பெருமை அழிந்துவிடும்.

பண்புடைமை

9. பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
*மண்புக்கு மாய்வது மன்.**

பொருள்: பண்பு உடைய சான்றோரின் வழியில் நடப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் இயங்குகிறது; இல்லாவிட்டால் மண்ணுக்குள் புதைந்து அழிந்திருக்கும்.

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந்து அற்று.

பொருள்: தூய்மையற்ற பாத்திரத்தில் வைக்கப்படும் பால் திரிந்துவிடும். அதுபோல நற்பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமும் யாருக்கும் பயனின்றி அழியும்.

அணி : உவமையணி



மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆண்மையின் கூர்மை _____.

அ) வறியவருக்கு உதவுதல் ஆ) பகைவருக்கு உதவுதல்

இ) நண்பனுக்கு உதவுதல் ஈ) உறவினருக்கு உதவுதல்

2. வறுமை வந்த காலத்தில் _____ குறையாமல் வாழ வேண்டும்.

அ) இன்பம் ஆ) தூக்கம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

3. 'பெருஞ்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) பெரிய + செல்வம் ஆ) பெருஞ் + செல்வம்

இ) பெரு + செல்வம் ஈ) பெருமை + செல்வம்

4. 'ஊராண்மை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) ஊர் + ஆண்மை ஆ) ஊராண் + மை

இ) ஊ + ஆண்மை ஈ) ஊரு + ஆண்மை

5. திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) திரிந்ததுஅற்று ஆ) திரிந்தற்று இ) திரிந்துற்று ஈ) திரிவுற்று

பொருத்துக.

1. இன்பம் தருவது - நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்
2. நட்பு என்பது - குன்றிமணியளவு தவறு
3. பெருமையை அழிப்பது - செல்வம் மிகுந்த காலம்
4. பணிவு கொள்ளும் காலம் - சிரித்து மகிழ மட்டுமன்று
5. பயனின்றி அழிவது - பண்புடையவர் நட்பு

குறுவினா

1. எது பெருமையைத் தரும்?
2. நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோல் எது?
3. இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?
4. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.



1. ___________ ___________ ___________ ___________

___________ ___________ ___________

இயல்
ஒன்பது

குன்றென நிமிர்ந்துநில்



கற்றல் நோக்கங்கள்

- பாவை நூலின்வழி மனிதர்களின் இயல்பை அறிதல்
- தன்னம்பிக்கையின் இன்றியாமையைப் புதுக்கவிதை வழியாக உணர்தல்
- சான்றோர்களின் வாழ்க்கையை அறிவதன்மூலம் ஆளுமைப்பண்புகளைப் பெறுதல்
- சிறுகதைகள்மூலம் மனிதர்களின் உளவியலைப் புரிந்துகொள்ளுதல்
- செய்யுள்களில் இடம்பெறும் அணிகளைப்பற்றி அறிந்து சுவைத்தல்

இயல் ஒன்பது

கவிதைப்பேழை

உயிர்க்குணங்கள்

DY6GS

நுழையும்முன்

ஒவ்வொரு மனிதனிடமும் பலவகையான பண்புகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றுள் நற்பண்புகளும் உண்டு; தீய பண்புகளும் உண்டு. தீயனவற்றை விலக்கி, நல்லனவற்றை வளர்த்து வாழ்வாங்கு வாழ்வதே மனிதனின் கடமையாகும். மனிதனுக்குள் நிறைந்திருக்கும் பண்புகளைக் கன்னிப்பாவை என்னும் நூலின் பாடல்வழி அறிவோம்.

அறிவுஅருள் ஆசைஅச்சம்
அன்புஇரக்கம் வெகுளிநாணம்
நிறைஅழுக்காறு எளிமை
நினைவுதுணிவு இன்பதுன்பம்
பொறைமதம் கடைப்பிடிகள்
பொச்சாப்பு மானம்அறம்
வெறுப்புஉவப்பு ஊக்கம்மையல்
வென்றிஇகல் இளமைமூப்பு
மறவிஓர்ப்பு இன்னபிற
மன்னும்உயிர்க் குணங்கள்எல்லாம்
குறைவறப் பெற்றவள்நீ
குலமாதே பெண்ணரசி
இறைமகன் வந்திருக்க
இன்னும்நீ உறங்குதியோ
புறப்படு புன்னகைநீ
பூத்தேலோ ரெம்பாவாய்!

– இறையரசன்

சொல்லும் பொருளும்

நிறை	–	மேன்மை	அழுக்காறு	–	பொறாமை
பொறை	–	பொறுமை	மதம்	–	கொள்கை
பொச்சாப்பு	–	சோர்வு	இகல்	–	பகை
மையல்	–	விருப்பம்	மன்னும்	–	நிலைபெற்ற
ஓர்ப்பு	–	ஆராய்ந்து தெளிதல்			

பாடலின் பொருள்

அறிவு, கருணை, ஆசை, அச்சம், அன்பு, இரக்கம், சினம், நாணம், மேன்மை, பொறாமை, எளிமை, நினைவு, துணிவு, இன்பம், துன்பம், பொறுமை, கொள்கையைப் பின்பற்றுதல், சோர்வு, மானம், அறம், வெறுப்பு, மகிழ்ச்சி, ஊக்கம், விருப்பம், வெற்றி, பகை, இளமை, முதுமை, மறதி, ஆராய்ந்து தெளிதல் போன்றவை இவ்வுலகில் நிலைபெற்ற மனிதர்களிடம் உள்ள பண்புகளாகும். இவற்றையுடைய மனிதகுலத்தில் பிறந்த பெண்ணே! நற்பண்புகள் எவையென அறிவுறுத்த இறைவனின் திருக்குமாரன் வந்தபின்னும் நீ உறங்கலாமா? உண்மையை உணர, புன்னகை பூத்து நீ புறப்படுவாயாக!

தெரிந்து தெளிவோம்

பாவை நூல்கள்

மார்கழித் திங்களில் பொழுது விடியும் முன்பே பெண்கள் துயிலெழுந்து, பிற பெண்களையும் எழுப்பிக்கொண்டு, ஆற்றுக்குச் சென்று நீராடி, இறைவனை வழிபடும் வழக்கம் உண்டு. இதனைப் பாவை நோன்பு என்பர். அவ்வாறு திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக ஆண்டாள் பாடிய நூலே திருப்பாவை.

இதேபோலச் சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் திருவெம்பாவை. இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.

நூல் வெளி

இறையரசனின் இயற்பெயர் சே. சேசுராசா என்பதாகும். கல்லூரி ஒன்றில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்தவர். ஆண்டாள் இயற்றிய திருப்பாவையைத் தழுவி, கன்னிப்பாவை என்னும் நூலை எழுதியுள்ளார். அந்நூலில் இருந்து ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

பின்வரும் திருப்பாவைப் பாடலைப் படித்து மகிழ்க.

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செழுங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின் காண்;
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். பாடல்–14

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அடுத்தவர் வாழ்வைக் கண்டு _____ கொள்ளக்கூடாது.

அ) உவகை　　ஆ) நிறை　　இ) அழுக்காறு　　ஈ) இன்பம்

2. நாம் நீக்கவேண்டியவற்றுள் ஒன்று _____ .

அ) பொச்சாப்பு　　ஆ) துணிவு　　இ) மானம்　　ஈ) எளிமை

3. 'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது _____.

அ) இன்பம் + துன்பு　　ஆ) இன்பம் + துன்பம்

இ) இன்ப + அன்பம்　　ஈ) இன்ப + அன்பு

4. குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) குணங்கள்எல்லாம்　　ஆ) குணமெல்லாம்

இ) குணங்களில்லாம்　　ஈ) குணங்களெல்லாம்

பொருத்துக

1. நிறை – பொறுமை
2. பொறை – விருப்பம்
3. மதம் – மேன்மை
4. மையல் – கொள்கை

குறுவினா

1. மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?
2. மனிதர்களிடம் உள்ள பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?

சிறுவினா

மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?

சிந்தனை வினா

மனிதர்கள் வளர்க்கவேண்டிய பண்புகளாகவும் விலக்கவேண்டிய பண்புகளாகவும் நீங்கள் கருதுவன யாவை?

இயல் ஒன்பது

கவிதைப்பேழை

இளைய தோழனுக்கு

TFU9J

நுழையும்முன்

மனித உடலில் இரண்டு கைகள் உண்டு. உள்ளத்தில் இருக்கவேண்டிய 'கை' ஒன்று உண்டு. அதுவே நம்பிக்கை. இது மக்கள்அனைவருக்குள்ளும் இருந்தாலும், அதன் ஆற்றலை உணர்ந்து, வாழ்வுக்கு உறுதுணையாக்கி வாழ்வில் வென்றவர் சிலரே. உங்களுக்குள் துவண்டிருக்கும் நம்பிக்கையைத் தட்டி எழுப்பும் கவிதை ஒன்றை அறிவோம்.

நட
நாளைமட்டுமல்ல
இன்றும்
நம்முடையதுதான்

நட
பாதங்கள்
நடக்கத்
தயாராய் இருந்தால்
பாதைகள்
மறுப்புச் சொல்லப்
போவதில்லை.

நெய்யாய்த் திரியாய்
நீயே மாறினால்
தோல்வியும் உனக்கொரு
தூண்டுகோலாகும்!
வெற்றி
உனைச்சுற்றி
வெளிச்சவிதை
விதைக்கும்!

கவலைகளைத்
தூக்கிக்கொண்டு
திரியாதே ...
அவை
கைக்குழந்தைகளல்ல..

*ஓடிவந்து கைகுலுக்க
ஒருவருமில்லையா?
உன்னுடன் நீயே
கைகுலுக்கிக் கொள்!

தூங்கி விழுந்தால்
பூமி உனக்குப்
படுக்கையாகிறது.
விழித்து நடந்தால்
அதுவே உனக்குப்
பாதையாகிறது!

நீ
விழித்தெழும் திசையே
பூமிக்குக் கிழக்கு!
உன்
விரல்களில் ஒளிரும்
சூரியவிளக்கு!

நட!
நாளைமட்டுமல்ல
இன்றும்
நம்முடையதுதான்
நட! *

– மு.மேத்தா

பாடலின் பொருள்

செயல்படத்தொடங்கு! நாளை மட்டுமல்ல, இன்றும் நமது நாள்தான். உனது பாதங்கள் நடக்கத் தயாராக இருந்தால், நீ செல்லும் பாதைகள் உன்னை எதிர்க்கப்போவதில்லை.

உலகிற்கு ஒளியேற்ற எண்ணெயாய், திரியாய் உன்னையே நீ மாற்றினால் தோல்வியும் உன் உயர்விற்குத் தூண்டுகோலாகும்! வெற்றி உன் அங்கமாகி, வாழ்வில் ஒளியேற்றும்.

கவலைகளை உள்ளத்தில் தேங்கவிட வேண்டாம். உன்னைப் பாராட்டிப் புத்துணர்வூட்ட ஒருவரும் இல்லையென்று வருந்தாதே! உன்னைவிட ஒருவரும் உன்னைப் பாராட்டிப் புத்துணர்வூட்ட முடியாது.

நீ சோர்ந்து தளர்ந்தால் பூமி உன் நோய்ப்படுக்கையாகும். நீ கிளர்ந்து எழுந்தால் அதுவே உனக்குப் பாதையாகும்.

நீ செயல்படப் புறப்படும் திசைதான் இனி இந்தப் பூமிக்குக் கிழக்கு. கதிரவன் உன் விரல்களில் விளக்காக ஒளிவீசும். செயல்படத் தொடங்கு! நாளை மட்டுமல்ல, இன்றும் நமது நாள்தான்.

நூல் வெளி

வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் மு. மேத்தா. புதுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடிகளுள் ஒருவராக இவரைப் போற்றுவர்; கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், சோழநிலா, மகுடநிலா உள்ளிட்ட பல நூல்களையும் திரையிசைப்பாடல்களையும் எழுதியுள்ளார்; கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் எழுதிய ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்னும் புதுக்கவிதை நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

மு. மேத்தா கவிதைகள் என்னும் நூலிலிருந்து ஒரு கவிதை இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. 'தன்னம்பிக்கை' என்னும் தலைப்பில் கவிதை ஒன்றை எழுதி வகுப்பில் பகிர்க.
2. 'நம்பிக்கையே வெற்றி'– என்பதை உணர்த்தும் கதை ஒன்றனைத் தேடி எழுதி வருக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உன்னுடன் நீயே_____கொள்.

அ) சேர்ந்து ஆ) பகை இ) கைகுலுக்கிக் ஈ) நட்பு

2. கவலைகள் _ _ _ _ _ அல்ல.

அ) சுமைகள் ஆ) சுவைகள்

இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்

3. 'விழித்தெழும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _.

அ) விழி + எழும் ஆ) விழித்து + எழும்

இ) விழி + தெழும் ஈ) விழித் + தெழும்

4. 'போவதில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _.

அ) போவது + இல்லை ஆ) போ + இல்லை

இ) போவது + தில்லை ஈ) போவது + தில்லை

5. 'படுக்கையாகிறது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _.

அ) படுக்கை + யாகிறது ஆ) படுக்கையா + ஆகிறது

இ) படுக்கையா + கிறது ஈ) படுக்கை + ஆகிறது

6. தூக்கி + கொண்டு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _.

அ) தூக்கிகொண்டு ஆ) தூக்குக்கொண்டு

இ) தூக்கிக்கொண்டு ஈ) தூக்குகொண்டு

7. விழித்து + எழும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _.

அ) விழியெழும் ஆ) விழித்தெழும்

இ) விழித்தழும் ஈ) விழித்துஎழும்

குறுவினா

1. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
2. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?

சிறுவினா

பூமி எப்போது பாதையாகும்?

சிந்தனை வினா

வாழ்வில் உயர நம்பிக்கையைப் போன்று வேறு என்னென்ன பண்புகள் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

உரைநடை உலகம்

இயல் ஒன்பது

சட்டமேதை அம்பேத்கர்

நுழையும்முன்

தன்னலமற்ற தலைவர்கள் பலர் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டனர். அவர்கள் தமது தொண்டினால் மக்களின் மனத்தில் நீங்கா இடம் பெற்றனர். இந்திய மக்களுக்கு அரசியல் விடுதலையோடு, சமூக விடுதலையும் கிடைக்கும்போதுதான் இந்தியா முழுமையான விடுதலைபெற்ற நாடாக இருக்க முடியும் என்று கருதி உழைத்த தலைவர் ஒருவரைப் பற்றி அறிவோம்.



விடுதலைபெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர். இவர் சமூகச் சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச்சிறந்த பொருளியல் அறிஞராகவும் அரசியல் தத்துவமேதையாகவும் பகுத்தறிவுச் சிந்தனையாளராகவும் விளங்கினார். சிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் மக்களால் போற்றப்பட்டார்.

பிறப்பு

அம்பேத்கர் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் ராம்ஜி சக்பால் – பீமாபாய் இணையருக்குப் பதினான்காவது குழந்தையாகப் பிறந்தார். இவரது ஊர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவாதே என்பதாகும். இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

கல்வி

அம்பேத்கர் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார். இவர் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் பள்ளிப் பருவத்திலேயே பல அவமதிப்புகளுக்கு ஆளானார். மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இதனால், பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.

1904 ஆம் ஆண்டு, இவருடைய குடும்பம் மும்பைக்குக் குடிபெயர்ந்தது. அங்கு எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். குடும்பத்தில் மிகவும் வறுமை சூழ்ந்த நிலையிலும் கல்வியை விடாமல் தொடர்ந்த அவர், 1907 ஆம் ஆண்டு தமது பள்ளிப்படிப்பை முடித்தார். பிறகு, பரோடா மன்னரின் உதவியுடன் மும்பைப் பல்கலைக்கழகத்தில் படித்து 1912 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். சிறிதுகாலம் பரோடா மன்னரின் அரண்மனையில் உயர்அலுவலராகவும் பணியாற்றினார்.

அமெரிக்காவில் உயர்கல்வி

பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார். 1915 இல் பண்டைக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார். இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் படைத்தளித்தார். அதைச் சிறுபுத்தகமாகவும் வெளியிட்டார். அச்சில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் இதுவே. பின்னர் இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்ற ஆய்வுக்காக, கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.

1920 ஆம் ஆண்டு பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார். அங்கிருந்த பல நூலகங்களில் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார்; நூலகம் திறக்கும் போது முதல்ஆளாக நுழைந்து மூடும்போது கடைசி ஆளாக வெளியேறுவார்; இத்தகைய அயராத உழைப்பின் பயனாக 1921 ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டமும் 1923 ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சனை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டமும் பெற்றார்; அதே ஆண்டில் சட்டப் படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

சமூகப்பணிகள்

படிப்பை முடித்து இந்தியா திரும்பினார் அம்பேத்கர். இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். அதுமட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைக்கப் போராட வேண்டும் என்றும் முடிவு செய்தார். 1924 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார். இவ்வமைப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும்

தெரிந்து தெளிவோம்

அம்பேத்கரின் பொன்மொழி

"நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று. முதல் தெய்வம் அறிவு; இரண்டாவது தெய்வம் சுயமரியாதை; மூன்றாவது தெய்வம் நன்னடத்தை."

சமுதாய உரிமைக்காகப் போராடினார். 1930 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்படும் முன் "என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன்; அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனத்துடன் ஆதரிப்பேன்" என்று கூறினார்.

பூனா ஒப்பந்தம்

ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்படவேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார். இதன் விளைவாக, ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் இரட்டை வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆனால், இதை ஏற்க மறுத்த காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். இதன் விளைவாக 1931 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபத்து நான்காம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாகப் பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.

சுதந்திரத் தொழிலாளர் கட்சி

1935 ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்கத் தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார்; சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார். அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றிபெற்றனர்.

தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர்

அம்பேத்கர் இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும் தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார். ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை 1927 ஆம் ஆண்டு துவங்கினார். சமத்துவச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் இவர் சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்; 1930 ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார்.

அரசியல் அமைப்பில் அம்பேத்கரின் பங்கு

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் பதினைந்தாம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. ஜவகர்லால் நேரு தலைமையில் அமைந்த அரசில் அம்பேத்கர் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தெரிந்து தெளிவோம்

இரட்டைமலை சீனிவாசன்

இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதைப் பற்றி முடிவு செய்ய 1930 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசனும் கலந்துகொண்டார்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் நாள் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு (Drafting committee) உருவாக்கப்பட்டது. இக்குழுவில், கோபால்சாமி, அல்லாடி கிருஷ்ணமூர்த்தி, கே. எம். முன்ஷி, சையது முகமது சாதுல்லா, மாதவராவ், டி. பி. கைதான் ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். இக்குழு தனது அறிக்கையை 1948, பிப்ரவரி 21-இல் ஒப்படைத்தது. அம்பேத்கர் தலைமையிலான சட்ட வரைவுக்குழு, அப்போது மக்களாட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றிலிருந்து இந்திய நடைமுறைக்குப் பொருந்தும் சட்டக்கூறுகளை, இந்திய அரசியலமைப்பு வரைவில் சேர்த்தது.

தெரிந்து தெளிவோம்

அரசியல் அமைப்புச் சட்டம்

உலகின் மிகப்பெரிய குடியரசு நாடாக இந்தியா விளங்குகிறது. இந்நாட்டில் பல்வேறுபட்ட இன, மொழி, சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். இவர்களை ஒன்றிணைக்க, ஆட்சி நடத்த அடிப்படையான சட்டம் தேவைப்படுகிறது. இச்சட்டத்தினையே அரசியலமைப்புச் சட்டம் என்பர். உலகில் உள்ள அனைத்து நாடுகளும் அந்தந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டே இயங்குகின்றன. அஃது எழுதப்பட்டதாகவோ அல்லது எழுதப்படாததாகவோ இருக்கக்கூடும்.

இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, அயர்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா, சோவியத்யூனியன், ஜெர்மனி, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளின் சட்டங்களையும் ஆராய்ந்து இந்திய நாட்டிற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்புச் சட்டம், குடிமக்களின் உரிமைகளுக்குப் பலவகைகளில் பாதுகாப்பை அளிப்பதாக அமைந்தது. இது மிகச்சிறந்த சமூக ஆவணம் என வரலாற்று ஆசிரியர்களால் போற்றப்படுகிறது.

புத்த சமயம் மீது பற்று

அம்பேத்கர் புத்த சமயக் கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டார். இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப் பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார். 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் நாக்பூரில் இலட்சக்கணக்கான மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். அவர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் என்னும் புத்தகம் அவரது மறைவுக்குப் பின் 1957 ஆம் ஆண்டு வெளியானது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்த அம்பேத்கர், 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் நாள் காலமானார். அவருடைய மறைவிற்குப் பின், இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

கற்பவை கற்றபின்

1. சமூகச் சீர்திருத்தத்திற்கு உழைத்த பிற தலைவர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. அம்பேத்கரின் பண்புகளாக நீங்கள் உணர்ந்தவற்றை எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ___________.

அ) இராதாகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்

இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

2. பூனா ஒப்பந்தம் __________ மாற்ற ஏற்படுத்தப்பட்டது.

அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை

இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமையை

3. சமத்துவச் சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம் ________.

அ) சமாஜ் சமாத சங்கம் ஆ) சமாத சமாஜ பேரவை

இ) தீண்டாமை ஒழிப்புப் பேரவை ஈ) மக்கள் நல இயக்கம்

4. அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ______ விருது வழங்கியது.

அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்மவிபூசண் ஈ) பத்மபூசன்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. புத்த சமயம் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய நூல் __________.

2. அம்பேத்கர் நிறுவிய அரசியல் கட்சியின் பெயர் ________.

3. பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் ________ சென்றார்.

குறுவினா

1. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?

2. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.

3. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?

சிறுவினா

1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

2. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.

நெடுவினா

பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.


சிந்தனை வினா

பாகுபாடில்லாத மக்கள் சமூகம் உருவாக நமது கடமைகளாக நீங்கள் கருதுவன யாவை?

விரிவானம்

இயல் ஒன்பது

பால் மனம்



குழந்தை மனம் எல்லா உயிர்களையும் சமமாகக் கருதுவது; பிறர் துன்பம் கண்டு இரங்குவது; அதனை நீக்க முயல்வது. குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். சமூகம், பெற்றோர்களின் தாக்கத்தால் குழந்தைகளின் மன இயல்புகளில் ஏற்படும் மாற்றத்தை விளக்கும் கதை ஒன்றை அறிவோம்.

படைப்பின் நேர்த்தி வெகு விசித்திரமானது. அதில் மனிதனின் ஆரம்பக்கட்டமான குழந்தைப் பிராயம்தான் எத்தனை அழகு!

"கிருஷ்ணா!" என்று குரல் கொடுத்தவாறே குழந்தையைத் தேடினாள் மன்னி.

பிஞ்சு விரல்களால் ஜன்னலைப் பிடித்தவாறே நின்று தெருவைப் பார்த்துக்கொண்டிருந்த குழந்தை கிருஷ்ணா, தன் முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். ஈரம் பிதுங்கும் வெள்ளரிப் பிஞ்சாக முகம். சிறகுகளாகப் படபடக்கும் இமைகள். கண்ணாடி மணிகளாக உருளும் விழிகள். பூ நயம் போல் உதடுகள். ஒளியரும்புகளான பற்கள். நுங்கு நீரின் குளிர்ச்சியாகக் குரல். தெய்வ வடிவைச் சின்ன உடலில் சிறைப்பிடித்த களை. முகத்தில் எந்த நேரமும் உலகைப் புரிந்துகொள்ள முயலும் மனவளர்ச்சிக்கான ஒரு சிந்தனைச் சாயல்.

"அம்மா! அதோ பாரம்மா, நாய்க்குட்டி!" அவள் பிஞ்சு விரல் காட்டிய இடத்தில் குப்பைத் தொட்டியோரம் ஒரு சொறிநாய் படுத்திருந்தது.

"சீ! அது அசிங்கம்! நம்ம நாய்க்குட்டி 'டாமி'யைப் பார். அழகாக, சுத்தமாக.."

"அம்மா! அந்த நாய்க்கும் சோப்புப் போட்டுக் குளிப்பாட்டினா என்னம்மா?"

"அது தெரு நாய். அதைத் தொடப்படாது."

"ஏன் தொடப்படாது? நம்ப நாயை மட்டும் தொடலாமா?"

"அப்பா திட்டுவாங்க" என்று முத்தாய்ப்பு வைக்க முயன்றாள் மன்னி.

குழந்தையா விடுவாள்? "அப்பா, திட்டாட்டா தொடலாமா அம்மா?" என்று தன் கேள்வியைத் தொடர்ந்ததும் நான் அடக்க முடியாமல் சிரித்துவிட்டேன்.

மன்னி என்னிடம் குறைப்பட்டுக் கொண்டாள். "பாரேன் ராமு! இவள் கேள்விக்குப் பதில்சொல்லவே ஒரு தனி ஆள் போட வேண்டியதுதான்! உம்! நீ படி. இவள் இப்படிப் பேசினால் நீ படிக்கிறதெங்கே?... வாம்மா, கிருஷ்ணா! உள்ளே போகலாம். சித்தப்பா படிக்கட்டும்."



எனக்குப் படிக்க ஓடவில்லை. குழந்தைக்குத் தெரு நாயும் வீட்டு நாயும் வேறில்லை என்ற சமரச நோக்கா? அல்லது இத்தகு சந்தேகங்களின் மூலம் உலகை அறிய முயலும் ஆவலா?

காலையில் கீரை கொண்டு வரும் பாட்டியைக் கண்டதும் கிருஷ்ணா உற்சாகமாக ஓடினாள்.

"கிருஷ்ணா! கிழவியைப் போய்த் தொடாதே. உடம்பு சரியில்லாதவள்" என்று மன்னி கூவினாள்.

அவள் குரலிலிருந்த கண்டிப்பால் திகைப்படைந்த குழந்தை என்னைப் பார்த்தாள். "அப்பாவுக்கு உடம்பு சரியில்லாதப்போ நீ தொடலியா சித்தப்பா?"

நான் கிருஷ்ணாவைத் தூக்கிக் கொண்டேன். "சமர்த்தா அம்மா சொன்னபடி கேட்டா, சாயந்திரம் காந்தி மண்டபம் அழைச்சுக்கிட்டு போவேன்."

"நிஜம்மாவா சித்தப்பா?"

"ஆமாம் !"

சொன்னபடியே அன்று மாலை கிருஷ்ணாவைக் காந்தி மண்டபத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன். கைவண்டியை நிறைந்த பாரத்துடன் நெம்பி இழுத்தவாறே சென்றுகொண்டிருந்தார் ஒருவர்.

"சித்தப்பா! பாவம் அவர்! காலிலே செருப்பே போடலை சித்தப்பா! கல் குத்துமே, வெயில் சுடுமே! என்னோட செருப்பு அவருக்குச் சின்னது! உன் செருப்பைக் குடுத்துடு சித்தப்பா! நீதான் பூட்ஸ் வச்சிருக்கியே...!"

குழந்தையின் குரலிலிருந்த உருக்கத்தையும், துன்பம் கண்டு பொறாத மனத்தையும் கண்டு நான் நெகிழ்ந்தேன். அவளை அப்படியே வாரி அணைத்துக் கொண்டேன். குழந்தையா பேசுகிறாள்?

"செருப்பைக் குடுத்திடு சித்தப்பா."

"அவர் தூரப்போயிட்டார். இன்னொரு நாள் குடுத்துக்கலாம்" என்று அவளைச் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

கோடைமழை கொட்டிக்கொண்டிருந்தது. தெருவெல்லாம் ஈர நசநசப்பு. மரங்களும் செடிகளும் மண்ணும் குளிர்ந்து கிடந்தன. இரவின் அமைதியை மழையும் சில்வண்டுகளின் ரீங்காரமும் தவளைகளின் சத்தமும் அவ்வப்போது கலைத்த வண்ணம் இருந்தன.

தெருவை ஒட்டிய வராந்தாவில் மழையின் குளிர் நடுக்கத்தைக் குரலில் பிரதிபலித்தவாறு இரண்டு சிறு ஆட்டுக்குட்டிகள் நின்றிருந்தன.

பொழுது விடிந்தது.

மன்னியின் குரல் பல் விளக்கிக்கொண்டிருந்த என்னை உசுப்பியது. "எங்கே, கைக்குழந்தைகிட்டே இருந்த பால் புட்டியைக் காணோம்? பால் வாங்கணும்னு போனேன். இரண்டுவாய் பால்தான் குழந்தை குடிச்சிருப்பான். புட்டியைக் கீழே வச்சிட்டுப் போயிருந்தேன். இங்கே காணோமே?"

எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. தெருக் கதவருகே ஓசையிடாது எட்டிப் பார்த்தேன். என் ஊகம் பொய்யாகவில்லை. என்ன விந்தை? உணர்ச்சியைக் கூறுபோட்டுக்கொள்ள அண்ணாவையும், மன்னியையும் ஓசையிடாது வரவழைத்துவிட்டுக் காமிராவையும் எடுத்து வந்தேன்.

மழைச்சாரலில் ஒன்றி நின்றதால் உரோமங்கள் நனைந்து கரும்பட்டாகப் படிந்திருக்க, இளம் குழவிகளாக நின்ற அந்த இரு ஆட்டுக்குட்டிகளில் ஒன்றின் வாயில் பால்புட்டியின் குமிழை வைத்துக் குழந்தை கிருஷ்ணா அதற்குப் பாலை ஊட்டிக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் அருள் வெள்ளம். முகத்தில் அன்பு நிழல். மனத்திலோ பொங்கிப் பெருகும் கருணைப்பரிவு. அந்த இரு சின்ன உயிர்களுக்கும் அவள் ஒரு தாயாகி விட்டாளா? அந்த உணர்ச்சிக்கு வேறு என்ன பெயர் சூட்டலாம்? வியப்புடன் நிற்கிறோம் நாங்கள்.

என் ஃபிளாஷ் அந்தக் காட்சிக்கு நிரந்தர உருவம் தருகிறது. அப்போதும் குழந்தையின் ஈடுபாடு சிதறவில்லை.

"பாவம்மா, ஆட்டுக்குட்டி! அதுக்கு யாரம்மா பால் தருவா? ராத்திரி பூரா சாப்பிடாமே இந்த ஆட்டிக்குட்டிக்கு ரொம்பப் பசிக்கும்மா?"

"நீதான் இருக்கியேடி!" என்று கிருஷ்ணாவை ஆரத் தழுவிக் கொண்டே மன்னி அவள் கன்னங்களில் மாறி மாறி முத்தமழை பொழிந்தாள்.

அதே சமயம் குழந்தை கிருஷ்ணா தனக்கென்று பெற்றிருந்த இரக்க சுபாவம், கருணைமனம் இவற்றைக் கண்டு மன்னி ரொம்பவும் வருத்தப்பட ஆரம்பித்தாள். இப்படியிருக்கிறாளே, தம்பிக்கு வைத்திருந்த பாலை வீணாக்குகிறோமே என்று தெரியவில்லையே, எப்படி இந்த உலகத்திலே பேர் சொல்லப் போகிறாள்? ஒரொரு குழந்தைக எப்படிச் சமர்த்தாக இருக்கிறதுகள்!" என்று பேச ஆரம்பித்துவிட்டாள்.

"குழந்தைதானே அவள்! வளர்ந்தால் சரியாகிவிடும்" என்றேன் நான். மனதுக்குள் மட்டும் அவளைப் பற்றிய பெருமிதம் தங்கியிருந்தது.



காலப்பூங்காவில் ஐந்து வசந்தங்கள் வண்ண ஜாலம் செய்து மறைந்தன. அண்ணா ஊர் ஊராக மாறிக்கொண்டிருந்தார். நான் சென்னையிலேயே தங்கிப் படிப்பை முடித்தேன். அதன்பின் வாழ்க்கைக்கு நிலைத்த ஒரு வருமானம் தரும் உத்தியோகத்தையும் ஏற்றேன். என் முதல் சம்பளத்தைப் பெற்றுக்கொண்ட நான், அதை என் அண்ணாவின் கையில் தந்து வாழ்த்துப் பெறத் திருச்சிக்குப் புறப்பட்டேன்.

முதலில் என் நினைவுக்கு வந்தவள் குழந்தை கிருஷ்ணா. இப்போது எட்டு வயதிருக்குமே, பள்ளியில் படிப்பாள். எப்படிப் பேசுவாள்! எப்படி நடப்பாள்? என்னுள் இனிய கற்பனையாக அவள் நடையுடை பாவனைகள் பொங்கிப் பிரவகித்தன. என் டயரியில் பத்திரப்படுத்தியிருந்த அவள் புகைப்படத்தை எடுத்துப் பார்த்தேன். என்ன அழகான காட்சி! குழந்தை கிருஷ்ணா ஆட்டுக்குட்டிக்குப் பாலூட்டும் காட்சி நேற்று நடந்தாற்போல் தோன்றுகிறது.

கிருஷ்ணா என்னிடம் உடனே ஓடி வராமல் வெட்கத்துடன் நின்றிருந்தாள். சிறிது நேரத்திலேயே, பிரிந்திருந்ததால் ஏற்பட்ட வெட்கம் நீங்கப் பெற்றவளாய்ச் சகஜ பாவத்துடன் என்னுடன் பழகினாள்.

அன்று மாலை கிருஷ்ணாவை அழைத்துக்கொண்டு கடைத்தெருப்பக்கம் போனேன். தன் பள்ளியைப் பற்றி, கூடப் படிக்கும் மாணவிகளைப் பற்றி, அப்பாவும் அம்மாவும் வாங்கித் தந்த உடைகளைப் பற்றி அவள் கலகலப்பாகப் பேசிக்கொண்டே வந்தாள். நான் மகிழ்ச்சியாகக் கேட்டுக்கொண்டே வந்தேன். கிருஷ்ணா தொடர்ந்தாள். "ரவியைப் பாரு சித்தப்பா! பால்சாதத்தைத் தெருநாய்க்குப் போடறான். நம்ம 'டாமி'க்குத்தானே போடணும்?"

நான் குழந்தையைப் பார்த்தேன். அவள் வளர்ந்துவிட்டாள். உலகைப் போலவே மற்றவர்களைப்பற்றி நினைக்கக் கற்றுக்கொண்டாள். ஆனால் என்னுள் மகிழ்ச்சி

எழவேயில்லை. சிரிப்பதைவிடச் சிந்திப்பதில் அதிகம் ஈடுபட்டிருந்த குழந்தை எப்படித்தான் மாறிவிட்டாள்?

தெருவில் கிருஷ்ணாவின் அட்டகாசச் சிரிப்பொலி கேட்கிறது. என்னவென்று எட்டிப்பார்த்தேன். எனக்கு அதிர்ச்சி! கல்லடிபட்ட ஆட்டுக்குட்டி, "ம்மே! ம்மே!" என்ற வேதனை முனகலோடு நொண்டியவாறே தத்தித் தத்தி ஓடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கைகொட்டி நகைக்கிறாள் கிருஷ்ணா.

"கிருஷ்ணா! இப்படித்தான் ஆட்டுக்குட்டியைக் கல்லால் அடிக்கிறதா? நொண்டுகிறது பார்! முட்டாள்! இங்கே வா, சின்னக் குழந்தையில் இரக்கத்துடன் நடப்பாய். வளர வளர எல்லாம் போய்விட்டதா? உள்ளே போ!"

இயல்புக்கு மாறான சூழ்நிலையில் அகப்பட்டுக்கொண்டாற்போல் அவள் முகம் வாடியது.

வாசலில் சாலைவேலை செய்யும் கூலியாள் குடிக்கத் தண்ணீர் கேட்கிறார். அவரைப் 'போ போ' வென்று விரட்டுகிறாள் கிருஷ்ணா. "எப்பவும் இங்கேதான் கேட்பே, போ, நான் தர மாட்டேன்."

நான் கண்டிக்கக் குரலெடுக்கும்முன் மன்னியின் குரல் கேட்கிறது. "நேத்திக்கு வந்தவர் தானே? தினமும் ஒரு ஆள் தண்ணீர் கொடுக்க நிற்க வேண்டியதுதான். வேறே வேலை இல்லை."

"நான் விரட்டிட்டேன்மா!"

"அதுதான் சரி. சமர்த்து! உள்ளே வா!"

குழந்தை தெய்வீக மனம் படைத்திருந்தபோது சலித்த தாயார், சாதாரண உணர்வை ஏந்தியதும் புகழ்கிறாள். மலையருவி இமயப்போர்வையிலிருந்து விடுபட்டுப் பூமித் தூசியில் கலந்து விட்டதற்கு இத்தனை மகிழ்வா?

இப்பத்தான் சமர்த்தாமே! எம்மாதிரி பழக்குகிறோமோ அம்மாதிரிதான் பண்பு வளர்கிறது. இயற்கை உணர்வையே செயற்கை உணர்வாகத் திசை திருப்பிவிடும் நம் பழக்க வழக்கங்களுக்கு நாம்தான் பொறுப்பென்றால், நம்மைத் திசை மாற்றி அமைத்த பெற்றோர், நம் சமூகம் எல்லாம் பொறுப்பேற்க வேண்டியதுதான். குழந்தைகள் குப்பைகள் கலக்காத மாணிக்கங்கள்! அவற்றின் மனமொழி மெய்யைச் சூழலுக்கு ஏற்ப நாம்தான் திருத்தியமைக்கிறோம். அப்படி மாறாதவர்களை வெகுளி, அசடு என்கிறோம்.

அன்று ஆட்டுக்குட்டிக்குப் பசிக்குமே என்று பரிதாபப்பட்டுத் தம்பிக்கு வைத்திருந்த பால்புட்டியை எடுத்து ஊட்டிய குழந்தை, இன்று கல்லால் அடித்து, அது நொண்டுவதைக் கண்டு கைகொட்டிச் சிரிக்கிறாள். தெருநாயையும் குளிப்பாட்டலாம் என்றவள், அதற்கு ஏன் பால்சோறு, நம் நாய்க்கே போடலாம் என்கிறாள். செருப்பில்லாமல் வண்டி இழுக்கும் கூலியாளைக் கண்டு மனம் வெதும்பி என் செருப்பைத் தரும்படி தூண்டியவள், சாலையில் வேலைசெய்யும் தொழிலாளியின் தாகத்துக்குத் தண்ணீர் தராமல் விரட்டுகிறாள்.

இனி, மன்னி பயப்பட வேண்டாம்! கிருஷ்ணா தனியே பஸ்ஸில் பள்ளிகூடம் சென்று படித்து வருகிறாள். சின்ன டிபன் பாத்திரத்தில் ஓர் உருண்டை தயிர்சாதம் மட்டும்

எடுத்துப்போய்ச் சாப்பிட்டுப் பசியை அடக்கக் கற்றுக்கொண்டாள். இயந்திரமாக நாம் நிர்ணயித்த சட்டதிட்டங்களுக்குள் எவ்வித எதிர்ப்பும் இன்றி லயித்துக் கலந்து பழகிய பசுவாகிவிட்டாள்!

"நீ பார்த்த கிருஷ்ணா ரொம்ப வளர்ந்துடலை? கெட்டிக்காரி ஆகிவிட்டாள்!" அண்ணன் பெருமைப்படுகிறார்.


அருள் வடிவானவள், வெறும் லோகாயதச் சேற்றில் முளைத்த பூண்டாகிவிட்டாளே... அதை வளர்ச்சி என்று எப்படி ஏற்பது?

நான் என் கிருஷ்ணாவை, எனக்குப் பிடித்த உணர்வுகளை ஏந்தி நின்ற குழந்தையைக், காண வந்தேன். அவளைக் காணமுடியாத ஏமாற்றத்தோடு திரும்பிப் போகிறேன். அப்படிப்பட்டவளைக் காணமுடியாது என்ற உண்மை, என் கண்டத்துள் ஓர் இரகசிய வேதனையாக முட்டுகிறது.

கடவுளின் பிரதிநிதியாகக் குழந்தை பூமியில் ஜனிக்கிறது. ஆனால் மனிதனின் பிரதிநிதியாக உலகை விட்டு நீங்குகிறது!



நூல் வெளி



கோமகளின் இயற்பெயர் இராஜலட்சுமி. சிறுகதைகள், புதினங்கள், குறும்புதினங்கள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றை எழுதியுள்ளார். இவரது அன்னை பூமி என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருதினையும் பெற்றுள்ளார். உயிர் அமுதாய், நிலாக்கால நட்சத்திரங்கள், அன்பின் சிதறல் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

பால் மனம் எனும் இக்கதை அ. வெண்ணிலா தொகுத்த மீதமிருக்கும் சொற்கள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

குழந்தைகளின் நற்பண்புகளாகப் 'பால் மனம்' கதையின் வழி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

மதிப்பீடு

குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

கற்கண்டு

இயல் ஒன்பது

அணி இலக்கணம்

செய்யுளுக்கு அழகு தருவனவாகிய அணிகள் சிலவற்றை முன் வகுப்புகளில் கற்றோம். இன்னும் சில அணிகளை இங்குக் கற்போம்.

பிறிது மொழிதல் அணி

மலையப்பன் சிறந்த உழைப்பாளி. ஆனால் தனது உடல்நலத்தில் அக்கறை காட்ட மாட்டான். அதனால் அடிக்கடி நோய்வாய்ப்படுவான். ஒருமுறை நோயுற்றிருந்த அவனைப் பார்க்கவந்த அவனது உறவினர் ஒருவர், "தம்பி சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். இதை நன்றாகப் புரிந்துகொள்" என்றார். மலையப்பன், "எனக்கும் இப்போதுதான் புரிகிறது. இனி நான் என் உடல்நலத்தில் போதிய அக்கறை செலுத்துவேன்"என்றான்.

இப்பகுதியைப் படித்துப் பாருங்கள். "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். அதுபோல உடல் நலமாக இருந்தால்தான் உழைக்க முடியும்"என்று சொல்லவந்த உறவினர் உவமையை மட்டுமே கூறினார். அவர் சொல்லவந்த கருத்தை மலையப்பன் தானாகப் புரிந்துகொண்டான். இவ்வாறு உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூறவந்த கருத்தை உணரவைப்பது பிறிதுமொழிதல் அணி எனப்படும்.

(எ.கா.) *கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்*
நாவாயும் ஓடா நிலத்து

இத்திருக்குறள், "நிலத்தில் ஓடும் தேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடாது" என்று உவமையை மட்டும் கூறுகிறது. இதன்மூலம் ஒவ்வொருவரும் தமக்கு உரிய இடத்தில் வெற்றி பெறமுடியும்; தமக்குப் பொருத்தமில்லாத இடத்தில் வெற்றிபெறுதல் இயலாது என்னும் கருத்தை நாம் உணர்ந்துகொள்கிறோம். எனவே இக்குறட்பாவில் பிறிதுமொழிதல் அணி இடம்பெற்றுள்ளது.

வேற்றுமை அணி

தேனும் வெள்ளைச்சர்க்கரையும் இனிப்புச்சுவை உடையவை. அவற்றுள், தேன் உடலுக்கு நன்மை செய்யும்; வெள்ளைச் சர்க்கரை உடலுக்குத் தீங்கு செய்யும்.

இப்பகுதியைக் கவனியுங்கள். வெள்ளைச்சர்க்கரைக்கும் தேனுக்கும் இடையே ஒற்றுமையும் உண்டு; வேற்றுமையும் உண்டு. இரண்டும் இனிப்புச்சுவை உடையவை என்பது ஒற்றுமை. ஒன்று உடலுக்கு நன்மை செய்யும்; இன்னொன்று தீங்கு செய்யும் என்பது வேற்றுமை. இவ்வாறு இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையணி எனப்படும்.

எ.கா.) *தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே*
நாவினால் சுட்ட வடு.

இத்திருக்குறளில் முதலில் நெருப்பு, கொடுஞ்சொல் ஆகிய இரண்டும் சுடும்தன்மை உடையவை என்று கூறப்படுகிறது. பின்னர், நெருப்பினால் சுட்ட காயம் ஆறிவிடும்; உள்ளத்தில் ஏற்பட்ட வடு ஆறாது என்று இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு கூறப்படுகிறது. எனவே இது வேற்றுமை அணி ஆகும்.

இரட்டுறமொழிதல்அணி

காலில் காயத்திற்குக் கட்டுப்போட்டிருந்த இளைஞன் ஒருவன் பேருந்தில் ஏறினான். "எந்த ஊருக்குப் பயணச்சீட்டு வேண்டும்?" என்று நடத்துநர் கேட்டார். அதேநேரம் அருகிலிருந்தவர், "உன் காலில் எதனால் காயம் ஏற்பட்டது?" என்று கேட்டார். அவன், "செங்கல்பட்டு" என்று கூறினான். அவன் கூறியது இருவரின் வினாக்களுக்கும் பொருத்தமான விடையாக அமைந்தது. அவன் செல்ல வேண்டிய ஊர் செங்கல்பட்டு என்று நடத்துநர் புரிந்துகொண்டார். அவன் காலில் செங்கல் பட்டதால் காயம் ஏற்பட்டது என மற்றவர் புரிந்துகொண்டார். இவ்வாறு ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுறமொழிதல் என்னும் அணியாகும். இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.


(எ.கா.) ஓடும் இருக்கும் அதனுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது – சேடியே
தீங்காயது இல்லா திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயும்நேர் செப்பு

இப்பாடலின் பொருள் தேங்காய், நாய் ஆகிய இரண்டுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது.

தேங்காயில் ஓடு இருக்கும்; தேங்காயின் உட்பகுதி வெண்மை நிறத்தில் இருக்கும்; தேங்காய் கோணல் இல்லாமல் குலையாகத் தொங்கும்.

நாய் சிலசமயம் ஓடிக்கொண்டிருக்கும்; சிலசமயம் ஓரிடத்தில் படுத்து இருக்கும்; அதன் வாயின் உட்பகுதி வெண்மையாக இருக்கும்; குரைப்பதற்கு வெட்கப்படாது.

இவ்வாறு இப்பாடல் இரண்டு பொருள் தரும்படி பாடப்பட்டுள்ளதால் இஃது இரட்டுறமொழிதல் அணி ஆகும்.



கற்பவை கற்றபின்

திருக்குறளில் அணிகள் இடம் பெற்றுள்ள குறட்பாக்களுள் ஐந்தனைக் கண்டறிந்து அவற்றில் இடம்பெற்றுள்ள அணிகளின் பெயர்களை எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பிறிதுமொழிதல்அணியில்_____ மட்டும் இடம்பெறும்.

அ) உவமை ஆ) உவமேயம் இ) தொடை ஈ) சந்தம்

2. இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் கூறுவது _____ அணி.

அ) ஒற்றுமை ஆ) வேற்றுமை இ) சிலேடை ஈ) இரட்டுற மொழிதல்

3. ஒரே செய்யுளை இருபொருள்படும்படி பாடுவது __________ அணி.

அ) பிறிதுமொழிதல் ஆ) இரட்டுறமொழிதல்

இ) இயல்பு நவிற்சி ஈ) உயர்வு நவிற்சி

4. இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் _____________ அணி.

அ) பிறிதுமொழிதல் ஆ) வேற்றுமை

இ) உவமை ஈ) சிலேடை

சிறுவினா

1. பிறிதுமொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.
2. வேற்றுமை அணி என்றால் என்ன?
3. இரட்டுறமொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?

மொழியை ஆள்வோம்!

RTXOK

கேட்க.

தன்னம்பிக்கையை வளர்க்கும் கதைகளைப் பெரியவர்களிடம் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

1. நம்பிக்கையே உயர்வு.
2. நல்வாழ்விற்குத் தேவையான நற்பண்புகள்.

சொல்லக் கேட்டு எழுதுக.

அம்பேத்கர் தமது வாழ்க்கையில் 'புதிய திருப்பம்' காண வழி ஒன்றைக் கண்டறிந்தார். அது 'படிப்பு, படிப்பு, படிப்பே' ஆகும். அதை அடையும் முயற்சியில் அயராது உழைக்கத் தொடங்கினார். எப்போதும் புத்தகமும் கையுமாகவே திகழ்ந்தார். இதைக் கண்ட அவருடைய தந்தை வேறு செலவுகளைக் குறைத்துக் கொண்டும் கடன் வாங்கியும் புத்தகங்களை வாங்கித் தந்தார். புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை அம்பேத்கர் கடைசிவரை கடைப்பிடித்தார். வட்டமேசை மாநாட்டிற்காக அம்பேத்கர் இங்கிலாந்து சென்றார். மாநாடு முடிந்தபிறகு அமெரிக்கா சென்ற அவர் தம் பழைய நண்பர்களையும் பேராசிரியர்களையும் கண்டு மகிழ்ந்தார். தாய்நாடு திரும்பிய போது பதினான்கு பெட்டிகள் நிறையப் புத்தகங்களைக் கொண்டுவந்தார்.

அறிந்து பயன்படுத்துவோம்

தான், தாம் என்னும் சொற்கள்

தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும். இவ்வேறுபாட்டினை அறிந்து தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.

மாணவன் தனது கையால் பெற்றுக் கொண்டான்.

(இங்குத் தலைவர் என்பது ஒருவரைக் குறித்தாலும் இது மரியாதைப் பன்மை ஆகும்)

(எ.கா.) மாடுகள் தமது தலையை ஆட்டின.

கன்று தனது தலையை ஆட்டியது.

கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1. சிறுமி ______ (தனது/தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.
2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் ______ (தனது/தமது) உழைப்பை நல்கினார்.
3. உயர்ந்தோர் ________ (தம்மைத்தாமே/தன்னைத்தானே) புகழ்ந்து கொள்ள மாட்டார்கள்.
4. இவை ______ (தான்/தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.
5. குழந்தைகள் ________ (தன்னால்/தம்மால்) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தம்முடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள்தான் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

கட்டுரை எழுதுக.

உழைப்பே உயர்வு.

மொழியோடு விளையாடு

பின்வரும் வினாக்களைப் படித்து இருவினாக்களுக்கு ஒரு விடை தருக.

(எ.கா) குழம்பும் கூட்டும் மணப்பது ஏன்?
குருதி மிகுதியாய்க் கொட்டுவது ஏன்? பெருங்காயத்தால்

1. ஆடை நெய்வது எதனாலே? அறிவைப் பெறுவது எதனாலே?
2. மாடுகள் வைக்கோல் தின்பது எங்கே? மன்னர்கள் பலரும் இறந்தது எங்கே?
3. கதிரவன் மறையும் நேரம் எது? கழுத்தில் அழகாய்ச் சூடுவது எது?
4. வானில் தேய்ந்து வளர்வது எது? வாரம் நான்கு கொண்டது எது?

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. வாழ்வுக்கு வெற்றிதரும் நற்பண்புகளை வளர்த்துக் கொள்வேன்.
2. சமுதாய விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்களின் வரலாற்றை அறிந்து போற்றுவேன்.

கலைச்சொல் அறிவோம்.

குறிக்கோள்	– *Objective*	பல்கலைக்கழகம்	– *University*
நம்பிக்கை	– *Confidence*	ஒப்பந்தம்	– *Agreement*
முனைவர் பட்டம்	– *Doctorate*	அரசியலமைப்பு	– *Constitution*
வட்ட மேசை மாநாடு	– *Round Table Conference*		
இரட்டை வாக்குரிமை	– *Double voting*		

இணையத்தில் காண்க

இந்திய அரசியலமைப்பின் சிறப்புகள் குறித்து இணையத்தில் தேடி எழுதுக.

திருக்குறள்

12. நடுவுநிலைமை

1. தகுதிஎன ஒன்று நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

2. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

3. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

4. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

5. கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

6. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

7. கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

8. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

9. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

10. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

28. கூடா ஒழுக்கம்

1. வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் தங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

2. வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

3. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

4. தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

5. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றுஎற்றுஎன்று
ஏதம் பலவும் தரும்.

6. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

7. புறம்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
மூக்கில் கரியார் உடைத்து.

8. மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்துஒழுகு மாந்தர் பலர்.

9. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

41. கல்லாமை

1. *அரங்குஇன்றி வட்டுஆடி அற்றே நிரம்பிய*
நூல்இன்றிக் கோட்டி கொளல்.

2. *கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்*
இல்லாதாள் பெண்காமுற்று அற்று.

3. *கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்*
சொல்லாது இருக்கப் பெறின்.

4. *கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்*
கொள்ளார் அறிவுடை யார்.

5. *கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து*
சொல்லாடச் சோர்வு படும்.

6. *உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்*
களர்அனையர் கல்லா தவர்.

7. *நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்*
மண்மாண் புனைபாவை அற்று.

8. *நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே*
கல்லார்கண் பட்ட திரு.

9. *மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்*
கற்றார் அனைத்திலர் பாடு.

10. *விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
கற்றாரோடு ஏனை யவர்.

44. குற்றங்கடிதல்

1. *செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்*
பெருக்கம் பெருமித நீர்த்து.

2. *இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா*
உவகையும் ஏதம் இறைக்கு.

3. *தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்*
கொள்வர் பழிநாணு வார்.

4. *குற்றமே காக்க பொருளாகக் குற்றமே*
அற்றம் தரூஉம் பகை.

5. *வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
வைத்தூறு போலக் கெடும்.

6. *தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
என்குற்றம் ஆகும் இறைக்கு.

7. *செயற்பால செய்யாது இவறியான் செல்வம்*
உயற்பாலது அன்றிக் கெடும்.

8. *பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்*
எண்ணப் படுவதுஒன்று அன்று.

9. *வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க*
நன்றி பயவா வினை.

10. *காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்*
ஏதில ஏதிலார் நூல்.

50. இடனறிதல்

1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.
2. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும்.
3. ஆற்றாரும் ஆற்றி அடுப இடன்அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.
4. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.
5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.
6. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.
7. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்.
8. சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.
9. சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.
10. கால்ஆழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா
வேல்ஆழி முகத்த களிறு.

52. தெரிந்து வினையாடல்

1. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.
2. வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.
3. அன்புஅறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.
4. எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்
வேறாகும் மாந்தர் பலர்.
5. அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற்று அன்று.
6. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.
7. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.
8. வினைக்குஉரிமை நாடிய பின்றை அவனை
அதற்குஉரியன் ஆகச் செயல்.
9. வினைக்கண் வினையுடையான் கேண்மைவேறு ஆக
நினைப்பானை நீங்கும் திரு.
10. நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு.

55. செங்கோன்மை

1. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

2. வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

3. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

4. குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

5. இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

6. வேல்அன்று வென்றி தருவது மன்னவன்
கோல்அதூஉம் கோடாது எனின்.

7. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

8. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்.

9. குடிபுறம் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில்.

10. கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்.

57. வெருவந்த செய்யாமை

1. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

2. கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

3. வெருவந்த செய்துஒழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

4. இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

5. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண்டு அன்னது உடைத்து.

6. கடுஞ்சொல்லன் கண்இலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும்.

7. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

8. இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு.

9. செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

10. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்லது
இல்லை நிலக்குப் பொறை.

65. சொல்வன்மை

1. நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று.
2. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்துஓம்பல் சொல்லின்கண் சோர்வு.
3. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.
4. திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்.
5. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.
6. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.
7. சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.
8. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.
9. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.
10. இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணரவிரித்து உரையா தார்.

72. அவையறிதல்

1. அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.
2. இடைதெரிந்து நன்குஉணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.
3. அவைஅறியார் சொல்லமேற் கொள்பவர் சொல்லின்
வகைஅறியார் வல்லதூஉம் இல்.
4. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.
5. நன்றஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.
6. ஆற்றின் நிலைதளர்ந்து அற்றே வியன்புலம்
ஏற்றுஉணர்வார் முன்னர் இழுக்கு.
7. கற்றுஅறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து.
8. உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந்து அற்று.
9. புல்அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்அவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.
10. அங்கணத்துள் உக்க அமிழ்துஅற்றால் தம்கணத்தார்
அல்லார்முன் கோட்டி கொளல்.

78. படைச்செருக்கு

1. என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர்.

2. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

3. பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றுஅதன் எஃகு.

4. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

5. விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்
ஓட்டன்றோ வன்கண் அவர்க்கு.

6. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து.

7. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

8. உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.

9. இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்.

10. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து.

79. நட்பு

1. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

4. நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு.

5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

6. முகம்நக நட்பது நட்புஅன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு.

7. அழிவின் அவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்று நிலை.

10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு.

80. நட்பு ஆராய்தல்

1. நாடாது நட்டலின் கேடுஇல்லை நட்டபின்
வீடுஇல்லை நட்புஆள் பவர்க்கு.
2. ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.
3. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.
4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.
5. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.
6. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.
7. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.
8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.
9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.
10. மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றுஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

97. மானம்

1. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.
2. சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.
3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.
4. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.
5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.
6. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை.
7. ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.
8. மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடுஅழிய வந்த இடத்து.
9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.
10. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு.

100. பண்புடைமை

1. எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.
2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.
3. உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு.
4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.
5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.
6. பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.
7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கள்பண்பு இல்லா தவர்.
8. நண்பாற்றார் ஆகி நயம்இல செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை.
9. நகல்வல்லர் அல்லார்க்கு மாஇரு ஞாலம்
பகலும்பாற் பட்டுஅன்று இருள்.
10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந்து அற்று.

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும். அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சீர்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்காக அல்ல.

திருக்குறள் கருத்துகளை மாணவர்களிடையே பரப்புவதற்கான வழிகாட்டுதல்கள்

- நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் திருக்குறளைப் பொருளுடன் கூறலாம்.
- வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடத்தலாம்.
- இலக்கிய மன்றக் கூட்டங்களில் குறட்பாக்கள் தொடர்பான கதைகளைக் கூறலாம்.
- திருக்குறள் கருத்துகளை விளக்கும் நாடகங்களை நடத்தச் செய்யலாம்.
- திருக்குறள் கருத்துகளை விளக்கும் ஓவியப் போட்டியை நடத்தலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து வினாடி வினா நடத்தலாம்.
- சான்றோர் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள் மூலம் திருக்குறள் கருத்துகளை விளக்கலாம்.
- திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பை ஒரு மாணவர் கூற மற்றொருவர் அந்தக் குறளைச் சரியாக அடையாளம் கண்டு கூறுமாறு போட்டி வைக்கலாம்.

எட்டாம் வகுப்பு – தமிழ்
ஆக்கம்

பாட வல்லுநர் குழு

முனைவர் நா. அருள்முருகன்
இணை இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை.

முனைவர் மு. சுதந்திரமுத்து
பேராசிரியர் (பணி நிறைவு), மாநிலக் கல்லூரி, சென்னை.

முனைவர் சி. செல்வகுமார்
உதவிப்பேராசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை.

மேலாய்வாளர் குழு

முனைவர் பொன். குமார்
இணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

முனைவர் இராம. பாண்டுரங்கன்
இணை இயக்குநர், (பணிநிறைவு),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

திருமதி ஏ.எஸ். பத்மாவதி
எழுத்தாளர், சென்னை.

முனைவர் பூந்துறயான் இரத்தினமூர்த்தி
முதுநிலை ஆசிரியர் (பணி நிறைவு),
கள்ளிப்பட்டி, ஈரோடு மாவட்டம்.

பாடநூல் ஒருங்கிணைப்பு

முனைவர் மு. தீபாஞ்சி
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

திருமதி மு. செல்வி
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,
காட்டூர், மீஞ்சூர் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

ஓவியம்

திரு. கே. புகழேந்தி
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, கரம்பக்குடி,
புதுக்கோட்டை மாவட்டம்.

திரு. சி. தெய்வேந்திரன்
ஓவிய ஆசிரியர், அரசு உயர் நிலைப்பள்ளி, மாங்குளம்,
மதுரை மாவட்டம்.

பக்க வடிவமைப்பாளர்

பழையவலம் பா. இராமநாதன்
சென்னை.

தரக் கட்டுப்பாடு

திரு. வே.சா. ஜாண்ஸ்மித்

அட்டைப்படம்

திரு. கதிர் ஆறுமுகம்

ஒருங்கிணைப்பு

திரு. ரமேஷ் முனிசாமி

பாடநூலாசிரியர் குழு

முனைவர் செ. ராஜா
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருப்பூர் மாவட்டம்.

திரு. நி. சிவக்குமார்
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
குமுளூர், திருச்சி மாவட்டம்.

திரு. கு. சம்பந்தம்
முதுநிலை ஆசிரியர் (பணிநிறைவு)
டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர்.

திரு. சிவ. முரளி
பட்டதாரி ஆசிரியர், ஜே.எப்.மேல்நிலைப்பள்ளி, புலிவலம்,
திருச்சி மாவட்டம்.

திரு. த. ஜீவானந்தம்
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
அட்டப்பட்டி, கொட்டாம்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

திரு. வெ. பாலமுருகன்
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.

திருமதி ப. செந்தில்குமாரி
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
முதல்மைல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

திரு. ந. மாமலைவாசன்
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,
இராயபுரம், திருவாரூர் மாவட்டம்.

திரு. ஜெ. அலெக்ஸ் கிறிஸ்டோபர்
பட்டதாரி ஆசிரியர், ச.உ.நி. மேல்நிலைப்பள்ளி,
ராயப்பன்பட்டி, தேனிமாவட்டம்.

முனைவர் ப. மெய்யப்பன்
ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், பவானிசாகர்,
ஈரோடு மாவட்டம்.

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

திரு. இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ஜே.எப்.பால் எட்வின் ராய்
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
இராக்கிப்பட்டி, வீரபாண்டி, சேலம்.

மு.சரவணன்
பட்டதாரி ஆசிரியர், அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி,
புதுப்பாளையம், வாழப்பாடி, சேலம்.

இந்நூல் 80 GSM எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர் ;